

பூஜ்யஸ்ரீ அன்னை ஆண்டவன் பிச்சையின்
அருள் தெய்வ வாக்கு அருட் பாடல்கள்




பூஜ்யஸ்ரீ அன்னை ஆண்டவன் பிச்சையின்
அருள் தெய்வ வாக்கு அருட் பாடல்கள்

First Impression - Feb 2016
Published by
Smt.MeeraPrakash
No 5, 12th cross st., Sastry Nagar
Chennai -600 020

Printed at

Foldbacks
15, New Street, Avvai colony
Kottur Puram
Chennai - 600 085

பூஜ்யஸ்ரீ அன்னை ஆண்டவன் பிச்சையின்
அருள் தெய்வ வாக்கு அருட் பாடல்கள்



ஆண்டவன் பிச்சையின் அருள் தெய்வ வாக்கு



ஆண்டவன் பிச்சையின் மகத்துவம்

Part 1

Table of Contents

Introduction

It is with some trepidation that I started this venture of bringing out the works by my grandmother Sri Andavan Pichai, which my mother Smt. Kamakshi Kuppuswamy gave into my care.

As a modern day saint-composer, Sri Andavan Pichai has secured a place for herself in the annals of history. While there are two biographies about her life, one in English – The Gift of God, and one in Tamil – Yen Pichi Anen, one would assume that everything known about her has been written. However, the events in her life have been so complex and yet the life she lived was so simple, that the best way to glean about the divine nature of Andavan Pichai is through her songs and sayings and shlokas, and that is what I have set out to do.

As a child and as a teenager, I went to spend my summer holidays with her in Chennai and later at the Divine Life Center, Rishikesh. During that period, she taught me much, inculcated me in spiritual matters and exposed me to divine discourses, satsang and the Ganges. Our evenings spent on the banks of the river Ganges, the little songs she taught me, the mantra she imparted to me have remained with me all my life. It is armed with this knowledge that I have ventured to write about my grandmother, the gentle creature who was caring, kind and very human on the one hand, and at the same time a divine entity lost in her own spiritual world.

I have chosen a few of her songs through which one can gain an insight into what her life was about. The first one is **'Pavana Ganga.'** This song was composed at the request of my father, Sri A.R. Kuppuswamy. He was going along with her from one bank of the Ganges to the other side and looked at her suddenly and asked her why she had never sung about the

sacred river. She simply looked at him and closed her eyes and out poured this most beautiful composition in Raga Desh.

Thyagaraja sadguro: My mother, Smt. Kamakshi Kuppuswamy was going along with my grandmother Andavan Pichai to the Uttara Swami Malai in New Delhi where she had been asked to sing at the Tyagaraja Aradhanai festival. My mother wanted to sing in praise of the saint rather than sing one of his kritis. On the way there, she asked her mother to give her some lines. Andavan Pichai just closed her eyes and out poured Thyagaraja satguro. As she started saying the lines, my mother kept writing it on a piece of paper and started composing it in raga Bilahari. This is a beautiful tribute to the great Saint poet.

Lest anyone be in doubt about her devotion to Lord Muruga, her rendering of '**Murugan peyar sonnal**' will set all such doubts to rest. Just reciting the name of Muruga makes my heart melt she cries. She basically recited it in verse form. My mother Smt. Kamakshi Kuppuswamy felt that the verses needed an appropriate raga and chose Mukari for it, wringing out the emotions.

Then came '**Aridamatilum uraipen.**' It literally feels like she is talking to every devotee through this song. I know some glorious details of Lord Muruga, let me impart it to you to the best of my ability, she says in this song. Once again, my mother composed it in Mukari.

'**Murugan yendru ketaudan**' is the only song in which she used her pseudonym 'Pichi'. My father once asked her why she never set her name to all the songs that came pouring out of her like other saints, Meerabai, Surdas etc. She replied that her songs were a gift from God and he was the one writing them

and she had no right to call them her own. When he asked her how people will know they came from deep within her soul, she said that within the first two lines of the song, the deity's name about whom she is singing would come. In this particular song, however, she it is who is saying that the moment she hears the name of Lord Muruga, both her eyes are drenched with tears and her inner being is melting with sheer emotion. She further goes on to describe that he it is who gave her the name 'Pichi' and gave her her heart's desire.

'Ullam urugudada': Who does not know this song made famous by Sri T.M. Sounderarajan who substituted 'Ayya' for 'Ada' with her blessings. She thought of Lord Muruga as a child and dared to call him 'Ada'. Once again she reveals her inner core as a mother who wants to scoop the child Muruga in her arms and sing his praises and go into a trance. This song has been carved in its full version at the Kalikamba Temple in Chennai.

'Kanda Muruga Yennai kaar': My personal favourite since she taught it to me herself. She says: O Muruga, please protect me and make sure my ego doesn't take over. Give me the blessing to be in a state of bliss at your unparalleled feet.

'Rama namam yendru': Does a soul entrenched in abiding love for the Lord ever become afraid of death? No, she says. When you recite the name of Rama you are literally wearing the Kavacha or shield which protects you from fear of death. It not only frees you from this fear but it also frees you from the birth-rebirth cycle.

Every one of the **Rajarajeshwari Dwadashanta kritis** discloses her inner divinity. Not for everyone is that ultimate Kaivalya state, where all is bliss. Every nuance of the Lalitha

sahasranamam and soundarya lahari (the appropriate verses have been added to highlight the message contained in the song) comes through these songs, ultimately reaching a crescendo in which she exclaims that she has attained the Dwadashantam state where all is Bliss: **Anandam Yenna Solven**.

'Yedum ariyenan' and **'Yamunai karayil':** Once again, like Surdas, she was divining Lord Krishna as a child and very much in the spirit of 'Main nahin makhan khyo', she writes 'Yedum ariyenan ivargal solluvathellam athanaiyum poi amma.' One can picture the little Krishna, with an enchanting face, a total expression of innocence shining forth even as he utters his little lies. She goes even more in depth in 'Yamunai karayil'. In the charanam 'idai siruvargal suzya....' she draws a beautiful picture of Krishna in the pleasance surrounded by friends and gopis. The one liner 'idaiyinai valaithu...' brings the familiar figure of Krishna with his legs crossed, one hip slightly tilted and a flute in his hands held to his lips with extraordinary clarity. The entire set of 18 Krishna Leela songs (one for each chapter of the MB, BG etc.) has been set to tune by her daughter Smt. Kamakshi Kuppuswamy. Andavan Pichai wrote only 18, but Kamakshi felt that the Kalinga narthana leelai needed to be part of it and penned the lyrics for it. The entire set has been set to tune by her using ragas keeping in mind the mood of each song.

Every song of hers is not only beautiful to hear when sung, but brings to life different aspects, stories, beauty, grace and blessings of the various deities. Her shlokas are really kavachas for those rendering them. There is the Vaishnavi Kavacham for protection of all the body parts, Shashti Kavacham for protection and freedom from fear of death, Kumarashtakam for health, wealth, prosperity, but more

importantly for begetting children and their well-being, and the list goes on.

The volume of her work is so huge that it is impossible to get it all together in one book. I have made this small start and with God's grace hope to bring out as much as I can in the future. I have split this book into three parts: the first has her sayings, shlokas, atmabodham along with English translation and summary, a brief biography, and charitram (her re-birth and being freed from her promise). Some dhyana shlokas may be familiar. However she used them to highlight the content of her song.

The second part is a collection of her songs in Tamil, Sanskrit, and Telugu. While the lyrics are entirely hers, she composed music early on only for the entire collection of Rajarajeshari kritis, Kamakshi kritis, some songs on Shiva and Muruga (which are presented in Kirtananmala). For major collection of songs in this book, music has been composed by her daughter Smt. Kamakshi Kuppuswamy (now in her late 80s) in whose care her mother consigned her divine labour. She meticulously composed them to suit the mood and the alliteration of the songs.

Part three consists of lyrics and music entirely by Smt. Kamakshi Kuppuswamy. She was inspired to do so at the request of Smt. Kalanidhi Narayanan, who wanted some varnams for her students. What started as a couple of songs, bloomed into many. As can be gleaned by the interview conducted by Sujata Vijayaraghavan on 'Nee Manam Irangi Varuvai', Kamakshi used incomplete phrases, single liners of Andavan Pichai as main phrase and it blossomed into a complete song. Some of the songs like Saraswathi Shastra swarupini, pan padum punkuyile, Radha Manas sanchari

appear in both part II and III because it is a collaborative effort, i.e. words have been added by Kamakshi to what were simply shlokas or verses and made into a song. Om Namo Narayana is actually a part of Andavan Pichai's Sri Lakshmi Narasimhashtakam. Similarly Maname Inimel was prose turned into a song.

Some lyrics like Villinai Otha Puruvam, Narayana Jaya Gopala Hare etc. have been added because Kamakshi put the music for them and the Bhajan Mandali members have been singing them regularly. Others like Gananathane have been added because the APBM group loved to sing it.

Andavan Pichai herself stuck to basic ragas like Kambodi, Todi, Kalyani, Bhairavi, Mohanam etc. Kamakshi added to the repertoire by combining Carnatic and Hindustani ragas for the songs and adding swaras and chitta swaras and jatis for many. Her mother gave all her songs into her care and told her that she was the repository of this divine collection. Never asking anything in return, Kamakshi started the Andavan Pichai Bhajan Mandali and taught these songs for 27 years to her group of devoted singers, who have been rendering these songs along with her in sabhas, temples and radio and T.V, with unconditional reciprocity.

It is to honour the divinity and altruism of my grandmother and my mother Smt. Kamakshi Kuppuswamy that I have taken meticulous care to compile this body of work. It is my earnest wish and request that many take up these songs and propagate them and earn the blessings of Sri Andavan Pichai.

Meera Prakash
(Granddaughter of Andavan Pichai)

Some testimonials from various books like Sthuti Kathambam, annual day books etc.

முருகன் அருளைப் பரிபூரணமாகப் பெற்ற ஆண்டவன் பிச்சையின் மகத்துவம்

அரும்பெரும் பொக்கிஷம் மாதாஸ்ரீ ஆண்டவன் பிச்சை, சிறு பெண்ணாக 8,9 வயதில் ஸ்ரீ முருகன் தனது நாவில் அவனது வேல் கொண்டு எழுதியதாகவும் அதனால் தனக்கு யாரிடமாவது அதைக்கூறி தன்னால் ஏதோ இறைவன் மீது பாடமுடிகிறது என்று தனது அவாவைத் தன் தந்தையிடம் பயபக்தியுடன் கூறி அவர் அதிசயித்துக் கேட்டபடியே 'அன்னை தந்தை' என்றும் 'தனது கணவன்' மீதும் யாரும் நம்ப முடியாத வண்ணம் கவிதைகள் பொழிந்த குழந்தைப் பெண். அன்று முதல் பெரியவளாக வளர்ந்து தன் கணவன் வீடு சென்று அருமையான மனைவியாகவும், பெருமை தரும் மருமகளாயும் சுற்றமும் உறவும் கொண்டாட எவ்வளவோ இன்னல்களைத் தாங்கி அதற்கு நடுவிலும் இடைவிடாமல் ஞானியர் கூறுவது போல் பகவத் கீதையில் ஸ்ரீக்ருஷ்ணர் அர்ஜீனனுக்கு, ஜனகரைப் போல் கடமையும் இறையுணர்வும் இரண்டறக் கலந்த நிலையில் வாழ்ந்தால் என்னை அடையலாம் என்று கூறியது போல் அவளது 24 வயது வரை தடையின்றி பிரவாகமாய் மனதில் தோன்றிய கவிப்பெருக்கை பலவித உருவங்களைத் தியானித்துக் கடமையைச் சிறிதும் கைவிடாமல் இறைவனையும் மறவாமல் இரண்டையும் ஒன்றாக்கிப் பாடல்களை மழை போல் கொட்டினார். ஆனால் 25 வயது முதல் 48 வரை தன் மாமியாரின்

தடையினால் அவருக்குச் செய்து கொடுத்த சத்தியத்தினால் மனதிலிருந்தவற்றை வெளிவிடாமல் எழுத முடியாமல் தனது பாடல்களை மனதிலேயே அடக்கி வைக்க அவர் எவ்வளவு பாடுபட்டிருக்க வேண்டும் என்பது அவருக்குத்தான் தெரியும். அவரைப் பொறுத்தவரை அது அவருக்கு mental torture தான்.

பிறகு முருகனே வந்தான்: வீட்டில் நடந்த - விஷயங்களெல்லாம் - அறிந்தேன் ஆணையை விலக்கி விட்டேன் என்றான். 49 வயதில் முதல் அவரது பழைய கவித்துவம் இறைவனைப்பாட உடைத்துக் கொண்டு கிளம்பி குழந்தையிலிருந்து அவர் பெற்ற பாக்யம் இறைவன் துதிப் பாடல்கள் மீண்டும் விடுதலை பெற்றது போல விலைமதிக்க ஒண்ணாத நன்முத்துக்களைக் கொட்ட ஆரம்பித்து இடைவிடாமல் தான் சென்ற ஒவ்வொரு இறைவன் சந்நிதானத்திலும் இருக்கும் இடத்திலும் அந்தப் பெயர்களில் பக்திப்பாடல்களை spontaneous ஆக கவிகளைப் புனையாமல் யாரோ சொல்வதைத் தான் பாடுவது போலவும் எழுதுவது போலும் வேகத்தில் பாடவும் எழுதவும் (வேறு யாராலும் நினைத்துப் பார்க்க முடியாத அளவு) முடிந்தது என்றால் அது வேறு யாரும் இல்லை. முருகன் அருள்தான் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. இந்தப் பாடல்களைப் படிக்கவும் கருத்தை ஊன்றி அவர் கவித்துவத்தை அனுபவிக்கவும் அவரது பாடல்களை அவர் சந்ததியினரும் மற்றவரும் பாடுவதைக் கேட்கவும் நாம் மிகவும் கொடுத்து வைத்தவர்கள். இந்த அளவு ஒரு செல்வந்தர் குழந்தைக்கு ஞானத்தை ஊட்டிய முருகனின் அருள் அவருக்கு அளவில்லாத வரப் ப்ரசாதம். நமது பாக்யம் இதற்கு நாம்

எல்லோரும் மிக்க நன்றிக் கடன்பட்டுள்ளோம். கள்ளங்கபடமற்ற ஆண்டவன் பிச்சையை ஸ்ரீ மரகதவல்லி அம்மையாரைத் தனது அருளுக்கு ஆளாக்கிய முருகன் நம் எல்லோரையும் நிச்சயம் காப்பான்.

கல்கபம் ஸ்ரீனிவாசன்
காமாக்ஷி குப்புஸ்வாமி,

நான் சிறுவயதில் மற்ற குழந்தைகளைப் போல் ஓடிவிளையாடாமல் யாருடனும் அதிகம் பேசாமல் தனித்து நிற்பேன். எனக்கு எதையும் கற்றுக்கொள்ளவோ படிக்கவோ ஆர்வம் கிடையாது. என்னை எல்லோரும் நிரக்ஷரகுக்ஷி என்பார்கள். என்பெயர் மரகதவல்லி என்றாலும், அசட்டு மத்தா (மத்தா என்ற பெண்மணி சுத்த அசடாக இருப்பாளாம்) என்றே கூப்பிடுவார்கள்.

எங்கள் வீட்டு குலதெய்வம் திருத்தணி முருகனாகும். ஒரு நாள் பாதி ராத்திரியில் திருத்தணிகை ஸ்வாமி என்னை தட்டி எழுப்பி, என் நாவில், சின்ன வேலால், ஏதோ எழுதினார். அப்போதே எனக்கு பாட்டு பாட வந்து விட்டது. அதை உடனே நான் அப்பாவிடம் சென்று பாடிக் காண்பித்தேன்.

அவருக்கு ஒரே ஆச்சரியம் ஊமை அசடு நிரக்ஷரகுக்ஷி என்று நினைத்த தன் பெண் இட்டுகட்டிபாடும் அழகையும் அதன் அர்த்தங்களையும் கேட்டு மலைத்துவிட்டார். அப்படியும் நம்பாமல் அப்பா, அம்மா, கணவர் என்று எல்லோர் மேலும் பாடச்

சொல்லி கேட்டு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தார். அன்றிலிருந்து முருகன் பேரில் பல பாடல்கள் வெளிவரலாயின.

ஆண்டவன் பிச்சை

பூஜ்ய ஸ்ரீ அன்னை ஆண்டவன் பிச்சையின் அருளுரைகள்

ஆழக் கடல் குளித்து ஆணி முத்தெடுப்பது போல்
அருள்கடலில் நான்குளித்து முருகனென்ற முத்தெடுத்தேன்
சூழ நிற்கும் கள்வர் ஐவர் தட்டிப் பறிப்பாரோ?
மாயப் பெருங்கள்ளி மயக்கி எடுத்தேகுவளோ?
பாழடிக்கும் ஆணவப்பேய் பார்த்துப் பறித்திடுமோ?
பாவி மனக்குரங்கு பல்லால் கடித்திடுமோ?
தோழன் குமரேசன் துணையிருந்து என் அகத்தில்
துஷ்டர்கள் வராமல் காவல் புரிவானோ?
வேழமுகத்தா விளையோன் வேலைக்கரத்தேந்தி
வேறொருவர் வாராமல் விழித்திருந்து காப்பானோ?
வாழவிடா வஞ்சகப் பேய் வந்து நுழையாமல்
வள்ளி மணவாளன் வந்திருந்து காப்பானோ?
தாழவைத்து வாழ வைக்கும் தணிகைமலை நாதன் இந்த

ஏழையுள்ளம் நீங்கா(து) என்றும் இருப்பானோ?

பேழைக்குள் பெருநிதி போல் பெருமான் முருகன் இந்தப்

பேதைமனம் நீங்காது பெரும்பொருளாய்த்

திகழ்வானோ?

''நானற்றுப் போனவிடம், நாதன் இருக்குமிடம்,

நானாட்டம் அடங்கினால் நாதன் வெளிப்படுவான்;

நான் நான் எனும் சப்தம் அடங்கினால்

தான் தானே என்று தன்னுள்ளடங்குமே''.

இதைவிட எளிமையாகவும், உள்ளங்கை நெல்லிக்கனி போலவும் உண்மையை விளக்க வேறு எந்த உபதேசமும் வேண்டாம்.

ஸ்ரீ டி.கே.சி

ஸ்ரீ திருப்புகழ் மணி

அன்னையின் வாழ்க்கையில் நிகழ்ந்த சில அதிசய சம்பவங்கள்

ஓர் மகளின் அனுபவங்கள்

1.டெல்லியில் இருந்த என் தங்கையின் ஐந்து வயது குழந்தைக்கு போலியோ வந்து கால் விளங்காமல் போய், 1 மாதத்திற்கு மேல் அசையமுடியாமல் ஆஸ்பத்திரியில் இருந்தாள். அப்போது அம்மா சென்னையில் இருந்தாள். நாங்களெல்லாம்

அம்மாவை தெய்வமாக நினைப்பதால், என் தங்கை அம்மாவுக்கு கடிதம் எழுதி ப்ரார்த்தித்து கொண்டாள். அதற்கு அம்மா முருகன் காப்பாற்றுவான் கவலைப்படாதே என்று கடிதம் எழுதினாள். அன்று இரவே அசைவில்லாமல் கிடந்த குழந்தை எழுந்து உட்கார்ந்ததைக் கண்டு டாக்டர்களும் ஆச்சரியப்பட்டார்கள். பிறகு படிப்படியாக பூரண குணமடைந்தது. 6 மாதத்திற்கு பிறகு எழுந்து நடக்க ஆரம்பித்தாள். அம்மா அந்த நோயை தான் ஏற்றுக் கொண்டு சாகும்வரை இடதுகால் ஸ்வாதீனமில்லாமல் இருந்தாள்.

2. கர்னல் அய்யாசாமி ராஜாவும் அவர் குடும்பத்தாரும் அம்மாவிடம் சிறந்த பக்தி உடையவர்கள். அம்மா என் தங்கை வீட்டில் இருக்கும் போது அடிக்கடி அந்த வீட்டில் நடக்கும் பஜனைக்கு வருவார்கள். அவர் மனைவிக்கு பிரசவ சமயம் முன் இரண்டு பிரஸவமும் மிகுந்த கஷ்ட பிரஸவமானதால், இந்த தடவை அம்மா பிரஸவசமயத்தில் தன் கூட இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். ஆனால் அம்மா அச்சமயம் ரிஷிகேசம் போயிருந்தாள். அதற்குள் அவர் மனைவிக்கு பிரஸவநோய் எடுத்து அதிகமாகி மிலிடரி ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டார்கள். மறுநாள் தான் ஆபரேஷன் செய்ய வேண்டுமென்று டாக்டர் சொன்னார்கள். அறையில் நர்ஸும் இருக்கையில் அவர் மனைவி பத்மாவதி, அம்மாவை அழைத்துவரும்படி தன் புருஷனிடம் கேட்டு கொண்டாள். அம்மா ரிஷிகேசம் போனது அவளுக்கு தெரியாது. ஆனால் சிறிது நேரத்தில் கர்னல் அம்மாவுடன் வந்து அம்மாவை விட்டு விட்டு போனார். சிறிது நேரத்தில் டாக்டரே ஆச்சரியப்படும்படியாக பத்மாவதிக்கு நோவு அதிகமாகி சுகப்பிரசவமாயிற்று. மறுநாள்

கர்னலும் இச்சம்பவம் கேட்டு ஆச்சரியப்பட்டு, தான் அம்மாவுடன் வரவில்லை. அம்மா, ரிஷிகேசத்தில இருப்பதாகச் சொன்னார். அப்போது பிறந்த பெண் குழந்தைக்கு மரகதவல்லி (அம்மாவின் இயற்பெயர்) வைத்தார்கள்.

அவள் இருந்தவரை பிரமாதமாக பூஜை எதுவும் செய்ததில்லை. எப்போதும் அடக்கமாக, மற்றவர்களுக்கு தன்னால் இயன்ற வரை உபகாரம் செய்வாள். இரவு பகலாய் வேலை செய்வாள். ஏழை, பணக்காரன், சின்ன ஜாதி, பெரிய ஜாதியென்று பார்த்ததில்லை. ஆசார அனுஷ்டானம் கூட நிறைய கொண்டாடினதில்லை. சதா முருக ஜபத்தைத் தவிர வேறொன்றும் அறியாள். குடும்பத்தில் இருந்தபோதும் தன் கடமைகளில் தவறியதில்லை. அத்தகைய உத்தமியான மகா ஞானியான தாயாரின் வயிற்றில் பிறந்து அவளால் வளர்க்கப்பட்டு நல்ல வாழ்க்கை நடத்தும் அவள் குழந்தைகளாகிய நாங்கள் எல்லோரும் பெருமைப்படுகிறோம்.

வாழ்க அவள் நாமம். வளர்க அவள் புகழ்

கல்கூடம் ஸ்ரீனிவாசன்

அவள் பாக்ய வதியா ?

யாரைச் சொல்கிறீர்கள் ?

என் மனைவி யைத்தான்.

ஓரிரவு வீட்டில் எல்லோரும் உறங்க

ஓர்புறம் எழுதிக் கொண்டிருந்தாள்

விழித்துக் கொண்டு என் தாய்.
இன்னொரு புறம் என் பிள்ளை
பாபுவை உறங்கச் செய்து கொண்டிருந்தாள்
என் மனைவி.
திடீரென்று என் தாய்,
"பாபு, பாபு, என்னைத் தொந்திரவு செய்யாதே
சீதா, உன் குழந்தையைப் பிடித்துக் கொள்.
எழுத விடாமல் படுத்துகிறான், பார்' என்றாள்.
"இல்லையே அம்மா, என்னுடன் தான் இருக்கின்றான்
என்றான் பதட்டத்துடன் என் மனைவி.
அங்கு பார்த்தாள்
அம்மா கை கால்களை அசைத்து
யாரையோ தடுப்பது போல் இருந்தது.
"இல்லை, இல்லை என்னைத் தொந்திரவு
செய்கிறான் பார், இதோ என்ற அன்னை
"உண்மையிலேயே' விழித்துக் கொண்டாள்.
உடனே புரிந்து கொண்டாள்.
தன்னை ஆளவந்தவன் செய்கை
தனக்கு மாத்திரம் தெரிகிறதென்று.
தன்னை மறந்தவள் புளகாங் கித்தாள்.
எதிரிலிருந்த தாளில் வடித்தெடுத்தாள்
எழுத்தால்.
தன் ஆவலெல்லாம் கொட்டினாள்
தன்னை ஆளவந்தான் எத்துணையான் என்று.

என் மனைவியும் ஒரு வாறு புரிந்து கொண்டால்

அமர்ந்தாள். அலமலர்ந்தாள்.

என் தாய் கண்டவனைத்தானும்

காணவில்லை யே என்று ஆதங்கம் கொண்டாள்

ஒரு நாள் சொன்னாள் என்னிடம் இதை.

இப்போது சொல்லுங்கள்

என் மனைவி பாக்ய வதியா ?

என் தாய் முருகனுடன் சேவடியில்

விளையாடிக் கொண்டிருக்கிறாள்

அவள் ஆசிகள் உங்களுக்குப் பரிபூர்ணமாக இருக்கும்.

குரு. (டாக்டர் எம்.என்.குருஸ்வாமி)

அஞ்சலி

1. பிச்சியே என்று யாவரும் கூற
பிச்சியாய் அலைந்திட்டாள் என்தாய்
பிச்சியேன் முருகன் தாளன்றி வேறெதுவும்
இச்சியேன் இவ்வுலகில் - என்றாள் என் அன்னை

2. கந்தா - தணிகேசா - குமரோனே - சிவ
மைந்தா எனப்போற்றிடுவாய் - இவ்வுலகில்
சிந்தாகுலம் யாவும் தீர்த்திடுவான் என
சொந்தமாய் - புகன்றிட்டாள் - பரிவாக என் அன்னை

3. ஓடிவருவாய் கண்ணா - குழல்
ஊதி வருவாய் கண்ணா
தேடி உனை நாடி வந்தேன் என
பாடி விளையாடினாள் - ஆயர் பாடியில் - என் அன்னை

4. குஞ்சரி நாயகனே - வருந்தி அழைக்கின்றேன்
குஞ்சர சோதரனே ஏனென்று கேளாமல்
மஞ்சுரை மலையினிலே ஆண்டியாய் நிற்கின்றாய்
தஞ்சமுற - என்னைக் காத்திட - வாராயோ
என்றிரங்கிளாள் என் அன்னை

5. கால் மாறி ஆடியதேன் சிற்சபேசா
கால் தன்னில் சக்தி குறைந்ததாலோ
வேல்முருகனைத் தேடி மலை ஏறியதாலோ
பால் மாறி ஏழைக்கிரங்காதிருக்கின்றாய் - எனச் சாடினாள்
என் அன்னை

6. அம்மையை நாடினாள் - சுந்தரன் நாயகியை
நாவினைத் தந்தாய் - உன் நாமத்தைக்கூறிட
பாடிப் பணிந்தேன் நாளும் உன்னையே - என்
தீங்காயிரம் பொறுத்தருள்வாய்-மதுரை மீனாக்ஷியே என்று
பணிந்தாள்-என் அன்னை

7. மயிலாய் உருவெடுத்து மாதவம் செய்தாய்
மயிலை நாயகியே - உமையே கற்பகமே
பேயாய்த் திரிந்த என் பெரும் பிழைகள் பொறுத்தருளி
தாயாய் அணைத்தற்கு கைமாறென் செய்வேன் என
உருகினாள் - என் அன்னை

8. அருந்தவத்தோர் ஞானியார் மேதியர் போற்ற
ஆராக்காதல் கொண்ட தொண்டர் குழாம் தொழ
சீரார் நலம் குமரி முதல் இமயம் வரை
பேராய் பெரங்கருணைப் பேராற்றைத் தேடினளே என்
அன்னை

9. அறிவு தெரிந்தது முதல் - முருகனை நினைத்திட்டாள்
அறுமுக வேலவனைத் திடமாய் மனத்திட்டாள்
உருவமும் அருவமுமானவனை - நெஞ்சிலிட்டாள்
ஒரு கணமும் மறவாமல் - அவன் திருவடியில்
சேர்ந்திட்டாள் என் அன்னை

10. உள்ளம் உருகினாள் முருகனடிக் கண்டாள்
அள்ளப் பருகினாள் - அவன் அருள் எய்தினாள்
இமயம் சென்றாள் - சிவஞானம் பெற்றாள்
பவபயம் தீர்ந்தே - அவன் பதம் - சேர்ந்தாள் என் அன்னை

டாக்டர் எம்.என்.குருஸ்வாமி

அஞ்சலி

அன்னையாய் அருள் செறிந்த மாதாவாய்
ஆண்டவன் முருகனை பணிந்தேற்றும் பிச்சியாய்
இச்சையுடன் அவன் நாமம் இதயத்துள் கொண்டவளாய்
ஈசானுக்ரஹம் பெற்ற பலபாடல் புனைந்தவளாய்
உன் பதம் அன்றி வேறொன்றும் வேண்டேன் என உறுத
கொண்டவளாய்
ஊரார் வியக்கும் வண்ணம் துறவரம் பூண்டவளாய்
எளியனாய் எளியாரிடம் கருணைக் கொண்டவளாய்
ஏதும் அறியாதவள் போல் வாழ்ந்து (ஆனால்) எல்லாம்
அறிந்தவளாய்
ஐம்புலன் அடக்கிய ஆத்ம ஞானியாய்
ஒருவரும் கண்டறியா ஈசனைக் கண்டுகொண்டவளாய்
ஓங்காரத்துள் ஒடுங்கி ஒளிப்பிழம்பானாள்
ஔவை போல் வாழ்ந்து அறவழி போதித்தாய்
புவி உள்ளளவும் உன் புகழ் அழியாது
சாவிலும் வாழ்விலும் உன் நற்போதம் அழியாதிருக்க அருள்வாய்
தாயே

வாழ்க உன் நாமம் வளர்க உன் புகழ்

கல்பகம் ஸ்ரீனிவாஸன்

முகவுரை

பரமஹம்ஸர்கள் என்று போற்றப்படும் ஒரு சிலர் இறைவனுடன் இரண்டறகலந்து உலகம் உய்ய வேண்டி அறிய சாதனைகள் புரிந்தது யாவரும் அறிந்தது. இல்லறத்திலேயே

மெய்ப்பொருளை நாடி அடைந்திடும் குறிக்கோளில் ஜனக மகாராஜாவையும் அவருடைய தம்பி சிகித்வஜரும் அத்தகையவரே. சிகித்வஜருடைய மனைவி அவரையும் விட மேன்மையான ஜீவன் முக்த நிலையை அடைந்தவர். பெண்கள் இல்லறத்திலிருந்து வழுவாமல் இத்தகைய ஆன்மிக பேரின்ப நிலையை அடைய முடியும் என்பது விளங்கும். ஆண்டவன் பிச்சை என்று ஸ்ரீ காஞ்சி பெரியவரின் திருவாக்கின் வாயிலாக பெயர் பெற்ற எளிய, பணிவின் உருவமாம் மரகதவல்லி என்ற இயற்பெயர் கொண்ட உத்தம பெண்மணியை சிகித்வஜருடைய மனைவிக்கு அடுத்தபடி இல்லறத்திலேயே துறவி நிலை ஏற்றதற்கு உதாரணமாக குறிப்பிடுவது பொருந்தும்.

வாழ்க்கையில் பல குழந்தைகளுக்கு தாயாகவும், பதிசேவையில் சிறந்தும் விளங்கிய ஆண்டவன் பிச்சை கற்காத ஸமஸ்க்ருத மொழியிலும் கீர்த்தனைகள் பாடும் ஆற்றல் பெற்றார். அவரது வாழ்வில் பெரிய வழக்கறிஞர் ஒருவருக்கு மனைவியாகவும், சில குழந்தைகளை இழந்து மேலும்பல துன்பங்களையும் கண்டு வேதனைக்குள்ளான நிலையிலும், எதையும் தாங்கும் இதயம் கொண்டு பற்றற்ற நிலையில் பரமனையே நம்பி ஸம்ஸார ஸாகரத்தில் நீந்தித் தேர்ந்தார். ரிஷீகேசத்து மாமுனிவர் ஸ்ரீ சிவானந்த ஸ்வாமிகளுடைய சிஷ்யை ஆகி அவரிடமே ஸன்யாச தீக்ஷை பெற்ற ஆண்டவன் பிச்சைக்கு முருகன் மறுபடியும் பல திருவிளையாடல்களை நடத்தி மனம் பரிபக்குவம் வரும்படி செய்ததை உணரும்போது பக்திபரவசமாகாமல் இருக்கமுடியாது.

ஆருதாரம் பற்றி குண்டலியின் எழுச்சி பற்றி பரமயோகியர் தம் அனுபூதி மூலம் துய்த்தும் பெரும்பாலும் உணர்த்த முயலாத அருமையான மெய்ஞ்ஞான போதம் தன்னை ஆண்டவன் பிச்சை எடுத்து கூறுங்கால் ஆன்மிக மார்க்கத்தில் சிறிது கூட அனுபவம் இராத அடியேனைப் போன்றவர்களும் சிற்சில சமயம் பனிச்சென்று மின்வெட்டு போல் சில அறிய உண்மைகளை அறியமுடிகிறது என்றால் அனுபூதிமான்களாக பக்தர்கள் பரவசமும் பேரானந்தமும் அடைவார் என்பது உறுதி. அடியேனுக்கு தமிழ் அறிவை ஊட்டியவரும் வாகீச கலாநிதி ஸ்ரீ கி.வ.ஜகன்நாதன் அவர்கள் என்னுடைய தமக்கை மரகதவல்லி என்று ஆண்டவன் பிச்சையை காண அழைத்து போகச் சொன்னார். என்னுடைய எளிய தமக்கையை காண வந்தபோது பக்தி பரவசமாகி கண்ணீர் பெருக ஆண்டவன் பிச்சையைப் பணிந்து எழுந்த போது, இதுவரை தமக்கையின் மகிமையை உணராதிருந்ததை நினைத்து வெட்கினேன். மரகதம்மாள் என்ற ஆண்டவன் பிச்சையை அந்த இறைவன் தான் ஆட்கொண்டு ஜீவன் முக்த நிலைக்கு கொண்டு வந்துள்ளான்.

அடியேன்
த.நா.ஸேனாபதி
ஆண்டன் துணை

ஓம் சரவணபவாய நம :

முருகப் பெருமானின் அருட்ஜோதியே! அமர சச்சிதானந்த ஆத்ம ஸ்வரூபியே!

தங்களுடைய கடிதம் கிடைத்து பெரிதும் மகிழ்ந்தேன். இந்த ஸம்சார சாகரத்தில் பக்தியெனும் படகைப்புறக்கணித்து நீந்தவும் தெரியாமல் ஒருவன் ஜலக்கிரீடை செய்தால், அதன் பலனை அறியார். கொஞ்சம் புத்தியுள்ளவன் இந்தக் கடலில் பயமின்றி மிதக்கிறான். ஆனால் சூழ்நிலை புயலும் காற்றுமாயிருந்தால், இவனுக்கும் கொஞ்சம் சிரமம்தான். அதோ போகிறதே ப்ரும்மாண்டமான கப்பல்-அதற்கோ, அதிலுள்ளவர்களுக்கோ, ஒருவிதமான பயமோ கஷ்டமோ கிடையாது. ஸாகரம் அதனுள் போக வழியில்லை.

தாங்கள் இந்த கப்பல் மாதிரி. பக்தி சூத்திரத்தில் நாரத பகவான் சொன்னதுபோல் அவன் இந்த ஸம்ஸார ஸாகரத்தின் அக்கரை சேர்வான். மற்றவர்களையும் சேர்விப்பான். இந்த வர்ணனை தங்களுக்குப் பொருத்தமானது. வாழ்க முருகபத்தி!

இந்த வருஷ- ஸ்கந்த ஸஷ்டியில் தங்கள் முருக மயமான ஆண்டவனைப் ப்ராத்திக்கிறேன். அவனருளால் தங்களுடைய சாதனை ஸபலமாகி, அதன் மூலம் இந்நாடெங்கும் பக்தியும் பஜனையும் பரவவேண்டுமென்பதே என் கோரிக்கை.

ஆஸ்ரமத்து பஜனை ஹாலில் நீங்கள் பிரதிஷ்டை

செய்துள்ள முருகனிடத்தும் இதே ப்ராத்தனையை நாங்கள் ஸ்கந்த ஷஷ்டியன்று செய்வோம்.

அவனருள் எல்லோருக்கும் கொடுக்க வந்த தங்களுக்கு பகவான் திடகாத்திரமும், தீர்க்காயுளும் கொடுப்பாராக.

ஓம் தத் ஸத்
சிவானந்தா
(பிச்சன்)

உன் இணையடிகள் பாடி வாழ என்
நெஞ்சிற் செஞ்சொற்றருவாயே என

வேண்டினார் அருணகிரியார். அவர் வழியைப்பின்பற்றி பக்தரும் பித்தரும் ஒன்றெனும் நிலையை அடைந்த **ஆண்டவன் பிச்சை** என்ற தன்னலம் அற்ற திருப்பெயரைத் தாங்கும் இந்நூலை ஆக்குவித்தோரின் பாடல்கள் எல்லாம் இறைவன் அவன் உள்ளத்தே தோற்றுவித்ததாகும். ஒவ்வொரு பாடலும் பக்திரசத்தேனே சொட்டும் மலராம் பாடும் நாவுக்கு தித்திப்பை தரும் கற்கண்டாம். சித்தத்தைக் குளிர்விக்கும் பன்னீராம். இதயதாமரையை மலர்விக்கும் பானுவாம். அஞ்ஞான இருளை நீக்கும் தீபமாம். மெய்பொருளை விளக்கும் காட்டவல்லது. மெய்யன்பர்கள் இந்நூலை ஓதி உணர்ந்து பேரின்பம் பெறுவாராக.

பக்தி நிறை "ஆண்டவன் பிச்சையாம்" பாடல்களை பக்தியுடனே படிப்போர்க்கும்-முத்தித் திருவான செல்வத்தை செம்மல் தணிகேசன் தருவான் இது நிச்சயம்

தணிகை அடிமை

வா.சு.செங்கல்வராயப்பிள்ளை
ஸ்ரீ குமரகுருபரன் பிள்ளைத் திமிழிலிருந்து
14-2-1953

ஸ்ரீ முருகன் திருப்பள்ளி எழுச்சி
அருட்பாவை
முன்னுரை

முருகன் ப்ரத்யக்ஷ தரிசனம் பன்முறை பெற்ற என்தாய், மரகசவல்லித்தாய், தணிகை மலை நாதன்பால் அன்பால் கரைந்த ஆனந்தசாகரம் சிற்சில பாடல்களாய் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஊனினை உருக்கிடும் வாக்குகள்
தேன்போல் ருசித்திடும் மொழிகள்
பால்போல் அன்பைப்பரவிடும் பாக்கள்

அம்மையார் தாய்மனம் இப்பாக்களிலிருந்து உதிரும் அனுபூதியின் வாயிலாக காணப் பெறலாம். முகப்பையாவது பார்த்துமுகவுரை எழுதக்கிடைத்த முருகனருளும் பூர்வபூண்யமே.

திருப்புகழ்மணி
1956

ஆறுபடைவீட்டுத்திருப்புகழ்

யாம் நினைத்ததும் அளிக்கும், மனத்தையும் உருக்கும் என்பது அருணகிரிநாதர் வாக்கு. அடியார்களை ஆட்கொள்ளும் முருகன் திருவருளால் அறுபத்துமூவர் கொண்ட அன்பர்களுடன் ஆறுபடை வீடு யாத்திரை சென்றோம் 3.5.1953 முதல் 9.5.1953 வரையில், (3-5-1958 முதல் 9-5-1958) அதில் ஸ்ரீமதி மரகதவல்லி என்கிற ஞானத்தாய் (ஆண்டவன் பிச்சை) அம்மையவர்களுடைய கூட்டுறவு கிடைத்ததும் அடியார்களின் பாக்யமே. ஸ்ரீமதி அம்மையவர்களின் கனிந்த உள்ளமும் களங்கமில்லாத நெஞ்சும் உருகி, கந்தனின் கருணை வெள்ளத்தில் மிதந்து வந்தவையே இதிலுள்ள பதிகங்களும் பாடல்களும் திருப்புகழ்களுமாகும். பாடல்களின் கருத்தை உன்னிப் பார்க்கும் மெய்யன்பர்களுக்கு நேரில் பார்த்து தரிசித்துப் பயன் பெற்ற அனுபவம் உண்டாகுமென்ற எண்ணத்தில், பார்த்துப் பயன் அடைபவர்களின் நற்பேற்றை என்னென்று சொல்வது ?

அடியார்களை ஆசி கூறி வழியனுப்பிய நமது ஸ்ரீதணிகைமணி அவர்களையும் ஸ்ரீ திருப்புகழ்மணி அவர்களையும் அடியார்களை வரவேற்று உபசரித்து அனுப்பிய அன்பர்களையும் தேவஸ்தான நிர்வாக அதிகாரிகளையும் வணங்கி, வாழ்த்தி, வழிகாட்டும் வள்ளலான வேலன் அடிபணிந்து மறவாமல் வாழ்வோமாக.

அடியார்களின் அடிமை
தமிழிசைமணி
இ.மீ. ஆதிசேஷன்

ஆறுபடை வீட்டுத் திருப்புகழ்

திருத்தணிகேசனின் திருவிளையாடலை என்னென்று கூறுவது ? என்னென்று வியப்பது ? பக்த சிரோமணி பாணியுடன்

சென்று ஆறுபடை வீடுகளின் தரிசனப்பேற்றை அடைந்த "ஆண்டவன் பிச்சை" என்னும் தாய் உள்ளத்தே எழுந்த பரமானந்தத்தால், கரைபுரண்டெழுந்த கவிரத்தினங்களாகும். இந்நூலில் காணப்படும் பாக்கள் எல்லாம்ஆறுமுகவேலன் அடியார்கள், இப்பாக்களை பாடி பரமனின் திருவருட் பேற்றினை அடைந்து சகல செல்வ யோகங்களையும் பெறுவார்கள்.

வாசு.செங்கல்வராயப்பிள்ளை

திருப்புகழ்மணி
ஆறுபடைவீட்டுதிருப்புகழ் பணிவுரை

அடியார் கூட்டத்துடன் ஆறுபடை வீடு பிரதஷ்ணம் செய்து, அருணகிரி வாக்குடன் அருள்வாக்கும் சேர்ந்து அம்மையார் பாடிய கீர்த்தனைகளும், பாடல்களும், அருள் பொதிந்தவைகளாக திகழ்கின்றன. இதற்கு முகவுரை எழுத வல்லேன். ஆகையால் பணிஉரையாக எழுதுகிறேன். இதைப்பாடி அனுபவிக்கும் பக்தர்களுக்கு ஆண்டவன் அருளைப் பொதிய பெறுபவர்கள் என்பதற்கு ஐயமுண்டோ.

பஞ்சதசி கீர்த்தனையிலிருந்து - 1960

ஸ்ரீ ஆண்டவன் பிச்சி அருளிய ஸ்ரீ பஞ்சதசாக்ஷரி கீர்த்தனைகள் அம்பத்தூர் ஸ்ரீ புவனேஸ்வரி பீடாதிபதி ஸ்ரீ ஓம் சாந்தி மௌன ஸ்வாமிகள் ஆசியுடன் புத்தக ரூபமாக வெளியிடப்படுகிறது. நாம் செய்த பாக்யம் இந்த கீர்த்தனங்களில் விசேஷமான ஸங்கீதம் அமைந்திருப்பதுடன், ஸாஹித்யமும்

உயர்ந்ததாக இருக்கிறது. ஸ்ரீ மௌன ஸ்வாமிகள் ஸ்ரீ முகத்தில் குறிப்பிட்டுள்ளபடி எல்லோரும் இந்த கீர்த்தனங்களை பாடி இன்புற வேண்டும்.

ஸ்ரீ மஹாலிங்கம்

23-8-1960

ஸ்தோத்திரமாலா புத்தகத்திலிருந்து பல்லவி மகாலிங்க ஐயரின் பணிஉரை

28-8-1968

ஆண்டவன் பிச்சை அவர்களை எனக்கு சுமார் 16 வருடங்களாக தெரியும். அவர்கள் சமஸ்க்ருத பாஷையில் உயர்ந்த முறையில் சாஹித்யங்கள் செய்திருப்பது அருள்வாக்கு என்பதில் சந்தேகமில்லை. பல கீர்த்தனைகளில் மெட்டு புதிதாக இருக்கிறது. ஆகையால் மெட்டுக்களும் அருளால் அமைந்ததே. அவர்கள் அமைத்த மெட்டுக்கள் மாறாமல் இருப்பதற்காக ஸ்ரீமதி ஜானகி, சீதா அவர்களால் கீர்த்தனங்களை அவர் பாடிக்காண்பித்தபடி ஸ்வரப்படுத்தியிருக்கிறது. பாடல்களின் மெட்டை மாற்றாமல், கற்பனைக்கு எட்டிய வரை சங்கதிகள் சேர்த்து, போஷித்து பாடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீ மகாலிங்கம்

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஆஸ்ரமம் சென்னை-1

27-3-64

ஸமர்ப்பணம்

முன்பு காளிதாசன் காளமேகம் அபிராமபட்டர் போன்ற மகான்களுக்கு ஸ்ரீ தேவியே அனுக்ரஹம் செய்து கவிதைகள் தோன்றியுள்ளன என்பதை கேள்விப்பட்டுள்ளோம். இக்கலியிலும் அப்பெரியார்கள் போன்ற மகான்கள் அவதரித்து கொண்டும் தேவி அனுக்ரஹம் செய்தும் வருகிறாள் என்பதை நாம் "ஆண்டவன் பிச்சை" என்ற பக்தைமூலம் தெரிந்து கொள்வது ஓர் பெரிய பாக்யமாகும். இக்கீர்த்தனைகள் அருள் வாக்கினால் ஆண்டவன் பிச்சைக்கு ஸ்ரீ தேவி ப்ரத்யக்ஷமாக தோன்றி பாடச்சொல்லி மலர்ந்தவைகள். ஆகவே, இப்பாமலர்களை "ஸர்வமங்களா" ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி ஆஸ்ரமத்திலுள்ள அம்பிகைக்கே ஆத்மசமர்ப்பணமாக்கியுள்ளார்கள்.

இவற்றை பாடினாலும் ஸ்தோத்திரமாக படித்தாலும் ஸ்ரீ தேவியின் அருளால் இம்மைமறுமை இரண்டிலும் கடாக்ஷம் பெற்று வாழ்வார்கள் என்பது உறுதி.

தாஸன்

ராஜகோபாலன்

ஸ்ரீ வைஷ்ணவி பஜனாவளியிலிருந்து

ஸன்மார்க சங்கத்தை சார்ந்த ஸ்ரீ வைஷ்ணவி ஆலயத்தில் அனைவராலும் மத்தம்மா என்று அன்பாக அழைக்கப்படும் அம்மையார், சென்னையில் ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்து மங்கையர்கரசியாக விளங்கியவர். இவ்வம்மையாருக்கு இளவயதிலேயே முருகப்பெருமானிடம் பக்தியுண்டாகி உள்ளத்திலிருந்து ஊற்றுபோல் அருமையான பலபாடல்கள் சுரக்கலாயின.

பிறகு ஸ்ரீ திருப்புகழ்மணி அவர்களின் ஆசிபெற்று, ஆசுகவி என்னும்படி சிறந்த தெய்வீகப் பாடல்களை விடாமல் பாடிக் கொண்டிருந்தார். பிறகு 1953-ல் ரிஷிகேசம் ஸ்வாமி.சிவானந்தரின் ஆசி பெற்று, சன்யாச வாழ்க்கை ஏற்றார். தக்க சமயத்தில் வைஷ்ணவி தேவியின் மீது பாடல்கள் கங்கா பிரவாகம் போல் பொழிந்தது. இனித் தமிழ் சொற்கள், தாளக்கட்டு, இன்னிசை மூன்றும் சேர்ந்து அழகுற அமைந்துள்ளது. இந்த அருமையான பாடல்களை பாடி அனைவரையும் மகிழும்படி செய்த இந்த கைங்கரியத்திற்கு தேவியின் பக்தர்கள் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம்.

வைஷ்ணவி ஆஸ்ரமம்
எஸ்.அம்புஜம்மாள்

ஸ்ரீ வைஷ்ணவி பஜனாவளியிலிருந்து

1959 ம் வருஷத்துக்கு முன்பிருந்தே அருள்மாதாவாகிய அன்னை ஸ்ரீ ஆண்டவன் பிச்சை அவர்கள் அருளுக்கு எங்கள் குடும்பம் பாத்திரமானது. எங்களுக்கு ஸ்ரீ வைஷ்ணவி தேவியும் அருள்மாதாவாகிய அன்னையும் வேவ்வேறல்ல. நாங்கள் ஸ்வாஸிக்கும் ஒவ்வொரு மூச்சும் அவள் அருளாலேதான். எங்கள் வீட்டில் சதா கொலுவிருக்கும் அன்னையின் திருஉருவம்தான் அவர்களின் அருட்சக்தியை நாங்கள் உணர்ந்து அனுபவிக்க முடியுமே தவிர பிறர்க்கு எடுத்துரைக்க இயலாது.

அவர்கள் அருள்வாக்கிலிருந்து வந்த பதிகங்களும் கீர்த்தனங்களும் கட்டுரைகளும் எண்ணிலடங்காதவை. முருகன், தேவி, ஈஸ்வரன் முதலிய பலமூர்த்தங்கள் மேலும் அவர்கள் பாக்கள் வந்துள்ளன. ஆனால் அவர் வாக்கிலிருந்து வெளிவந்து அச்சாகாமலிருப்பது அநேகம். அன்னையரின் அருள்வாக்குகளில் பக்தி பெருக்கெடுத்தோடுவதுடன், அவரது ஜீவப்ரம்மைய்க்கிய அனுபவம், ஆங்காங்கு நுதலில் அணிந்த சிந்தூரம் போல் காக்ஷி அளிக்கிறது.

இதை அன்புடனும், பக்தியுடனும் நம்பிக்கையுடனும் பஜிப்பவர்கள் இகபர சௌபாக்யங்களையும் மனோ சாந்தியும் பெற்றுத்திகழ்வார் என்பதில் ஐயமில்லை.

இ.கி.வேம்பன்
21-8-1975

அணிந்துரை

கலியுகத்தில் நம் ஜீவிய வாழ்க்கையில் பரந்தாமன் சரணாரவிந்தங்களை அடைவதற்கும், அகிலாண்டகோடி ஸ்ருஷ்டிகளுக்கு சக்தியை அளித்து ஆதரித்து வரும் ஸ்ரீ மாதா அகிலாண்டேஸ்வரி ஆதிசக்தி வைஷ்ணவிமாதாவின் பரிபூர்ண கருணாகடாக்ஷத்திற்கும், நமக்கு காட்டியிருக்கும் வழிகள் நாமசங்கீர்த்தனம். நம் புண்யபூமியில் நாமசங்கீர்த்தனமுறை சிறந்த பக்தர்களால் கீர்த்தனங்கள் மூலம் இன்றுவரை பழக்கத்தில் பல உள்ளன.

ஸங்கீதரஸிகை, நாதரூபாயை ரஞ்சன்யை என்று போற்றப்படும் ஸகஸ்ர நாமங்களினால் மாதாவின் மனோபாவம் நன்கு விளங்குகிறது. நம் ஆஸ்ரமத்தில் ஸதாகாலமும் அம்பாளின் கண்காணிப்பில் இருந்துவரும் ஸ்ரீ மத்தம்மா என்னும் ஆண்டவன் பிச்சையென்ற சுத்ததாத்மா, ஸ்வாமி சிவானந்தா மூலம் ஸந்நியாசம் பெற்று, ஸதாகாலமும் ஸத்ஸங்கத்தின் மூலமும், பகவத் ஆராதனை மூலமும் வாழ்க்கையை கழிக்கின்றார்கள். அன்னார் ஸ்ரீ வைஷ்ணவி தேவியின்மேல் அநேக காவியங்களைத் தொகுத்துள்ளார்கள்.

தேவி சன்னதியில் அமர்ந்து சம்பரதாயமுறைப்படி மாதாவுக்குகேற்ற இயற்றப்பட்ட பஜனை பத்ததியை அளித்துள்ள பெருமை ஸ்ரீ மாதாவையே சேரும். அம்மாதிரி சக்தியை அடைந்துள்ள ஸ்ரீ ஆண்டவன் பிச்சையைப் போன்ற

சுத்தாத்மாக்கள் நம் ஆஸ்ரமத்தில் இருப்பது நமக்கெல்லாம் ஒரு பெருமை.

டாக்டர்.வி.ராமமூர்த்தி
8-8-1975

ஆறுமுகப் பெருமானுடைய பெருமைகளை இனிய கவிகளில் எடுத்துக் கூறும் அருட்புகழ் நூலாம் ஆறுபடை வீடு நூலுக்கு முகவுரை எழுதும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டுள்ளதை எண்ணி, நான் மிகவும் பெருமகிழ்ச்சியும் ஆன்மிக இன்பமும் அடைகிறேன்.

பக்தி பரவச நிலையில் மிகத்தூய்மையான இருதயத்திலிருந்து, ஊற்றெடுத்து ப்ரவாகித்துள்ள அருள் பாடல்கள், விருத்தங்கள், உயர்ந்த நிலையை எய்தியுள்ள பூஜ்ய மாதா ஆண்டவன் பிச்சையின் மெய்மறந்த நிலையில் மலர்ந்துள்ள அமுத மொழிகள் இப்பர்சுரங்களாகும்.

பூஜ்ய மாதா "ஆண்டவன் பிச்சை"அம்மையார் (தற்போது ஸ்வாமி ஆண்டவானந்த ஸரஸ்வதி) அவர் பாலமுருகப்பெருமானின் அனுக்கிரஹத்தை பரிபூரணமாகப் பெற்றிருப்பவர். தன்னை மறந்து பேரின்ப வெள்ளத்தில் திளைத்திருக்கும் நாட்களே அவர்களது வாழ்க்கையில் பெரும் பகுதி. எம்பெருமான் பாலதண்டாயுதபாணியின் பூரண அருளாசியின் விளைவாக பிரகாச மூட்டப்பெற்ற துல்லிய இருதயாகாசத்திலிருந்து விகஸித்த இப்பாசுரங்களை பாராயணம்

செய்பவர்களின் இருதயங்களையும் தூய்மையாக்கும் என்பதில் ஐயமில்லை.

ஸ்வாமி சிதானந்தா
1980

முகவுரை

இசைப்பேரறிஞர், கலைமாமணி
டாக்டர் எஸ். இராமநாதன்,
66, டி.பி. கோயில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.

ஆண்டவன் பிச்சை அவர்களைப்பற்றி பல ஆண்டுகட்கு முன்னரே கேள்விப்பட்டிருக்கிறேன். ஆண்டவன் பேரில் அவர்கள் இயற்றியுள்ள இசைப் பாடல்களை நாடறியும், திருத்தணிகேசன் இதயாஞ்சலி, ஸ்ரீ வைஷ்ணவி பஜனாவளி போன்ற நூல்களில் அவர்கள் பாடல்கள் அடங்கியுள்ளன. 'காஞ்சி ஆச்சார்யாள்' அப்பாடல்களை செவியுற்று ஆசி வழங்கியுள்ளார்கள்.

ஆண்டவன் பிச்சை இப்போது திருமயிலை கபாலீசுவரர் பேரிலும் கல்பகாம்பா பேரிலும் தாம் இயற்றியுள்ள பாடல்கள் சிலவற்றை நூலாக வெளியிடுகிறார்கள். திருப்பள்ளி எழுச்சி, போற்றிப்பதிக்கங்களுடன், கீர்த்தனங்களும் இந்நூலில் இடம் பெறுகின்றன.

மாணிக்கவாசகருடைய திருப்பள்ளி எழுச்சி தொண்டரடிப்பொடி ஆழ்வாருடைய திருப்பள்ளி எழுச்சி,

பாரதியார் இயற்றிய பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி இவைகளுடன் வைத்து எண்ணக்கூடிய வகையில் இத்திருப்பள்ளி எழுச்சி அமைந்துள்ளது.

பாடல்கள் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மூன்று மொழிகளிலும் இயற்றப்பட்டிருக்கின்றன. எல்லாரும் எளிய முறையில் பாடும் வகையில் அமைந்துள்ள இப்பாடல்கள் சிலவற்றைப் பாடக் கேட்டேன். இசை உலகமும், இறைவன் அன்பர்களும் இந்நூலை விரும்பி ஏற்பார்கள் என்பது என் நம்பிக்கை.

எஸ்.இராமநாதன்
22-11-83

ஸ்ரீ தேவி மீனாக்ஷி நவராத்திரி ஸ்தோத்திரமாலா

இப்புத்தகத்தில் ஞானத்தாயாகி, ஸ்ரீ ஆண்டவன் பிச்சை அவர்களுக்கு நவராத்திரி காலத்தில் ஏற்பட்ட அருள்வாக்காகிய மீனாக்ஷி நவரத்தினமாலாவும் ஆதிசங்கரர் தொகுத்த மீனாக்ஷி பஞ்சரத்ன ஸ்லோகமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஸ்திரீயும் பிரதி வெள்ளி, செவ்வாய் பராயணம் செய்தால் சகல பாக்யத்தையும் செல்வத்தையும் அடைவார்கள். முடிந்தால் பிரதி தினமும் பராயணம் செய்வது ரொம்பவும் நலம்.

அடிமை
பி.டி.பாணி

மதுரை ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேஸ்வ
ஸ்துதி இசை மாலை 1985

ஸ்துதிகதம்பம்

செஞ்ஜோதி பரஞ்ஜோதி பராசக்தி பாரெங்கும் பசுமை நலம் பாய்ச்சுவதற்காக மரகத மீனாக்ஷியாய் விளங்குகிறாள். மரகதம் என்பதே ஆண்டவன் பிச்சி அம்மாவின் இயற்பெயர் திரிந்து "மத்தா" ஆயிற்று. அவரை நெருங்கியந்தோர் "மத்தம்மா" என்று சொல்லுகிறோம். மத்தா என்றாலே பித்து பிடித்தவள் என்று ஓர் அர்த்தமுண்டு. இதே பொருள்படும் சிவானந்தமெனும் மதுபோதையில் மயங்கிக் கிடக்கும் மாத்வீபாநாலஸ மத்தாவாக ஸகஸ்ரநாமம் அம்பாளையே சொல்லுகிறது. சிவானந்தமே கருணையமுதாகி, கருணையமுதே கானரஸமாகி விடுவதால், இசைத்தெய்வமாம் ராஜமாதங்கியாகிய மதுராபுரியில் குடிகொண்டுள்ள மீனாம்பிகைக்கே மத்தா நாமம் விசேஷமாகப் பொருந்தும். அந்த மத்தாவின் மீனலோசனியின் அருள் நோக்கின் வெட்டில் இந்தப் பாடல்களை ஆக்கியுள்ளார்.

எளிய எண்ணம் எளிய வாக்கு ஒரு புறம், வேதாந்த மந்த்ர ஸாஸ்த்ர கருத்துக்களும், சொற்றொடர்களும் ஒரு புறம். இருபுறங்களும் யாத்துள்ள பாடல்களை பார்க்கிறோம். "யாத்து" என்றாலும் மூளையில் காரியமாக வார்த்தைகளைக் கோர்த்து இயற்றாமல் ஒரு ஆவேச நிலையில் பாடியவையே இவை. இவற்றிற்கு முழுமையளிப்பது ராகதாளங்களே. மனமாதுர்யத்தாலேயே மாமதுரை அம்மாவுக்கும் அவளது

மணாளன் சொக்கனுக்கும் ஓர் தூய ஜீவன் அர்ச்சிக்கும் இசைமலர்களாகும்.

"நாவைப் படைத்தாய் உன் நாமத்தைக் கூறவே, நாளும் உனைப்பாடிப் பணிந்தேன்" எனப்பாடும் அம்மாவின் பாவத்தில் பக்தர்களும் பாடி மகிழலாம்.

ரா.கணபதி
சென்னை-17

His Holiness Om Shanti Moana Swami "Shanti Ashram"

ஆண்டவன் பிச்சை சௌபாக்ய பஞ்சதசி கீர்த்தனைகள். இது, அதாவது ஸ்ரீ அம்பாபுர வாஸினி கீர்த்தனையுடன் ஷோடாக்ஷரி ஆக 16 அக்ஷரங்களுடன் கூடியது. ஸ்ரீ சௌபாக்ய மூலமந்திரமாகும். அவைகளையே த்ருசதி நாமாக்களை வைத்து கீர்த்தனைகளாக செய்திருப்பது அனுக்ரஹம்தான்.

இதை ஒவ்வொரு வீடுகளிலும் பக்தியோடுபாடினால் ஸொபாக்யம் தாண்டவமாடுமென்பதில் ஸந்தேகமில்லை. எல்லோரையும் ஸாக்ஷாத்கார அம்பிகை கடாக்ஷிக்கட்டும்.

நாராயண ஸ்மரணம்

ஓம். சாந்தி

ஸ்துதிகதம்பம்

முன்னுரை

இறையருள் பூரணமாக பெற்றுள்ள "ஆண்டவன் பிச்சை" அம்மையார் அவர்களின் வாயிலாக இறையுணர்வு நிரம்பிய பாடல்கள் பல நமக்கு பெரும்பொக்கிஷமாக கிடைத்துள்ளன. இறைவனை பல வடிவங்களிலும் அம்சங்களிலும் நாம் போற்றி பாடி மகிழ்கின்றோம். பல பக்தர்களின் வழிபாட்டிற்கேற்ப பாடல்கள் உன்னதமான கருத்துக்களையும் எளிய இனிய மொழியில் பாடியிருக்கும் அம்மையார் தமிழில் மட்டுமல்லாமல், தெலுங்கிலும் சமஸ்க்ருதத்திலும் அம்மையார் அவர்கள் பாடியுள்ளது பக்தர்களுக்காக இறைவன் அருளிய ஏற்பாடு என்பது புலனாகும்.

C.V.நரஸிம்மன்
25-1-1987

பதிப்பாளர் குறிப்பு

சர்வ வல்லமையுள்ள இறைவனின் அருளாலும், அருள் மாதாஜி ஆண்டவன் பிச்சை அவர்களின் அன்பு ஆசியினாலும், "ஆண்டவன் பஜன் மண்டலி" தனது 5 வது ஆண்டு விழாவைக் சிறப்பாகக் கொண்டாடி 5 வது புத்தக வெளியீட்டையும் கொண்டு வருகிறது. இந்த மண்டலியை ஊக்குவித்தாலும், பல இடங்களில் பாடக் கூடிய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தும்

உதவிய அன்பர்களுக்கு மண்டலியைச் சேர்ந்த சஹோதரிகள் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். மாதாஜீயின் பாடல்களின் உள்ள கருத்தும், பக்தி நெறியை ஊட்டும் இசையும் கேட்டு மகிழ்ச்சி அடைந்தவர்கள் இந்த பஜன் மண்டலியின் நல் வளர்ச்சிக்கு மிகவும் உதவி புரிகின்றனர்.

இந்த புத்தகத்தில் அடங்கியுள்ள பாடல்கள் சில, அதாவது சூக்ஷ்ம ராமாயணம், ராம ராம மகிமை முதலியவைகள் டில்லி சவுத் இண்டியன் சமாஜத்தார்களினால் ஏற்கனவே வெளியிடப்பட்டவை. ஸ்ரீ கிருஷ்ண லீலா பாடல்கள் மாதாஜி அவர்கள் மத்ரா பிருந்தாவனம் சென்றபோது அங்குள்ள காலா கிருஷ்ணன் கோயிலில் (மீராவை ஆட்கொண்ட கண்ணன் கோயில்) அரங்கேற்றப்பட்டவை.

அன்பர்களின் ஊக்கத்தினால் இதே போல் ஒவ்வொரு வருடமும் ஆண்டவன் பிச்சை மாதாஜியின் பதிப்பில் வராத பாடல்களை புத்தகமாக வெளியிட விழைகிறோம்.

வயதின் காரணமாக மிகவும் பலஹீனமான நிலையிலுள்ள மாதாஜீக்கு ஆண்டவன் நல்ல ஆரோக்கியத்தை அளிக்கப் பிரார்த்திக்கிறோம். இந்த புத்தகத்தை ஞானத்தாய் ஆண்டவன் பிச்சையின் பாதக் கமலத்தில் வணக்கத்துடன் சமர்ப்பிக்கிறோம்.

காமாக்ஷி குப்புஸ்வாமி,

ஆண்டவன் பிச்சை பஜன் மண்டலி

1989

ஸ்ரீ சந்த்ரமௌலீச்வராய நமஹ :

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பரை

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீமடம ஸம்ஸ்தானம்

முகாம் : காஞ்சிபுரம்

தேதி : 19/08/99

ஸ்ரீ ஆண்டவன் (பிச்சை) பஜனை மண்டலியும் ஸ்ரீ சுவாமி ஆண்டவானந்த சரஸ்வதி (ஆண்டவன் பிச்சை) அம்மையாரின் உறவினரும் ஸ்ரீ ஆண்டவன் பிச்சை அவர்களின் 100வது ஆண்டு விழாவை 1999 ஆண்டு செப்டம்பர் 6 ந் தேதி வெகு சிறப்பாக கொண்டாட திட்டமிட்டு அவ்வமயம் ஒரு அறக்கட்டளை நிறுவி இந்த அறக்கட்டளை மூலம் வேத பாடசாலைகளுக்கு உதவி செய்தும் இன்னும் பல நல்ல காரியங்களில் ஈடுபட உள்ளதை கேட்டு சந்தோஷிக்கிறோம்.

இந்த நல்ல கார்யத்தை செய்யும் ஸ்ரீ ஆண்டவன் (பிச்சை) குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கும் ஸ்ரீமதி காமாக்ஷி குப்புஸ்வாமி அவர்களுக்கும் இதே மாதிரி பல நல்ல கார்யங்கள் செய்து கொண்டு எல்லோரும் பரம க்ஷேமமாக இருக்க ஆசிவழங்கி அனுக்கிரஹிக்கிறோம்.

"நாராயண ஸ்ம்ருதி"

1

மனம் அடக்கமின்மை

அஞ்சும் அடங்கவில்லை - ஆறும் ஆகவில்லை
நெஞ்சும் நிலைக்கவில்லை - நேர்மையாய் நடக்கவில்லை
துஞ்சும் போதும் துரோக எண்ணம் விலகவில்லை.
மிஞ்சும் ஆணவப் பேச்சில் ஒன்றும் குறையவில்லை
நஞ்சுமிழும் நாவினால் நல்லோர்கள் உள்ளத்தை
கொஞ்சமும் தயவின்றி குத்துவது விடவில்லை
தஞ்சமென்று பெரியோரைத் தரிசித்து போற்றவில்லை
வஞ்சகப் பொய் வேடமிட்டு அனைத்தும் துறந்ததாய்
நெஞ்சாரப் பொய் உரைத்து ஏய்ப்பதும் விடவில்லை.
என் ஜால தந்திரங்கள் எமனிடம் செல்லாது.
எவர் வருவார் அக்காலன் வரும் காலம் துணையாக

2

மண்ணில் மறையும் மாய வாழ்வு

மண்ணில் பிறந்திடும் தாவரங்களெல்லாம்
பெண்ணில் பிறந்திடும் ஜீவர்கள் எல்லாம்
மண்ணுக்கும் பெண்ணுக்கும் மாறி மாறி பிறந்திறந்து
மண்ணுடன் மண்ணாக மறைகின்றது வாழ்வு

3

அறியாமை

ஆசை என்னும் மாநதிகள்
அருள்கடலில் போய்க்கலந்து
ஓசையெல்லாம் அடங்கி உள்ளே
சென்று ஒடுங்குதற் போல்

அகற்றிய மாதவத்தோர் உள்ளத்தில்
அடங்கி இருவினையும் நீங்கிடுமே ?

4

பக்தியினால் முக்தி பெறுவது சுலபம்

ஒன்றே தெய்வம் உயர் தணிகேசன்
இரண்டே உள்ளது ஈசனும் நேசனும்
மூன்றெழுத்தானது முருகன் நாமம்
நாலு மறைப்புகழ் நாதன் ஷண்முகன்
ஐந்து முகத்தோன் அளித்த பாலன்
ஆறு திருப்பதி ஆளும் தெய்வம்
ஏழ்நிலைதன்னில் இலங்கும் பரஞ்சுடர்
எட்டிதழ் இதயக்கமலத் திருப்போன்
ஒன்பது சக்தியும் ஓர் கரம் எற்றவன்
பக்தி (பற்றி) யில்லாதவர்கள் பங்கிலிருப்போன்
சத்தியம் அவனே சரவணபவனாம்
முக்தி அளித்திடும் மூலப்பொருளாம்

5

உயிரெழுத்தால் வேண்டுரைத்தல்

அன்னை தந்தையர்கள் அடிபணி வேண்டும்
ஆசார்யர்கள் திருவடி பணிய வேண்டும்
இதயத்தில் இறைவனைப் போற்ற வேண்டும்
ஈனமில்லா நற்குணங்கள் பயில வேண்டும்
உண்மை சொல்லும் உறுதியென்றும் உள்ளத்தில் வேண்டும்
ஊதாரியாகாமல் வாழ வேண்டும்
எவரிடத்தும் இன்மொழிகள் பேச வேண்டும்
ஏற்பவர்க்கு ஏதேனும் வழங்கவேண்டும்
ஐம்பொறிகள் ஆட்டத்தை அடக்க வேண்டும்

ஒரு போதும் புறம் கூறாதிருக்க வேண்டும்
ஓதும் மறை மொழி வழியில் நடக்க வேண்டும்
ஔஷதம் போல் ஆகாரம் கொள்ள வேண்டும்
தக்கவழி இதுவென்று காமறிந்து
எக்காலமிதை வழுவாதிருக்க வேண்டும்

6
மெய்யறிவுறுத்தல்

1. முன்பிருந்தார் - பின்பிறந்தார்
என்பதனைக் கண்டறிந்தும்
வன்பிறவி - நோய் தடுக்கும்
வகையொன்றும் - தேடாமல்
தன்பிறவி - நிலையென்று
தருக்கித் திரிபவருக்கு
புன் புலாலாக்கைப் போகாமல் நிற்குமோ ?

2. அன்பர்கள் சூழ்ந்திருந்தும்
ஆயிரம் பொன்தானளித்தும்
அந்தகன் வந்தால் - அகல்வானே
அரைக்கணமும்
பின்(பு) அழுது - பயனென் - இப்
பிறப்புள்ள போதே (உன்)
பிறப்பொழிக்கும் வழி கண்டு
பேரின்ப மெய்திடலாம்.

7
அடக்கம்

நாவடக்கி - நானென்னும் பேயடக்கி,
நலமறியா நெஞ்சத்தின் கொதிப்படக்கி,

கோப மென்னும் அரக்கனின் கொட்டமடக்கி,
கொடுமை மிகும் காலத்தின் வெறியடக்கி,
ஏவலிடும் இந்திரியங்கள் இச்சையெல்லா மடக்கி,
ஏற்கும் இழிகுணத்தை எப்போதுமடக்கி,
பாவப் படுகுழியில் தள்ளும் பொறாமையென்னும்
பகவனை - த்யாகமென்னும் - தண்டத்தாலடக்கி,
மா வலிய மன மென்னும் - மதயானையை அடக்கி,
மதிமயங்கும் இருவினையின் - மாயமெல்லா மடக்கி,
ஜீவதயை -அன்பு - அறிவு - அடக்கமுடன் ஆத்ம சுத்தி,
சிந்தை தளராத - பக்தி வைராக்யமுடன்
தேவ தேவனை - தேகத்துள் கண்டவர்க்கு
தேடி வரும் கைவல்ய மோக்ஷ பதம் தானே.

8

வேண்டாம்

வருவதறியாது செயல் புரிய வேண்டாம்
வஞ்சகர் தம் நட்பென்று நாட வேண்டாம்
கருவத்தால் பிறர் வருந்தப் பேச வேண்டாம்
கடமைகளைச் செய்திடப் பின்வாங்க வேண்டாம்
மர்மமாய்ப் பகையை உள் வாங்க வேண்டாம்
மற்றவர் வாழ்வு கண்டு மருக வேண்டாம்
தர்ம வழி விட்டு என்றும் நடக்க வேண்டாம்
தாழ்ந்தவரைத் துச்சமாய் பேச வேண்டாம்
பொறுமை எனும் பூஷணத்தைத் தொலைக்க வேண்டாம்
பொன்னுக்குப் போராடி மடிய வேண்டாம்
திருவளரும் தாய்க் குலத்தை வருத்த வேண்டாம்
தீனர்களுக்குதவி செய்ய தயங்க வேண்டாம்
உருவ மயக்கில் உள்ளத்தை இழக்க வேண்டாம்
சர்வ பரிபூரணனை மறக்க வேண்டாம்
சந்ததமும் சாந்தியுடன் வாழ வழி இதுவே

9
உண்டு

மற்றவர்கள் வாழ்வு கண்டு மனம் பற்றி எரிந்த துண்டு
மனத்துள் பலபாவங்கள் செய்து மறைத்ததுண்டு
உற்றார் உறவினர்க்கு உதவி ஒன்றும் செய்யாமல்
உதட்டளவில் உபசாரம் பேசி மகிழ்ந்ததுண்டு
கற்றவர் முன் நாணமின்றி கவிபாடினே னென்று
கைகொட்டிப் பாடி ளித்த மகிழ்ந்ததுண்டு
நற்றவத்து பெரியோர்கள் நல்வாக்குரைத்திடினும்
நலமறியாது பரிகசித்து எதிர் பேசி இகழ்ந்ததுண்டு
பற்றற்றவர் போல் நடித்து பாரிலுள்ளோரெல்லாம்
பாதம் பணிய வைத்துப் பார்த்து மகிழ்ந்த துண்டு
அவற்றவர்க்கு அனுதாபம் காட்டுவதாய் அபிநயித்து
அவர்களிடம் பணி ஏற்று ஆனந்தம் கொண்டதுண்டு
குற்றங்கள் பலசெய்து கூடி இருப்போர் முன்
கோதற்றவர் போல் பேருரைகள் செய்ததுண்டு
முற்றிலும் அறிவிழந்து பேதை நான் செய்த பிழை
மூவுலகில் உள்ளோர்கள் எவர்களுமே செய்ததில்லை.

10
மனக்கோயில்

அன்பெனும் திருக்குளமாம்
ஆர்வமெனும் ஆலயமாம்
ஆறுநிலை கோபுரமாம்
துன்பப்படுவோரை வாவென்றழைத்திடும்
ஓங்கி நிற்கும் கொடி மரமாம்
உறுதி என்னும் நந்தியுண்டாம்
என்பெல்லாம் தூணாக நிற்கும் ப்ரகாரங்களால்
இதயத்துள் இறைவன் சன்னிதியாய்
வன்பிறவி நோய்த் தீர்க்கும் வைத்ய நாதன்

வாழும் திருக்கோயில் அடியார் உள்ளமே
ஞானச் சுடரொளியாம் தன்மலர்கள் பக்தியாம்
ஈனமாம் இருவினைகள் இடும் தூப நறுமணமாம்
ஈசனுக்கு நைவேத்யம் இனிய வைராக்கியமாம்
ஊனமில்லா ஓங்காரமணி நாதம் ஒலித்திடுமாம்
உலகெலாம் நிறைந்தவர்க்கும் உள்ளத்தில் பூஜையாம்
தான் அதுவான தத்துவத்தை யுணர்ந்தவர்கள்
தவறாமல் வழிபடும் ஆலயம் உள்ளமே.

11
வேண்டாம்

எதுவரினும் கலங்காத மன அமைதி வேண்டும்
ஏற்றத் தாழ்வு எனும் எண்ணம் மறைய வேண்டும்
புதுமை கண்டு மயங்காத புத்தி வேண்டும்
புறம் பேசும் கொடியகுணம் மாற வேண்டும்
இது எனக்கென்று ஏற்காத புத்தி வேண்டும்
இன்னா செய்தார்க்கு நலம் புரிய வேண்டும்.

12
மெய்ஞானச் சுடர் கண்ணிகள்

1. எங்கிருந்து இங்கு வந்தாய் ஏழை மானிடனே - நீ
போகுமிடம் அறிவாயோ புகல்வாய் இப்பேதைக்கு
தங்க வந்த இடமுனக்கு சொந்தமோ அன்றி மண்ணில்
மயங்கும் உடல் தானுனக்கு என்றும் நிலையோ சொல்வாய்

2. சொந்த மென்னும் சுற்றமெல்லாம் சூழ்ந்திருந்து காப்பதெல்லாம்
அந்தகன் வந்தால் அழுது அகல்வதை நீ அறிவாயோ
பந்தமென்னும் பெறும் விலங்கை அந்தமிகும் அணியென்று

சிந்தை மகிழ்கின்றாய் சிறை என்றுணர்ந்தில்லையே

3. வாழ்க்கையெனும் பெருங்கடலில் வகையறியாதி றங்கி விட்டாய்
மூழ்கி மூழ்கி மூச்சடங்கி முயல்கின்றாய் கரையேற
பாழ் கவலைப் பேயிடத்தில் பரிதவித்து துடிக்கின்றாய்
ஈழ்க்க வரும் இருவினைக்கு இடமளித்து தயங்குகின்றாய்

4. அக்ஞான இருள் வீட்டில் அகப்பட்டு தவிக்கின்றாய்
அறிவென்னும் சுடர் விளக்கைஅணைத் அவதியுறுகின்றாய்
ப்ரக்ஞான மென்னும் பொருள் அழியாது உள்ளிருக்க
அக்ஞானத்தால் அலைந்து அழியும் பொருள் தேடுகின்றாய்

5. சந்தமும் உடற் பேணி நொந்தயர்ந்து மாள்கின்றாய்
விந்தை உலகியலில் வீண் மோகம் கொள்கின்றாய்
கட்டுக் கடங்கா மனங்குரங்கின் பின்னோடி
பட்ட துன்பம் எல்லாம் பாழ் மனமே நீ மறந்தாய்

6. நடந்தார் விழுந்தார் இறந்தார் என்பது கேட்டும்
நாளை நாளை யென்று நப்பாசைப் படுகின்றாய்
கடமை கடமையென்று கட்டி அழுகின்றாய்
விட.மாட்டேனென்று வினை விருப்புடன் செய்கின்றாய்

7. நல்லோரைக் கண்டால் நாணிப் பதுங்குகின்றாய்
நலமறியாப் பெயருடன் நாளவமாய் கழிக்கின்றாய்
அல்லும் பகலும் ஆசைக்கிடமளித்து
அலைகடல் துரும்புபோல் அலைப்புண்டு பதைக்கின்றாய்

8. துறந்தாரைக் கண்டால் துச்சமாய் மதிக்கின்றாய்
துன்மார்க்கப் பேயிடம் பயந்து பணிகின்றாய்
இறந்தாரைக் கண்டும் இருப்போமென்றாசையினால்
மறந்தாய் நீ மறலி வரும்நாள் என்றறிவாயோ

9. அரும்பொன் அறிவு உன்னுள் ஆதரவற்றுக் கிடக்க
இரும்பும் செம்பும் தேடி ஏங்கி இளைக்கின்றாய் (காமம் க்ரோதம்)
கருப்புகும் வாழ்விற்கு காதல் கொண்டு திரிகின்றாய்
விருப்பமுடன் வினை செய்து வேதனைகள் சுமக்கின்றாய்

10. இரவு பகல் போல இன்ப துன்பம் மாறி வரும்
நிலவுலகில் கண்டசுகம் நிலைபெற்று நின்றதுண்டோ
அரவின் வாய்ப்பட்ட தேரை போல் அலமலந்து
அனித்யமாம் வாழ்க்கையில் அல்லலுற்று தவிக்கின்றாய்

11. கருவில் உனைக் காத்தவர் யார் கசு மலங்கள் ஒட்டாமல்
பிறப்பதற்கு பேருதவி புரிந்த பெருந்தகை யார்
மண்ணில் பிறந்தவுடன் மாதாவின் மார்பிடத்தில்
உண்ணும்படி அமிர்தம் ஊற்றி வளர்த்தவர் யார்

12. உலகில் உடல் வளர உள்ளிருக்கும் மதிவளர
பலவிதமாய் காக்கும் பரமனருள் மறந்தாயே
இடறி நீ விழும்போது எடுத்தணைக்கும் இனிய கரம்
இறைவன் வடிவென்று ஏன் மறந்தாய் பேதையே.

13. நீ உறங்கும் போதெல்லாம் நின்னருகில் வீற்றிருந்து
தீவிரமாய் காத்திருக்கும் துணையாரென்றறிவாயோ
பருவமென்னும் புயல் காற்றில் சுழலும் துரும்பாய் உனைத் தன்
அருகழைத்து ஆதரிக்கும் அன்பன் யார் அறிவாயோ

14. இல் வாழ்க்கையில் புகுந்து இடர்ப் படும் போதெல்லாம்
நல் வழி காட்டி நடத்துபவர் யார் அறிவாயோ
ஸம்ஸார ஸாகரத்தில் அலைமோதும் போதெல்லாம்
நம் சார்பில் நின்று காப்பவர் யார் பாழ் மனமே.

15. முதுமையில் நோய் முடுக்கிடவும் முற்றும் அயர்ந்திடுங்கால்
இதமாய் உன்னருகிருந்து இரங்கும் உருவம் யார்
ஆடிய ஆட்டமெல்லாம் அடங்கி உயிர் பிரியுங்கால்
நாடி வந்தாட்கொள்ளும் நாயகன் யார் நவிலாய் மனமே

16. ஆறறிவுடன் பிறந்தும் அறிவிற்கறிவாய் விளங்கும்
பேரொளியைக் காணாமல் பிணமாகும் மானிடனே
எல்லாம் இயற்கை என்று எளிதில் புகல்கின்றாய்
இயற்கையை இயக்கும் சக்தி எது நீ கூறாய்.

17. இருள் விலக எழுங்கதிரை ஏவுவது யார் அனுதினமும்
மறையும்படி அழைத்து மூடுவது யார் அறிவாயோ
இருளும் ஒளியும் இன்றேல் உலகெல்லாம் பொருந்துமோ
ஓர் நிலையில் பகர்வாய் நீ மானிடனே.

18. பருவங்கள் தன்னை பாங்குடன் வகுத்தவர் யார்
வரும் மழையால் வையகத்தை வாழ்விக்கும் வள்ளல் யார்
தாவரங்கள் தான் படைத்து தானியங்கள் காய் கனிகள்
ஆவலுடன் உண்ண அமைத்தவர் யார் அறிவாயோ

19. சுவாஸிக்கும் காற்றை சலிக்க வைக்கும் சக்தி எது
சார்ந்துடலில் அனலாய் சஞ்சரிக்கும் உஷ்ணம் எது
பார்ப்பதுவும் கேட்பதுவும் பேச்சும் உன் மூச்சு எல்லாம்
பரமன் உன்னுள்ளத்தில் தங்கும் வரைதான் நடக்கும்

20. ஒரு கணத்தில் மூச்சடங்கி உயிர் பிரியும் மாயத்தை
உன்னிப் பார்த்தால் உலகில் உடல் நிலையாதென்றுணர்வாய்
பெறுதற்கரிய பிறப் பெடுத்தும் பெருமானைப் போற்றாது
இல்லை யென பிதற்றி திரிகின்றாய்.

21. இயற்கையின் வளமெல்லாம் இன்பமுடன் அனுபவித்தும்
தயவுடன் தந்தவனை தள்ளிவிடப் பார்க்கின்றாய்
உன்னால் ஓர் துரும்பும் உண்டாக்கத் திறனுண்டோ

உள்ளத்தில் ஒளி மறைந்தால் உடல் ஆடித் திரியுமோ

22. நான் நானென்று நாப்பறையடிக்கின்றாய்
நான் என்பது யாரென்று அறிவாயோ பாழ் மனமே
நானென்பதுன் உடலா உயிரா உரைப்பாய் நீ
எனதென்று மார்தட்டி எக்களித்துத் திரிகின்றாய்

23. உயிர்தான் நீயென்றால் உள்ள பொருள் தானுணர்ந்து
உள்ளம் தெளிவடைந்து உண்மை உணராயோ
உயிரென்னும் பறவை வந்து தங்கும் கூடாம் உடல்
உயிர்ப் பறவை பறந்து விட்டால் உதவாதது ஏன் கூறாய்

24. உடுத்த துணி கிழிந்தால் உதவி எறிவது போல்
எடுத்த தேகம் கழிதல் இயற்கையின் நியதி என்பாய்
தேகம் அழியுமுன்பு தேகத்துள் வாழ்பவனை
தேடியடையாமல் தியங்குவது ஏன் பாழ்மனமே

25. அல்லும் பகலும் ஆடும் இதய ஒலி
சொல்லவில்லையோ உனக்கு சூக்ஷ்மத்தை மானிடனே
அகத்துள் ஆண்டவன் ஆடும் திருநடனம்
ஜகத்துள் உன்னை ஆட்டி வைப்பதறிந்திலையே

26. ஆட்டம் அடங்குமுன் ஆண்டவன் திருவடியில்
நாட்டங் கொண்டால் நலமடைவாய் நன் மனமே
கூட்டில் உயிர் பறவை கூவும் குரல் கேட்டும்
சேட்டை அடங்கி செவி சாய்க்க மறுக்கின்றாய்.

27. சலிக்கும் மனதடக்கி சற்று நீ உற்றுப் பார்
நிலைக் கண்ணாடிபோல நெஞ்சம் விளங்கிடுமே
காண்பாய் அகத்துள் காத்திருக்கும் பேரொளியை
கவலையென்னும் இருளகன்று கைவல்ய பதமடைவாய்.

13

கைவல்ய மோக்ஷ பதம்

நாவடக்கி நானென்னும் பேயடக்கி
நலமறியா நெஞ்சத்தின் கொதிப்படக்கி
கோவமென்னும் அரக்கனின் கொட்டமடக்கி
கொடுமை மிகும் காமத்தின் வெறியடக்கி
ஏவலிடும் இந்திரியங்கள் இருமாப்படக்கி
ஏற்கும் இழிகுணத்தின் இச்சையடக்கி
பாவப் படுகுழியில் தள்ளும் பொறாமை எனும்
பகைவனை தியாகமெனும் தண்டத்தினாலடக்கி
மாவலிய மனமென்னும் மதயானையை அடக்கி
மதிமயக்கும் இருவினையின் மாயமெல்லாம் அடக்கி
ஜீவதயை அன்பறிவு அடக்கமுடன் ஆத்ம சுத்தியுடன்
தேவ தேவனை தேகத்துள் கண்டவர்க்கு
தேடிவரும் கைவல்ஷ் மோக்ஷ பதம் தானே.

14

எல்லாம் கடவுள் செயல்

கடவுள் என்ற ஒரு பெரும் சக்தியின்றியோ
காலையும் மாலையும் கதிர் மதியும் தோன்றுவதும்
உடலுக்குள் உயிராக இயங்கிடும் காற்றே
உலகெலாம் நிறைந்து உலவித் திரிவதும்
இடை ஈடின்றி எங்கும் தோன்றும் பருவங்கள்
எவர் ஆக்கினைக்கடங்கி முறையாகத் தோன்றுவது
தடை விதித்ததார் கடல்கள் கரைகள் கடவாவண்ணம்
கற்பிதமாய் பலகோடி தாவரங்கள் விளைவிப்பதார் செயல்

சடலத்தை இயக்கிடும் சக்தியாம் கடவுளைச்
சடலம் அழியுமுன் கண்டறிந்த ஞானிகள்
மடமையால் மயங்கிடும் மானிடர்க்கறிவித்தார்
மனத்திற்குள் காண் என்ற மர்மத்தை அன்பினால்
தொடரும் இருவினையாம் மாயத்தை அகற்றியபின்
தூய ஆத்மாவே துலங்குவதைக் கண்டபின்
திடமுடன் காண்பதெல்லாம் கடவுள் அருள் என்றறிந்து
திகைக்காமல் கடமை எல்லாம் கடவுள் கட்டளையாய் ஏற்பார்.

15

மண்ணில் மறையும் மாய வாழ்வு

மண்ணில் பிறந்திடும் தாவரங்களெல்லாம்
பெண்ணில் பிறந்திடும் ஜீவர்கள் எல்லாம்
மண்ணுக்குள் பெண்ணுக்கும் மாறி பிறந்திறந்து
மண்ணுடன் மண்ணாக மறைகின்றது வாழ்வு.

16

கடவுள் ஒருவரே

அண்ட சராசரமெல்லாம் ஆக்கி அழிக்கின்ற
ஆண்டவன் ஒருவனே என்றறிந்த ஞானியர்கள்,
கண்ட துண்டமாய் வகுத்து கடவுள் பலரென்றாலும்
மண்டல மட்டொளி வீசும் பகலவன் ஒருவனே
எண்டிசையும் ஏழ் கடலுக்கப்பாலும் தோன்றுதல்போல்,
பண்டறிந்து பலவடிவாய் பக்திசெய்து பயனடைந்தார்
தொண்டர்குலமெல்லாம் தொன்று தொட்டு வழிபட்டு
கண்ட தொன்றே கடவுளென்ற பேருண்மை சத்தியம்.

ஸ்ரீ வைஷ்ணவி கவசம்

(1) அலைகடல் தந்த தேவி ஐயன் நாவில் உரையும் தேவி
நிலைத்திரு புரமும் நின்று நித்தியம் சேவை செய்யும்
மலையரசன் பெற்ற செல்வி மாதா ஸ்ரீவைஷ்ணவி தேவி
தலைமிசை பாதம் வைத்து தயவுடன் நம்மைக் காக்க

(2) நெற்றி புருவங்கள் நாசி நிர்மலை வைஷ்ணவி காக்க
மற்றிரு கண்கள் செவிகள் மாதா ஸ்ரீவைஷ்ணவி காக்க
சொற்றிறம் கொண்ட நாவும் பற்களும் பராபரை காக்க
வெற்றிவேல் குமரன் அன்னை உதடுகள் கன்னங்கள் காக்க

(3) முகவாயும் கழுத்தும் முல்லைவனம் வாழும் வைஷ்ணவி காக்க
தகவுடன் தோட்கள் மார்பும் தாயாம் ஸ்ரீவைஷ்ணவி காக்க
இகபரம் அளிக்கும் அன்னை இடையினை வயிற்றினைக் காக்க
மிகமகிமை கொண்ட மாதா இருகைகளும் விரல்களும் காக்க

(4)இருதொடைகள் ஜனேந்த்ரியங்கள் இறைவி வைஷ்ணவி காக்க
முருகனைக் குலவும் அன்னை முழங்கால் புரங்கால்கள் காக்க
உறுதியாய் கால்விரல்கள் நகங்களும் குதிகால்களையும்

ஒரு பழுது மின்றி உள்ளம் கால்களை உமையவள் காக்க

(5) பின்புரம் பிடாரி முதுகும் பக்க விலா பாகங்களையும்

மன்னிடும் ப்ருஷ்ட பாகம் குதமும் குமரி காக்க

பின்னிடும் நரம்புகள் தோல் எலும்புகள் நிணங்கள் ரோமம்

அன்புடன் அனவரதமும் அன்னை ஸ்ரீவைஷ்ணவி காக்க

(6)முல்லைவனம் அமர்ந்த அன்னை முன்புரம் இருந்து காக்க

எல்லை யில்லாத கருணை கொண்டவள் இடம் வலம் காக்க

தொல்லைகள் செய்யும் வினைகள் தீர்ப்பவள் பின்புரம் காக்க

இல்லை என்றியும்பா நம்தாய் இரவிலும் பகலிலும் காக்க

பல ஸ்ருதி

பேய் பிணி பில்லி சூன்யம் பெருவியாதி குஷ்டரோகம்

காய்ந்திடும் கடுஞ்ஜுரங்கள் காமாலை காசநோய் க்ஷயமும்

மாய்த்திடும் மருந்தாய் தேவி கவசத்தைப் படிப்பவர்க்கு

வாய்த்திடும் நல்வாழ்வும் வளமும் வைஷ்ணவி தேவி அருளால்

ஸ்ரீ வைஷ்ணவி கவசம்

அன்னை ஸ்ரீ ஆண்டவன் பிச்சி அருள்வாக்கு

Vaishnavi Kavacham

Alai kadal thantha devi aiyyan naavil uraiyum devi
Nilaithiru puramum nindru niththiyam sevai seyyum
Malai arasan pettra selvi maatha shri vaishnavi kaakka
Thalamisai paatham vaiththu dayavudan nammai kaakka

Netri puruvangL naasi nirmalai vaishnavi kaakka
Matriru kaNgaL seviyum maatha shri vaishnavi kaakka
Sottritum konda naavum parkaLum paraparai kaakka
Vetrivel kumaran annai uthadugaL kannangaL kaakka

Muha vaayum kazyuththum mullai vanam vaayum vaishnavi kaakka
Thagavudan thotgaL maarbum thaayaam shri vaishnavi kaakka
Ihaparam allikkum annai idaiyinai vayittrinai kaakka
Miha mahimai konda maatha iru kaigaLum viralgaLum kaakka

Iru thodaigal janendriyangaL iraivu vaishnavi kaakka
Muruganai kulavum annai muzyangaal purangaal kaakka
Uruthiyai kaal viralgaL nagangaLum kuthikaalgaLaiyum

Oru pazyuthum indri uLLangaalgaLaiyum umaiyavaL kaakka

Pin puram pidari muthugum pakka villa bagangaLaiyum
Mannidum bhrishtabaham kuthamum kumara kaakka
Pinnidum nirambugaL thol yelumbugaL ninnangaL romam kaakka
Anbudan anavarathamum annai shri vaishnavi kaakka

Mullai vanam amarntha annai mun puram irunthu kaakka
Yellai illa karunai kondavaL idam valam kaakka
thollaigaL seyyum vinaigaL theerpavaL pinpuram kaakka
Illai yendru iyambaa nam thai iravilum pagalilum kaakka

Phala sthuthi
Pei pinni pilli soonyam peru vyaathi kushta rogam kayadidum
Karum jurangal kaamaalai kaasa noi kshayamum , mainthidum
Marunthai Devi kavachaththai padipavarkku
vaaynthidum nal vazyvum Vallamum vaishnavi devi aruLal

திருமயிலை ஸ்ரீ கபாலீஸ்வரர்

திருப்பள்ளி எழுச்சி

(1)

கதிரவன் தோன்றினான் கமலமும் மலர்ந்தது
காலைப் பொழுதென்று காகமும் கரைந்தது
மதியும் மறைந்தது மானிலம் தெளிந்தது
மாதவ முனிவர்கள் மறையோதுகின்றனர்
விதிமாலும் இந்திரன் அஷ்ட திக்பாலரும்
வினயமுடன் வந்து வேண்டி நிற்கின்றனர்
துதி செய்திடும் பக்தர் துயரங்கள் தீர்த்திட
துரையே கபாலீச்வரா பள்ளி எழுந்தருளாயே.

(2)

சோலையில் குயில்களும் ஸ்ருதியுடன் கூவிட
சுகந்த மலர்களும் ஸொகுசுடன் பூத்திட
பாலைச் சொரிந்திடும் பசுக்களும் கன்றை
பரிவுடன் பக்கத்தில் வாவென்றழைத்திட
மாலை மஞ்சன நீரும் மகிழ்வுடன் ஏந்தியே
மங்கைமாரெல்லோரும் மகிழ்வுடன் பாடிட
காலைப் பொழுதென்று கதிரவன் தோன்றினன்
கபாலீச்வரனே பள்ளி எழுந்தருளாயே.

(3)

பக்தர்கள் எல்லோரும் பரவசமாகவே
பாடிப் பணிந்துன்னைப் பள்ளி எழுப்புகின்றார்
சக்தியாம் கற்பகவல்லியும் வந்து
சந்தோஷமாயுன்னைச் சார்ந்து நிற்கின்றாள்
முக்தராம் வாயிலா நாயனாரும் உன்னை
மோனமாய் போற்றியே துதிகள் செய்கின்றார்
வித்தக ஞானியர் வாழும் திருமயிலை
கபாலீச்வரனே பள்ளி எழுந்தருளாயே.

(4)

சிங்கார வேலனும் சீக்கிரமாய் வந்து
சீராட்டவில்லை என்று ஏங்கி நிற்கின்றான்
அங்கானைமுகனுடன் அதிகாரநந்தியும்
ஆர்வமுடன் வந்துன் அடி பணிகின்றார்கள்
தங்காமலோடும் கங்கையும் தாழ் சடைதனில்
மறைந்தும்மைப் பார்த்து மகிழ்கின்றாள்
உங்காலின் குடியாம் ஏழை எங்களைக்காக்க
கபாலீச்வரனே பள்ளி எழுந்தருளாயே.

(5)

கம்பீரமாய் கண்டா மணியோசை
காதில் விழவில்லையோ கபாலீசா

சம்போ சங்கரவென்று அடியார் முழக்கிடும்
சத்தமும் நின் செவியில் கேட்டிடவிலையோ
அம்போஜ நேத்திரம் அன்புடன் விழித்து
அனைவரையும் கடாக்ஷித்தருள் செய்வாய்
வெம்பவ பிணிக் கருமருந்தாம் உன்னருள் நோக்கம்
வேண்டுகின்றோம் கண் விழித்தெழுந்தருளே

(6)

பேயாடும் சுடலையில் ப்ரியமுடனாடியே
பெருங்களைப்படைந்தின்னும் உறக்கமோ ஸ்வாமி
தாயாருக்கிடம் தந்ததால் தளர்ந்ததோ
தாள் திறவாதின்னம் உறங்குவதைய்யா
வாயார உன் புகழ்பாடிடும் வந்திகள்
வணக்கமுடன் வந்து வாத்யமிசைக்கின்றார்
மாயா இருள் நீங்கி மார்த்தாண்டன் தோன்றினான்
மயிலைக்கிறைவா பள்ளி எழுந்தருள்வாயே.

(7)

பனிமலை என்றின்னும் படுத்திருக்கின்றீரோ
பகலவன் தோன்றியும் படுப்பது முறையோ
கனிவுடன் கற்பகம் கால் வருடும் சுகமோ
கள்ளத் துயில் கொண்டு உறங்குவதைய்யா
தனிமையை நாடி நீர் தவம் செய்கின்றீரோ

தாள் திறந்திட இன்னம் தாமதமேனோ
முனிந்திடாதெழுந்திடும் முக்கண்ணப்பா எங்கள்
முறை கேட்டருள பள்ளி எழுந்தருளாயே.

(8)

சடையில் கங்கையும் சடுதியில் வந்து கண்
துடைத்திடவும் தூக்கம் தெளிந்திடவிலையோ
விடையேறும் பெருமானென்றேத்தி துதித்திடும்
படைப்போன் தலையோட்டில் பலி ஏற்க நாணியோ
பாசாங்கு செய்து நீர் படுத்திருக்கின்றீர்
தடை ஏதோ ஐயா தாள்திறந்திட எங்கள்
தந்தையே கபாலி பள்ளி எழுந்தருளாயே.

(9)

இருமாதர் பிணங்கிக் கொண்டிடர் செய்வதாலோ
இன்னம் நீர் உறக்கம் போல் நடிக்கின்றீர் ஐயா
சிறுத்தொண்டர் மனைக்கேகி செய்ததெல்லாம் எண்ணி
சிந்தை தளர்ந்து நீர் படுத்து விட்டீரோ
ஒரு மகன் ஆண்டியாய் நின்றதை நினைத்து நீர்
நெஞ்சுருகிப் படுத்தயர்ந்து விட்டீரோ
கருத்தறியாமலே காத்து நிற்கின்றோம்
கபாலீசா பள்ளி எழுந்தருளாயே.

(10)

ஆடிய பாதத்தில் அருள்தனைக் காட்டி

அங்கையில் அபய வரங்களும் காட்டி

ஓடிய கங்கையை சடை முடியினில் காட்டி

உமையவள் ஒருபாகம் உவப்புடன் காட்டி

மூடிய முக்கண்கள் திறந்தொளி காட்டி

மோக இருள்தன்னை இல்லாமலோட்டி

காடிடையாடிய கைலாசவாசனே

கபாலீசா பள்ளி எழுந்தருள்வாயே.

ஸ்ரீ மயிலை கற்பகாம்பிகை திருப்பள்ளி எழுச்சி

1) வெற்பின் திருமகனே வேதத்துட் பொருளே
விடிந்தது பொழுது கண் விழித்தெழுந்தருளே
பற்பல வாத்யம் முழங்கியதெங்கும்
பாவையர்கள் பாடி பணிந்து நிற்கின்றார்
விற்பன்ன வேதியர் வேதவாக்யத்தால்
விதவிதமாய் துதி செய்து போற்றுகின்றார்
நற்புகழ் மயிலையின் நாயகி உமையே
கற்பகமே பள்ளி எழுந்தருளாயே.

2) புள்ளினம் கூவின பூக்களும் மலர்ந்தது
பொழுதும் புலர்ந்தது பொற்கதிரெழுந்தது
உள்ளிருள் நீக்கும் உன்னருள் ஜோதி விழியாம்
உதய சூரியன் வந்தெம்முன் உதிக்கச் செய்யாயோ
அள்ளி அணைப்பாயென்று ஆசையினாலே
அன்புடன் வந்து உன்னருகில் நிற்கின்றோம்
கள்ளத்துயில் தாய் கொள்வதும் உண்டோ!
கற்பகமே பள்ளி எழுந்தருளாயே.

3) அடியார்கள் எல்லோரும் அதிகாலையில் எழுந்து
அன்புடன் கூடி உன் ஆலயம் வந்து
படிமகலன்களைப் பாங்குடன் ஏந்தி

கபாலி உன்னருகில் வீற்றிருக்கின்றார்
கத்தி அழைக்கும் பக்தர் குரல் கேட்கவிலையோ
கற்பகமே பள்ளி எழுந்தருளாயே.

9) மயிலாய் உருக்கொண்டு மாதவங்கள் செய்தாய்
மாதவன் கபாலியை மணந்து கொண்டாய்
அயிலேந்தும் பாலனை ஆனைமுகனைப் பெற்றாய்
ஆருயிர் அனைத்துக்கும் அன்னை நீ ஆனாய்
துயில் நீங்கி எழுந்தெங்கள் துன்பங்கள் நீங்கிட
தூய நின் திருக்கண்மலர் விழித்தருள்வாய்
கயிலைக்கிறைவியே கருணை நிறைந்தவளே
கற்பகமே பள்ளி எழுந்தருளாயே.

10) பல்லாண்டிசைத்துன்னைப்பாடிப் பணிந்தோம்
பதினெட்டு வாத்தியங்கள் பாங்குடன் இசைத்தோம்
நல்லார் இதயமாம் நளினத்தின் மீதில்
நலமுடன் வந்தருள் செய்திடும் தாயே
எல்லாம் செய்யவல்ல ஈச்வரியே எம்மை
ஈன்றவளே இன்னம் உறங்குதல் முறையோ
கல்லாத பேதையென் கவிமாலை சூடிட
கற்பகமே பள்ளி எழுந்தருளாயே.

ஸ்ரீ கற்பகாம்பாள் திருப்பள்ளி எழுச்சி முற்றும்.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி அம்ருதவல்லீ ஸ்தோத்திரம்

1. பங்கய செல்வியே நின் பதமலர் போற்றி செய்து
மங்கள வாழ்த் துரைத்து மலர் தூவி ஆடிப்பாடி
அங்கமெல்லாம் சிலிர்க்க ஆனந்த கண்ணீர் பாய
பொங்கும் உன்னருளைப் பாடிப் போற்றினோம் ஏற்றருள்வாய்

2. கருணையோர் வடிவமான கமலவாஸினியே உந்தன்
அருள் மழை நோக்கி வாடும் பயிரான எங்கள்
சிறுமையை நீக்க நல்வாழ்வளித்தாதரிக்க
தருணமிது வந்து காப்பாய் தாமரையில் உதித்த தாயே

3. மலரினிலுதித்து மாலோன் மார்பினில் வாழும் மயிலே
நலமிலா வாழ்வில் மக்கள் நாள்தோறும் வாழக் கண்டும்
உலகெலாம் ஈன்ற அன்னாய் உன் மனம் உருகிடாதோ
சிலம்பொலி சீர் பாதத்தாய் சேய் எமைக்காக்க வாராய்

4. பாற்கடல் ஈன்ற பாவாய் பரிதிமுன் பனியுமுண்டோ
காக்க நீ மனது வைத்தால் கன்மங்கள் நீங்கிடாதோ
வார்குழலம்மையே நீ வன்மனம் கொண்டிருந்தால்
யார்க் குரைத்தெங்கள் துன்பம் அகற்றுவோம் அம்ருத வல்லி தாயே

5. மதியுடன் உதித்த திருவே மலரினில் வாழும் தாயே
கதியென வந்தடைந்தோம் கைவிடல் நீதியோ - எம்
விதிதனை விலக்காயாகில் விடுவோமோ உந்தன் பாதம்
துதித்திடும் எங்கள் துன்பம் தீர்த்தருள் செய்வாயம்மா

6. மாயமாம் உலக வாழ்வில் மயங்கும் உன் மக்களுக்கு
தூய நல் வாழ்வளித்து துணை எமக்கிருப்பாயம்மா
தாயவள் அடித்திட்டாலும் தண்ணருள் எண்ணி ஏங்கும்
சேயதைப் போல உந்தன் சேவடி பணிந்தினோமே

பக்தியுடனுந்தன் பள்ளியறை முன்
துடிக்கும் மனத்துடன் தோத்திரம் செய்து
தூய நின் தரிசனம் காண நிற்கின்றார்
கடிதில் கண் விழித்தருள் செய்திடல் வேண்டும்
கற்பகமே பள்ளி எழுந்தருளாயே.

4) அலகிட்டு மெழுகியே ஆலய மெங்கிலும்
அலங்காரமாய் கோலம் அரிவைமார் இட்டனர்
துலக்கிய விளக்குகள் நிறைய நெய்யூற்றியே
தூங்கா விளக்குகள் ஏற்றினரெங்கும்
பலவித வாசனை வீசிடும் வத்திகள்
பளிங்கு சாம்பிராணியும் பாங்குடன் போட்டனர்
கலங்கியோடியது இருள் கதிரவன் உதித்தான்
கற்பகமே பள்ளி எழுந்தருளாயே.

5) வெள்ளை விடையேறி உன் நாதரும் வந்தார்
வேலனும் மயின்மிசை வேகமாய் வந்தான்
பிள்ளையாரும் பெருச்சாளி மேலேறி
பிரியமுடன் வந்து உன் அருகில் நிற்கின்றார்
வெள்ளி மறைந்தது விடிந்தது பொழுதென்று
வெண் சங்கம் ஊதியே மாதவன் வந்தான்
கள்ளவிழ் மலர் வனம் சூழ் திருமயிலை
கற்பகமே பள்ளி எழுந்தருளாயே.

6) வண்ண மலர் கொண்டு வந்தவர் ஒருபால்
வந்தனை செய்துன்னை வணங்குவோர் ஒருபால்
பண்ணிசைத்திடுகின்ற பாவலர் ஒருபால்
பக்தியால் பரவசம் கொண்டவர் ஒருபால்
கண்ணீரைப் பெருக்கியே கனிந்தவர் ஒருபால்
கை கூப்பித் தொழுதிடும் கருத்தினர் ஒருபால்
என்னரும் மகிமைகள் கொண்ட என் தாயே
கற்பகமே பள்ளி எழுந்தருளாயே.

7) மாலைகள் ஏந்தியே மலர் மகள் வந்தாள்
மஞ்சன நீர் கொண்டு வந்தனள் வாணி
சேலை செம்பட்டிலும் சிறந்த ஆபரணமும்
சிந்தை மகிழ்ந்து இந்திராணி கொணர்ந்தாள்
பாலையும் தேனையும் பஞ்சாம்ருதத்தையும்
பன்னீர் சந்தனத்துடன் பக்தர் கொணர்ந்தனர்
காலைக் கதிரவன் களிப்புடன் தோன்றினன்
கற்பகமே பள்ளி எழுந்தருளாயே.

8) பக்தியாய் திருக்குளம் தனில் நீராடி
பாவையர் ஆடவர் பட்டுடையணிந்து
நித்திய ஜபதப நியமங்கள் செய்து நின்
திருச்சன்னிதி முன்னே நிற்கின்றார்
சக்தியைப் பிரியாத சாம்ப சதாசிவமூர்த்தி

கபாலி உன்னருகில் வீற்றிருக்கின்றார்
கத்தி அழைக்கும் பக்தர் குரல் கேட்கவிலையோ
கற்பகமே பள்ளி எழுந்தருளாயே.

9) மயிலாய் உருக்கொண்டு மாதவங்கள் செய்தாய்
மாதவன் கபாலியை மணந்து கொண்டாய்
அயிலேந்தும் பாலனை ஆனைமுகனைப் பெற்றாய்
ஆருயிர் அனைத்துக்கும் அன்னை நீ ஆனாய்
துயில் நீங்கி எழுந்தெங்கள் துன்பங்கள் நீங்கிட
தூய நின் திருக்கண்மலர் விழித்தருள்வாய்
கயிலைக்கிறைவியே கருணை நிறைந்தவளே
கற்பகமே பள்ளி எழுந்தருளாயே.

10) பல்லாண்டிசைத்துன்னைப்பாடிப் பணிந்தோம்
பதினெட்டு வாத்தியங்கள் பாங்குடன் இசைத்தோம்
நல்லார் இதயமாம் நளினத்தின் மீதில்
நலமுடன் வந்தருள் செய்திடும் தாயே
எல்லாம் செய்யவல்ல ஈச்வரியே எம்மை
ஈன்றவளே இன்னம் உறங்குதல் முறையோ
கல்லாத பேதையென் கவிமாலை சூடிட
கற்பகமே பள்ளி எழுந்தருளாயே.

ஸ்ரீ கற்பகாம்பாள் திருப்பள்ளி எழுச்சி முற்றும்.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி அம்ருதவல்லீ ஸ்தோத்திரம்

1. பங்கய செல்வியே நின் பதமலர் போற்றி செய்து
மங்கள வாழ்த் துரைத்து மலர் தூவி ஆடிப்பாடி
அங்கமெல்லாம் சிலிர்க்க ஆனந்த கண்ணீர் பாய
பொங்கும் உன்னருளைப் பாடிப் போற்றினோம் ஏற்றருள்வாய்

2. கருணையோர் வடிவமான கமலவாஸினியே உந்தன்
அருள் மழை நோக்கி வாடும் பயிரான எங்கள்
சிறுமையை நீக்க நல்வாழ்வளித்தாதரிக்க
தருணமிது வந்து காப்பாய் தாமரையில் உதித்த தாயே

3. மலரினிலுதித்து மாலோன் மார்பினில் வாழும் மயிலே
நலமிலா வாழ்வில் மக்கள் நாள்தோறும் வாழக் கண்டும்
உலகெலாம் ஈன்ற அன்னாய் உன் மனம் உருகிடாதோ
சிலம்பொலி சீர் பாதத்தாய் சேய் எமைக்காக்க வாராய்

4. பாற்கடல் ஈன்ற பாவாய் பரிதிமுன் பனியுமுண்டோ
காக்க நீ மனது வைத்தால் கன்மங்கள் நீங்கிடாதோ
வார்குழலம்மையே நீ வன்மனம் கொண்டிருந்தால்
யார்க் குரைத்தெங்கள் துன்பம் அகற்றுவோம் அம்ருத வல்லி தாயே

5. மதியுடன் உதித்த திருவே மலரினில் வாழும் தாயே
கதியென வந்தடைந்தோம் கைவிடல் நீதியோ - எம்
விதிதனை விலக்காயாகில் விடுவோமோ உந்தன் பாதம்
துதித்திடும் எங்கள் துன்பம் தீர்த்தருள் செய்வாயம்மா

6. மாயமாம் உலக வாழ்வில் மயங்கும் உன் மக்களுக்கு
தூய நல் வாழ்வளித்து துணை எமக்கிருப்பாயம்மா
தாயவள் அடித்திட்டாலும் தண்ணருள் எண்ணி ஏங்கும்
சேயதைப் போல உந்தன் சேவடி பளம்ளினோமே

லக்ஷ்மி

திருமால் மார்பில் வாழும் லக்ஷ்மி
ஸ்ரீவைகுண்டம் ஆளும் லக்ஷ்மி
தேவர்கள் போற்றும் மஹாலக்ஷ்மி
திருவருள் புரிய வீட்டுக்கு வா லக்ஷ்மி

ஸ்ரீ வரலக்ஷ்மீ

1. ஸ்ரீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
நாராயணப்ரியே நமோஸ்துதே
தரணி ஸம்பூதே நமோஸ்துதே
தாஸரதி ப்ரியே நமோஸ்துதே

2. வாரிஜ ஹஸ்தே நமோஸ்துதே
வரப்ரதாயினி நமோஸ்துதே
வாசாம கோசர நமோஸ்துதே
ஸரசிஜ ஸன்னுதே நமோஸ்துதே

3. க்ஷீரஸாகர ஸுதே நமோஸ்துதே
தர்யாமயி வைதேஹி நமோஸ்துதே
மங்கள ப்ரதாயினி நமோஸ்துதே
வைகுண்ட நாயக வக்ஷஸ்தல வாஸினி
ஸ்ரீ வரலக்ஷ்மீ நமோஸ்துதே

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மாஷ்டகம்

1. ஓம் நமோ நாராயணாவென்று ஓர்முறை ஓதுவார்க்கு
போம் வினைகளென்று வேதம் புகன்றதும் பொய்மை தானோ
தீம்புகள் பலவே செய்து திகைத்திடும் எளியோம் எம்மை
தேம்பிடச் செய்தல் உந்தன் திருவருட்கழகுதானோ

2. திருவளர் திருமார்பா உந்தன் திருவடி அடைந்தும் எங்கள்
கருமங்களகலா விட்டால் கடவுள் நின்தொன்மையான
பெருமைக்கோர் பழியுராதோ பேதையாம் எங்களுக்குன்
அருளது தருதல் வேண்டும் நரஹரி வடிவமானோய்

3. மதியில்லா பாலரெம்மை மதித்து நீ கருணை செய்ய
கதி இது வருக வேண்டும் விதிதனை ஈன்ற ஐய்யா
துதியுன்னை ஓதி உந்தன் துணையடி போற்றுகின்றோம்
கதியுன்னை அல்லால் வேறு கடவுளும் கலியிலுண்டோ

4. தீராத வல்வினைகள் திருவளர் திருமார்பா உன்
சீரார் பதம் பணிந்தால் கூறாதொழிந்திடாதோ
பாராதி அண்ட மெல்லாம் படைத்து ரக்ஷிக்கும் எந்தாய்
பேரால் பெரிய சோளங்கிபுரம் மேவும் தேவே.

5. உரமிகும் இரணியாக்ஷன் உயிரது போக்கத் தூணில்
நரஹரி வடிவமாய் வந்துதித்த ஸ்ரீ ஹரியே என்று
அரற்றிடும் அடியோம் துன்பம் அகற்றிடல் அரிதோ அன்னாள்
கரியினைக் காத்த கண்ணா கார் முகில் வண்ணா போற்றி

6. அன்புடன் அறியாப் பலன், ஹரி என அறியா மூடன்
துன்பங்கள் பலவே செய்ய, துதித்திடும் பாலனுக்கு
முன் பொரு தூணில் தோன்றி வன்மன இரணியந்தன்
கன்மங்கள் தீர்த்துக் காத்த பன்னக சயனா போற்றி

7. சினம் மிகுந்த அசுரர் வேந்தன் சிறுவனைப் பற்றி உந்தன்
மனத்தினில் வாழும் மாலோன் எங்குள்ளான் என்று வெகுள
கனத்திடும் தூணில் தோன்றி கண்களை வதைத்தகோவே
தனக்கொரு நிகரில்லதாய் தமியனைக் காக்க வாராய்

8. கன்னலைப் பழித்த மொழிழியாள் கமலையின் பதியே உந்தன்
பொன்னடியன்றி வேறோர் புகலிடம் புவியிலுண்டோ
இன்னமும் உன் செவியில் நாயேன் இடுமுறை கேட்கவிலையோ
பன்னக சயனா உந்தன் பதமலர் தஞ்சம் ஐய்யா

பிரார்த்தனை

ஹரி ஹரி அபயமென்று அலறிடும் த்ரௌபதிக்கு
பரிவுடன் சேலை தந்த பரம காருண்ய மூர்த்தி
வரிக் கண்ணாள் வனஜ மாதை வாம பாகத்தில் வைத்த
ஹரி பரந்தாமா உந்தன் அம்புஜத்தாள் போற்றி
நரஹரி வடிவாய் வந்த நாராயணா போற்றி
சரணம் சரணம் ஸ்ரீ நரசிம்ஹா போற்றி

உ

திருமுருகனருள்

ஸ்ரீ லலிதாம்பிகை நவரத்ன மாலை

கற்பனைக் கெட்டா உந்தன்
  கருணையின் திறத்தினாலே
அற்பன் உனைத்துதிக்க
  ஆசைமிகக் கொண்டேனம்மா
நற்புகழ் கொண்ட பக்தர்
  நாளும்உன் புகழைப்பாடி
தற்பரம் நீயே யென்றுன்
  தாட் பணிந்து உய்த்தாரம்மா.

காப்பு

ஆக்கும் தொழில்ஐந் தானாற் றநலம்
பூக்கும் நகையாள் புவனேஸ் வரிபால்
சேர்க்கும் நவரத் தினமா லையினைக்
காக்கும் கணநா யகவா ரணமே.

நூற்பயன்

எவர்எத் தினமும் இசைவாய் லலிதா
நவரத் தினமா லைநவின் றிடுவார்
அவர் அற் புதசக் தியெலாம் அடைவார்
சிவரத் தினமாய்த் திகழ்வா ரவரே.

வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்க்
  கண்மூடி நெடுங் கணவான தவம்
பெற்றும் தெரியார் நினையென் னில் அவம்
  பெருகும் பிழையேன் பேசத் தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப்

பகைவர்க் கெமனா களடுத் தவளே
வற்றா தஅருள் சுனையே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

நீலம்

மூலக் கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக் கிளியே சரணம் சரணம்
குன்றா தஒளிக் குவையே சரணம்
நீலத் திருமே னியிலே நினைவாய்
நினைவற் றெளியேன் நின்றேன் (அருள்வாய்)
வாலைக் குமரீ வருவாய் வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

முத்து

முத்தே வரும்முத் தொழிலாற் றிடவே
முன்நின் றருளும் முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந் தநிவா ஸினியே சரணம்
தத்தே றியநான் தனயன் தாய்நீ
சாகா தவரம் தரவே வருவாய்
மத்தே றுததிக் கிணைவாழ் வடையேன்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

பவளம்

அந்தி மயங்கிய வானவி தானம்
அன்னை நடம்செய்யும் ஆனந்தமேடை
சிந்தை நிரம்ப வளம்பொழி யாரோ
தேம்பொழி லாமிது செய்தவ ளாரோ
எந்தை யிடத்தும் மனத்தும் இருப்பாள்

எண்ணுமவர்க்கருள் எண்ணமிகுத்தாள்
மந்திர வேத மயப்பொரு ளானாள்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

மாணிக்கம்

காணக் கிடையாக் கதியா னவளே
கருதக் கிடையாக் கலையா னவளே
பூணக் கிடையாப் பொலிவா னவளே
புனையக் கிடையாப் புதுமைத் தவளே
நாணித் திருநா மமும்நின் துதியும்
நவிலா தவரை நாடா தவளே
மாணிக் கஒளிக் கதிரே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

மரகதம்

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
சுதிஜதி லயமே இசையே சரணம்
அரஹர சிவஎன் றடியவர் குழும
அவரருள் பெறஅரு ளமுதே சரணம்
வர நவ நிதியே சரணம் சரணம்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

கோமேதகம்

பூமே வியநான் புரியும் செயல்கள்
பொன்னா துபயன் குன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெயசக் தியெனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்

கோமே தகமே குளிர்வான் நிலவே
குழல்வாய் மொழியே தருவாய் தருவாய்
மாமே ருவிலே வளர்கோ கிலமே
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

பதுமராகம்

ரஞ்சனி நந்தினி அங்கனி பதும
ராகவி காஸவி யாபினி அம்பா
சஞ்சல ரோகநி வாரணி வாணீ
சாம்பவி சந்த்ரக லாதரி ராணி
அஞ்சன மேனி அலங்க்ருத பூரணி
அம்ருத ஸொரூபிணி நித்யகல் யாணி
மஞ்சுள மேரு சிருங்க நிவாஸினி
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

வைடூரியம்

வலையொத் தவினை கலையொத் தமனம்
மருளப் பறையா றொலியொத் தவிதால்
நிலையற் றெளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளா கவரம் தருவாய்
அலையற் றசைவற் றநுபூ திபெறும்
அடியார் முடிவாழ் வைடூ ரியமே
மலையத் துவசன் மகளே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

இந் நவரத்ன மாலை, மார்கழித்திங்களில் சென்னை, தம்புச் செட்டித் தெருவில் எழுந்தருளியுள்ள அன்னை காளிகாம்பாள் ஆலயத்தில் நாள்தோறும் காலை வழிபாடு செய்யும் அடியார்களுக்கு அன்னையின் அடிமை உதவியுடன் வெளியிடப்பட்டது.

உ

ஸ்ரீ வைஷ்ணவி பரதேவதாயை நம :

ஸ்ரீ வைஷ்ணவி அனுபூதி

(1)

வணக்கம் தாயே வைஷ்ணவி தேவி
இணக்கமா யுன் இரு பத மலர்களில்
கணக்கிலா கவி மலர்கள் தன்னால்
மணக்கும் மாலைகள் சூட்டினேன் அன்பால்.

(2)

கஞ்சத் தவிசில் அமர்ந்த திருவே
நெஞ்சக் கமலம் நின்னடிக் கர்ப்பணம்
தஞ்சம் என்றுன் தாளினைப் பணிந்தேன்
அஞ்சல் என்றே அபயம் தருவாய்.

(3)

பஞ்சினும் ம்ருதுவாம் பாதத்தாமரை
தஞ்சிலம் பொலியால் தாபம் தீர்த்து
மிஞ்சிய அன்புடன் அருள் ஒளிகாட்டி
நெஞ்சினில் இன்பம் பொங்கிடச் செய்தாய்.

(4)

பார்க்கும் கண்கள் பரவசமாக
கார்க்கும் கண்கள் கருணை பொழிய
தீர்க்கும் இருவினை திருவடி மலரில்
சேர்க்கும் வைஷ்ணவி திருவருள் என்னே.

(5)

மூவரும் போற்றும் முதல்வி வைஷ்ணவி
யாவரும் காண முல்லை வனத்தில்
தேவரும் காணாத் திருவடி காட்டி
பாவலர் வியக்கப் பாடிடச் செய்தாள்.

(6)

மறைகளும் அறியா மாதா வைஷ்ணவி
கறைபடும் வாழ்வில் கலங்கும் ஜீவர்கள்
முறை கேட்டருள முல்லை வாயிலில்
குறை கேட்டருளக் குடி கொண்டருளே

(7)

தயவொளி காட்டும் தாமரை விழிகள்
நயமுடன் நம்மை அருகில் அழைத்து
பயமினி இல்லை என்றருள் செய்து
கயவர்கள் ஆயினும் கனிவுடன் நோக்கும்.

(8)

மலர்ந்த புன்னகை மனத்துயர் தீர்த்து
உலர்ந்த உள்ளம் உவகை பொங்க
அலர்ந்த தாமரை அடி முடிசூட்டி
புலர்ந்தது பொழுதென மாயம் மறைய.

(9)

மேகம் விலகிய வானம் போல
தேகம் தானெனும் திரையும் விலக
ஏகம் ப்ரம்மம் அநேக மென்ற
மோகம் தீர்ந்தது வைஷ்ணவி அருளால்.

(10)

முல்லை வனத்தாய் பெயரைச் சொன்னால்
இல்லை இருவினை இனி பிறப்பில்லை
தொல்லை செய்யும் யம பயமில்லை
கல்லை நிகர்த்த மனமே சொல்வாய்.

(11)

நாமம் கேட்டால் நமன் வருவானோ
பூமன் கையில் படைக்க வருமோ
தாமம் புனைந்த வைஷ்ணவி தாளில்
காமம் கொள்வார் கடைத்தேறுவரே.

(12)

ஒரு தரம் உள்ளம் கனிந்து வைஷ்ணவி
திருவடி பணிந்தால் தீரும் இருவினை
மறுபடி மண்ணில் பிறப்பது ஒழியும்
வருவாய் மனமே வணங்கிடலாமே.

(13)

கண்ணவள் திருவுரு கண்டு களிக்க
எண்ணங்கள் வைஷ்ணவி பதத்தில் நிலைக்க
வண்ணம் வண்ணமாய் பண்கள் இசைத்து
தண்ணருள் அடிகளில் சூட்டிப் பணிவேம்.

(14)

வஞ்சக நெஞ்சினர் ஆயினும் வைஷ்ணவி
கொஞ்சமும் வெறுக்கா தன்புடன் அழைப்பாள்
அஞ்சல் என் மனமே அன்னையின் அடிமலர்
தஞ்சல் அடைந்தால் தயவுடன் காப்பாள்.

(15)

பொல்லாப் பிள்ளைகள் ஆயினும் பெற்றதாய்
எல்லாப் பிழைகளும் பொறுத்தருள் செய்வாள்
கல்லாக் கசடரும் கற்ற விற்பன்னரும்
வல்லாள் வைஷ்ணவிக் கிருகண்மணியாம்.

(16)

பெற்ற மக்களில் பேதம் காண்பது
உற்ற தாய்க்கு உண்டா கிடுமோ
நற்றவ மில்லா நாயடி யேனையும்
குற்றம் குறியா தணைத்தாள் அன்னை.

(17)

பொருள் புவி ஆசையும் புகழில் இச்சையும்
மருள் கொண்டமனம் தேடி அலைந்திடும்
இருளது நீங்கிய இதயம் உடையோர்
தெருளுடன் காண்பார் தேவியின் தரிசனம்.

(18)

ஐவர்க் கடங்கிய அடிமை என்னை
மைதிகழ்க் கண்ணி மாதா வைஷ்ணவி
பைவரும் கேளும் பாசத் தொடர்பும்
சையென விலகி விட்டிடச் செய்தாள்.

(19)

அறு பகைவர்கள் செய் அட்டூழியமும்
செருக்குடன் ஆணவம் செய்யும் கொடுமையும்
வெறுப்புடன் ஐவர்க்கிணங்கும் வாழ்வும்
முறித்து முல்லை வனத்தாய் காத்தாள்.

(20)

அமர்ந்தது ஆணவம் அழிந்தது மாயை
நிமிர்ந்தது நெஞ்சம் தளரா நிலையில்
சமர்செய்த அறுபகை சாய்ந்து மடிந்தது
திமிர்கொண்டு இருவினை தொடர்வது நின்றது.

(21)

அன்றோர் முறை வந்தகம் குளிர்ந்திடவே
நின்றோர் மொழியை உபதேசித்தாய்
சென்றோர் அணுவாய் மறைந்தது மாயம்
வென்றோ மென்றறி வமைதியுற்றது.

(22)

உற்றது உன்னருள் உபதேசத்தால்
பெற்றது பேரானந்தா ம்ருதமே
இற்றது பிறப்பிறப்பாகிய பெரும்தளை
மற்றெது சொல்வது மனம் மாண்டதுவே.

(23)

அன்பால் அகம் மிகக் கனிந்து உருக
என்பால் வாவென்றழைத்தாய் அருளால்
உன்பால் வேண்டும் வரமொன்றுளது
தென்பால் யமனிடம் காட்டா தருள்வாய்.

(24)

அருள் தா பொருள் தா என்றுனைக் கேட்பது
மருள்தான் நிறைந்த மனத்தின் செயலாம்
இருள்தான் இல்லா இதயத்துள்ளே
பொருளாய் உள்ள உயிர் நீயன்றோ.

(25)

அன்றோ உளதோ எனும் ஐயமின்றி
என்றோ உள்ளத் தமர்ந்தாய் உயிராய்
இன்றோர் குழப்பம் ஏனோ தாயே
நன்றோர் மொழி சொல் நான் நீ எனவே.

(26)

நீயே எல்லா உலகும் படைத்தாய்
நீயே எல்லா உயிர்க்குயிரானாய்
நீயே தாயாய்க் காத்தருள் கின்றாய்
நீயே முடிவில் அழித்தமர்கின்றாய்.

(27)

ஏனென்றுன்னைக் கேட்பவருண்டோ
வானென்பதுவோ வளி என்பதுவோ
தானெருப்பாகித் தண்ணீர் நிலமாய்
கானெடு கடல்மலை கதிர்மதி என்கோ.

(28)

கோளங்கள் ஒன்பது கூடுதல் பிரிதலும்
நாளிருபத்தேழ் நக்ஷத்திரமுன்
ஆளுகைக் கடங்கிய அண்ட சராசரம்
நீள்விழி அசைவால் நிகழ்வதன்றோ.

(29)

வானும் காற்றும் கனலும் நீரும்
தானுருக் கொள்ளும் தரணியில் சேர்த்து
ஊனடலாதல் உணர்ந்தனர் முன்னோர்
மானுடனாதல் மறுபிறப் பொழியவே.

(30)

புல்லாய் பூண்டாய் மரமாய் கொடியாய்
கல்லாய் மண்ணாங் கடலாய் மலையாய்
பல்லாயிரம் பிறப் பெடுத்தபின்பே
வல்லான் மனிதனைப் படைத்தாள் தேவி.

(31)

மிகுத்த அறிவுடன் மனிதரைப் படைத்தாள்
பகுத்தறி வென்னும் பயனுள மனதை
வகுத்தவள் வைஷ்ணவி தன்னை அறிய
தொகுத்த வினைகளின் தொடர்பு நீங்கிட.

(32)

அதுவே தானாய் அறிவால் அறிந்தவர்
பொதுவாய் உள்ள பொருளை உணர்ந்து
மெதுவாய் உள்ளே கண்டு தெளிந்து
அதுவே தானாய் அடங்கி அமர்வார்.

(33)

கண்ணொளி காட்டும் கலங்கரை விளக்கே
பண்ணொலி நிகர்த்த இன்மொழியாளே
விண்ணொளி பரவும் விரிகதிர்ச் சுடரே
தண்ணொளி காட்டும் தாயே வைஷ்ணவி.

(34)

தன்னேரில்லாத் தாயே வைஷ்ணவி
மின்னோர் வாழ்க்கை மெய்யென்றெண்ணி
கன்னோர் மனத்தேன் ஒழித்தேன் காலம்
பொன்னோர் பதத்தில் புகல் தருவாயே.

(35)

எதிரில் நின்றும் இளகா நெஞ்சம்
சதிசெய் தென்னைச் சகதியில் தள்ளுதே
மதி என்பதுதாய் எங்கொளிந்ததுவோ
விதியின் விளையாட்டு என்னென்பதுவே.

(36)

புலன்களின் வழியே போவதும் வருவதும்
பலனில் இச்சையால் படுதுயர் அடைவதும்
கலகலத் துடையும் பாண்டம் போல
நிலத்தில் வாழ்க்கை நிகழ்வது வீணே.

(37)

மறுகணம் வருவதை அறியா மானிடர்
ஒருகணம் ஊன்றி உன்னை நினைத்திலர்
பொருளைத் தேடிப் பொழுதெலாம் ஒழித்து
கருமக் கட்டில் சிக்கி உழல்கிறார்.

(38)

காத்திருக்கும் காலன் வந்தால்
மாத்திரைப் போதும் விட்டிட மாட்டான்
நாத்திகம் பேசுவோர் ஆத்திகம் உடையோர்
சூத்திர மெல்லாம செல்லா தவனிடம்

(39)

வருமுன் காப்போன் வருங்கால் காப்போன்
ஒருகாலும் உணராப் பெரும்மூடன்
பெறுவார் முறையே அதனதன் பயனை
தெரிவார் இதனை அறிந்தவர் பெரியார்.

(40)

உன்னாதிருந்தேன் உன் நாமத்தை
என்னாவகத்தில் இருந்து நீயே
சொன்னாய் மந்திரம் சூக்ஷ்மமாக
இன்னா செய்வார்க் கிரங்கும் தாயே.

(41)

நின்றது நெஞ்சம் நின்னடி மலரில்
சென்றது பிறவிப் பிணி நீங்கியது
வென்றது வெம்மை மிகுந்த காலனைக்
கொன்றது அறுபகைக் கூட்ட மெல்லாம்.

(42)

அடைகாத் திருக்கும் பறவை போல
கடையேன் என்னைக் காத்தருள்கின்றாய்
படைத்தோன் எழுத்தை அழித்தாய் அம்மா
விடை ஏதிதற்கு விளம்பாய் வைஷ்ணவி.

(43)

வாதம் அடைந்தோர் பாதக மெல்லாம்
நீதய வுடனே நீக்கிடு கின்றாய்
சோதனையாய் வினை சூழ்ச்சி செய்தாலும்
ஆதவன்முன் பணி போலழிக்கின்றாய்.

(44)

நம்யி பக்தர்கள் தம் பொறுப்பேற்று
கும்பிடு மன்னவர் குறைகளைத் தீர்த்து
எம்பெருமாட்டி நீ அருள் புரிகின்றாய்
வெம்பிய என் மனம் மலர்ந்திடச் செய்வாய்.

(45)

கண்ணீர் துடைத்தாய் கவலைகள் தீர்த்தாய்
வெண்ணீறெனவே வினைகளை எரித்தாய்
தண்ணீரினைப் போல் அருளினைப் பொழிந்தாய்
பண்ணீதென வென் பாட்டை உகந்தாய்.

(46)

வைவார் தமக்கும் வாழ்வளிப்பவள் நீ
பையப் பைய அருகில் அழைத்து
கைவாய்த்தக் கனியாக எனக்கு
நைவது இல்லா வாழ்வளித்தனையே

(47)

கருணைக் கிணையாய் காட்டுவ தெதனை
அருணாம்புயத்தாள் அடைக்கலம் தந்தாய்
பொருணாடிடுவோர் உறவை அகற்றி
சரணாலயத்தைச் சார்ந்திடச் செய்தாய்.

(48)

பாட்டின் பொருளும் பண்ணின் இனிமையும்
கேட்டின்புறும் அருள்தான் என்னே
வீட்டின்பமும் நான் வேண்டிலேன் அம்மா
கூட்டிற்கிளிபோல் வாழ்வேன் அடிக்கீழ்.

(49)

செல்வங்களெல்லாம் சிறப்புடன் அளித்தாய்
பல்வகையான பாக்கியம் அளித்தாய்
நல்வரமெல்லாம் நயந்து நீ அளித்தாய்.
சொல்வதெவ்வாறு என் நன்றியைத் தாயே.

(50)

அன்னைப் வைஷ்ணவி அனுபூதிதன்னை
முன்னைத் தவத்தோர்க்குரைத்த வண்ணம்
என்னைக்கொண்டு தன்னைச் சொன்னாள்
பின்னைப் பிறவித் துயர் தீர்த்திடவே.

(51)

வற்றா அருட்கடல் வாடாப் புதுமலர்
நற்றாயினும் தயை மிகுந்தவள் வைஷ்ணவி
பொற்றாமரைத் தாள் புகலாய் அடைவார்
அற்றார் பிறவி அடைவார் மோக்ஷம்.

அனுபூதி முற்றும்

தேவியிடம் அபராத மன்னிப்பு வேண்டல்

நற்றவத்தோர் முன் நாணம் இல்லாமல்
உற்றதோர் ஆசையினால் உளறினேன் பேதைமையால்
பெற்றதாய் பிள்ளைமொழி கேட்டின்படைவது போல்
குற்றமெல்லாம் மன்னிப்பாய் குமரித்தாய் வைஷ்ணவியே.

நாளை வீணாகக் கழித்தேன் நெடுங்காலம் உன்
தாளைப்பணியாமல் தான்தோன்றியாய்த் திரிந்தேன்
காளைக் குமரேசன் அன்னையே காலன் வரும்
வேளையில் வந்தென்னைக் காப்பாய் வைஷ்ணவியே.

வடமுல்லைவாயிலில் வாழ் வைஷ்ணவி அருள் அனுபூதி

உ

ஓம் சண்டி சாமுண்டி ஜெய ஸ்ரீ காளி மாதா சரணம்

ஸ்ரீ மஹா காளி கவசம்

1. புனிதமாம் பாரதத்தின் புகழினைப் போக்க வென்று
அநியாயப் போர் புரிந்து அழித்திடும் அரக்கர் தம்மை
தனியாக நின்றெதிர்க்கும் ஆண்மை மிகும் இந்தியர்கள்
நினைத்ததும் துணையாய் வந்து வெற்றியருள்
ஜெய ஸ்ரீ காளி மாதா

2. படுகளத் தன்னில் பகைவரை எதிர்க்கும் மக்கள்
நடுவினில் நின்று நீயே நால்வகைத் தந்திரத்தால்
அடுத்து வந்தமர் புரிந்து அழித்திடும் பகைவர் தம்மை
தடுத்தெம்மைக் காத்தருள்க ஜெய ஸ்ரீ காளி மாதா.

3. பயங்கர சண்டன் முண்டன் மஹிஷனை ஸம்ஹரித்து
ஜெயங் கொண்ட பத்ரகாளி சாமுண்டி தேவி உந்தன்
தயவினை வேண்டி நிற்கும் தனையர்கள் பாரதர்க்கு
(அ)பயம் தந்தாள்வாய் தாயே ஜெய ஸ்ரீ காளி மாதா

4. ஆயிரம் கைகள் கொண்டு அரக்கரின் கூட்டமெல்லாம்
நீ இடம் வலமாய் வந்து நிமிஷத்தில் ஸம்ஹரித்தாய்

போயின உங்கள் துன்பம் போரினில் வெல்வீரென்று
சேயெமக்கருள் வாயம்மா ஜெய ஸ்ரீ காளி மாதா.

5. மதுகைடபர் களென்ற மடையர்கள் உந்தனோடு
சதுரங்க சேனையோடு சமர்புரிந் தழிந்த தறிவோம்
இது நல்ல தருணமம்மா எங்களுக்குதவி செய்து
பதுங்கியே பகைவரோட அருள் ஜெய ஸ்ரீ காளி மாதா.

6. முப்புரம் எரித்த பரமர்க்கிடந் தன்னில் அமர்ந்த தாயே
ஒப்புக்கு உறவு கொண்டு உளவறிந் தெதிர்க்கும் பகைவர்
தப்பும் வகை செய்திடாமல் தக்ஷணம் வந்து காப்பாய்
அப்புறம் என்னாமல் அருள்வாய் ஜெய ஸ்ரீ காளி மாதா.

7. ஸும்பன் நிஸும்ப னென்ற சூரம் மிகும் அரக்கர் தம்மை
அம்ப நீ அடக்கி வென்ற அருள் திறம் அறிவோம் அம்மா
உம்பரம் என்று எங்கள் உடல் பொருள் ஆவி தந்தோம்
நம்பும் எங்கட்கு அருள்வாய் ஜெய ஸ்ரீ காளி மாதா.

8. அண்டி வரும் பகைவர் கூட்டம் அலமலர்ந்தலறி யோட
தண்டித்து எங்கள் துன்பம் அகற்றி அருள் புரிவாயம்மா
கண்டிப்பாரின்றி எதிர்க்கும் கடும் பகைவர் அஞ்சியோட
சண்டி சாமுண்டி வெல்க ஜெய ஸ்ரீ காளி மாதா.

9. இன்றெம்மை எதிர்த்து நிற்கும் இரக்கமில்லாத பகைவர்

என்றென்றும் எங்கள் மண்ணில் எடுத்தடி வைக்கா
வண்ணம்
கன்றென்று கதறி உந்தன் கால் பிடித் துள்ளோமம்மா
நன்றெமக்கருள வருவாய் ஜெய ஸ்ரீ காளி மாதா.

10. ஆதி பராசக்தி வெல்க அம்மை பைரவி வெல்க
நீதியின் பக்கம் நிற்கும் நீலி நின் கருணை வெல்க
சோதியா தெம்மைக் காக்கும் மாதா நின் பேரருள் வெல்க
(யுத்த) பீதியாவையும் தீர்ப்பாய் ஜெய ஸ்ரீ காளி மாதா.

ஓம் சண்டி சாமுண்டி ஜெய ஸ்ரீ காளி சரணம்

ஸ்ரீ மஹா காளி கவசம் ஸம்பூர்ணம்

அருளியவர் "**ஆண்டவன் பிச்சை**" என்னும் அருட்தாய்,

17-9-1965

ஸ்ரீ மீனாக்ஷி திருப்பள்ளியெழுச்சி

1

மதுரைக்கரசியே மரகதவல்லி
மலயத்வஜ பாண்டிய ராஜகுமாரி
பதும மலர் பாத தரிசனம் காண
பக்தர்களெல்லோரும் பணிந்து நிற்கின்றார்
புதுமலர் பூத்தெங்கும் பரிமளம் வீசிட
பொழுது புலர்ந்தது பொன்னொளி காட்டி
சதுர்முகன் முதலான தேவர்களெல்லாம்
சன்னதி முன் வந்து காத்து நிற்கின்றார்
குதூகலமுடன் உந்தன் குற்றேவல் செய்ய
குறவள்ளி குஞ்சரி மருமகள் வந்தனர்
பொதுவில் நடம் செய்யும் புண்ய புருஷரும்
பெருமையுடன் வந்துன் அருகில் நிற்கின்றார்
இது தருணம் எம்மைக் காத்தருள் செய்திட
இன்பமுடன் பள்ளி எழுந்தருளாயே
எதிரில்லா பதம் காட்டி எங்களை யாண்டிட (என்)
தாயே மீனாக்ஷி பள்ளி யெழுந்தருளாயே

2

சங்க நாதத்துடன் பேரிகை ஒலியும்
சதுர் மறையோர் ஓதும் வேதத்தின் ஒலியும்
மங்கள வாத்ய இன்னிசை ஒலியும்
மங்கையர்கள் கூடி பாடிடும் ஒலியும்
துங்க மிகுந்த நற்றவசியர் உந்தன்
தொன்மையாம் புகழ் கூறும் தோத்திரத் தொலியும்
பங்கயச் செல்வியும் பாரதியும் உந்தன்

பக்கத்தில் நின்றன்பாய் அழைத்திடும் ஒலியும்
எங்கள் அன்னையே எழுந்தருளா யென்று
ஏழை மக்கள் நாங்கள் கூவிடும் ஒலியும்
உன் காதில் விழவில்லையோ இன்னமும் நீ
உறங்குதல் முறையோ மூவுலகீன்ற தாயே
அங்கம் பாதி உனக்களித்ததனாலே
அர்த்தநாரி யென்றாகிய சிவனார்
தங்கரம் பற்றிய தாயே மீனாக்ஷி
தயவுடன் பள்ளி எழுந்தருளாயே

3

கொக்கரக்கோவென்று கோழிகள் கூவிட
குக் கூ குக் கூ வென்று குயில்களும் பாடிட
பக்கம் பக்கமாய் பக்ஷி ஜாலங்களெல்லாம்
பற்பல குரல்களில் பாடல் இசைத்திட
மிக்க மணமுள்ள மலர்களெல்லாம் பூத்து
ம்ருதுவாம் உன் சரணத்தில் அர்ச்சனைக்குதவிட
செக்கச் செவேலென்று செந்தாமரைகளும்
செங்கதிராம் உன்தன் அடிகண்டு அலர்ந்தன
அக்கரையுடன் உனக்காராதனை செய்ய
அடியவ ரெல்லாரும் வந்து நின்கின்றார்
சொக்கநாதருந்தன் பக்கத்தில் தான் வந்து
மிக்க அன்புடனுன்னைத் தட்டி எழுப்புகின்றார்
திக்கு எமக்காரம்மா தீனதயாபரி
திருவருள் புரிந்திட எழுந்தருளாயே
தக் திக்கு எமக்காரம்மா தீனதயாபரி
திருவருள் புரிந்திட எழுந்தருளாயே
தக்கத்தருணமிது தாயே மீனாக்ஷி

தயவுடன்பள்ளி எழுந்தருளாயே

4

அருள் கடலல்லவோ அம்மா உன் விழிகள்
அதில் வாழும் மீன்களன்றோ நாங்கள் தாயே
உருள்கின்றது ஒவ்வொரு நாட்களும் அம்மா
உன்னருள்நோக் கென்று வாய்க்குமென்றேங்கி
மருள் கொண்ட மனத்துடன் மயங்கி நிற்கின்றோம்
மாதா உன்னருள் நோக்கம் கிடைக்குமோ தாயே,
வரள் கின்றதுண்டோ -உன் வற்றாத அருள்தான்
வறியராய் வந்தோம் உன்னருள் வேண்டி
பொருள் புகழ் வேண்டியோ பூசிக்க வந்தோம் (உன்)
பொன்னடிக்கே தொண்டு செய்திட வந்தோம்
திரள் திரளாக உன்னடியார்க் கெல்லாம்
திருக்கோயில் வலமாகி வந்து நிற்கின்றார்
சுருள் குழல் கோதியே சுந்தரேசருந்தன்
சௌந்தர்ய வதனத்தைக் கண்டு களிக்கின்றார்
இருள் நீங்கி பொழுது புலர்ந்தது தாயே
இறைவி மீனாக்ஷி பள்ளியெழுந்தருளாயே.

5

அறுபத்து நான்கு லீலைகள் தானோ
ஆலாஸ்ய நகரத்தில் அம்மா நீ புரிந்தாய்
அறுபதினாயிரம் லீலைகள் இன்றும்
அன்பருக்காக நீ புரிகின்றாய் தாயே
மறுத்துரைப்பவர்க் கென்றும் மறைந்து நிற்கின்றாய்
மனங்கரைந்துருகுவார்க் கெதிரில் நிற்கின்றாய்
இறுகிய என்மனக் கல்லுங்கரைந்திட
இருவிழி யொளிகாட்டி இளகிடச் செய்வாய்
பெறுதற்கறியதாம் பிறவியை அடைந்தும் உன்
பெருமையைப் பேசிடாப் பேதையர் ஆனோம்

மறைமொழி பயின்றிடும் மாதவத்தோரும்
மகிமை மிகும் மந்தர ஜபங்கள் செய்கின்றார்
குறுநகை யுடனுந்தன் குழந்தை முருகனும்
குதலை மொழியானுன்னைக் கூப்பிடு கின்றான்
கறுத்த வானம் வெளுத்து காலையுமாயிற்று
கயற் கண்ணம்மா பள்ளி எழுந்தருளாயே.

ஸ்ரீ மீனாக்ஷி திருப்பள்ளியெழுச்சி முற்றும்.

ஸ்ரீ மீனாக்ஷி பிரார்த்தனை பஞ்சகம்

1

ஓங்காரமேயுடலாய் ஹ்ரீங்காரமே உயிராய்
உற்பவித் தொளிரும் சுடரே
ஸ்ரீங்காரமாம் சிறந்த ஆடையணிகள் பூண்டு
ஐம் காரம் அறிவு ஆற்றலாய்
க்லீங்காரமே கிரியைகள் பலவாகி ப்பயனாகி
ஸௌம்யமே சார்ந்த நிலையாய்
பாங்காகப் பாண்டியன் பண்ணிய தவப்பயனால்
பாரில் வந்துதித்த உமையே
ஆங்காரமற்றவர் அகத்தினில் விளையாடும்
ஆனந்த ரூப மயிலே.
தூங்காமல் தூங்கிடும் துரிய நிலைதன்னிலே
தோன்றிடும் தூய ஒளியே
நீங்காமல் எங்கிலும் நிறைந்துள்ள பரம்பொருளே
நினைப்பவர்க்கருமை உறவே
நீங்காயிரமும் பொறுத்து அருள்புரிந்திடும்
மதுரை மீனாக்ஷி தாயே

2

வாடிய பயிர்களுக்கு வானம் தரும் மழைபோல்

வந்தடியார்க்கு தவி செய்வாய்
தேடி வரும் பக்தர்கள் துன்ப மெல்லாம் அகற்றி
திருவருள் தந்து காப்பாய்
நாடி வந்துன்னைப் பாடும் நாவலர்கள் பாவலர்க்கு
நல் வரமளித்த ருள்வாய்
சாடி வரும் வினை துன்பசரணடைந்தோர்க்கில்லையென
சாக்ஷியாய் வந்து நிற்பாய்
ஆடி வரும் அம்பலவாணர்க்கு அருந்துணையாய்
அண்டமெல்லாம் படைப்பாய்
கூடிடும் குறிப் புணர்த்தி குற்றேவல் கொண்டன்பர்
குறையெல்லாம் நீக்கி யருள்வாய்
வேடிக்கையாகவே வில்லேந்திப் போரிட்டு
விமலரை மணந்து மகிழ்ந்தாய்
ஈடில்லா அன்புடன் இகத் திலெம்மைக் காக்கும்
இறைவி மீனாக்ஷி தாயே

3

ஆதியில் மதுரையில் அறுபத்து நான்கு திரு
விளையாடல் செய்த பரன்
பாதிவுடல் உனக்களித்து பக்ஷமுடன் மற்றனைத்தும்
பராசக்தி லீலையென்று
நீதியுடன் நின்னருகில் வீற்றிருந்து அரசாளும்
நேர்மைக்கு இணையுமுண்டோ
மேதினியில் உனையன்றி மேலான தெய்வமென்று
எவரை நான் பணிவதம்மா
ஜாதி மத பேதமின்றி சகல ஜீவர்களையும்
ஸம்ரக்ஷித்திடும் அன்னையே
போதிக்கும் ஸத்குருவும் போற்றிடும் தெய்வமும்
மாதா பிதாவும் நீயே
வேதியர்கள் மறையொலியும் மாதர்கள் பண்ணொலியும்
வீதிதோறும் முழங்கும் நகரில்

வாதிட்ட சமணர்களை வென்ற சம்பந்தர்க்கருள்
மதுரை மீனாக்ஷி தாயே.

4

மெய்யது உன்னருட் பணிக்கே அர்ப்பணித்து என்னாளும்
மெய்யுடன் வாழவேண்டும்
துய்ய நின் திருப்புகழ் பாடியும் பேசியும்
வாய்க்கு நல்லுணர்ச்சி வேண்டும்
உய்ய உன் திருவடிகள் உள்ளன்புடன் கண்டு
கண்கள் களிப்படைய வேண்டும்
பைய வந்துன் பங்கயத்தான் பரிமளத்தை என் நாசி
பரிந்துணர்ந்து மகிழ வேண்டும்
வையகத்து வம்பெல்லாம் வந்து நுழையாதென் செவிகள்
நின் புகழை கேட்க வேண்டும்
மையலுந்தன் மேலன்றி மற்றெதிலும் கொள்ளாத
மனமெனக்கருள வேண்டும்
ஐய மெல்லாமகற்றி உந்தன் அடிமலர்கள் பற்றி உள்ளம்
அமைதியுடன் வாழ வேண்டும்
பொய்யறியா சிந்தை தன்னில் புகுந்தருள் வழங்கிடும்
மதுரை மீனாக்ஷி தாயே.

5

ஆயிரம் இதழ் கமல மலர் தன்னில் பெருகிடும்
அருள் அமுத தாரை தன்னை
தாயினும் பரிந்து நீ தயவுடனன்பு காட்டியென்
தாபமெல்லாமகற்றியே
காயினும் கடிமனம் கனிவித்துக் கற்காமல்
கவிபாடும் திறமளித்து
வாயினால் கூறவொண்ணா வாழ்வளித்தென்னைநீ

வானவர்க்கும் மேலாக்கியே
நாயினும் கடைய னென்னை நாடெங்கும் மதித்திட
நயந்து நீ என்னை ஏற்றுக்கொண்டாய்
சேயினும் சிறு மொழிகள் செவியேற்று மகிழ்ந்திடும்
தாயுன் தயைக்கு இணையுமுண்டோ
போயின வினையெல்லாம் புறங்காட்டியே உந்தன்
பொன்னடிகளென்றும் என்துணை யென்றாயின
மாயிருள் நீக்கிடும் மார்த்தாண்டன்போல் ஒளிரும்
மதுரை மீனாக்ஷி தாயே.

(ஸ்ரீ மீனாக்ஷி பிரார்த்தனைப் பஞ்சகம் முற்றிற்று)

மங்கள ஸ்லோகம்

நமஸ்தே நமஸ்தே ஜகந்நாத நாதே
நமஸ்தே நமஸ்தே ஜகதேக வீரே
நமஸ்தே நமஸ்தே ஜகதேக மாதே
ஸமஸ்தா பராதம் க்ருபயா ஸமஸ்வ
பஜஸ்வ மந்தரம் பவபந்த முக்தே
ஜிஹ்வே ரஸக்ஞே ஸுலபம் மனோக்ஞம்
த்வை பாயனாத்யைர் முனிபீர் ப்ரஸஸதம்
ஸ்ரீராஜ ராஜே நமஸ்தே

ஸ்ரீ வித்யா ரூபிணி, சரஸ்வதி
சகல கலாவல்லி, சாரபிம்பாதரி
சாரதாதேவி, சாஸ்த்திரவல்லி
வீணா புஸ்தக தாரிணி
வாணி, கமலபாணி, வாக்தேவி
வரநாயகி, புஸ்தக ஹஸ்தே நமோஸ் துதே

ஸ்ரீ வைஷ்ணவி தண்டகம்

ஓம் ஸ்ரீ மாலதி வநவாஸிநி மங்கள ப்ரதாயினி
மகுட குண்டல ஹார சுசோபினி பானு
மண்டல ப்ரகாசிநி பக்த ஹ்ருதய கலம விகாஸிநி
மந்தஹாஸிநி நமஸ்தே நமஸ்தே நமஸ்தே

வைஷ்ணவி ஸ்தோத்திரம்

1. ஜய ஜய தேவி ஜய ஜகர்த் ஜனனி
ஜய ஜய கமல ம்ர்து சரணே
ஜய ஜய பத்ம தல நானே
ஜய ஜய வைஷ்ணவி வரதே

2. ஜய ஜய துர்கே ஜய ஷஷி வதன
ஜய ஜய கருணா கர்ணா
ஜய ஜய மல்லிகாபாரனா
ஜய ஜய வைஷ்ணவி வரதே

3. ஜய ஜய லலிதே ஜய ஷுப காரிணி
ஜய ஜய பவ பய ஹாரிணி
ஜய ஜய ஜய ஜகத் தாரிணி
ஜய ஜய வைஷ்ணவி வரதே

4. ஜய ஜய அம்பா ஜய விஷ்வ மாதா

ஜய ஜய வைஷ்ணவி சரணம்

ஜய ஜய மங்கள வர பிரதே

ஜய ஜய வைஷ்ணவி வரதே

ஸ்ரீ ஸாரதா நவமணி மாலை

ராகம்: குர்ஜரி **தாளம்: ஆதி**

1. ஓங்காரத்தின் உட்பொருளே ஓதும் நான் மறைக் கறியவளே
ஆங்காரத்தை அழிப்பவளே அடியார் வினைகளை ஒளிப்பவளே
தீங்காயிரமும் பொறுப்பவளே திருவருள் புரிந்து காப்பவளே
பாங்காய் பதமளித்தாள்பவளே ஓம் ஸ்ரீ மாதா ஜயலலிதே

2. அசுரரை அடக்கி அனலிடையே அருளுடன் வந்தவதரித்தவளே
பசுபதி சதியாய் திகழ்பவளே பல உலகுயிர்களைப் படைத்தவளே
பொசுக்கிடும் வினை தீ அணைப்பவளே பொன்னடி போற்றும் பக்தர்களை
சிசு போலணைத்து அமுதூட்டும் ஓம் ஸ்ரீ மாதா ஜயலலிதே

3. மஹிஷனை வதைத்த சாமுண்டி மதுகைடப மர்த்தனிகாளி

ஸஹித்திட முடியாக் கொடுமை செய்த சண்டன் முண்டனை ஸம்ஹரித்தவளே
பஹிரண்டமெல்லாம் படைத்தவளே பரம ஸாம்ராஜ்ய பதவிதனை
வஹிப்பவளே வந்தருள் புரிவாய் ஓம் ஸ்ரீ மாதா ஜயலலிதே

4. வித்தையும் சக்தியும் ஓங்கிடவும் விரும்பும் பலபொருள் பெற்றிடவும்
சக்தி நீ ஒருவளே மூவுருவாய் ஜகத்தினில் காக்ஷி அளிக்கின்றாய்
முக்திக்கொரு வித்தானவளே மூவர்க்கும் மேலானவளே
நித்தியம் உன்னை துதிக்கின்றோம் ஓம் ஸ்ரீ மாதா ஜயலலிதே

5. தேவர் படும் துயர் தீர்த்தவளே தேவ தேவனை மணந்தவளே
பாவலர் நாவலர் பக்தியுடன்பண்ணிடும் பூஜைகள் ஏற்பவளே
ஆவலுடனுன்னைப் போற்றுகின்றோம் அன்புடன் வந்து அபயம் தருவாய்
பூவடிக்கென் மன மலரணிவாய் ஓம் ஸ்ரீ மாதா ஜயலலிதே

6. கன்றுக்கிரங்கும் தாய்ப்பசு போல் கருணை சுரக்கும் கண்ணாளே
ஒன்றுக்கும் உதவாதெந்தன் உள்ளத்தில் குடி கொண்டிருப்பவளே
என்றும் உந்தன்திருவடிகள் பணியும் பக்தர்க் கெளியவளே
நன்றுன தாயிரம் நாமங்களில் ஓம் ஸ்ரீ மாதா ஜயலலிதே

7. அன்னை வயிற்றினில் அடைக்காமல் அவனியில் பிறந்திறந்தழியாமல்
பின்னையோர் ஜன்மமும் கொடுக்காமல் ப்ரியமுடன் உன் பதம் சேர்த்தருள்வாய்
உன்னையன்றி ஓர் உயர் தெய்வம் உலகினில் உண்டோ உரைத்திடுவாய்
தன்னைப் பணிவார்க் கருள்வழங்கும் ஓம் ஸ்ரீ மாதா ஜயலலிதே

8. அமுதக் கடலின் நடுவிருக்கும் நவத்வீபத்தின் நாயகியே
குமறும் அசுரர் படை அழித்து குடிகொள் குளிர் பத்மாடவியில்
ஸமுத்பவமாகிய நவரத்ன மணிமயமாகிய மாளிகையில்
இமயவர் போற்றிட வீற்றிருக்கும் ஓம் ஸ்ரீ மாதா ஜயலலிதே

9. அவனியில் அருள் தரும் தெய்வமெல்லாம் அங்கையினால் வரம் தந்திடுவார்
உவமை இல்லா உன் திருவடியில் உயர் பதமெல்லாம் அருள்கின்றாய்
சிவனிடபாகத் தமர்ந்தவளே சிறுமையெல்லாம் தீர்ப்பவளே
நவராத்ரியிலுன்னைப் போற்றுகின்றோம் ஓம் ஸ்ரீ மாதா ஜயலலிதே

ஓம் மாதா ஸ்ரீ லலிதே
சர்வேஸ்வரி ஸ்ரீ லலிதே
பர்வத வாசினி ஸ்ரீ லலிதே
சிம்ஹ வாஹினி ஸ்ரீ லலிதே

ஷக்தி தாயினி ஸ்ரீ லலிதே
சித் விலாசினி ஸ்ரீ லலிதே
சிவ வினோதினி ஸ்ரீ லலிதே

தீன தயாபரி ஸ்ரீ லலிதே
திவ்ய ஸ்வருபிணி ஸ்ரீ லலிதே
மாதா பவானி ஸ்ரீ லலிதே
முக்தி ப்ரதாயினி ஸ்ரீ லலிதே
புவன மொஹினி ஸ்ரீ லலிதே
பவ பய ஹாரிணி ஸ்ரீ லலிதே

ஸ்ரீ

துர்க்கா ஆபதுத்தாராஷ்டகம்

தமிழ்ல் இயற்றியவர்: ஆண்டவன் பிச்சை

நமஸ்காரம் தாயே தயையுள்ள தாயே
நமஸ்காரம் லோகம் வணங்கும் பிரதாபே
நமஸ்காரம் யாரும் பணி செங்கழலாய்
நமஸ்காரம் நீ கா வரந்தா ஸ்ரீதுர்க்கே! 1

வணக்கம் உலகம் நினைக்கும் எந்தாயே
வணக்கம் மகாயோக விஞ்ஞானம் ஆனோய்
வணக்கம் வணக்கம் சதானந்த ரூபே
வணக்கம் ஸ்ரீதுர்க்கே நீ ஈடேற்ற வா கா! 2

அனாதையான் தேவீ மகாதீனன் அம்மா
சதா ஏங்குவேன் ஆசை பாசத்தினாலே
பயம் கொண்டு வாடிதுயர் ஆழ்ந்து ஓடி
நடுங்கும் எனக்கா ஸ்ரீதுர்க்கை வணக்கம் 3

நடுக்காட்டில் போரில் எதிரிகள் நடுவே
நீரில் நெருப்பில் அரசியல் தீயில்
புயல் காற்றில் காராகிருஹத்தில் உழன்றால்
புகல் நீ ஸ்ரீதுர்க்கை வணக்கம் எமைக்கா 4

ஆழங்காண ஒண்ணா பிறவிக்கடலில்
விபத்துக் கடலில் சுழல் மானிடர்க்கு
நெடுங்கப்பல் நீதான் கரையேற்றி வைப்பாய்
வணக்கம் ஸ்ரீதுர்க்கை எமைக்கா எமைக்கா! 5

வணக்கம் சண்டிக்கு பிரசண்ட துர்கைக்கு
நெடும் போரில் இந்த்ரன் எதிரி கொல் காளி
பயங்கரம் ஆகும் இடையூறு கொல்வாய்
வணக்கம் ஸ்ரீதுர்க்கை எமைக்கா எமைக்கா! 6

ஆன்றோர் நற்சான்றோர் செய்யும் தேவி
நல் வாய்மை உருவாய் விளங்கும் கராளி
மகா கோபம் கொண்டு அரக்கரை மாய்ப்பாய்
வணக்கம் ஸ்ரீதுர்க்கை எமைக்கா எமைக்கா! 7(அ)

மகா கோபரூபி மகா காளி தேவி
இடை பிங்களையாய் இருப்பாய் இருப்பாய்
சுஷுக்னை எனும் நாடி நீயே எந்தேவி
வணக்கம் ஸ்ரீதுர்க்கை எமைக்கா எமைக்கா! 7(ஆ)

வணக்கம் ஸ்ரீதுர்க்கை சிவை பீம அம்பா
ஸதா ஸர்வசித்திகள் ஈயும் எந்தாயே
கடுங்கால ராத்தீரி ஆனாய் பவானி
வணக்கம் ஸ்ரீதுர்க்கை எமைக்கா எமைக்கா! 8

சுரர்கள் நரர்கள் இயக்கர் கருடர்
முனிவர் திருடர் பயங்கொள் மனிதர்
பிணி துக்கம் இன்னல் உழல் மானிடர்கள்
அனைவர்க்கும் நீதான் புகல் தேவி துர்க்கே! 9

(இவ்வஷ்டக ஸ்தோத்திரத்தை காலையும், மாலையும் மும்முறை பாராயணம் செய்பவர்களுக்கு எல்லா இன்னல்களும் நீங்கி நன்மை பயக்குமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்)

நாராயண நாராயண மெட்டு

சித்தேஸ்வர தந்த்ரத்தில் ஹரகௌரீ ஸம்வாதத்தில்
ஸ்ரீ துர்க்கா ஆபதுத்தாரகாஷ்டகம்
முற்றும்

துர்க்கை தியானம்

மதுகைடபர்களை வதம் செய்து நின்றோம்
மகிடன் எனும் எருமையைச் சாடியே கொன்றோய்
அதிரவரும் தூம்ரனை அரை நொடியில் வென்றோய்
சண்டனையும் முண்டனையும் பந்தாடி நின்றோய்

உதிரபீஜன் உதிரம்ஒரு நொடியில் குடித்தோய்
ஓங்கிவரும் சும்பனை ஆங்கு உயிர் எடுத்தோய்
எதிரில் வரும் நிசும்பனைக் கொன்றாவி முடித்தோய்
எமக்கருள்க துர்க்கையே அம்பிகையே வணக்கம்.

ஓம்

சிவஸ்துதி

வந்தே சம்பூம் உமாபதிம் ஸுரகுரும் வந்தே ஜகத் காரணம்
வந்தே பன்னக பூஷணம் ம்ருகதரம் வந்தே பசூனாம் பதிம்
வந்தே சூர்ய சசாங்க வஹ்னி நயனம் வந்தே முகுந்தப்ரியம்
வந்தே பக்த ஜனாச்ரயஞ்ச வரதம் வந்தே சிவம் சங்கரம்

தேவி த்யான ஸ்லோகம்

வந்தே மாதரம் அம்பிகாம் பகவதீம்
வாணி ரமா ஸேவிதாம்
கல்யாணிம் கமனீய கல்ப லதிகாம்
கைலாஸ நாத ப்ரியாம்
வேதாந்த ப்ரதி பாத்ய மான விபவாம்
வித்வன் மனோ ரஞ்சனீம்
ஸ்ரீ சக்ர ஞ்சித ரத்ன பீட நிலையாம்
ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி

ஸுக்ஷ்ம ராமாயண ஸ்துதி

1. திருமகள் உறையும் மார்பன் தருமத்தைக் காக்க வென்று
கருணையால் தரணிதன்னில் கலைக்கோட்டு முனிவர் செய்த
மருவிலா யாகந்தன்னில் மன்னவர் தசரதர்க்கு
சிறுவர்கள் நால்வர் தோன்ற அருளமுதளித்த ராமா

2. மேதினி தன்னில் என்றும் நீதியை நிலைக்கச் செய்த
ஆதி பரப்ரம்மம் அம்சம் அயோத்தி தன்னில் வந்து
கோதில்லா கோசலைக் குமரனாய் அவதரித்து
நீதில்லா சகோதரரோடு திருவிளையாடல் செய்த ராமா

3. தவமுனி யாகம் காத்து தாடகை உயிரை மாய்த்து
அவநெறி அடைந்த கல்லாம் அகலிகை சாபம் தீர்த்து
சிவனுடை வில்லொடித்து சீதையின் கைப்பிடித்து
பவபயம் தீர்க்க வந்த பரம கல்யாண ராமா

4. பத்தினி சீதையோடு பாங்குடன் அயோத்தி செல்ல
க்ஷத்திரிய குலத்தை அழிக்க சங்கல்பம் செய்த பிருகு
புத்திரர் பரசுராமர் யுத்தம் மேற்கொண்டு எதிர்க்க
எத்தி அவர் நாணியோட எதிர்த்த ஸ்ரீ சீதாராமா

5. இளவரசு பட்டம் கட்டும் இன்பமாம் செய்தி கேட்டு
குளவி யோர் கொட்டி கூனி கைகேயி மனம் கலைக்க
உளவறியா மன்னர் தம்பால் உற்றவரம் இண்டும் கேட்க
அளவு ஈரேழு ஆண்டு ஆரண்யம் சென்ற ராமா

6. கங்கையை கடக்க ஓடம் கொண்டு வந்து அழைத்துச் சென்று
மங்கையர்க் கரசி சீதை மண்மீது உறங்கக் கண்டு
சங்கடம் கொண்ட சௌமித்ரியுடன் குகனும் வருந்த
அங்கு அவனுடன் ஐவர் ஆனோமென்றணைத்த ராமா

7. புத்திர சோகம் தன்னை பொறுத்திட மாட்டார் தசரதர்
பத்தினி கோசலைக்கு பரிவுடன் உண்மை கூறி

சத்தியம் தவறா மன்னன் சாயுஜ்யம் அடைந்தது கேட்டு
நித்தியக் கருமமண் செய்த முக்தியளித்த ராமா

8. ஜானகி தேவியோடு சௌமித்திரியோடு கொடிய
கானகம் தன்னில் வந்து காய்கனி தன்னை உண்டு
மானமிகும் பரதன் வேண்ட பாதுகை அளித்துத் தேற்றி
ஆனதோர் பஞ்சவடியில் அமர்ந்த ஆனந்த ராமா

9. கொடியவள் சூர்ப்பணகையின் கோரமாம் மூக்கரிந்து
நெடிய கரதூஷணாதி அரக்கரையெல்லாமழித்து
வடிவினில் சிறந்த சீதை வாஞ்சையால் கேட்ட பொன்மான்
பிடிக்க மான் மாரீசனை துடித்து விழ அடித்த ராமா

10. சன்யாசி வேடங் கொண்டு அன்னை வைதேஹி தன்னை
தென்னிலங்கைக்கெடுத்தும் ஏகும் தசமுகன் தன்னால் வீழ்ந்த
மன்னிய சீர் ஜடாயு மரணத்தைக் கண்டயர்ந்து
உன்னி அவர்க்குக் கருமமும் செய்து உயர் பதமளித்த ராமா

11. கபந்தனைக் கண்டு சபரிக்கருள் புரிந்து அனுமான்
உபசரித் தழைக்கச் சென்று உத்தமன் சுக்ரீவனுக்கு
விபரீத துன்பிழைத்த வீரனாம் வாலியைக் கொன்று
அபயமளித் தவனுக்கரசை அளித்தருள் செய்த ராமா

12. கடல் கடந்து இலங்கை தன்னில் காவெல்லாம்
உடல் மெலிந்த அன்னை சீதையுற்ற துயர் தன்னைத் தீர்த்து
சுடர்க் கொழுந்தாய் இலங்கை சுட்டெரித்து அனுமன் தந்த
அடையாளம் தன்னைக் கண்டு ஆனந்தம் கொண்ட ராமா

13. வானரப் படைகளெல்லாம் வாரிதியைக் கடந்து செல்ல
ஆனதோர் வாலி மைந்தன் அங்கதன் தூது செல்ல
மானமில்லா அரக்கன் மனது மாறாமை கண்டு
தான் அவனை எதிர்த்தக் கொல்ல தம்பியுடன்சென்ற ராமா

14. கற்பினிற்கு அணிகலத்தை கடும்சிறை தன்னில் வைத்த
அற்பமாம் அண்ணன் செய்யும் அட்டூழியம் பொறாத

நற் பிறப்புள்ள விபீஷணர் தன்னை ஏற்று
விற்பிடித்து அரக்கரெல்லாம் வீழ்த்திய வீர ராமா

15. லக்ஷ்மணன் கணையால் இந்திரஜித்தனும் மடிய அன்னாள்
அக்கிரம வார்த்தைக் கேட்டு உறங்கும் அரக்கன் கும்ப கர்ணன் மாள
வக்ர குண ராவணன் தன் வலுவிழந்து விழ
உக்ர மிகும் கோதண்டத்தில் உயிர்கணை எறிந்த ராமா

16. புனிதமாம் அக்னி தன்னில் புகுந்தெழுந்திட்ட தாயைக்
கனிவுடன் நோக்கி அந்த கற்புக் கனல் தனை ஏற்று
பனித்திடும் கண்களோடு பார்த்து அடி போற்றி நின்ற
இனித்த விபீஷணர்க்கு இலங்கையை அளித்த ராமா

17. புட்பக ரதத்தில் தேவி தன்னுடன் தம்பியோடு
உட்கலந்து அனுமன் முதலாம் உத்தம நேயர் சூழ
சிட்டராம் பரத்துவாசர் ஆச்ரமம் தனில் வந்து
மட்டில்லா அன்பு கொண்ட பரதரைக் காத்த ராமா

18. தாய்மார்கள் தாட் பணிந்து தம்பியர்கள் தமையணைத்து
வாய்மையே உருக்கொண்ட, வசிஷ்டரின் தாள் வணங்கி
போய் வந்த செய்தி எல்லாம் பொதுவில் எடுத்துரைத்து
ஆய் வந்த அரியணையில் அமர்ந்த பட்டாபி ராமா

19. புண்ணிய நதிகள் நீரை பொற்குடம் தன்னில் ஏந்தி
நண்ணியே வசிஷ்டர் முதலாம் நற்தவத்தோர்கள் கூடி
பண்ணிய அபிஷேகத்தைப் பார்த்தவர்கள் பரவசமாக
திண்ணிய மகுடம் தன்னைதிருமுடி தரித்த ராமா

20. அட்டதிக் பாலர் முனிவர் அவனியில் அரசரெல்லாம்
இட்டமாய் அயோத்தி வந்து பட்டாபிஷேகம் கண்டு
மட்டிலா மகிழ்வினோடு மங்களம் பாடிப் போற்ற
கட்டியம் கூறி வாழ்த்த காத்தருள் செய் ஸ்ரீ ராமா

ஸ்ரீகந்த ஷஷ்டி மணிமாலிகா
என்ற
ஸ்ரீஷண்முக ரக்ஷா பந்தனம்

இஃது அருள் வாக்கினால்
ஆண்டவன் பிச்சை அவர்களால் இயற்றப்பட்டது

1987

ஓம் ஸ்ரீ மஹா கணபதயே நம
ஓம் சரவணபவ ஷண்முகம் தாரகம்

ஸ்ரீ சங்கர சத் குருப்யோ நம:

ஸ்ரீகந்த ஷஷ்டி மணிமாலிகா ஸ்தோத்ரம்
என்ற
ஸ்ரீ ஷண்முக ரக்ஷா பந்தனம்
கஷ்ட நிவாரண ஷஷ்டி கவசம்

(அயிகிரி நந்தினி என்ற சந்தத்தில் படிக்கவும்)

(1)

ஹர நேத்ரோத்பவ அக்னி ஸ்வரூப
அமித பராக்ரம அதி கீர்த்தே

ஹரி ப்ரஹ்மாச்ருத அமரேந்தார்ச்சிதத்
அபார கருணா மய மூர்த்தே

வரத நாரத ப்ரிய வல்லி மனோகர
வந்தித அபீஷ்ட்ட பலபூர்த்தே

ஜய ஜய சூர குலாந்தக ஷண்முக
சரவணபவ பரிபாலய மாம்

(2)

த்விஷட் கர சோபித ஸர்வாயுத தர
தீன ஸம்ரக்ஷண திவ்ய மதே

திவ்யா லங்க்ருத மன்மத மோஹித
ரூப லாவண்ய குமார பதே

த்வமேவ மமார்த்தி நிவாரண பந்து
த்வாதச நேத்ர தயாநிதே

ஜய ஜய சூர குலாந்தக ஷண்முக
சரவணபவ பரிபாலய மாம்

(3)

சூர பத்மாஸுர தாரக ஸிம்ஹ முகாஸுர
தானவ குல காலா

சூர்ய கோடி சமான ப்ரகாச
சக்தியாயுத விச்வாத்மக லீலா

தீர பராக்ரம த்விஷ்டபுஜ சௌரே
தீன சரண்ய ஸுகுண சீலா

ஜய ஜய சூர குலாந்தக ஷண்முக
சரவணபவ பரி பாலய மாம்

(4)

குஞ்ஜர ஸோதர குஞ்சரி நாயக
குக்குட த்வஜ குங்கும காத்ரா

கும்போத் பவ முனி தேசிக விசாக
குல பர்வத நந்தினி புத்ரா

பஞ்சானன ப்ரணவாக்ஷர போதக
பரம க்ருபாமய த்விஷண் நேத்ரா

ஜய ஜய சூர குலாந்தக ஷண்முக
சரவணபவ பரிபாலய மாம்

(5)

மரகத மயூர வாஹன மோஹன
மங்கள வல்லி மனோ ரமணா

மம பவ பீதி நிவாரண காரண
மஹீமாத்புத பங்கஜ சரணா

உரக சயன ஸகோதரி பார்வதி
உபய கர கமல ஆபரணா

ஜய ஜய சூர குலாந்தக ஷண்முக
சரவணபவ பரிபாலய மாம்

(6)

ஷண்முக மண்டல சோபித த்வாதச
நயன கமல கருணா ஸிந்தோ

ஷட் சக்ரஸ்த்தித ஷடாக்ஷர மந்த்ர
ஸ்வரூப சரணா கத பந்தோ

ஷண்மத ஸ்தாபித சங்கர குரு க்ருத
புஜங்க ஸ்தோத்ர ப்ரிய ஸ்கந்தோ

ஜய ஜய சூர குலாந்தக ஷண்முக
சரவணபவ பரிபாலய மாம்

(7)

ஷஷ்டி குமார ப்ரபாவ ப்ரவாஹம்
ஸமஸ்த்த பாப வினாச கரம்

ஷண்முக சரண ஸரோருஹ பக்திம்
சர்வா பீஷ்ட்ட ப்ரதம் ஸுஹ்ருதம்

கஷ்ட நிவாரண தாரக மந்த்ரம்
கைவல்யானந்த மோக்ஷ ப்ரதம்

ஜய ஜய ஜகதோத்தாரண மந்த்ரம்
ஜனன மரண நிவாரண மந்த்ரம்

(கஷ்ட நிவாரண ஷஷ்டி கவசம் ஸம்பூர்ணம்)

ஸ்ரீ குமாரஷ்டகம்

(சுவாமி ஆண்டவானந்த சரஸ்வத்யா) விரசிதம்
ஸ்ரீ கார்திகேஎன ஸ்வயமேவ ப்ரசொதிதம், கும்பிதம்,
அலங்க்ரிதம் ச

இயற்றியவர் : ஆண்டவன் பிச்சை

ஸ்ரீ கார்த்திகேயநால் தாநே அருளியது ,கும்பியது,

அ லங்கரித்தது

1) நிஜானந்த ரூபம் நிர்மல குண விகாஸம்
கஜானுஜம் கார்த்திகேயம் குஹம்
ப்ரஜாபதிம் பார்வதீ ப்ராணபுத்ரம்
பஜே ஸதா ஷண்முக பாதபங்கஜம்

2) ப்ரணவோபதேஷ ப்ரத்யக்ஷ குருமூர்த்தீம்
கிரணகோடி பாஸ்கர லாவண்யம்
ஷரணாகத ஸாதுஜன ஸம்ரக்ஷகம்
ப்ரணமாம்யஹம் குமார சரணாவிந்தம்

3) பக்த வத்ஸலம் ப்ரபும் தாரகாரிம்
தப்தகாஞ்சன தேஹம் தயாஸமுத்ரம்
ஷக்தி ஹஸ்தம் அஹங்கார அஸுராந்தகம்
நித்யம் வந்தே ஸுப்ரமண்ய பாத பங்கே ருஹம்

4) கருணாம் ருதவரஷித த்விஷண்ணேத்ரம்
ஷரணாகத தீனபந்தும் ஸர்வஜன போஷகம்
தருணி மணீம் வல்லி தேவஸேனா நாயகம்
ஷரணம் ஷரணம் சங்கரகுமார சரணாரவிந்தம்

5) நிஜபக்த மனோவாஸினம் நிர்விகல்ப ஸுக தாயினம்
அஜகஜ அகிலசராசராத்ம ஸ்வருபம் குஹம்
புஜக பூஷணம புராரி ப்ரியநந்தனம்
பஜரே வல்லீநாத பாத பங்கஜம்

6) ஆஸாபாஷ ஷட்வர்க் னவரிம் ஆதிப்ரபரஹ்மஸ்வரூபம்
கேஷாதி பாதாந்த ஸுந்தர ஸுகுமாரம் ஸுரேஷம்
தாஸார்ச்சித பாத கமல ஷோபிதம் பாஹுலேயம்
ஸ்ரீஷாதி பூஜிதாங்க்ரி யுகளம் ஷிரஸா நமாமி

7) பர்வத வாஸினம் பார்வதி கரகமல லாலித ஸுகுமாரம்
துர்விஷய ரஹிதம் துர்ஜன ஸிக்ஷண தண்டபாணீம்
ஸர்வவ்யாபகம் சதுர்வேதஸார ஓங்கார நாதம்
கர்வித ஸுரபத்மாதி நாஷன பாதபத்மம் ஸதாரக்ஷது

8) இச்சாஷக்தி க்ரியாஷக்தி ஞானஷக்தி தரம் குஹம்
நிஷசந்சல ஹ்ருதயவாஸம் நித்யானந்த பலப்ரதம்
பஷ்சாத் துஷ்ட வைரி ஸம்ஹாரம் ப்ரணவோபதேஷ

பண்டிதம்

உச்சாடன மந்த்ரம் ஸதா ஓம் சரவணபவ ஷண்முகம் தாரகம்

9) குமாரஷ்டகமிதம் புண்யம் குருநாதோபதேஷகம்
யஹபடேத் பக்திமான் நித்யம் ஸர்வம்பாப விமோசனம்
அந்தே ஷண்முக பாதாப்ஜ கைவல்ய பத வாஸினம்
ஸதாகால ஸுப்ரமண்ய நாமாம்ருதபானம் லபேத்

9) யத்பாதஸ் மரண மாத்ரேண ஷோகமோஹ பயாபஹம்
தத் ஸ்ரீஷண்முக பாதாப்ஜம் ஸதாரக்ஷது மானவஹ
ரூபத்யானம் க்லேஷ் நாஷ்ம் நாமஜபம் மோக்ஷதாயகம்
ஸர்வ பூஜாபலம் ப்ராப்தி விதேஹ முக்தி தாயகம்

இதிஸ்ரீ ஸத்குரு விரசித
குமாராஷ்டகம் ஸம்பூர்ணம்

உ

ஓம் முருகா

முருகன் அருட்பதிகம்

ஆண்டவன் பிச்சை

வடகதிர்காமன் திருப்புகழ் சபை
67, தம்பு செட்டி தெரு,
மதராஸ்-1

உ

முகவுரை

''உள்ளம் உருகினால் உடனாவார்'' இறைவன் என்பது திருஞானசம்பந்தர் திருவாக்கு ''ஆண்டவன் பிச்சை'' எனும் பக்த சிகாமணியாம் அம்மையாரின் உள்ளம் உருக ஆண்டவனே அவரது உள்ளத்தில் நின்று ஊட்ட எழுந்த பாமலை இது. இங்ஙனம் தணிகேசன் திருவருளால் உருப்பெற்றது, இப்பாமாலை. ஆதலின் இதை வாசிப்போரும் கற்பிப்போரும் சகல சௌபாக்கியங்களையும் பெறுவர் என்பது திண்ணம்.

வ.சு.செங்கல்வராய பிள்ளை

26.6.60

உ

ஓம் முருகா

ஓங்கார மயில்மீது உல்லாச மாய் அமர்ந்
துலகை வலம் வந்த தெய்வம்
ஆங்கார அசுரனை அங்கம் இரண்டாக்கி
அடக்கி ஆட்கொண்ட தெய்வம்
பாங்காக அடியார்கள் பக்தியுடன் புனைந்திடும்
பாமாலை ஏற்கும் தெய்வம்
தூங்காமல் தூங்கிடும் யோகியர்கள் காணவே
துரிய நிலை காட்டும் தெய்வம்
தீங்காயிரம் செய்த பாவியரும் பணிந்திடில்
திருவருள் புரியும் தெய்வம்
ஏங்காது எடுத்தணைத்து அடியார்கள் வினைதீர்த்து
இகபரம் அளிக்கும் தெய்வம்
நீங்காமல் என்னகத் தாமரையில் எந்நாளும்
நிலைத்து நின் றருளும் தெய்வம்
பூங்கா வனங்களும் பொய்கையும் சூழ்ந்திருந்
தணிகை வாழ் முருக தெய்வம். 1

அரன் நெற்றிக்கண்ணில் அறுபொறியாய் உதித்து
அனற் கடவுள் கைஏந்தும் தெய்வம்
வரநதியாம் கங்கையில் வந்து தங்கிய தெய்வம்
வானோர் துதிக்கும் தெய்வம்
சரவணப் பொய்கையில் சாவியும் கொண்டுவிட
உருஆறு கொண்ட தெய்வம்
பரம பாக்கியம் செய்த பாவைமார் அறுவர்களும்
பாலூட்டி வளர்த்த தெய்வம்
மரகத வடிவுடைய மாதா உமை கண்டு
மார்போ டணைந்த தெய்வம்
சீரம் ஆறும் உடல்ஒன்றாய்ச் சேர்ந்ததெய்வம் பரம
சிவன் மடியில் அமர்ந்த தெய்வம்
பிரமன் அகங் காரத்தை கருணையுடன் போக்கியே
ப்ரணவம் போதித்த தெய்வம்

இரவுபகல் எந்நேரம் என்இதய தாமரையில்
இருந்தருளும் தணிகைத் தெய்வம். 2

அண்டர்கள் உலகமும் அவனியும் குலைத்திட்ட
அசுரர் பயம் தீர்த்த தெய்வம்
சண்டமா ருதம் போல வந்தெதிர்த்த சூரனை
சம்மாரம் செய்த தெய்வம்
துண்டமிரண் டாக்கியே சூரனுடன் கூறொன்றைத்
துவஜமாய் ஏற்ற தெய்வம்
விண்டதோர் பாகமதை விருப்பமுடன் மயிலாக்கி
விசையுடன் ஓட்டும் தெய்வம்
விண்டராம் அரக்கர்படை மிரண்டோடி மடிந்திட
மின்னும் வேல் எறிந்த தெய்வம்
தண்டனிட்ட தேவர்களைத் தயவுடன் ரக்ஷித்துத்
தாபங்கள் தீர்த்த தெய்வம்
வண்டமர்ந்த பூங்குழலாள் வானவர்கள் குலமகளை
வகையாய் மணந்த தெய்வம்
கண்டவுடன் என்னுள்ளம் கவர்ந்தென்னை ஆட்கொண்ட
கருணை வடிவான தெய்வம். 3

ஆறுபடை வீட்டிலும் வாழும் தெய்வம்
ஆறாதாரம் ஆன தெய்வம்
வீறுமிகும் வேல்கொண்டு விளையாடல் போலரக்கர்
வீரம் குலைத்த தெய்வம்
சீறும் அசுரன் தன்னைச் சிங்கார மயிலாக்கி
சிறப்பாய் நடத்தும் தெய்வம்
கூறும் ஒருமொழி என்று குருவாய்ப் பணிந்த தந்தைக்கு
உபதேசம் செய்த தெய்வம்
நீறுபடுமா றெனது கோரவினைக் காடழிய
நெருப்பாய் உதித்த தெய்வம்
வேறுகதி இல்லையென வேண்டும் அடியார்கள்வினை
வேரோடு அழிக்கும் தெய்வம்
ஏறும் மயில்மீது ஏகாந்தமாய் வந்தென்
இடர் களைந்தாண்ட தெய்வம்

மாறுபடு மென்மனக் கோயிலிற் குடிகொண்ட
மகிமைமிகும் தணிகைத் தெய்வம். 4

பன்னிரு கரத்தினால் தன்னருள் வழங்கிடும்
பரம கிருபை கொண்ட தெய்வம்
மின்னிருவர் மணங்கொண்டு தன்னிரு புறத்திலும்
வைத்தணைத் தருளும் தெய்வம்
பொன்னிருக்கும் மார்புடையோன் பூரித்தெடுத் தணைக்கும்
மருகனும் முருக தெய்வம்
இன்னிரு வினைகளும் பின்தொட ராமலே
முக்திபதம் அளிக்கும் தெய்வம்
உன்னிடும் உள்ளத்தில் உபயவினை தீர்ப்பனென்று
அபயகரம் காட்டும் தெய்வம்
தன்னிரு பதத்தை என் தலைமீது வைத்து மன
தாபங்கள் தீரத்த தெய்வம்
என்னிரு கண்களில் இலங்கிடும் மணியாக
இருள்நீக்கும் ஜோதி தெய்வம்
மன்னிருக்கும் மலைகளில் மகிமைமிகும் தணிகைதனை
மனமுவந்து ஏற்ற தெய்வம். 5

பரங்குன்றம் செந்தூரும் பழநி திருவேரகமும்
பரிவுடன் அமர்ந்த தெய்வம்
திரமுடன் மலைகள் பல வாயிரம் குடிகொண்டு
திருவருள் புரியும் தெய்வம்
அரவணையோன் வாழ்ந்திடும் அழகர்மலைதனை ஆளும்
படைவீடாய்க் கொண்ட தெய்வம்
தரணிதனில் உயர் திருத்தணிகைமலை தன்னிலே
தயவுடன் தங்கும் தெய்வம்
கரங்கள் பனிரண்டினால் காத்தருள் வேனென்று
கருணையுடன் அழைக்கும் தெய்வம்
சிரங்குனிந்து பணிவார்தம் சித்தமிசை குடிகொண்டு
சிறப்புடன் காக்கும் தெய்வம்
நரர்களும் சுரர்களும் நாளும் பணிந்தேத்த
நல்வரம் அளிக்கும் தெய்வம்

சுர குஞ்சரியுடன் குறவஞ்சி குலவிடும்
சுந்தர குமார தெய்வம். 6

படியேறி வரும் அடியார் பழவினை யெலாம் தீர்த்து
பக்ஷமுடன் காக்கும் தெய்வம்
மிடியேதும் வாராமல் மிக்க அன்புடன் அடியார்
துடியாமற் காக்கும் தெய்வம்
இடியான சோதனைகள் வந்தெதிர் நின்றாலும்
இன்பமாய்ச் செய்யும் தெய்வம்
வடியாத பேரின்ப வெள்ளமாய் வந்துநம்மை
வாழ்விக்கும் கருணை தெய்வம்
கடியாது நம் தவறை காட்டிநல் வழிகாட்டி
காத்து ரக்ஷிக்கும் தெய்வம்
அடியார்க்கு வரும்துன்பம் அக்கணம் விலக்கிடும்
அருள் ஜோதியான தெய்வம்
துடியாத சித்தத்துள் தோகைமயி லேறிவந்து
துணையடிகள் வைக்கும் தெய்வம்
படியோடும் குறவர் குலக் கொடியோடும் தணிகைதனில்
குடிகொண்ட குமர தெய்வம். 7

தனக்கு நிகரில்லாத தனிப்பெருமை தெய்வம் நம்மை
தயவுடன் தாங்கும் தெய்வம்
மனக்குறை எல்லாம் நீக்கி மகிழ்வுடன் வாழ்ந்திட
மறைந்திருந்து காக்கும் தெய்வம்
தனக்கும் வினை இறக்கியே கனிவுடன்வந்துநம்
காமங்கள் தீர்க்கும் தெய்வம்
சினக்குரங்கின் ஆட்டம் அடங்கிய சிந்தையுள்
சிற்றடிகள் வைக்கும் தெய்வம்
இனக்குறவர் மகள்வள்ளி இன்பமாய் அளித்த தேன்
தினைமாவும் உண்ட தெய்வம்
சுனைக்குள் இறங்கியே சோதனைகள் பலசெய்து
சொந்தமாய் ஏற்ற தெய்வம்
வினைக்கு இடமாகிய வீணனெனை ஆட்கொண்டு

விருப்பமுடன் காக்கும் தெய்வம்

நினைக்கும் அடியாருள்ளம் நீங்காமல் வாழ்ந்திடும்
நிறை ஜோதியான தெய்வம். 8

அன்பர்கள் உள்ளமே ஆலயமாய்க் கொண்டு
அமர்ந்தருள் செய்யும் தெய்வம்
துன்பக் கண்ணீர் துடைத்து துதிக்கும் அன்பர்களுக்கு
துணையாக தோன்றும் தெய்வம்
வன்பவப் பிணிதீர்க்கும் வயித்தியனாய் வையகத்தில்
வருந்துவோர்க் குதவும் தெய்வம்
தென்பழநி திருச்செந்தூர் ஆண்டவனாம் தெய்வம்
திருத்தணிகை வாழும் தெய்வம்
என்பணிந்த ஈசற்கு இரகசியப்பொருள் உரைத்த
இளைய குருநாத தெய்வம்
முன்பசுரன்தனைவென்று மூவுலகும் காத்திட்ட
மும்மூர்த்தியான தெய்வம்
இன்பமாய்த் தன்னையே பாடுவார் உள்ளத்தில்
இட்டமுடன் வாழும் தெய்வம்
தன்பதம் பணிவார்க்கு தஞ்சம் அளித்திடும்
தணிகை கந்தப்ப தெய்வம். 9

எந்த நேரத்திலும் என்னிதயத்துள் ளிருந்து
அன்னைபோல் காக்கும் தெய்வம்
பந்த பாசங்கள் வந்து பற்றாமல் பன்னிரு
கரத்தினால் அணைக்கும் தெய்வம்
கந்தனென்று கைதொழுவார் கண் கலங்காமலே
காத்து ரக்ஷிக்கும் தெய்வம்
சந்தமுடன் அடியார்கள் புனைந்திடும் பாமாலை
சரணத்தில் ஏற்கும் தெய்வம்
வந்தனைகள் செய்து வழிபடுவார்த் துன்பமெல்லாம்

வழிமறித் தோட்டும் தெய்வம்

நிந்தனைகள் செய்வார்க்கு வந்தவினை தீர்த்து
நினைத்தவை அளிக்கும் தெய்வம்
நந்தவற்றை எண்ணாது நாளும் அறிவொளி காட்டி
ஞான அமு தூட்டும் தெய்வம்
சொந்தமுடன் அடியார்கள் போற்றும் தெய்வம் (என்)
சிந்தை குடிகொண்ட தெய்வம்.

###

உ

ஓம் சரவணபவ

ஷண்முகம் தாரகம்

உத்தர சுவாமிமலை

ஸ்ரீ ஸ்வாமி நாதாஷ்டகம்

(ஆண்டவன் பிச்சை அவர்களால் இயற்றப்பட்டது)

(1)

சைவம் தழைத்தோங்கச் சம்பந்தராய் வந்த
    ஸத்குரு ஸ்வாமி நாதனே
மைவண்ணத் தண்ணல் மால் மருகனே குஹனே
    மகாதேவர் அருள் பாலனே
தைவரும் பூசம் விசாகமுடன் கிருத்திகையும்
    ஷஷ்டியிலும் பூஜிப்பார்க்கு
நைவதறியா நல்வாழ்வும் வளங்களும்
    நற்புகழும் மாடும் மனையும்
பைவரும் கேளும் பட்டம் பதவிகளும்
    பக்ஷமுடன் தந்து காப்பாய்
வைவதற்கும் அருளை வாரி வழங்கிடும்
    வள்ளல் உனைப் போலும் உண்டோ
ஐவர் அரசாட்சி செய்த ஹஸ்தினாபுரந் தன்னில்
    அடியாரைக் காக்க வென்றோ
கைவரும் கனியாகக் கருணையுடன் வந்தமர்ந்து
    காக்ஷிதரும் ஸ்வாமி நாதனே.

(2)

குன்றங்களில் அமர்ந்து அடியார் குறை தீர்க்கும்
    குமரனே குறவள்ளி குஞ்சரிநாதனே
அன்று அயன் அகந்தையை அடக்கி அருள் செய்த
    ஐயனே ஆறுமுகனே

நின்றதோர் நெடியமலை க்ரௌஞ்சத்தைப் பொடியாக்கி
நிகரில்லா வெற்றி கொண்டாய்
வென்ற பகை அசுரனை வீழ்த்தாமல்
வீறு மிகும் சேவல் மயிலாகச் செய்து
ஒன்று அமர வாகனமாய் மயிலாக்கிச்
சேவலை என்றும் கொடியாக ஏற்றாய்
தன் தவறை யுணர்ந்துன்னைத் தஞ்சமடைந்தவரைத்
தாங்கும் தயாபரன் நீயே
இன்றடியார் இடர் களைந்து ஆட்கொள்ளவோ வந்து
இடங் கொண்டாய் சிறிய குன்றில்
மன்றதனில் நடமிடும் தந்தைக்குபதேசித்த
ஸத்குரு ஸ்வாமி நாதனே

(3)

அங்கிங் கெனாமலே அகண்ட பரிபூரணனாம்
ஐயவே ஸ்வாமி நாதா
எங்கிருந்தழைத்தாலும் ஏனென்று கேட்கும் உன்
இணையிலாக் கருணையாலே
இங்கிருந்துனை அழைக்கும் அடியார்கள் மகிழவே
இஷ்டமுடன் ஓடி வந்து
தங்கினாய் இச்சிறிய குன்றிலே வந்து நீ
தரணி எல்லாம் வியக்கவே
சங்கினால் கங்கைநீர் சந்தனம் பன்னீர் பால்
சகல அபிஷேகம் செய்து
பொங்கிடும் அன்பினால் பொன்னடி போற்றிஉன்
புனித திரு நாமங்கள் கூறி
மங்கிடா மன மலரும் மணமிகும் நறுமலரும்
மலரடிக்கர்ச்சித்துப் போற்றி
உங்கிருபைக்கிலக்கானோர் புண்ணியமென் சொல்வேன்
உத்தர குருமலை ஸ்வாமி நாதனே

(4)

பழனி மலை ஸ்வாமி மலை தணிகை மலை விராலி மலை
பார் புகழும் மலைகளெல்லாம்
தொழவரும்உன் னடியார்கள் துன்பமெல்லாம் தீர்த்து
ஆண்டருளும் அப்பன் உன்னை
அழகிய சிறு குன்றில் ஆலயம் அமைத்திங்கே
அருள்புரிய அழைத்தாரோ
கிழவடிவம் கொண்டு குறவள்ளி தனை ஏற்றதுபோல்
இங்காரைக் காக்க வந்தாய்
கழல் பணித்துன் புகழ்பாடிக் கசிந்து கண்ணீர் பெருகிக்
கதறுமடியார்க் கெளியன் நீ
விழலுக்கு நீர் பாய்ச்சி வீண் நாள் கழித்த
இப்பேதைக்கருள் செய்வையோ
குழலிசைக்குள் கோபாலன் கொஞ்சிக் குலாவிடும்
குமர குருபர முருகனே
தழல் விழியோன் தந்தைக்குத் தத்துவப் பொருளுரைத்த
சரவணபவ ஸ்வாமி நாதனே

(5)

காமனைச் சுட்டெரித்த கனல் விழியில் தோன்றியும்
கருணை மழை பெய்யும் முகிலே
மாமனைப் போலழகும் ஆற்றலும் கொண்ட அரக்கர்
ஆணவமழித்த குஹனே
சோமனைத் தரித்தவர்க்கோர் சொல்லால் மறைபொருளைப்
போதித்த குருநாதனே
பூமகள் திலகமாம் டில்லி மாநகரத்தில்
பொற் கோயில் அமைத்து உன்னை
நேமமுடன் ஸ்தாபித்து நித்திய வழிபாடுகள்
நிற்காமல் நடந்து வரவும்

தேமதுரத் திருப்புகழும் தேவாரமும் பாடித்
தினமும் உன் சன்னதி தன்னில்
சாமகானத்துடன் சதுர்மறைகள் கோஷிக்க
ஸஹஸ்ர நாமங்களைக் கூறி
கோமள சரணத்தில் அர்ச்சிக்க அருள் செய்து
ஆட்கொள்ளும் ஸ்வாமி நாதனே.

(6)

அண்டமெல்லாம் நடுங்க அட்டூழியம் செய்து
அரசாண்ட சூரபத்மன்
பண்டமரர் வாழ்வழித்துப் பலகொடுமைகள் புரிந்து
பரிதவித்திடச் செய்யவும்
தண்டனிட்டுத் தேவரெல்லாம் தாள்பணிந்து வேண்டிடவும்
தயவுடன் கைலை நாதர்
மண்டலமெலாம் காக்க மதிமுகம் ஐந்துடன்
அதோமுகமும் கொண்டு பரமன்
கண்டவரெல்லாம் வியக்கத் கருணையுடன் தன்
நெற்றிக் கண்ணில் அறுபொறிகள் சிந்த
துண்டப் பொறி ஆறும் கனல் காற்றும் கொண்டேகி
கங்கையில் சேர்க்க அங்கவளும் தாங்காமல்
புண்டரிக மலர் பூக்கும் சரவணத்தில் கொண்டுவிட
பொற்குழந்தை ஆறாய் அவதரித்த ஸ்வாமிநாதா.

(7)

குமரன் அவதரித்த குதூகலச் செய்தியை
இமயமலைச் செல்விக்கு அறிவித்துப் பரமன்
தமது மகனைக் காணத் தாயுடன் சென்றங்கு
தாதிமார் அறுவர்களும் தாலாட்டிப் பாலூட்டும்
கமலமுகக் குழந்தைகளைக் கண்டுமையும் சேர்த்தணைக்க
முகமாறும் உடல் ஒன்றாய் உருக்கொண்ட ஷண்முகனே
அமரரெல்லாம் வந்து அடிபணிந்து போற்றி செய்து

தமது துயர் தீர்த்தென்று தாங்கொணா மகிழ்வடைய
சமரில் அசுரரை வென்று அமரருக்கு வாழ்வளித்து
அமரர்கோன் திருமகளைஅன்புடன் மணம்புரிந்து
நிமிர முடியா கூனற் கிழவனாய்த் தினைப்புனத்தில்
குறச்சிறுமி தனைமணந்து குன்றமெல்லாம் குடிகொண்டு
நமனை உதைத்தவர்க்கு நான்மறைப் பொருள்கூறி
நமஸ்ரியா தகத்தை கொண்ட நான்முகனைக் கண்டித்து
உமதடியார்க்கருள் புரிய உத்தர குரு மலையில்
உளமகிழ்ந்து வந்தமர்ந்த ஸ்வாமி நாதனே சரணம்.

(8)

வெற்றி வேலும் மயிலும் பொற்சேவற் கொடியும்
உன் சிற்றடியும் தண்டை சிலம்பும்
நெற்றிக் கண்ணர்க்கு மறைபோதித்த செவ்வாயும்
நிகரில்லா நாசி அழகும்
சுற்றிய பட்டாடை சோபிக்கும் இடையழகும்
சூரனை வென்ற புஜமும்
பற்றிய பாவங்கள் தீர்த்தருளும் பாலிக்குள்
மலர் விழிகள் வீசும் ஒளியும்
மற்றிதற்கோர் உவமை இல்லை என்றொளிரும்
நெற்றியும் மாசற்ற கன்னத்தழகும்
நற்றிருப்புகழ் பாடிப் பணிந்திடும் பக்தர் குறை
கேட்டருளும் திருச்செவிகளும்
முற்றிலும் தமை மறந்துன்னடி போற்றும்
அன்பர்களை அழைத்தருளும் அபயகரமும்
கற்றறியாப் பேதைக்கும் காட்டிய நின் கருணைக்குக்
கைமாறு ஏது ஸ்வாமிநாத தயாநிதியே

தணிகைக் கலிவெண்பா

இயற்றியவர்
ஆண்டவன் பிச்சை

1953

உ

கணபதி துணை

தணிகைக் கலிவெண்பா

1. சீர்மேவு தென்தணிகைத் தேவாநின் பொன்னடியில்
ஆறாத அன்போ டணிமாலைத் - தாரகனைப்
2. பன்னிரண்டு தோள் மீது பாங்குடனே சூடி நீ
என் வினைகள் தீர்த்தென்னை ஏன்றருள்வாய் அன்னியர்
போல்
3. எண்ணி எளியேனை ஏனென்று கேளாயேல்
மண்ணில் நின் தண்ணருட்கு மாண்பேது? விண்ணுலகில்
4. வானோர் துயர் தீர்த்து வாழ்வளித்தா வையகத்தில்
நானோர் படும்பாடு நன் கறிந்தும் - மனோக்கி
5. வள்ளி மணவாளா! வாயால் ஒரு வார்த்தை
உள்ளங் குளிர உரையாயோ! - துள்ளியே
6. ஆடுமயி லேறி அடியார் துயர் தீர்க்க
ஓடிவரு வாயென் றுரைத்த தெலாம் வாடியே
7. நொந்தயர்ந்த பேதைக்கிங் கில்லையோ நுன் கருணை!
வந்தார்க் கருளும் வழக்கிலையோ! - 'கந்தனே'
8. என்றொருகால் உள்ளம் இளகி அழைப்பார்க்குக்
கன்றுக் கிரங்குகின்ற கற்றா நீ! - இன்றுனது
9. சன்னிதியில் நின்று சரணமென் றோலமிடும்
என் துயரம் தீர்த்தலுனக் கேனரிது? - மின்னிருவர்
10. தாய்மார் அருகிருந்தும் தண்ணருள் காட்டென்றுரைக்க
வாய்திற வாததென்ன வஞ்சனையோ! - சேயழுதால்
11. கண்டு களிக்கின்ற தாயுண்டோ காசினியில்
பண்டு செய்த பாவப் பலன் ஈதோ! - கொண்டு
12. குலம் பேசல் போலக் குலையவைத் தென்னை
அலக்கழித் தாட்டல் அழகோ! - கலக்கும்
13. வினை தீர்க்க வேலிலையோ வேளை தவறாமல்

உனையோத ஏனோ உணரேன் - தினையோடு
14. தேனும் பரிந்தளித்த தேவி குறமகளோ
டானந்த மாயிருக்கும் அற்றமோ! - கோனுன்
15. குறிப்பறியேன் குற்றம் பலசெய் கொடியேன்
மறித்தும் பிறவா வழிசொல் - வறிதே
16. பிறந்தும் இறந்தும் பெருந்துன்பங் கோடல்
மறந்தேன் நான் நீயும் மறந்தாய் - துறந்தார்க்
17. கருள் செய்யும் ஐயா! அறமுணராப் பாவிக்
கிருளகல இன்னருளை ஈந்து - மருள் நீக்கி
18. ஞானமய இன்பத்தை நல்கியே பாழ்செயுமஞ்
ஞானமய தொந்தம் நலிவித்து - ஞான
19. வரிடிவாய் அடியார்கள் உள்ளத்தே வாழும்
அடிமா மலர் காட்டி ஆள்வாய் - படி மீதில்
20. பத்தர்க் கிரங்கும் பரம தயாளனென்
றெத்திக்கும் போற்றி செயும் என் அரசே - முத்தி
21. வழிசொல் குருவாய் வணங்குவோர் நோயை
விழியால் தொலைக்கின்ற வீரா! - மொழிவாய்
22. "சரவணப வா" வைச் சதா ஜெபிப் பாய் நீ
மரணபயம் இல்லை மகிழ்வாய் - தரணிதனில்
23. மற்றுமோர் ஜென்மமிலை மாதா வயிற்றுச்
சுற்றுகின்ற துன்பத் தொடர்பில்லை"- என்று
24. திருவடியென் சென்னிமிசைச் சேர்த்த அருளைக்
குருவேநீ ஏன் மறந்தாய் கூறாய் - இருவினைகள்
25. இல்லை யென்றே என்னை நீ ஏமாற்றி இன்றென்னைத்
தொல்லை வினைகள் சுடவைத்தாய் - சொல்லதனைக்
26. காக்கக் கடனிலேயோ காக்குங் கருணையெங்கே
தாக்கி வினையழிக்கத் தாமதமேன்! - ஏக்கமுற்றே
27. அல்லும் பகலுநான் ஆதரிப்பாய் என்றலறும்
சொல்லுன் திருச்செவியில் தோய்விலையோ! மல்லுக்கு
28. நின்ற பகைவனையும் நேர்நின்று காத்தளித்த
உன்றன் அருளெங் கொளித்ததுவோ! - அன்றொருநாள்

29. மூவரும் ஒன்றாய் முருகென் றவதரித்துத்
தேவர் துயர் தீர்த்தாண்ட தேசிகனே! - ஆவலுடன்
30. ஓடிவந்தேன் உன் தணிகை ஊரில் மலையேறிப்
பாடிப் பணிந்தேன் பதமலர்கள் - நாடியே
31. வந்தபயம் என்றவர்க்கு வாயா லொருவார்த்தை
சிந்தை களிகூரச் செப்பாயோ! - கந்தா
32. கடம்பா! கதிர்வேலா! கார்த்திகையின் பாலா!
தடந்தோள்கள் என்சொல் தரிக்கும் -இடமா
33. மணநாளில் நீபூண்டு மண் விண் வியக்க
குணங்கெட்டேற் கன்பு கொடுத்தாய் - கணமும்
34. மறப்பேனோ உன் நாமம் மாணடிகள் போற்றித்
துறப்பேன் நான் தொல்லை உடல் இச்சையறவை
35. மயிலேறும் மாமணியே! மண்மேலே என்னைத்
தயிரிற் சுழல்மத்து தானும் - வெயிலிற்
36. புழுவெனவும் நோயிற் புடைத்திடுதல் நன்றோ
வழுவில் கருணை வழக்கோ - குழவி
37. அழுகுரலைக் கேட்டும் அணையாத் தாய் உண்டோ
தழுவி அபயந்தா ராயோ - பரமா!
38. முருகா என உருகும் மோகப் பெண் வள்ளி
ஒருநாள் கரமழிக்க உன்னை - அருகழைக்கக்
39. கைதந்து காத்துக் கணவன் மனம்திருத்தி
நைந்தாட் கன்றருளும் நண்பினையும்-மெய்வெந்து
40. தாபமும் சாபமும் தாங்கிநின்ற கீரனுக்கு
ஆபத் தெலாந்தீர்த்த அன்பினையும் - கோபத்தால்
41. கோபுரத்தி னின்றும் குதித்த அருணகிரி
சோபையுடன் பாடச் சுகமளித்தும் - மாபதத்தைத்
42. தீதிங் கடியாரைத் தாங்குநின் தண்ணருள்தான்
இந்த ஒரு பேதைக் கிலையோசொல் - வந்தெதிர்த்த
43. சூரன் அகந்தீர்த்துச் சொல்லரிய வாழ்வளித்த
தீரம் மறைந்ததுவோ செப்பாய் நீ! - கூரம்பு

44. பட்ட பறவையெனப் பாடுபடும் என்னை நீ
இட்டமுடன் காத்தல் இழிவாமோ! - நட்டமரம்
45.காய்த்துப் பழுத்தால் கறிகுக்குதவா தென்றதனைச்
சாய்த்து விழ வெட்டுவதும் சம்மதமோ!-வாய்த்துள்ள
46. நல்ல தருணம் நலமடைய வரவென்று
சொல்லத் தயங்குவதேன் சோதியே!-அல்லலுற்று
47. நீயே துணையென்று நித்தம் உனைப் போற்றும்
நாயேன் பிழைகளை நீ நாடாது-தாய்போல்
48. கனிந்தன் புடனழைத்துக் கால்காட்டி என்றன்
அவித்யமாம் வாழ்வொழித்தே ஆள்வாய்-சனித்தபயன்
49.தந்தடிமை முத்திபெறத் தாரகமாம் மந்திரத்தை
அந்தமுடன் ஏழைக்கருள் புரிந்து-பந்தமுடன்
50. பாசமலை அகற்றிப் பற்றும் பழநினைவுகள்
நாசமுற நானென்னும் பேயழியப் - பேசரிய
51. பேரின்பப் பேறளித்துப் பேசா அநுபூதி
வாரிதியில் ஆழ்த்தி வரந்தந்து - யாரிடத்தும்
52. அன்பும் பணிவும் அகம்புறமொன் றாய்விளங்கி
உன்புகழைப் பாட உகந்தருள்வாய் - தன்
53. எண்ணா இறைவா எளியேனுக் கிவ்வரத்தை
அண்ணா அருள்புரிய வேண்டுமெனப் புண்ணாலே
54. எண்ணா துரைத்த எளியேன் பிழை பொறுத்துக் கண்ணா
அருள்வாய் கனிந்து.

ஶ்ரீ

1951 ம் ஆண்டு திருத்தணியில் வள்ளித் திருமணத்தின் போது நடந்த ஷஷ்டி மாலை அரங்கேற்றம்.

1.சில முக்கியமான குறிப்புகள்

ஸ்ரீ கைல்யாத்திரையில் நிகழ்ந்த அப்பா முதல் சம்பவம் (ஷஷ்டி பூர்த்தி) திருப்புகழ் பணியை கண்டது. 48 - ஆம் வருடம் மார்ச் 6 ம் தேதி.

2. ஆர்ட் அடாக் வந்ததுமே நடுவில் வைகாசி பூர்ணமை தினம் +

3. கல்பகம் வீட்டில் வைத்யத்துக்காக (டாக்டர் காப்டன் க்ருஷ்ணஸ்வாமி) மைலாபூரில் ப்ருந்தாவனத்துக்கு அவள் அப்பா அனுப்பினார். 1949 ம் ஆண்டு ஜனவரி கடைசியில் அந்த சமயத்தில் தான் வினாயகரையும் ஷண்முகரையும் மயிலுடன் தரிசித்து முருகன் செய்த அற்புத திருவிளையாடல் செய்தது (மயில் இறகை ஒன்றன் பின் ஒன்றாய் பிச்சியின் மேல எரிந்து அண்ணனுடன் மறைந்த காக்ஷி (பிப்ரவரி முதலில் என்று நினைவுப் சிவராத்ரிக்கு முன் திருப்புகழ் மணி வீட்டிற்கு சென்றதும் அங்கு நிகழ்ந்த அதிசயமும் (குருதரிசனம்).

4. ஏப்ரல் மாதம் 1949 கல்பகம் வீட்டிலிருந்து 64 ப்ராடீஸ் ரோட்டில் உள்ள செல்லம்மாவின் சின்னவீட்டிற்கு கணபதியுடன்

குடிபோனது ஜூனில் கணபதி கல்யாணம் நடந்தது. அதன் பின் பவழக்காரர் தெரு வீட்டில் வரலஷ்மி பூஜைக்காக (தஸ நோன்புக்காக) வந்து அங்கேயே தங்கிவிட்டது. பின் (ஆகஸ்டில் வீடு திரும்பியது).

5. செப்டம்பர் 9ம் தேதி காயத்ரி ஜபத்துக்கு காலையில் பூஜை அறையில் கோலமிட்டு விளக்கேற்றி விட்டு திரும்பியது. எதிரில் 4-மாதத்துக்கு முன் மறைந்த பகவான் ரமணர் எதிரில் அற்புத தரிசனமளித்து பாம கருணையுடன் காயத்ரி மஹா மந்திரத்தை உபதேசித்து மறைந்தஉடன் (பிச்சி) அப்படியே மூர்ச்சையடைந்து பூஜை ரூமிலேயே மூன்று நாள் (ரமணர் தரிசனம் வெள்ளிக்கிழமை தெளிவடைந்தது ஞாயிறு வழக்கப்படி பக்தர்களுடன் ஸ்ரீ திருப்புகழ் மணி வந்து பார்த்து கந்தர் அனுபூதியை எல்லோருமாய் சேர்ந்து பாடி சமாதி நிலையிருந்து தெளிவடையும் போது பகவான் ரமணர் உபதேசித்த ஷஷ்டி மாலை ஸ்தோத்திரத்தை சொல்லிக் கொண்டே எழுந்து எல்லோரையும் வணங்கியது நினைவற்ற நிலையில் கூறிய ஸ்லோகங்களை எல்லாம் விடாமல் எழுதிய ஸ்ரீ குருமணி அவர்கள் உடனே அதைப்ரெஸ்க்கு கொடுத்து அடுத்து வந்த (அக்டோபரில் வந்த கந்த ஷஷ்டிக்கு முக்கியமான முருகன் க்ஷேத்ரத்துக்கெல்லாம் கொடுத்தனுப்பி தணிகைக்கு தானே வந்து

நேரில் கந்த ஷஷ்டியன்று வழக்கப்படி 1008 சங்காபிஷேகம் செய்து விட்டு உடனே சென்னைக்கு வந்து மறுநாள் அவர் வழக்கமாய் பஜனை செய்யும் பூக்கடை சிவா விஷ்ணு கோயிலான சென்னை கேசவப் பெருமாள் ஆலயத்தில் தேவயானைத் திருக்கல்யாணம் ரொம்ப பெரிய அளவில் மிகச் சிறப்புடன் நடத்தினார். ஷஷ்டி ஆரம்பத்துக்கே நான் பாலாம்பிகை பட்டம்மாவுடன் தணிகைக்குப் போய் 6-நாள் உலக சிந்தனையின்றி தினம் ரமணருடைய உபதேசமான மஹா காயத்ரி மந்த்ர ஸாரமான ஷஷ்டி பாஸயை காஸ 6-முறை மாலை 6-முறைப் படித்து மறுநாள் (முக்கியமான குறிப்பு அந்த கந்த ஷஷ்டியன்றுதான் பகவான் முருகன் பஞ்சாமிருதம் கொடுத்தது ஆறுதினங்கள் பட்ட பட்டினி என்று அப்பா சாமி குருக்கள் இந்த பஞ்சாமிருதம் உன்னிடம் கொடுக்க சொல்லி சொன்னார் என்று அந்த நிர்வாண குழந்தை பஞ்சாம்ருதக் கிண்ணத்தை என்னிடம் கொடுத்து விட்டு கண்ணாமாயமாய் ஓடிவிட்டது முருகா. அதன் பின் நிகழ்ந்த அற்புதங்கள் முருகன் அருள் விளையாடல்களை மனித மனதில் நினைக்கவே முடியாதது அபிஷேக அலங்காரம் அர்ச்சனை எல்லாம் முடிந்து இரவு 10-மணிக்கு மலை மேல் முதல் பெரிய ப்ராகாரத்தைச் சுற்றி வந்து கோபுர வாசலில் சூரஸம்ஹாரம் செய்து மயில் சேவலாய் மாறி வந்த சூரனை மயில் வாகனமாகவும் சேவலை கொடியாகவும் ஏந்தி முருகன் ஜெயகோஷத்துடன்

வெற்றி நடையிட்டு நடனமாடிக் கொண்டதாய் தகப்பன் சன்னதி முன் வந்து வணங்கும் போது புஷ்ப வர்ஷம் பொழிந்து பிள்ளையை வரவேற்கும் காக்ஷி காணக் கண்ணாயிரம் வேண்டும்.அதன் பின் பெற்றோர் பிள்ளைக்கு யுத்த உடைகளை அணிந்து மங்கள நீராட்டி பீதாம்பர முடித்தி ஹார்கேயூர குண்டல கடகங்களை பாதுகாத்து ஆப்ரதமஸ்தக பரிலந்த வைர கிரீடம் அணிவித்து பெரிய விமானத்தில் நடுவில் பிள்ளையுடன் ப்ரம்ம முஹுர்த்தத்தில் நடக்கும் தெய்வயானை திருமணத்துக்கு தேவேந்தரலோகமே பூலோகத்து வந்து விட்ட மாதிரி பதினெட்டு வாத்ய கோஷத்துடன் அளவற்ற சீர் வரிகளுடன் தேவசேனாவுக்கு சர்வா பரண பூஷிதையா ஸ்வர்ண பீதாம்ப முடித்து முத்துக்கொண்டையிட்டு வைர ஜடை நாகம் ஜொலிக்க மாப்பிள்ளை முருகனையும் சிவன் பார்வதியையும் பிரியமாய் வரவேற்று மணமக்களை மாலை மாற்றச் சொல்லி சுபலக்னத்தில் சூர்யோத சமயத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்து மற்ற சுப சடங்குகளும் செய்து தேவதைகள் எல்லாரையும் முன்னிட்டுக் கொண்டு தேவேந்த்ரனும் இந்திராணியும் இந்த்ர குமாரியை மங்கல மனைக்கு கொண்டு விட்டு தேவர்கள் ஐராவதத்தை பெண்ணுக்கு சீதனமாய் கொடுத்து விட்டு சூரன் கொடுமை நீங்கி சொர்கலோகம் கிடைத்து ஆண்டவனையே மருமகனாய் பெற்ற ஆனந்தத்திலும் பெண்ணைப் பிரியமனமின்றி தங்கி தங்கி

திரும்பி பார்த்து காக்ஷ் உண்மையில் ப்ரத்யக்ஷமாய் நடக்கும் காக்ஷியாய் இருந்தது. அன்று தாங்களும் முருகன் கல்யாண அருள் ப்ரஸாதத்தை சாப்பிட்டு விட்டு முருகனை மூலஸ்தானத்தில் போய் தரிசித்து உத்தரவு பெற்றுக் கொண்டு திரும்பும் போது சாமிநாத குருக்கள் எதிரில் வந்து ஆறு நாள் அன்னமின்றி தவம் செய்து முருகன் திருமணக்கோலத்தையும் கண்டு ஆறாதித்த உங்கள் பாக்யம் நீங்கள் இயற்றிய ஷஷ்டி மாலை திருப்புகழ் மணி இங்கு நேற்று எங்களுக்கெலலாம் கொடுத்துவிட்டு போனார். ஆறு நாள்கள் நீங்கள் அதை தான் படித்தீர்கள் அந்த ஸ்தோத்ரத்தின் மகிமை அபாரம் இந்த (பக்கத்தில் வினயமுடன் நின்றிருந்த கோயில் மேளக்காரன் குப்பன், தேவயானை திருமண உச்சவ சிலவு முழுவதையும் 1000 தானே ஏற்று பாண்டு வாத்யம் வாண வேடிக்கை முதல் சிறப்புகளுடன் புஷ்ப விமானத்துக்கு 500 ரூபாய் புஷ்பம் காஞ்சிபுரத்திலிருந்து அலங்காரம் ஆட்களையும் வரவழைத்து ரொம்ப அற்புதமாய் நடத்தி விட்டார். அம்மா அவர்கள் பக்தியையும் அந்த புஸ்தகத்தின் ஒவ்வொரு பாட்டும் என் மனதை கரைத்து அந்த ஆனந்தத்தில் பூ மாலைக்கெல்லாம் சிறந்த பாமாலை ஆண்டாள் மாதிரி அம்மா முருகனுக்கு வாடா மலர் மாலையாய் என்றும் தெய்வ மணம் வீசும் தேவலோக பாரிஜாத மலர்மாலையாய் சூட்டி இருக்கிறீர்கள். இந்த மாலை எல்லாம் ஒரு நாள் தான் சிறப்பு அழகு வாசனை உங்கள்

தரிசனம் கண்டது. முருகனையே கண்ட மாதிரி இருக்கிறதென்று நெடுஞ்சாண் கடையாய் விழுந்து வணங்கினான் அந்த பரம பக்த சிரோமணி குப்பன் இந்த பன்னாடையை பகவானே க்ஷமிக்க வேண்டும்.

அந்த காக்ஷியை வர்ணித்து எழுதியதுதான் முருகன் மும்மணிக்கோவை என்ற சிறிய புத்தகம் முருகா சரணம்.

திருத்தணிகை
மும்மணிக்கோவை

ஆண்டவன் பிச்சை

1953

உ

ஓம் சரவணபவ

முருகா சரணம்

திருத்தணிகை மும்மணிக்கோவை

காப்பு

வாழைதேமா பலவின் கனியுடன்
பேழை வயிற்றுப் பெருமான் தனக்கு
எள்பொரியுண்டை இளநீர் பால் தயிர்
எதிரில் வைத்து இருகரங் கூப்பி
பன்மலர்த்தூவி பாதம் பணிந்து
அகிற் புகையூட்டி அணி விளக்கேற்றி
சூடமெரித்து சூழ்வலம் வந்து
நாத நமோவென நாவாற் துதித்து
உள்ளங் குழைய உரை தடுமாற
மெய் விதிர் விதிர்க்க மேனி சிலிர்த்திட
கந்தன் பணியும் கணபதி போற்றி
விக்கினம் நீக்கும் விநாயக போற்றி
குஞ்சர முகத்துக் குருவே போற்றி
என்றே பலப்பல பாடிப்பரவி
அடியார்க் கருளும் அறுமுகன் புகழாம்
தணிகை மும்மணிக் கோவைபாட
அருள் வாக்களித்து அருந்துணையாக
உள்ளத்திருந்து உதவி புரிந்திட
அன்னையப்பா ஆனை முகனே
உன்தாள் பணிந்தேன் காப்பாய் கணபதி

2

கணபதிக் கிளையவன் கார்த்திகைத் திருமகன்
வணங்குவோர் வினைதீர்க்கும் வள்ளீசன் குணங்கெட்ட
நாய்க்கும் கடைபட்ட பேதைக்கும் தன்னருள்
வாய்க்கும் வாவென்றழைத் தான் விரும்பி.

3

விரும்பி அழைத்து இரும்பினும் வலி தாம் மனதுருக்கி
கரும்பினும் இனிதாம் கருணை அமுதம் தந்தவனே
அரும்பில் அழகும் மணமும் உண்டோ ஆண்டவனே
துரும்பில் சிறியேன் தனக்கும் அளித்தாய் உன்னடிகள்.

4

அடியார் இருவினை பொடி செய்திடவே
கதிர்வேல் ஏந்திய கார்த்திகைப் பெருமான்
இருபுறம் தேவியர் இன்மொழி கூற
பச்சைமயிலும் பரிவுடன் ஆட
கொடிமேல் குக்குடம் கூவியழைக்க
வருக வருகவென முகமன் கூறி
வாரணத்தோனும் வந்தெதிர்கொள்ள
அரஹர முருகா என்றடியார்கள்
அரற்றிடும் ஓசை அண்டம் அதிர
வரும் அடியார்களை வாவென்றழைத்து
வரமளித்தருளும் வள்ளல் முருகன்
அல்லும் பகலும் அணையாச் சுடராய்க்
காக்ஷியளித்தும் கருணை புரிந்து
துன்பப்படுவோர் எங்கே இருப்பினும்
தோன்றாத் துணையாய் தோன்றும் குமரன்
எண்ணும் அடியார் இதயத் திருப்போன்
திருப்புகழ் கேட்கும் விருப்புடை கடவுள்
மறுபிறப்பில்லா வரந் தரும் தெய்வம்
அனைவருங்காண அடிமைக் கருள்தந்
தாட்கொண்டருளிய அற்புதம் என்னே.

5

என்னே அதிசய மென்றெல்லோரும் வியக்க
மின்னோர் வாழ்க்கையில் எனைகாத்தான் அன்னே
அப்பா என்னையப்பா வென்றார்க்கருள் புரிய
இப்பாரில் நின்றான் தணிகைக் குன்றில்.

6

குன்றம் எடுத்து ஆனிரை காத்தவன் மாமருகன்
என்றும் அடியார்க் கருளும் மருமகன் உமைபாலன்
நன்றும் தீதும் அறியா நாயிற் கடையனுக்கு
கன்றுங்கிரங்கும் ஆவைப்போல கனிந்தருள் தந்தானே.

7

தானே தனக்கு நிகராய் விளங்கி
வானோர் வணங்கும் தணிகைப் பதியில்
கயிலைநாதன் களிப்புடன் வந்து நந்தி ஆற்றின் கரைமேலிருந்து
மைந்தன் குருவாய் ஒரு பொருளுரைக்க
மகிழ்வுடன் கேட்டு மனதிலிருத்தி ஓங்காரப் பொருள் உரைத்த மகனைப்
பிரியா திருக்கும் பெருமையுடைத்தாய்
தணியாப் பிணியும் சினமும் தணிக்கும் தாபமும் பாபமும் காமக்ரோதமும்
கணத்தில் தணிக்கும் தணிகே என்றே
பல்லோர் வாழ்த்திப் பணியும் தணிகையில்
மூவிரு முகமும் முன்னான்கு விழியும்
கருணைத் தடத்தில் பூத்த கமலமாய்
நீறணி நெற்றியும் நீண்ட புருவமும்
குமிழ்போல் நாசியும் குழையணிச் செவிகளும்
அடியார் முறை கேட்டருளும் அழகும்
இளநகை யுடன்மறை புகலும் செவ்வாய்
ஆறிரு தோளும் அகன்ற மார்பில்
மலர்ந்த கடம்பின் மாலை புரளவும்
பன்னிரு கரத்தில் பல்வகை ஆயுதம்
ஏந்திடும் எழிலும் ஏதுமில் வீரமும்
வெற்றிவேலும் வீறுடைச் சேவலும்
அடியார்க் கருளும் அபய கரங்களும்
அருள் ஒளிவீசும் திருவடி மலர்களும்
ஆடும்பரிமே லேறும் அழகும்

எழில்மிகு தேவியர் இருபுறத்திலங்க
தணிகைமலை மேல் தயவுடனிருந்து
பிறவிச்சிறையில் இருவினை விலங்கில்
பேதுறும் மக்கள் பெருந்துயர் தீர்த்தும்
அன்பர் பாடலில் அகமகிழ்ந் துருகியும்
துதிப்பவர் துன்பங்கள் தீர்த்தருள் செய்தும்
என்றும் அழியா இன்பம் தந்திட
குன்றில் நின்று கூவியழைத்தும்
அவமாய்ப் பிறந்து அழிவுறும் மக்கள்
பவநோய் தீர்ந்திடப் பரம்பொருள் குகனாய்
தணிகாசலத்திற் கணியாய் விளங்கி
பணிவார்க் கருளும் பரிசைக் கேளீர்

8

கேளீர் வினை தீர்ப்பான் கேளாது அருள் தருவான்
தோளீராறுடையான் துணைநிற்பான் தாளீந்து
தாபத்ரயங்களைத் தணிப்பான் தணிகேசன்
பூப்பதம் உண்டே புகல்,

9

புகலறியாது சதுர்மறையோனும் சிறை பட்டான்
அகமறியாது அகத்துறை ஆண்டவன் அறுமுகவன்
ஜகமதில் அடியார்க்கருள் தரும் மருகன் திருவடிமுன்
பகலவன் முன் பனிபோல் இருவினை மறைத்ததுவே.

10

மறையறியா ஒரு பொருளுரை செய்தவன்
கறை மிடற்றண்ணல் கண்ணில் உதித்தோன்
திருத்தணிகாசலம் உறையும் இறைவன்
வருமடியார்க்கருள் வழங்கிடும் முருகன்
பாவப்படுகுழி ~~வீழா தன்பரைக்~~ விழாது அன்பரைக்
காவல் புரியும் கருணைக் கடவுள்
நில்லா உடலில் நெஞ்சகத்திருந்து
எல்லாப் பொருளுங் கூறும் குருபரன்
மும்மல மொழிக்கும் முதல்வன் முருகன்

அம்மைக்கினிய அறுமுகப்பெருமான்
ஐம்புலன் வென்றவர் அகத்துள் காண்பவன்
பைம்புனல் சூடிய பரமன் பாலகன்
தாளைப் பணியும் தவமுடையோரை
வேளையறிந்து காக்கும் கந்தன்
உருவாய் குருவாய் உலகில் வருவான்
அருவாய் அகத்துள் அருளமு தளிப்பான்
காக்கும் வேலைக் கரத்தினி லேந்தி
தாக்கும் வினைகளைத் தடுத்தாட் கொள்வான்.

11

வான் நோக்கி வாழும் பயிர் போல் முருகா நின்
கானோக்கி வாழுங் கடையேன் நான் பான்மறந்த
குழவிபோலெங்கும் குறிப்பறிந்து எனையாரத்
தழுவி அருளமுதம் தந்தாய் தணிகையிலே.

12

தணிகை என்று கேட்டவுடன் தணிகுதம்மா அருள்தாகம்
தணிகை மலை கண்டவுடன் தணிந்த திருவினைத் தாபம்
தணிகையப்பன் திருவடிகள் கண்டவுடன் ஆணவமும்
தணிந்து பணித்தேற்றி தன்னை மறந்ததம்மா.

13

அம்மா என்றழைத்து அருகில்வரும் கன்றுக்கு
ஆவைப்போல் அருள்சுரந்து அடியாரைக் காத்திடுவான்
பிறவிகள் தோறும் செய்தவினை தீர்த்து
இறைவா மருந்தளிக்கும் இறைவன் தணிகேசன்
உள்ளங்கரைந் துருகி அழைப்பா ரகத்தினிலே
வள்ளியுடன் வந்து வாழ்த்தி அருள் தருவான்
நானற்றுப் போனவர்க்கு தானே நானாகி நின்று
நானற்ற நல்வாழ்வில் நாளும் களிக்க வைப்பான்
தஞ்சமென்ற அன்பருக்கு தாண்மலரைத் தந்துதவி
அஞ்சலென்று ஆதரிக்கும் அருட்பெரும் ஜோதியவன்
தனிக்கருணைப் பெருங்கடலாய் கனிந்த அருட்கனி ரஸமாய்

உண்டவர்கள் உள்ளமெல்லாம் ஓயாமல் சிந்திக்கும்
கண்டவர்கள் கருத்தெல்லாம் கரும்பின் சுவை ஊறும்
பார்த்த மனமெல்லாம் பாதமலர் மணம் வீசும்
சேர்த்தணைக்கும் சிந்தையர்க்குச் சிவபோகம் தந்தருளும்
காதலிப்பார் நெஞ்சத்தில் காதலுடன் வந்திருந்து
பாதமலர் வைத்தருளும் பரம தயாபரனாம்
ஊன் உடல் உள்ளம் உயிர் ஒக்கக் கலந்திருப்பான்
நான் என்ற ஆணவத்தைக் கொல்லும் கூர்வடிவேலன்
நாடும் அடியார்க்கு நலமளிக்கும் நாதனவன்
வாடும் என் உள்ளத்தில் வந்து நின்றான் ஷண்முகனாய்

14

ஷண்முகனைக் காண பண்ணிய தவமதோ
உன்முகமாய்க் காணும் உயர்பொருளை பெண்பேதை
என்று உலகமெல்லாம் இகழ்ந்தாலும் எதிர்வந்து
நன்று நன்றெனக் கேட்டான் நயந்து.

15

தயத்திலும் பயத்திலும் நமன் வந்தால் விடுவானோ
கயத்தினால் கட்டி கழுத்திற் சுருக்கிட்டு
பயத்தினாற் பற்கிட்டும் போதார் துணைசெய்வார்
ஜெயஜெய முருகா என்றேத்திப் பணிவாயே.

16

பணிவாய் மனமே பணிவாய் மனமே
தணிகாசலனைத் தாயினும் அன்பனை
பணிவாய் மனமே பணிவாய் மனமே
பிறவிப் பெருங்கடல் கடத்தும் கலமாய்
பெருமான் திருவடி தருவான் பணிவாய்
கலங்கிடும் ஜீவக்கலன் கரை சேரக்
கலங்கரை விளக்காய் அருள் ஒளி காட்டுவான்
அறுபகை சூழ்ந்து ஒருவனை வாட்டும்
பெரும்பயம் தீர்க்கும் பெருமான் முருகன்

பாசப்படு குழி வீழ்ந்துழல் அடிமையை
நேசத்துடன் எடுத்து அணைத்தான் அருளால்
ஐம்புலக் காட்டில் அலைந்த பேதையை
அஞ்சலென்றாண்ட அருட்பெருஞ் ஜோதி
இருவினை விலங்கில் கிடந்து மயங்கிய
பெருந்துயர் தீர்த்த பேரருளாளன்
மூவரும் ஓர் உருவாகிய முருகன்
தேவர்களுக்கரியதாகிய தெய்வம்
பாடும் அடியவர் பவம் தீர்த்திடவே
பார்மிசை தணிகா சலந்தனில் வந்து
பேய்பிணி பாதகம் பெருந்துய ரெல்லாம்
மாய்த்திடும் மருந்தாய் மலைமேல் இருந்து
கலியுக வரதன் காக்ஷிக் கெளியோன்
நலியும் பேதைக் கருள் செய் தாண்டான்
பன்னெடு நாளாய் படும் துயர் தீர்த்தான்
என்னே அவனருள் என்னே அவனருள்.

17

அருளால் அண்டமெல்லாம் ஆளும் வேலரசன்
பொருளான தொன்றை போதித்தான் இருளாம்
வாழ்வில் ஒளிகாட்டி வல்வினை வேரறுத்து
ஆழ்வித்தான் ஆநந்தக் கடலில்.

18

கடலில் துயின்றோன் கயிலைநாதன் கமலத்தோன் அறியா
தடந்தோள் ஈராறுடையான் தணிகைக் குருநாதன்
படருங் கொடிக்கு பசுமரமாயென பவம் தீர்த்தான்
உடலே கோயில் உருகாண் அங்கென்றருள் செய்தான்.

19

செய்யத்தாமரை நாணும் சேவடி
வையகத்தில் வைத்தான் அருளால்
அல்லும் பகலும் அருந்தவமிருப்பார்

சொல்லி காணும் சூக்ஷ்ம மந்திரம்
நாமங்கூறி நாமேல் நடப்போர்
காமங்கடக்கக் கருத்தில் துணையால்
ஐவாய் வழியே அலையும் மனத்தை
மெய்வாய் வழியே மேலேற்றிடுவான்
பேராசையெனும் பெரும்பிணி தீர்த்து
மாறாயின்றம் அருளும் ஆண்டவன்
எண் குணபரனாய் எங்கும் இருப்பான்
உண்முகம் நோக்கில் ஒளிவீசிடுவான்
கடலும் சுவற மலையும் தூள்பட
சுடர்வே லெறிந்த சூரஸம்ஹாரன்
கொதித்தெழும் அரக்கர் மிதிபட நடமிடும்
அதி திறல் மயில்மேல் அமரும் பெருமான்
ஆழி அலைபோல் சூழ்ந்த அவுணரைக்
கோழிக் கொடியால் அடக்கிய திறலோன்
அபயம் என்றடிபணிந் தரற்றிடும் அன்பரை
உபயதமளித்து உயர்த்திடும் வானவன்
காலன் கயிறும் கன்மவிலங்கும்
வேலன் அடியார்க்கென்றும் இல்லை
ஐவர் ஆக்ஷியும் அறு பகைக்கொடுமையும்
கைவேல் என்றால் கலங்கி நடுங்கிடும்
அடங்காதாடும் ஆணவப்பேயும்
படமெடுத்தாடும் பாம்புமன மும்
முருகாவென்று மூவெழுத்துரைத்தால்
உருக்காட்டாது ஓடிப்போமே
சீர்மிகுந் தணிகையில் சிறப்புடன் இருந்து
காத்திடும் வேலைக் கரமதிற் கொண்டவன்
ஆடும் மயில்மேல் அமரும் அழகன்
ஆரா இன்னமுதாய் அடியார்க்கு
தீராவினைகள் தீர்க்கும் முருகன்
வகையறியாது வெய்யகத் தடியார்

பகைபல சூழ பரிதவித்தலறி
    சரவண பவனே சரணமென் றழைக்க
கரமதில் வேலுடன் காக்ஷியளித்து
    காட்டாக் கருணைக் காட்டி அருளி
தாட்டாமரைகள் தன்னெழில் காட்டி
    சஷ்டி மாலையை இஷ்டமாய் அணிந்து
த்வாதச மலையும் தயவுடன் தரித்து
    அக்ஷரமாலையை அழகுடன் சூடியும்
அஷ்டகம் தன்னை இஷ்டமாய்க் கேட்டும்
    திருமண நாளில் குறமகள் மகிழ
இருபுயந் தன்னில் அருமையாயணிந்து
    ஜெய ஜெய வென்றடியார்கள் போற்றிட
தேவியர் சூழத் திருமலை வலமாய்
    வாத்தியகோஷம் வானைப் பிளக்க
அணிவிளக் காயிரம் சுடரொளி வீச
    பயந்த பேதையை பரிவுடன் அழைத்து
நெஞ்சார அருள் வடிவங்காட்டி
    இருவினை அகற்றி வரும்பிறப் பொழித்து
    பெரும் பேரளித்தான் குருபரமூர்த்தி

20

மூர்த்தி தலம் தீர்த்தமிவை மூன்றும் சிறந்ததுவாய்
ஆர்த்திகளுக்கருள்புரியும் அறுமுகன்தன் சீர்திகழும்
தணிகைத் திருப்பதியில் திருவடிகள் காட்டியே
பணியவைத் தான் என்னைப் பரிந்து.

21

பரிமயில்மீது விரைவுட னோடிப் பாரெல்லாம்
திரிந்தவன் ஒரு மாங்கனிக்காய் வெகுண்டு தென்பழநி
கிரிதனில் நின்றவன் சினமது தணிந்த தணிகையிலே
கழிமுகன் அருளால் குறமகள் அணைத்தான் குடிவந்தான்.

22

குடிவந்தான் என்னகத்தில் குறை எல்லாந் தவிர்த்தான்
அடிபணியவைத்தென்னை ஆட்கொண்ட அண்ணல்
குற்றமே காணும் கொடுமை மிகும் உலகின்
பற்றறுத்து பாதமலர் பரிந்தளித்த பரமன்
அடியார்க்கருள் தரும் ஆறுமுகப் பெருமான்
வடிவேலுடன் தோன்றிவல் வினைகள் தீர்த்தான்
ஆட்டி வைத்த ஐவரையும் ஆட்டிவைத்தா னகத்தில்
பாயும் புலிபோன்ற பயங்கர ஆணவத்தை
மாயும்படி மலர்கரத்தில் வேல் தொட்டான்
அறுபகைப்புதர் மண்டி அறிவு கிணர்தூர
திருவருளாற் றேண்டியருளம் நீர் சுரக்க வைத்தான்
மனமெனும் இருளகத்தில் மதிச் சுடர் ஏந்தி
தனதடிகள் காட்டியது தணிகை என்று வந்தான்.

23

வந்தான் அகத்தினிலே வகையறியாப் பேதைக்கு
தந்தான் தன்னருளை தயவாலே நேர்ந்தார்க்கு
இறங்கி அருள் தரும் ஏழை பங்காளனவன்
குறமகளோடு குடிகொண்டான் நெஞ்சில்

24

நெஞ்சறியாது வஞ்சித்தோம் என்றிரு மாந்து
பஞ்சமாப் பாதகம் செய்தப்பாவி என் பவம் தீர்த்து
அஞ்சல் என்றருள் செய்தான் வியந்திடவே
தஞ்சமளித்தான் தணிகைப் பதியின் தயாபரனே.

25

தயவெனும் அலைமோதும் தண்கருணைக் கடலனையான்
மயிலேறும் மலரடியான் மாமதி போல் குளிர் முகத்தான்
பாவிப்பார் உள்ளத்தில் பாதமலர் எழில்காட்டி
ஆவிக் கருந்துணையாய் ஆதரவு காட்டிடுவான்
தன்னை மறந்தார்க்கு தாளிணைகள் காட்டியே

அன்னையினும் பன்மடங்கு அன்பு செய்யும் ஆண்டவனும்
பூசிப்பார் புன்மையெல்லாம் பொடியாக்கும் புனிதனவன்
நேசிப்பார் நெஞ்சத்துள் நின்று அருள் செய்திடுவான்
ஒருகால் முருகா என்றழைப்பார் முன்னோடி வந்து
இருகாலும் காட்டி இரக்ஷிக்கும் அருள் தெய்வம்
திருப்புகழ் பாடும் அடியார் திருவுளத்தில்
விருப்பமுடன் வீற்றிருக்கும் வேலாயுதப் பெருமான்
ஆடும்பிரான் தந்த ஆறுமுகக் கடவுள்
பாடுகின்ற பண்புணர்ந்து பரிசளிக்கும் வித்தகனாம்
உள்ளுருகி அழைப்பார்க்கு உள்ளிருக்கும் உறவினனாம்
எள்ளுக்குள் எண்ணெயைப் போல் எங்கும் நிறைந்திருப்பான்
மணியுள் ஒளிபோலும் மலரின் மணம்போலும்
பணியும் மெய்யன்பருக்கருள் பரவி நிற்கும் பரஞ்சுடராம்
அன்பால் அகம் குழைந்து அழைப் பார்க்கருகிருந்து
துன்பமெல்லாம் தீர்த்தருளத் தோகைமயில் மேல் வருவான்

26

மயிலேறும் மாமணியை அயிலேந்தும் ஆண்டவனைக்
குயில்போற் குரலுடையான் குறத்தி நாயகனை
வயல்சூழும் திருத்தணிகை மாமலையில் தரித்த பேர்களுக்கு
இருவினையும் மாய்ந்து இன்பவீடெய்தும்.

27

வீடளித்து ஆளும் வேலவன் நாடாம் தணிகையிலே
காடகத்தாடும் கயிலைநாதன் அருள் பெற்றான்
ஆடகலோகத்த முதினும் இனியான் அறுமுகவன்
நாடக மாடிய விந்தை என்சொல் வதென்றறியேனே.

28

அறியாமையாற் செய்த ஆயிரம் பிழைகளும்
குறியாது ஆட்கொண்ட குமரகுருபரன்
பாவிஎன்றெண்ணாது பக்ஷமுடன் அழைத்து
கேவிப்பாய் என்று அருட்சேவடிகள் காட்டினான்
ஏசி இகழ்ந் துரைக்கும் ஈனஜென்மம் எடுத்து
கூசிக்குலைந்தவளைக் கூசாது ஆட்கொண்டான்

ஈசன் எழுத்தெல்லாம் இல்லாதழித்து விட்டான்
மாசெல்லாந் துடைத்து மலரடிகள் காட்டினான்
பன்னெடுநாள் பட்ட துன்பம் தீர்ந் தன்புடனே
பொன்னெழுத்தா லென்னகத்தில் பொறித்தான் தன்
திருநாமம்
இகழ்ச்சி புகழ்ச்சி எல்லாம் இல்லையுனக் கென்றுரைத்தான்
அகத்துள்ளே ஆநந்தத்தேன் பாய அருள்செய்தான்
பேசா மொழியில் பேசி மகிழ்வித்தான்
ஆசாரம் பேசுவார் அறியார் எனை என்றான்
அன்பறிய ஆட்டிவைத்தேன் அறிந்தேன் அடிமை உள்ளம்
துன்பமெல்லாம் நன்மைக்கே தூண்டிவிட்டேன் அன்பின்
ஆழம் அறிந்திடவே தாழவைத்து அருள் செய்தேன்
வாழவைத்தேன் வையகத்தார் வாழா வகையுன்னை
ஆட்டி வைத்த வல்வினையை ஓட்டி விட்டேன் உன்னை
பூட்டி வைத்தென்னையுள்ளே காட்டுங் கருணையினால்
செய்ததெல்லம் நன்மைக்கே தீமையென்று எண்ணாதே
மெய்தவத்தோர் காணாமேனி கண்டாயருளாலே
அகிலமெல்லாமறிய ஆட்டிவைத்தேன் வாழ்வினிலே
மகிழ்ந்திடுவாய் இனி என்றும் மாறாத இன்ப மென்றான்
ஜென்மம் எடுத்தபயன் பெற்றாய் இனியுனக்கு
கன்மத் தொடர்பில்லை கருபுகுதல் இல்லை என்று
கொஞ்சி அருகில் வந்து பஞ்சாம்ருதம் தந்து
தஞ்சமளித் தேழைக்கு அருள்தந்தான் தணிகேசன்

29

கேசம் முதல் பாதாந்தம் வீசும் பரஞ்சுடரை
பாசமற்றார் பார்க்கும் பரம்பொருளை நேசமில்லார்
நெஞ்சத்தில் காணா நித்திய பராபரன்
அஞ்சல் அஞ்சல் என்று அபய மளித்தான் அடிமைக்கு

30

அடியார்க்கடியான் அறுமுகப் பெருமான் அயில்வேலன்

வடியாக் கருணைக் கடலான் வள்ளியின் மணவாளன்
குடிகொள் தணிகை மலைமேல் படியாய்க் கிடந்தாலும்
முடி மீதிருகையுங் கூப்பியே மூவரும் வாழ்த்துவரே.

31

ஆறுமுகமும் அருள்விழிகள் பன்னிரண்டும்
வீறுடைய தோளும் வேலும் கூறுடைய
தேவியரும் மாமயிலும் சேவலும் சிந்திப்பார்
பாவியராயினும் பரகதி எய்துவார்.

ஓம் சாந்தி ஓம் சரவண பவ ஷண்முகம் தாரகம்.

ஓம் சரவண பவ

முருகா சரணம்

தேனாறு பாலாறாய் அருள் அருவி பெருகி வரும்
திருத்தணிகை மலைமீது உலாவிடும் கருணைமுகில்

ஆனா அமுதமாய் அடியார்க்கு அரும் பொருளாய்
மானார் விழிக் குறத்தி மகிழ்ந்தணைக்கும் அழகனாய்

ஊனாரும் உடலுக்குள் உயிராய்த் திகழ்ந்திருந்து
தானாரென்றறிவித்து தடுத்தாளும் சத்குருவை

வானாடுகாத்தமரர் வாழ்வுபெற அருள் செய்த
கோனாம் குமரனை என்சொல்லி வாழ்த்துவமோ.

ஓம் சரவணபவ :

ஆறு படைவீடு யாத்திரைக் கும்மி

1. ஆறுமுகன் வாழும் ஆறு திருப்பதி
ஆர்வமுடன் சென்று காண வென்றே
ஆறுபத்து மூவர் நாயன்மார் போலவே
அடியார் திருக்கூட்டம் சேர்ந்தனராம்.

2. வடிவேலன் வாழ்ந்திடும் பதிதோறும் சென்றுமே
அடிபோற்ற ஆவல் மிகுந் தடியார்
படிமீதி லெங்கினும் பக்தி பெருகிட
சடுதியில் ஓர்வழி கண்டன ராம்.

3. சென்னை நகரம் தன்னிலிருந் தன்பர்
சேர்ந்தொன்றாய் கூடிய் மகிழ்வுடனே
அன்னைபோல் அன்பு மிகுந்தவராம் பாண
அருள் பணியால் ஒன்று கூடினராம்.

4. புகைவண்டி யேறியே அடியாரெல்லாங் கூடி
வகை வகையாய்ப் புகழ்பாடிக் கொண்டு
தகைமையாம் பாணித் தலைமையில் மகிழ்வுடன்
சுகமாக ஒன்றாகச் சேர்ந்தன ராம்.

5. மதுரையைக் கண்டு மகிழ்ந் தனராம் தேவி
பதுமமலர்த் தாள் பணிந்தன ராம்.
விதிதொழும் பாதன் வாழும் பரங்கிரி
பதிதன்னைக் கண்டு பணிந்தன ராம்.

6. மாலும் மருகனும் மகிழ்ந்து வாழும் திருச்
சோலைமலை தன்னைக் கண்டனராம்

வேலுக்குடையவன் காலுக் கடிமையாய்
வாழவரம் வேண்டிக் கேட்டனராம்.

7. செந்திற் பதி தன்னைக் கண்டனராம் - அவர்
சிந்தை துயரெல்லாம் விண்டனராம்
வந்தவர்க் கில்லை யென்னாது வழங்கிடும்
வள்ளலைப் பாடி மகிழ்ந்தனராம்.

8. பழனியைக் கண்டு பரவசமாய் தங்கள்
பழவினை எல்லாங் கழுவின ராம்
தொழு தடி வாரத் திருந்து மேலேரிநா
தழுதழுக்கப் போற்றி செய்தனராம்.

9. வயலூர் விராலிமலை தன்னில் வாழ்ந்திடும்
அயில்வே லரசனைக் கண்டனராம்
நயமுடன் திருச்சிராப் பள்ளி ஸ்ரீ ரங்கமும்
ஜெயஜெய வென்று போய் போற்றினராம்.

10. ஆனைக்காவைக் கண்டு ஆனந்த மாகவே
வானை யெட்டும் மலைக்கோட்டை தன்னில்
பானை வயிற்றுக் கணபதியைக் காண
மானைப்போ லோடிப் பணிந்தனராம்.

11. ஸ்வாமி மலை தன்னைக் கண்டனராம்
ஸ்வானுபவங் கொண்டு நின்றனராம்
பூமி புகழ் திருவேரக நாதனை
போற்றிப் பணிந்தருள் பெற்றனராம்.

12. தணிகையை வந்து அடைந்தனராம் செய்
தவ மெல்லாம் கைவரப் பெற்றனராம்
பணிந்து பணிந்தகம் மகிழ்ந்தனராம் அவன்
பாதமலர்ப் பாடி போற்றினராம்.

13. ஆறுத்திருப்பதி சென்று வந்தோம் உந்தன்
ஆறுமுகத் தருள் கண்டு வந்தோம்
ஆருமறியாத ஆண்டவனே உன்னை
ஆறெழுத்துள்ளே அறிந்து விட்டோம்.

14. எங்கும் நிறைந்துள்ள ஈசனைப் பங்கிட்டு
அங்கிங் கென்று வைத்த தாரறிவார்
மங்கும் மதியுள்ள மானிடர் உய்யவே
மாமயிலோன் வழி காட்டி விட்டான்.

15. பாடினோம் போற்றினோம் பக்தரெல்லாம் கூடி யொன்றாய்
கூடினோம் கும்பிட்டோம் கோஷமிட்டோம்
நாடி அவன் பாதம் தேடிச் சென்றுமகிழ்ந்
தாடிப்பாடிப் போற்றி செய்தோம்.

16. அன்பர்கள் எல்லோரும் ஆறுமுகன் புகழ்
அன்பாகப் பாடிப் பரவசமாய்
அன்பா லுருகிடும் ஆண்டவனைக் கண்டு
அன்பாகப் பாடிப் பணிந்திடுவோம்.

மங்களம்.

ஆண்டவன் பிச்சை.




அன்றே என்னாவியுனக்கர்ப்பணம் செய்துவிட்டேன்
இன்றே உனக்களிப்பேன் - என்னருந் தெய்வமே
வென்றே வினை இரண்டும் வேனை யெல்லாம் தீர்த்தாய்
உன் தாள் மலர்களென் உள்ளத்தில் கொண்டேனே



With Swami Sivananda
at Rishikesh Ashram



With Swami Chidananda



The Bala Murugan she worshipped



With husband Sri Narasimha Sastry

A short Biography

Andavan Pichai, also known as Andavan Pichi and Andavananda Mataji, was a modern day saint composer, whose songs, hymns, sayings, shlokas, have been sung by many, discoursed by many and inspired many. At the tender age of ten, she was divinely inspired to sing in praise of Lord Muruga (Kartikeya). Even though she never went to school and was taught only Tamil at home, the songs that poured out of her were in Sanskrit, Tamil, Telugu and Kannada. She was a simple, gentle, serene soul, who lived life with detached attachment, the ideal expressed in Hindu scriptures, and touched all the lives she came into contact with. Even after her Samadhi in 1990, her devotion to God expressed in her songs continue to touch many.

Birth: Born in the year 1899 on September 6th in Chennai, India, her birth was considered auspicious by her uncle Venkatasubbiyer and father Sankaranarayana Sastri. Both brothers were lawyers of very high standing and devoutly religious and scholarly.

(* A short note on her father, Sri Sankaranarayana Sastri – he was the author of "The Age of Sankara", "Bhoja Charitram" and other works. He was well versed in Sanskrit and wasVeda nipuna. He wrote The Age of Sankara after a dedicated and intensive research of twenty years. The book is currently in its third edition with the blessings of Sri Jayendra Saraswathi.)

At the time of her birth, Venkatasubbiyer received an emerald idol of Devi Maragathavalli from the Venkatagiri Raja. Having a premonition, he named the little girl Maragathavalli. It was not surprising therefore, that she had an abundance of Devi Kataksham (Blessings) in the form of Kalpagavalli,

Sharada, Rajarajeshwari, Kamakshi and Vaishnavi and sang their praises in a state of trance.

Childhood: Valli was tutored along with her other siblings at home. Valli would often slip away and gaze with forlorn hope at she knew not what. She was dubbed affectionately with the appellation 'Nirakshara Kukshi', meaning a soul without knowledge of even the alphabets, by her father.

Nearing 10, made an object of ridicule by her kith and kin, for she spoke with a lisp, the child Valli looked in mute desperation at her father - a well-renowned national poet, famous for such poetic gems as 'Vande Mataram Ambikam Bhagavatim' and other scholarly works like Bhoja Charitram, The Age of Sankara etc. - trying to express the emotions churning in her heart.

One night, Valli went to bed, an aching prayer in her heart. The next morning, she got up with great purpose and went to stand beside her father. Surprised, he asked her gently, "Do you want to tell me something?" Valli nodded, closed her eyes and recited a poem, the gist of which went: "The One did become many; Creates, preserves, and annihilates; That which is beyond the reach of the Vedas, and stands Alone, such Parabrahman do I, Maragathavalli bow down to with both hands joined together in prayer that my speech may become poetry singing His praises."

Sankaranarayana Sastri gazed in thunderstruck amazement at her rhetoric and knowledge. "Where did you come by this knowledge?" he asked. She recounted how Payyan (Lord Muruga) came to her and asked her to put out her tongue and wrote OM upon it with His spear. He then sat beside her and blessed her with divine knowledge enabling her to find the

nectar of the reality of wisdom. She lost her baby-like lisp and was able to sing His praises.

An amateurish rendering of what she divined from one of her songs:

> "Diving in the deep sea with much trouble a pearl is found,
> Diving in the sea of wisdom, I found a pearl named Muruga.
> Will the five senses surround me and take him away?
> Will the illusion of life, the big stealer take him away?
> Will the destructive ego snatch at him while no one is watching?
> Will the uncontrolled mind snap at him and take him away?
> Let that Murugan himself come and guard this pearl I have found.
> Just like jewels are locked in a box
> So should this Murugan be locked within me."

This set Maragathavalli on a path of inspired writing about her devotion to God in His various forms: Krishna, Shiva, Devi, Muruga and so on. Nothing could stem the flow of this tide once started – not marital status, nor children, nor household bonds. The quintessence of the above poem ruled the way she lived. She performed her karmas, but always kept a part of herself away, in a detached corner, reserved for her devotion to God.

Re-birth or transformation: She got married at the tender age of 9 and went to her husband, Sri Narasimha Sastry's house when she attained puberty, as was the wont in those days. Her husband, a lawyer by profession, was considerably older than her. She performed all her duties diligently, but the inner core

of her was always dedicated to Lord Muruga and she would fall in a trance every now and then, and forget the whole world as she sang in praise of her Lord even at the moment of giving birth to her 5th child. She was 24 then and Lord Muruga once again wrote Om on her tongue and blessed her with the same Shadakshara mantra which she received at the age if 10.

She was asked by the elders in the house to desist from singing the Lord's praises at all odd hours, for it could bring nothing but denigration for the family. In the world she lived in, a woman was always in the background. Since she showed a marked inclination towards spirituality, there were many who soon became her followers, which did not accord well with the conservative ideas of the time.

She was freed of the promise she made to the elders by a near-death experience, when she suffered a heart attack in 1948. She either had astral projection, or was semi-comatose, and watched her own body lying there and was reluctant to enter it again, for to be born a female with such divine vision had brought her nothing but trouble. In her own words she wrote that Lord Muruga and Lord Ganapthy came to free her from her dilemma. The Lord assured her that the soul was neither male nor female and that it was His wish that she should sing his praises again. She re-entered her body again. After nearly dying, she came to again, and faced an even more uphill battle to make people in her orbit accept her wish to escape from the mundane world to the world of Spirituality.

In a lot of respects, she was like Meera Bai, a being thrust into the role of a wife and a mother and grandmother on the one hand, and a being whose supernal longing had a strong hold on her. As a mother she witnessed the ultimate tragedy of losing two of her children when they were barely 7 and 8 and another

one under very tragic circumstances. As a divine being, her longing to be with Lord Muruga was her savior and perhaps an escape from being torn by the emotional entanglements of day-to-day existence. Thus Maragathavalli called Maththa by her kith and kin, and Thathima as she was fondly called by her grandchildren, easily adorned the mantle of Andavan Pichai – the universal mother figure who was a gift from God to her devotees.

Sanyasa: In the year 1953, circumstances, a prodding from within and a calling from beyond space and time led her to the steps of the Divine Life Center in Rishikesh. Sensing her innate divinity, Swami Sivananda set her on a path of privation and rigorous duties. He initiated her in the 'Shadakshara Mantra' as Bala Murugan did when she was nine and asked her to do Purascharana (recite one crore mantras) in Kaivalya guha (literal meaning - a cave, but here it denotes the cave of wisdom). Nothing deterred her from the path she had set upon – not meager food, cold weather, insufficient clothing, nor her humble surroundings. She answered but to the call of Muruga, who kept urging her to come and get Him. One day, she could ignore the voices no longer and her footsteps led her to an opening above the cave, where she came upon the idol of Bala Murugan. Followed a colloquy, where the voice of Muruga asked her what had kept her so long. He further adjured her to establish Him in a suitable place. The idol was consecrated by Maragathavalli's own hands in the music hall at the Divine Life Center, where she offered worship daily.

Her husband, Sri Narashimha Sastry and her children were naturally upset by this and requested Swamiji to send her back. Swamiji acceded and told Maragathavalli that she needed to go back.

In 1954, just before she left, she was given 'Deeksha' by Swamiji and became a sanyasi. When she asked how she could live the life of the householder now that she was a sanyasi, Swamiji told her husband also to take Apad Sanyasa and called him Swami Murugananda.

Maragathavalli came to be called 'Andavan Pichai'. There was nothing new in this name, since Sankaracharya Chandreshekhara Saraswati had already bestowed the name on her. Also, since she was mad for the love of her Lord, she used to decry herself as 'Pichi' for 'Andavan' – i.e. crazy for God. Indeed, Lord Kartikeya himself called her by that name. She was also known as 'Andavananda Mataji' in Rishikesh Ashram.

Miracles in her life: Her life was peppered with many miracles. To name a few:

The very first miracle was at the age of 10 when the Lord wrote upon her tongue and set her on her divine journey.

The second major miracle was when He came to her in her comatose state and freed her from her promise and joyfully started to sing His praises again.

The third miracle was the Krishna Leela songs which had come pouring out of her in Vaishnavi Temple, and she was waiting to offer to Lord Krishna at the Radha Krishna temple in Mathura. As she stood in line in the crowd with her notebook in her hand to reach the altar, a monkey snatched the book and ran away. A little distraught, she awaited her turn at the altar. When at last she neared the altar, the monkey came back and threw the book back at her. Amazed, she picked it up and saw

it intact. She offered her Krishna Leela in 18 songs to the Lord.

The fourth miracle happened in the presence of Sringeri Swamigal when she went into an alt and songs on Devi Sharada poured out of her and blood poured from the crown of her head.

The fifth miracle took place in 1950, when she visited Tiruvannamalai. However, when she arrived at the temple, the temple priests had already closed the gates for the day. She and a few other people travelling with her said they would peep through the grill and leave. When they were near the Devi temple, they saw a charming young boy who called himself 'Dandapani' (another name for Muruga) told them that he would perform the archana for them. Once he had performed the puja, everyone started leaving. The little boy caught hold of Andavan Pichai's had and took her to Lord Muruga's sanctum and told her many stories and then said: 'I have brought you to light.' The next day, when Andavan Pichai's group told the priests about the boy who took them inside the temple and performed the puja, they laughed and said that was not possible since they had the keys with them.

Other than these divine visions, she also worked in miraculous ways for the health and good of many people. In 1960, her granddaughter was stricken with polio in New Delhi. Andavan Pichai knew with her inner wisdom and prayed that whatever had happened to her granddaughter should fall upon her. On that same night, the child sat up and was on the road to recovery, and Andavan Pichai lost mobility in one leg till she became a Jeevan Mukta and attained union with her Lord.

Her philosophy: She believed in the unity of God and hence sang in praise of not only Muruga, but also Rama, Krishna, Devi and others, for she believed they were all one and the same. She inspired one by her actions and words to have simple devotion towards God in whatever form, for that was the way to salvation in Kali Yuga. She extolled the virtues of singing and getting immersed in Bhakti with bhajans and shlokas.

Her Works: Andavan Pichai's life can best be gleaned and gauged through her songs. They take many forms: Andadis, pathikams, Sathakams, Shlokas, Namavalis, Kannigals, Anubhuthis, Alankarams, Mummani Kovais, Kshethra Kovais, Murugan Pillai Tamil, Murugan Thirupalliizyaichi, Tiru-arutpavai, Kali-venba, Kirtanai, Kavadichindu and Kummis. A list of books published by T.T. Pani, E.K. Vemban, Sri Raja Rajeswari Press, Andavan Pichai Bhajan Mandali and others is as follows:

1. Sashtimala, Kumarashtagam, Sadakshara Mantra Japa and other shlokas.
2. Shanmukha Raksha Bandhanam, Chendur Subramanya Suprapadam, Shadakshara Ashtotram, Madurai Meenakshi Navaratiri Strotiramala.
3. Murugan Arutpavai, Tirupalli-izyaichi.
4. Thanigai Mummani Kovai.
5. Kumaragurupara Pillai Tamizh.
6. Thanigai Kali-venba.
7. Kanchi Perival Shodasamala Stuti –Kirtanai.

8. Srimad Bhagwad Gita Bodham.

9. Nanganallur Sri Rajarajeshwari Stotiramala

10. Shadadara Dwachakra Kirtanai.
11. Sri Rajarajeshwari Navamani Mala.
12. Panchamuga Anjaneya Stuti.
13. Sri Vaishnavi Devi Bhajanavali.
14. Sri Vaishnavi Arutpugazh mala.
15. Sri Vaishnavi Anugraha Manimala.
16. Sri Vaishnavi Vaibhava Kummi.
17. Karpagambika Sathakam.
18. Nataraja Pancharatna Kirtanai. 1/5 P. 319
19. Subramanya Dwadasamala Kirtanai.
20. Sri Sadguru Sivananda Puja Aksharamala.
21. Stotramala Kirtanai – notations by Pallavi Mahalinga Iyer.
22. Arupadai Veedu Tirupugazh Padikam.
23. Tiruthanigesan Idayanjali.
24. Tirumayilai Kapali, Karpagambal Isaimala.
25. Madurai Sri Meenakshi Sundereswara Stuti Isaimala.
26. Sri Subramanya Stotra Ratnamala.
27. Stuti Kathambam.
28. 'Gift of God' – compiled by Smt. Radha and Sri Krishna Rao.
29. 'Yen Pichi Anen" – in Tamil, compiled by Smt. Kamakshi Kuppuswamy.

In the Rajarajeshwari Stotramala, each song begins with a dedication to a shloka from Lalitha Sahasranamam, which depicts the various Chakras. The songs on Devi Sharada poured out of her in the presence of Sringeri Shankaracharya,

nine in all, each one a beautiful rendering of poetry, music and rhythm, the alliteration simply flowing.

The Kanchi Kamakshi kirtanais, Sharada Kirtanamala: about 50 in all came together with musical notations in 'Kirtanamala' in the year 1961, with forewords by Kanchi Shankaracharya, Sringeri Shankaracharya, and Prof. Sambamurthy.

Her songs: She sang on all deities on different occasions, but felt closest to Muruga, especially, Bala Murugan. She sang his praises as a fond mother would to a delightful child. One such song is 'Ullam Urugudaiya Muruga,' made famous by Sri T.M. Sounderarajan, and engraved for eternity on a stone slab in Kalikamba temple in Chennai (Ullam Urugudada Muruga as sung by Mataji). 'Kalmari Adiya Karanam yedaiya?" – what is the reason for your lifting the right leg instead of the left and dancing, she asks Lord Shiva.

Other artists who have been rendering some of the songs are, Smt. Sudha Raghunathan who has sung 'Kalmari adiya kanakasabesa un mel' in raga Bekada, Sri Maharajapuram V. Santanam who has sung 'Pahi Pahi Sarade' in raga Kalyani. Smt. Vasanta Kokilam has sung the song 'Pithan endralum...' in raga Bhimplas/Aberi, Smt. D.K.Pattamal has sung 'He Kamakshi' and many more young artists like the California sisters have rendered some kritis.

The Andavan Pichai Bhajan Mandali, started by her daughter, Smt. Kamakshi Kuppuswamy, has been bringing about a set of her songs every year during their annual day. While her mother did put tunes for many of her kritis, more than 80% of the songs have been composed by Kamakshi Kuppuswamy. Herself a Sangeetha Shironmani from Delhi University, having got her diploma under the tutelage of Prof. V.V. Shadagopan,

she got the blessings of her mother to bring out the songs, so that many may sing them for generations to come. The melody and appropriate ragas chosen by Kamakshi Kuppuswamy, keeping the mood of the song in mind, have made these songs popular. "Nee Manamirangi Varuvai", a varnam in raga Latangi, which she composed for Smt. Kalanidhi Narayanan, has become very popular among dancers. Priyadarshini Govind , Sangeetha and many other dancers have started dancing to this varnam. Andavan Pichai's great granddaughter Preeti Vinayak has choreographed dance for the songs 'Ada Payindradu', and varnams in Ramapriya and Vachaspati.

Some of her Shlokas for the redemption of mankind:

Kumarashtakam
Vaishnavi Kavacham
Shashti kavacham
Devi Dhyana stotram
Lalitha stotram
Mahalakshmi stotram

Testimonials:

She was an ardent devotee of God. Sri Chandrashekarendra Saraswati (Shankaracharya) called her 'Thennattu Meera' (Meera of the South). Bhavan's Journal summed her up beautifully as a 'God intoxicated soul'.

Swami Chidananda said of her, "We have in Amma a living proof that man is a soul encased in a body, and not the body itself." He further said:

'Andavan Pichai Mataji was a rare and priceless gem among devotion filled bhaktas of her generation. Her heart was the

abode of surpassing devotion which can only be compared with the love intoxicated devotion of the bygone Tamil mystics and sages of South India. Andavan Pichai Mataji was a rare spiritual phenomenon. Her personality constituted a manifestation of a divine 'Bhava'. She was divinely graced right from her young age. Lord Muruga was a living reality to her."

Swami Sivananda said in a letter to her in June 1954: "Your life is an eye opener to the sceptic and an inspiration to all Bhaktas. My only prayer to the Lord is that he should grant to you all health and long life so that thousands may walk in your spiritual light."

SriSri Muralidhara Swamiji summed up her contribution to the safety of India thus:

"In 1962 Indo-China war took place. At that time, Andavan Pitchai, a great devotee of Lord Muruga who lived in Chennai (Tamil Nadu, India), composed a 'sthotra' – 'Shanmukha Raksha Bandhanam' – on Lord Muruga for the Nation's victory in the war."

Similarly, in 1965 when Indo-Pakistan war began, Singapparaja, a Brigadier in the Indian Army, approached Sri Kanchi Maha Periyava for his blessings. Sri Maha Periyava instructed him to meet with Andavan Pitchai. So, Singapparaja had darshan of Andavan Pitchai and prayed to her for the victory of the Indian Army in the war. At this time, Andavan Pitchai had a wonderful vision. In it she saw Ambal moving in a golden chariot drawn by devas and protecting our beloved border. She immediately wrote a 'Sthotra' – 'Kali Kavacham'. Kali Kavacham was printed in tens of thousands and distributed to all."

Both the Shanmukha Raksha Bandhanam and Kali Kavacham saved many a life in the two wars. Such was the greatness of Sri Andavan Pichai, as perceived by Sri Kanchi Periyava who summed up the Mahans of our nation thus:

"All the Mahans who incarnated in our Bharata Desa have always treated love for the Nation and love of God as one and the same. Our Mahans have at one time labored for the freedom of our Country. It is only the Grace of Mahans which is always protecting our country."

Freed from birth-re-birth cycle: It is not doing justice to the divine essence that Mataji's life was to compress it within a space of a few words, nor in her biographies, 'The Gift of God' in English, and 'Yen Pichi Anen' in Tamil. The glory that her life was, a life spent in service and devotion to God, giving her devotees in simple terms the essence of the 'Truth' shine through her songs forever. When the time came for her to leave her mortal coil, she suffered briefly as though in expiation for her 'poorva janma (previous births) karmas' and has been freed from the birth-rebirth cycle.

Her treatise on **'Atmabodham'** (Self-knowledge) is an affirmation of this. It is also evident in the songs on Rajarajeshwari, each song describing the chakra or stage at which the soul is resting, ultimately reaching the **Dwadashantam Chakra**, where everything is bliss. 'Anandam' yenna solven!": 'How do I describe this bliss?' wherein she mentions having achieved the ultimate state of bliss. She also explicitly stated this in the following Prathanai (prayer):

ப்ராத்தனை :

பாமாலை பூமாலை பரந்தாமனுக்கு ஆடிக்கொடுத்தாள்
ஆண்டாள் ஆனந்தமாக

பாமாலைகையால் அலங்கரித்து பால முருகனை பாடி
மகிழ்ந்தாள் ஆண்டவன் பிச்சி

காமாலை கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள் நிறம்
போல் காணும் பொருளெல்லாம் பிச்சிக்கு முருகனே

ஏமாற்மாட்டான் பிச்சி யமதர்மராஜனிடம் ஏற்றுகொண்டான்
முருகன் அண்ணையாகித் திருவடியில் ×

திருவடியில் இடமளித்து இனி பிறவா வரமளித்து இரு
வினை விலங்கறுத்து இதயத்தில் ஒளி காட்டி

குரு க்ருபா கடாக்ஷமென்றும் ஞனாக்னியால் ஒரு
கணத்தில் கோடி ஜன்மம் செய்த பாவங்கள் பஸ்மமாக
செய்தான் பரமதயாளன்

(Translation: Garlands of flowers in the form of songs did Andal give with joy to Paranthaman

With garlands of songs on Bala Murugan Andavan Pichi

Just like everything looks yellow to a person with jaundiced eyes, for Pichi every object looks like Murugan

He will not cheat Pichi in Yama Dharmarajan's presence – and took me for his mother at his feet

Granting me place at His feet, freeing me from birth-re-birth cycle, breaking the chains of the duality of life, He showed me the light in my heart

Like the blessings the Guru grants of divine vision, in one kshana (second), the sins of a many lives were destroyed by Paranthaman.

Atmabodham:
Her intimate knowledge of the soul and its journey notwithstanding, she was a simple soul at heart and was always tender and gentle towards her devotees.

While her treatise on her own salvation does indicate the path of Advaita, like the Bhagwad Gita, it also delineates the simple path of Devotion for the lay person.

In the centuries to come, she will remain a beacon to all simple folk. Those who sing her songs and recite her Kavachams will always be protected.

Sources: Journals kept by her daughters Kalpagam and Kamakshi, and books brought out about her life and works by Sivananda Divine Life Society, T.T. Pani and Company and the Andavan Pichai Bhajan Mandali.

ஓம் சரவண பவ முருகா சரணம்

ஓம் ஷண்முகம் தாரகம்

பட்டமரம் தளிர் விட்ட விந்தை

(1)

பட்ட மரத்தில் பறவை
யொன்று கூடு கட்டி
முட்டையிட்டு மூவெட்டா
ண்டனவும் அடைகாக்க

(2)

திட்டமாய் சூடேறி முட்டை உ
டைந்திடவும் - குட்டிக்கிளி
யொன்று வெளியே வந்திடவும்

(3)

மட்டற்ற மகிழ்ச்சியுடன்
தாய்ப் பறவை தன் - குட்டிக்கிளி
யின் அழகைக் கண்டுகளிக்க

(4)

வெட்டவந்த வீணர்கள் வியப்
படைந்து தடுமாறி -
விழுந்தெழுந்து
ஓடிமறைந்திட வேகமாய்

(5)

எட்ட நின்று பார்த்து ஏசி
இகழ்ந்தவர்கள் - கிட்டத்
தில் வந்து பார்த்து அதிசயிக்க

(6)

சட்டங்கள் பேசிய சதுரர்கள்
வாயடைத்து விட்ட குறையு

ன்று வேதாந்தம் பேசிட


(7)

பட்டமரம் தளிர்த்து பூத்து
காய்த்துப் பழுத்து - தட்டின்
றி எப்போதும் இனிய கனிய
ளித் தடவும்

(8)

இட்ட முடன் இதயத்தில் குட்டி
கிளியுடன் - தாய் பறவைஎன்றும்
ன்றும் ஆனந்தமாய் வாழ்கிறது

ஓம் சாந்தி சாந்தி சாந்தி !



ஒரு வார்த்தை அன்றுரைத்தாய் உறுதியாய் நம்பி நான்
உலகோர் முன் பிச்சியாய் உடல் சுமந்து வாழ்வதெல்லாம்
வருவாய் உன் திருவருளைத் தருவாய் என்றாசையினால்
வருத்தமெல்லாம் பொறுத்து நான் வாய் திறவா தேங்குகின்றேன்
திருப்பாதம் சாக்ஷியாய் மறந்தறியேன் உன்னாமம்
இருவினை செய்யும் கொடுமை இனியேனும் அகற்றிடாய்
குருவாய் குமரனாய் வந்தென்னை ஆட்கொண்டாய்
திருவருட்கிது தகுமோ தீன ரக்ஷகனே கூறாய்.

Disclaimer

There have been some controversies surrounding the nature of her transition in her early years, i.e. how Maragathavalli became Andavan Pichai.

This phase of her life has been described in different ways by different people, but the best way to present it is in her own words. Immediately after the event, she penned 'Charitram' which was carefully preserved by her elder daughter Smt. Kalpagam Srinivasan. It is self-explanatory and needs no further clarification. (This, along with a lot of interesting anecdotes in her life have been carefully written and preserved by her daughters kalpagam and kamakshi.) Charitram, gives an inkling about the struggle of her spirit which had obviously been in turmoil unable to sing praises of her chosen deity.

முருகனுக்கு தூது விடுதல்

1) வண்ணப்பசும் தோகை
மயில் மீதிலேறி என்மன்னன்
முருகேசன் வந்தான்

2) சின்னத் தனமாய் நான் சொ
ன்ன தெல்லாம்
மறந்து என்னை ஆட் கொ
ண்டு போனான்

3) இன்னும் ஓர்முறை முருகன்
வருவானோ வாரானோ
என்ன செய்வேன் தோழி நான்

4) மன்னவன் திரு உள்ளம்
நீ ஏதோ வென மெல்ல
அறிந்து நீ வருவாயோ தோழி வருவாய்

உ

ஓம்

ஐய்யிறண்டாண்டினின் ஐய்யனைக்த்
கண்டேன் ஆடும் மயிலுடன் அழகன் வந்தான்
பைய்யப் பைய்ய என் அருகில் வந்து
பரிவுடன் அமர்ந்தா ன் பரமதயாளன்
கைகளைப் பற்றிக் கருணையுடன்
என்னைக் கடைக்கண்களால்
பார்த்து சிரித்தான்

மையியல் உன் மேல் கொண்டேன் என்றார்
மறுபடி வருவேன் என்று மறைந்தான்.

மறைந்தான் ஆண்டவன் ஆண்டுகள் ஓடின -
மனதை முருகன் கொண்டு மறைந்தான்

உடலை யொருவர்க் கற்பணம்
செய்தேன் - சிறகை இழந்த பறவை போல்
இறைவனை நம்பி இல்லற தர்மம் கடமை
என்று கருத்துடன் செய்து கணவர்
மனம் கோணா திருந்தேன்

இருந்தேன் எனக்குக் குழந்தைகள்
பிறந்தன - இருபத்து நாலாம்
ஆண்டு தன்னில் மறுபடி

கருதரித் தொருமகன் பிறந்தான் சஷ்டியில்
அருமை மகன் பிறந்தானென்று ஆண்டவனுக்கு
பூஜை செய்தார்கள் முருக பிரான் திருநாளில்
பிறந்த குழந்தையின் நலத்தைக் கோரி
கந்த ஷஷ்டி விழா நடத்தினார் கணவர்

மருபடியும் திரு முருகன் காக்ஷி தந்தான் கனவினில்
திருவருளார் உள்ளத்தில் அருள் பாடல்கள் பொங்கியது.

பிச்சிக்கு
ஸ்ரீ முருக பெருமான் அளித்த அருட் காக்ஷிகள்

பிச்சியின் 10-வயதில் சரியாய் பேச்சுவராதிருந்தவட்க்கு கனவில் முருகன் பாலசுப்ரமண்யனாய் மயில் மீது காக்ஷி அளித்து அற்புதமான அருள் பாடல்கள் வெளிவர அருள் செய்தது (ஐய்யிரண்டாண்டினில்) சின்னஞ்சிறு வயதில் என் கன்னிப் பருவத்திலென்ற 100-பாடல்கள் பாடிய அற்புதம்.

1924 ஆண்டு அக்டோபர் 30 கந்த ஷஷ்டி புனித நாளில் 5 வது குழந்தை பிறந்து ப்ரசவ அறையில் இரவு சின்னஞ்சிறு பாலகனாய் 3 வயதுள்ளவனாய் ஓர் மலையடி வாரத்தில் உள்ள சமாதி ஒன்றின் முன்னின்று தன்னை என் இடுப்பில் எடுத்துக் கொள்ளச் சொல்லி கழுத்தைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டு நாக்கை நீட்டச் சொல்லி பரவச நிலையிலுள்ள என் நாவில் ஓம் என்ற பீஜாக்ஷரத்தை தன்கையில் வைத்திருந்த சின்னஞ்சிறு வேலாயுதத்தால் எழுதி மாயமாய் மறைந்த அற்புதம் அப்போதே சூதக அறையில் இரவு 12-மணி முதல் காலை 5-மணிக்குள் தணிகேசர் அந்தாதி பஞ்சரத்ன பதிகங்கள் வேல்மயில் சேவல் திருவடி ஜோதி தரிசனப் பதிக்க மென்று 600 க்கு மேல் பற்பல சந்தவிருத்தவெண்பா அகவற்பா முதலிய பாடல்கள் வெளிவந்ததுடன் அந்த பாடல்களெல்லாம் வரிசைக்ரமமாய் ஒன்று கூட விட்டுப் போகாமல் சொல்ல முடிந்தது (பிறகு அது 1948 வருஷம் (வாரம் ஆதி) தோரும் பிச்சியின் வீட்டில் பஜனை செய்ய வருவார்) அந்த சமயத்தில் அந்த பாடல்களும் 1924 இருந்து தொடங்கிய பாடல்கள் போனது

போக 4600 பாடல்கள் ஒவ்வொன்றும் சதகம் பல சமயங்களில் பாடிய பற்பல பாடல்களை எல்லாம் சேர்த்து அதை பலருக்கு பயன்படும் வண்ணம் தாம் வெளியிடுவதாய்ச் சொல்லியதுடன் இந்த பாடல்களை எல்லாம் லோகோபகரமாய் பிச்சி மூலமாய் நான் அளித்த அருட் செல்வம் (என்னப்பனைப் பாடியது ஸ்ரீ மணி வாசகப் பெருமான் அருளிய திருவாசகம் (பிச்சி என் மேல் பாடியவைகளெல்லாம் அவள் மூலமாய் நானே உள்ளிருந்து சொன்னதால் இது அதினிலும் சிறந்த அருள் வாசகம் என்று சொல்லி அதை உடனே வெளியிட உத்தரவிட்டதாய் சொல்லி இனிவரும் பாடல்கள் (2) வது தொகுதியில் வெளியிடலாம் என்று வாங்கிப்போய் ராவ் பகதூர் முருகன் மேல் பல அரும் பாடல்களும் திருப்புகழ் வெளி வரக் காரணரான பெரியார்.

ஸுப்ரமண்ய பிள்ளையின் குமாரரும் தணிகை மணி என்ற சிறப்புப் பெயர் படைத்ததுடன் மிக பக்தி வினயமுடையவராதலினால் தன்னை தணிகை அடிமை என்றே சொல்வார் அந்த மஹான் திருப்புகழ்மணி மூலம் வெளியிட தன்னிடம் பிழையின்றி சரிபார்த்து கொடுக்க சொன்ன பாடலை படிக்க எடுத்த உடன் பிச்சியின் பாடலில் பிழை திருத்த போகிறாயா அவை எல்லாம் பிச்சியின் உள்ளத்திலிருந்து வெளியிட்டது என் அருள் மாணிக்க வாசகர் திருவாசகம் பாடினால் சிவபெருமான் மீது அன்று. இன்று பிச்சி மூலமாய் நான் அருள்வாசகம் வெளியிட்டிருக்கிறேன். பிழை குறித்தால் நற்கீரர் போல் தான் நடக்கும். என்னைப் பன்பாடலுக்கு பிழை கண்ட நற்கீரன் அன்று நீ நீயும் உன் தந்தையும் என் பரம பக்தன் என்றிய பக்தன் அருணகிரி என் மேல் பாடியவை ஆங்காங்கு

சிதறிப் போனதை ப்ரயாசையுடன் தேடி தொகுத்து வெளியிட்ட திருப்புகழ்ச் செல்வம் உலகெலாம் பாடி பக்தியாய் பாராயணம் செய்யும் படிசெய்த நீங்கள் என் பரம பக்தையான பிச்சி பிதற்றிய பாடலை துச்சமாய் (கல்வி அறிவற்ற கல்லாத பேதையின் பிதற்றல் என்ற அலக்ஷ்யம் செய்யாதே உச்சி மீது வைத்து கொண்டாட வேண்டியது பிச்சியின் பாடல்கள் என்று ஆக்கிளையிட்டு இனி பிச்சி என்று சொல்லாதே மாணிக்க வாசகி என்று தெரிந்துக் கொள் என்று மறைந்தாராம் அந்த விஷயம் திரு செங்கல்வராய பிள்ளைகள் திருப்புகழ்மணியிடம் அந்த கையெழுத்து ப்ரதிகளெல்லாம் பத்ரமாய் காப்பாற்றுங்கள் அதற்கு வேளை வரும் போது முருகனே வெளியிடுவான் என்று கொடுத்து விட்டார்கள். பிறகு எப்போது பிச்சியை பார்த்தாலும் செங்கல்வராய பிள்ளை 90 வயதானவர் என்னம்மா மாணிக்கவாசகி என்று சாஷ்டாங்கமாய் நமஸ்கரிப்பர் (என்ன தடுத்தாலும் முடியாது) பிறகு முருகன் திருவிளையாடல் திருப்புகழ்மணி காலமான பிறகு செங்கல்வராயபிள்ளை திருப்புகழ் மணியின் பிள்ளைகளிடம் அந்த கைஎழுத்து ப்ரதியை தன்னிடம் கொடுக்கும்படி கேட்டதில் 1800 பாடல்கள் தான் கிடைத்தது மற்றவை கிடைக்கவில்லை 16000) என்று அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் ப்ரதிகள் பிறகு மஹான் சுப்ரமண்யபிள்ளை நாடெல்லாம் திரிந்து கிடைத்த ஏடுகள் 1300 தான். அதன் பிறகு (1927-1948 வரை குடும்பம் பெரிதாய் குழந்தைகளுக்கு கல்யாணம் (பெண்கள் பிள்ளைகள்) பேரன், பேத்திகள் நல்லது கெட்டது என்று பலவிதமாய் ஸம்சாரம் நடந்துக் கொண்டிருந்தது திடீரென்று 1948 மே மாதம் (வைகாசி

விசாகம் பிப்ரவரியில் வந்த மஹா சிவராத்ரிக்கு என் பந்துக்கள் சிலருடன் நான் ஸ்ரீ சைலத்துக்கு சென்று வந்தேன். அதிலிருந்து சிறுக சிறுக உடல் நலம் குறைந்து வந்து வைகாசி விசாகத்தன்று திடீரென்று ஹார்ட் அடாக் வந்து உயிர் போய்விட்டதாகவே இருந்து பந்துக்கள் எல்லாரும் வந்து விட்டார்கள். காலை 9 $^1/_2$ மணிக்கு மயக்கம் வந்து வீழ்ந்தது. மாலை 6 மணிக்கு மெல்ல மெல்ல உடல் அசை வேற்பட்டு டாக்டர்கள் பல இன்ஜெக்ஷன்கள் செய்து மரணத்திலிருந்து தப்பியது. ஆனால் பல மாத காலங்கள் படுக்கையில் இருந்து நீராகாரமன்றி தூக்கி உட்கார வைத்து குளிப்பது.

மற்றவை சரித்திரத்தில் படிக்கவும்

(Please follow the rest through her Charithram)

சரித்திரம் (அந்தாதி)

1. ஐயிரண்டாண்டினில் - ஐயனைக்கண்டேன் - ஆடும் மயிலுடன் அழகன் முருகன் - வந்தான்.
பையப்பைய என்னருகினில் வந்து - பரிவுடன் அமர்ந்தான் - பரம தயாளன்
கைகளைப்பற்றி - கருணையுடன் - என்னை - அருட்கண்களால் பார்த்து புன்னகை செய்தான்
மையல் உன்மேல் கொண்டேன் - மறுபடியும் வருவேனென்று மறைந்து விட்டான் முருகன்.

2. மறைந்தான் - என் ஆண்டவன் - ஆண்டுபல ஓடியது - மனதை என் முருகன் கொண்டோடி விட்டான்.
சிறகையிழந்த - பறவைபோலானேன் - உடலை ஒருவருக்கு - அர்ப்பணம் செய்தேன்.
இறைவனை நம்பி - இல்லற தர்மம் - கடமைத்தவறாமல் கருத்துடன் செய்தேன்.
குறையின்றி - மனமறிந்து - குடித்தனத்தில் - குழந்தைகளும் பிறந்து சிறப்புடன் இருந்தேன்.

3. இருந்தேன் - இருபத்தி நாலாண்டு தனிலே - மறுபடியும் - கருத்தரித்து மகன் பிறந்தான் ஷஷ்டியில்
அருமை மகன் - ஷஷ்டியில் - பிறந்தானென்றவன் - தந்தை ஆண்டவருக்கபிஷேக - ஆராதனை செய்தார்.

முருகபிரான் - மறுபடியும் - காட்சிதந்தார் - கனவிலே திருவருளால் உள்ளத்தில் - கண்டேன் - அண்ணாமலையை

4. அண்ணாமலையின் - அடிவாரந்தன்னிலே - அழகான சிறியதோர்க் கோயிலைக்கண்டேன்.
கண்ணாரக்கண்டேன் - அதனுள் கந்தப் பெருமாள் - உருவம் - பாலனாக
விண்ணாட்டவர்க்கும் - காண - அரிதான - ஐயன் - என் அருகில் வந்தான்
பண்ணார்ந்த குரலில் - பக்கத்தில் - வந்து - என்னை அம்மாவென அழைத்து அணைத்துக்கொண்டான்.

5. கொண்டபேரனாந்தம் - கூறவொண்ணாமல் - குழந்தையைத் தூக்கி மார்போடு அனைத்துக்கொண்டேன்
தொண்டையடைக்க - கண்களில் - நீர் பெருக - குழந்தையின் - பரிசத்தில் - உடல் சிலிர்க்கவும் -
தண்டையணிந்த - தாமரைப்பாதத்தை - கண்களில் ஒற்றிக்கொண்டேன் குழந்தாய் - நீயாரென்றேன்
மண்டையில் அடித்தார்போல் - பாலன் - மால்மருகன் - நானென்றான் மாதாக்கள் பலரெனக்கு என்று மறைந்தான்.

6. மறைந்தது கனவு - மலர்ந்தது - உள்ளத்தாமரை - விரிந்து - பக்தி மணத்தது

இறைவனருளால் - உள்ளத்தே - கவிதைகள் - வெள்ளம் போய் பெருகியது;
சிறையிலிருந்து - விடுதலையடைந்த - கைதியைப்போல - களிப்படைந்தே~~னென்ன~~. என்
குறையெலாம் நீக்கி - குமரகுருபரன் - குடிகொண்டான் என்மனக்கோயிலில்

7. இவ்வாழ்க்கையிலும் - இன்பந்துன்பம் - எல்லாம் நிகழ்ந்தும் - கோயிலில் இறைவனை நம்பி
பல் வகையான - சோதனைக்கிடையிலும் - பதற்றமின்றி -பணிவுடன் இருந்து,
நல்வினை - தீவினை - எல்லாம் சமமாய் - நலிவடையாது நடந்துகொண்டு அல்லல்களெல்லாம் - ஆனந்தமாக - அனுபவித்தேன் - நாற்பத் தெட்டாண்டுகள் வரை

8. ஆண்டு இருபத்திநாளில் - அற்புதமாய் வெளிவந்த - அரும்பாடல்களெல்லாம் -
ஆண்டவன் செய்த - அருள் விளையாட்டுகளால் - யாருமறியாமல் உள்ளே கிடந்தது.
தீண்டாமல் பத்திரமாய் - பேழைக்குள் வைத்து - முருகன்மேல் ஆணைவைத்து. மறைத்து வைத்தார் - வீட்டினில்
நீண்டநாள் அப்படியே இருந்தது - வீட்டில் - மீண்டுந் தொடங்கியது - முருகன் திருவிளையாடல்

9. விளையாட்டுபோல் - இருபத்திநாலாண்டுகள் - விரைந்தோடிப் போனது காலமும் - உருண்டோடிப்போயிற்று
இளைய தலைமுறைகள் - பெரியவர்களாக - படித்துப்பட்டம் பெற்று பெண்களும் - பிள்ளைகளும், முளையாகி துளிர்த்து - கிளையாகி முதிர்ந்து - மரமாகி - விழுது விட்டு படரும் ஆல்போல
தளையென்னும் - சம்சாரபாரம் - அதிகரித்து - தாங்கமுடியாது - உடல்

10. உடல் தளர்ந்த - நிலையிலும் - உள்ளம் தளராமல் - ஒய்வின்றி வரும் விருந்தினர்க்கெல்லாம் -
கடமையென்று உபசரித்து - குழந்தை குட்டியெல்லாம் - கவனிக்கமுடியாது காலமும் ஓடியது.
படமுடியாத்துன்பங்கள் வரும் போதெல்லாம் மக்களுக்காக - எல்லாம் - சகித்துக்கொண்டேன்
திடமுடன் குடும்பத்தில் - நடக்கவேண்டியதெல்லாம் - திருவருளின் துணையினால் - குறைவின்றி நடந்தது.

11. நடந்தது ஒரு நாள் - முருகன் சோதனை - கடந்த காலநினைவுகள் மாறின
சடலத்தில் உணர்ச்சியின்றி -பல நாட்கள் - சாவும் வாழ்வுமாய் ஊசலாடியது உயிர்
கடவுளை நம்பிய கணவனும் -மக்களும் - கட்டிக் காத்தனர் கவலையால் நொந்தனர்.

திடமுடன் எல்லோரும் - நம்பினார் - கடவுளை அவரும்
செய்தார் விரைவில் நன்றே.

12. நன்று தீதென்ன வென்று - தெரியாமல் - கிடந்தவள் -
நாளுக்கு நாள் - மனிதர்களை புரிந்துக் கொண்டேன் -
மெதுவாக
சென்ற நாட்களெல்லாம் - என்ன நடந்தென்று - சிந்திக்க
முடியாமல் குழம்பியது உள்ளம்.
அன்றன்று நடப்பதெல்லாம் - அமைதியுடன் கவனித்து -
சிறிது சிறிதாய் - தெளிந்தது உள்ளம்
ஒன்றும் புரியாமல் - அவர்கள் - உரைப்பதெல்லாம்
ஊமைப்போல் கேட்டு உணரலானேன்.

13. உணரலானேன் மெதுவாய் - உள்ள நிலமையெல்லாம் -
உள்ளம் தெளிந்து - உண்மை விளங்கியது
திணற வைத்து - திக்குமுக்காடியது உள்ளம் -
திருவருனின் துணையினால் - தேறித் தெளிந்தது
கணத்தில் கலக்கமெல்லாம் - கதிரவன்முன் -
பனிபோல கரைந்து - கடமைகளையெல்லாம்
கவனிக்கலானேன்
குணமாகி வருவதாய் - குதூகலம் அடைந்தார்கள் - குறை
நீங்கி எல்லோரும் - ஆனந்தமடைந்தார்கள்

14. ஆனந்தமாய் ஒரு நாள் - அர்த்த ராத்திரியில் ஆண்டவன்
மேல் நினைவாக அமர்ந்து கொண்டிருந்தேன்

ஈனமாம் - பெண் ஜன்மமாய் - உடல் எடுத்தாலும் -
ஞானத்தின் சிகரமாய் - விளங்கியது உள்ளம்.
நான் அதுவாய் ஆனபின் - நாணமேன் என்றறிந்தேன் -
நால்வர் முன் பணிவுடன் நடந்தேன் அப்போதும்

15. அப்போது என்னருகில் - ஆனைமுகப்பெருமான் - ஆடி
அசைந்து வந்து - அடித்தான் என் தலையில் - தும்பிக்கை
தன்னால்
தப்பேது செய்தோமென்று தாளில் பணிந்தெழுந்தேன் -
முப்போதும் பூஜை செய்யும் - முருகனைக் காட்டினான்
அப்பனே! என்றலரி - அண்ணாந்து பார்த்தேன் - ஆடும்
மயிலுடன்
ஆண்டவன் நின்றான் - ஒப்பற்றவனாய்

16. ஒப்பற்ற எழில் கோலம் கண்டு மெய்மறந்தேன் -
ஓங்காரத்தின் பொருள் - உரைத்தவனை அறிந்தேன்
இப்படி முருகன் ஒரு திருவிளையாடல் செய்தான் -
பக்கத்தில் நின்ற மயில் இறகுகளை - பிச்சி
அப்படியே எறிந்து - என்மேல் - பிச்சி நீ யென சிரித்தான்
எப்படியும் - என்றாவது வருவேனென்று கூறி மறைந்தான்
குன்றமர்ந்தோன்.

17. குன்றா இளமைக் குமரன் வந்தான் - நின்றான் எதிரில்
ஆண்டியாக

மன்றாடியின் திருமைந்தன் - இடையில் - காவித்துணியும் - கரத்தில் வேலும்

நன்றாய் தலையை மழித்து - கரத்தில் - உருத்திராட்சமாலை துலங்க

நின்றான் - தண்டாயுதபாணியாய் - ஐயன் - அபயக்கரத்தை காட்டி அழைத்தான்

18. அழைத்தான் அருகில் ஆண்டவன் முருகன் - அன்று நான் சொல்லியபடியே. வந்தேன்.

விழைந்தேன் - உன் அரும் பாடல்கள் - கேட்க - விருப்பமுடன் - நீ சொல்வாயென்றான்

மழைதாரையைப்போல் - கண்ணீர்பெருக - மலரடிதன்னில் விழுந்து - பணிந்தேன்

பிழையெல்லாம் - பொறுப்பாய் - பெருமானே - ஆண்டியைப் பாடினால் - அனர்த்தம் வருமென்று ||

ஆணையிட்டார் - என்றேன். வீட்டில்

19. வீட்டில் நடந்த - விஷயங்களெல்லாம் - அறிந்தேன் ஆணையை விலக்கி விட்டேன் ||

நாட்டில் பலரும் - கேட்டு அருள் பெற்றிட - பாட்டுகள் ஆயிரம் ஆயிரமாக,

வாட்டமின்றி வந்திடும் கவிகள் - ஏட்டிலடங்கா - என் - மகிமைகளை -

பாட்டினாலே பரவச் செய்வாய் - பரவசமாய் நான் கேட்டு மகிழ்வேன்.

20. மகிழ்வேனென்று கூறிய முருகன் - மறைந்தான் - கனத்தில் மயில் வாகனத்தில்

இகழ்வார் முன்னே - ஏங்கி நின்றவனை - ஏற்றமத்து - பாடச் செய்தான்.

புகழை விரும்பா - பேதையென்னை - மும்மொழி கவியென வாழ்த்தினர் பெரியார்

நிகழும் செயல்கள் - கண்டு வீட்டிலும் - நிம்மதியிழந்து கலங்கி தவித்தது அதன்பின்.

21. அதன்பின் ஆண்டவன் காட்டிய அற்புதம் - அகிலமெல்லாம் அறிந்த ரகசியம்

மதம் பிடித்து - திமிருடன் - பேசியவர்கள் - மௌனமாகி - அடங்கி விட்டார்கள்.

இதமுடன் - ஆண்டவன் பக்தர்கள் பலரும் - நித்தம் நித்தம் சத்சங்கம் பஜனை நடத்தினார்கள்

உதய சூரியன் போல் முருகன் - இமயம் செல்ல - ஆனையிட்டார்

22. இட்டார்க்கு - இட்டபயன் அனுபவித்துதான் தீரும்: சிட்டாய்ப் பறந்தது - ஆண்டுகள் - இரண்டு -

செட்டாய் நடந்தது - பிள்ளைகள் மூவர்க்கும் - கல்யாணம் - கார்த்திகை, பண்டிகைகள் எல்லாம் - நடந்து

தட்டாமல் எல்லோர்க்கும் குழந்தைகள் பிறந்து - மட்டில்லா மகிழ்ச்சியுடன் - செழித்தது குடும்பம்.

ஆத்மானுபவங்கள்

எலும்பு, தோல், ரத்தம், மாமிசங்களால் ஆனது மானிட சரீரம். இந்தப் பிண்ட சரீரத்துக்குள் அண்டத்தில் காணும் அத்தனை விதமான அற்புதங்களும் நிறைந்துள்ளன. புறத்தில் காணும் புண்ணிய க்ஷேத்திரங்கள் இந்தச் சரீரத்திலும் பஞ்ச கோசத்திலும், பஞ்ச பூத க்ஷேத்திரங்களாகவும், ஆறாதாரமாம் ஆண்டவன் ஆறுபடை வீடாகவும் பஞ்சபூதங்கள் பஞ்சேந்திரியங்கள், மனம் ஆகப் பதினொன்று தத்துவங்களுக்கு அப்பால் த்வாதாசாந்தமாகும் அறிவின் ஸ்தானம் ப்ரம்மந்த்ரம் என்ற உச்சிக் கமலம்.

ஜீவ ப்ரம்ம ஐக்யமாகும் ; நாதவிந்து கலாதீதமான மோக்ஷ இன்பத்தை ஜீவன் உள்ளபோதே சாதனையினால் அடையலாம். மூலாதாரத்தில் தொடங்கி மேலாதாரத்தில் முடியும் ஸுஷும்னா மார்க்கமென்ற ஞான மார்க்கத்தில் ஆதார சக்தியாகிய குண்டலி சக்தியின் பலத்தால் படிப்படியாக ஆறாதாரங்களைக் கடந்து ஆங்காங்கே காணும் அற்புத அநுபவங்களில் மயங்காமல் திடமுடன் மேலே ஏற வேண்டும் ஆக்ஞசக்ரமென்ற ஆறாம் நிலையில் காணும் காட்சிகளும், அடையும் இன்பங்களுமே முடிந்தநிலை என்று அவ்வளவோடு நின்று விடாமல், உறுதியுடன் முயன்று இன்னும் ஒரு படி மேலே ஏறினால் அதுவே பரமபதமாம் த்வாதசாந்தமாகும். அநேகமாய் ஆதார நிலையை

அப்யசிக்கும் யோகிகளும் ஞானிகளும் ஆக்ஞாசக்ரத்துடன் நின்று விடும்படி ஆகிறது.

அங்கு காணும் ப்ரம்ம ஜோதியில் அதற்கு மேலுள்ள ஆனந்தநிலை திரையிடப்பட்டிருக்கிறது. அந்த அருட் பெருஞ் சோதியைக் கடந்தவர்க்கே அதற்கப்பாலுள்ள தனிப்பெருங் கருணை காட்சி அளிக்கிறது. துரியாதீதமான அந்த இடத்தை அடைந்து சந்த்ர மண்டலமென்கிற த்வாதசாந்தகத்தில் பெருகும் அமுத வெள்ளத்தில் மூழ்கிப் பரிசுத்தரான ஜீவன் முக்தர்கள் இனிப் பிறவாநிலை அடைகிறார்கள். அங்குள்ள அருட்சோதியில் தங்கள் ஆத்மஜோதியை ஆஹுதி செய்து, அதனுடன் தாமும் ஒன்றாய்க் கலந்து ஒரே பரஞ்ஜோதியாய் பிரகாசிக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஆனந்தானுபவத்தை அடையும் மார்க்கம் ஆறாதாரப்படியில் முதலாவதாகும்.

மூலாதாரமானது ப்ருத்வீ தத்துவமென்றும், ஸ்வாதிஷ்டானம் என்பது அக்னி தத்துவமென்றும், மணிபூரகம் என்பது ஜலத்துவம் என்றும், அநாஹதம் என்பது வாயு தத்துவமென்றும், விசுத்தியானது ஆகாச தத்துவமென்றும் கூறப்படும் (அதாவது மேலிருந்து வரும் சப்தம்) ஆகாசம் என்றும், ஸ்பரிசம் வாயு என்றும், ரூபம் அக்னி என்றும் ரஸம் ஜலம் என்றும், கந்தம் அதாவது மண் ப்ருத்வீ தத்துவமென்றும் ஐந்து மகா தத்துவத்தை ஐந்து மஹா க்ஷேத்திரங்களாகக் காட்டும் ப்ருத்வீ-காஞ்சிபுரம். அப்பு-ஜம்புகேச்வரம், தேஜஸ் -

திருவண்ணாமலை, வாயு-காளஹஸ்தி, ஆகாசம்- சிதம்பரம் என்பவை முறையே பஞ்சபூத க்ஷேத்திரங்களாகும். இவ்வாறே பஞ்சேந்திரியங்களையும் பிரித்து ஆறாவதாக மனஸ் தத்துவத்தைக் காசிக்ஷேத்திரமாகவும், மற்றும் கர்மேந்திரியம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, மனஸ் ஆகப் பதினோரு திருப்பதிகளைத் தாண்டிப் பன்னிரண்டாவதாம் த்வாதசாந்தம் மோக்ஷ வீடாகவும் கைவல்ய பதமாகவும் காட்டப்படுகின்றன.

ஸ்தூலமாம ஹாலாஸ்ய க்ஷேத்திரமென்பதே ஸூக்ஷ்மமாய் த்வாதசாந்தம் எனப்படுகிறது. சாக்ஷாத் பாராசக்தி, ஸதாசிவத்துடன் ஐக்யபாவமாய், ஸ்ரீ சக்ர ரூபமாய் அமைந்துள்ளது மதுராபுரி, ஸஹஸ்ரார கமலமாம் த்வாத சாந்தத்தில் பிறக்க முக்தி (திருவாரூர்), தரிசிக்க முக்தி (சிதம்பரம்) நினைக்க முக்தி (அருணை) இறக்கமுக்தி (காசி) என்று கூறுவார்கள். எல்லாப் புனித க்ஷேத்திரங்களையும் விடத் திவ்ய ஞானம் அளிக்கும் ஞான பூமியாம் மதுரையில் ஆறுகோடி சக்திகளையும் நவசக்தியாய்க் காட்டும் ஸ்ரீ சக்ர ரூபமாய் அமைந்துள்ள ஸ்ரீ மீனாக்ஷி தேவியின் ஆலயத்தில் நடுவில் நாதவிந்து ரூபிணியாக மீனாக்ஷி சுந்தரேசுவரர், சுற்றிலும் அஷ்ட சித்திகளும் (ஆதிசக்தி, ஆவரண சக்தி, இச்சா சக்தி, க்ரியா சக்தி, ஞானசக்தி, சித்சக்தி ஜட சக்தி, பராசக்தி) சர்வசக்தி ஸ்வரூபிணியாக ஸ்ரீ சக்ர நகர நாயகியாக ஸ்ரீ மீனாக்ஷி அருளாட்சி புரிகிறாள். 64 தத்துவங்களாம் கலைகளையும் 64 திருவிளையாடல்களாகச் செய்து காட்டிய ஸ்ரீ

பரமேஸ்வரன், பராசக்தியுடன் பிரிவின்றி வாழும் ஜீவப்ரம்ம ஐக்ய ஸ்தலமாகிய மதுரையில் அறம் பொருள், இன்பம், வீடு என்று நான்கு நிலைகளும், ருக் யஜுர், ஸாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களும் பொருந்தி நிற்க ஸாலோகம் (பகவான் வசிக்கும் இடத்தில் வசிப்பது) ஸாரூபம் (பகவானின் ரூபத்தைத் த்யானித்து அவராகவே ஆவது) ஸாமீப்யம் (ஈசுவர ஸ்வரூப த்யானம் செய்வதால் அவருக்குச் சமீபத்தில் வசிக்கும் பாக்கியம் கிடைப்பது) ஸாயுஜ்யம் (ஈசுவர நினைவு ஒன்றுடன் மற்ற எல்லாக் கர்மாக்களையும் மனத்தால் துறந்து விடுதல்) ஆகியன கைகூடும். பரமாத்மாவுடன் ஜீவாத்மாவைச் சேர்த்து விட்டால் ஜீவன் முக்தி ஆகிறது.

இறந்தபின் எய்தும் விதேஹ முக்தியாம் மோக்ஷநிலை அல்ல இது. உயிருள்ள போதே உள்ளத்தில் ஒன்றாகி விடுவதே ஜீவன் முக்தி என்ற ஸாயுஜ்ய பதவி துன்பத் தொடர்பும் கன்மக் கட்டும் விட்டதே கைவல்யபதமாகும். கேவலம் கர்மாநு சரியாய்ச் சரீரம் இயங்குவதின்றி உள்ளத்தில் பற்றேதுமற்ற வாழ்க்கையே பரகதியாம் பரமபதம். த்வாதசாந்தமென்று காட்டுவது போல் மீனாக்ஷியின் ஆலய கோபுரம் அனைவர்க்கும் அறிவிக்கின்றது. அதனுள் விளங்கும் பொற்றாமரைக் குளம் இதயமென்கிற உள் பிரகாரததில் பக்தி என்று கூறப்படும் வற்றாத நீர் நிலையாம். ஹ்ருத் புண்டரீகமென்கிற ஹ்ருதய கமலம் (பொற்றாமரை) அதன் வேராகிறது.

மற்றும் திருப்பரங்குன்ற தரிசனத்தை ஆராயும் போது அறுபடை வீட்டுத் தத்துவங்களும் ஆறாதாரமாய் முதலாவதாக திருப்பரங்குன்றமும் முடிவாகச் சோலை மலையும் (ஆரம்பமும் முடிவும்) மதுரையுடன் பொருந்தித்தான் அமைந்துள்ளது.

மூலாதாரம் முதல் ஆக்ஞாசக்ரம் வரையிலுள்ள ஆறு நிலைகளையும் அறுபடை வீடுகளாகக் கொள்ளலாம். அதற்கு மேல் உள்ள த்வாதசாந்தமாகத் திருத்தணிகை என்ற திருப்பதி மோக்ஷ நிலையாக முடிந்து தணிந்த நிலையாகவும் விளங்குகின்றது. தணிகை என்பது அறுபகை கடந்த, நிகரில்லாத சாந்தியளிப்பதான ஸாயுஜ்ய நிலையாகையால் வெளியில் தணிகை க்ஷேத்திரமென்பது சாந்தி நிலை என்ற ஸாயுஜ்ய பதமாகிறது. உன்முகத்தில் ஆதார சக்ர தத்துவதத ஆழ்ந்து கண்டவர்க்கு மானிட தேகம் மற்ற எல்லாப் பிறவிகளையும் விடச் சிறப்பானது என்பது விளங்கும்.

ஆறாவது அறிவாம் பகுத்தறிவு என்பது மானிடர்க்கே உண்டானது. மனச்சாட்சி அல்லது பகுத்தறிவு என்பது ஆதார நிலையில் ஆறவதாம் ஆக்ஞாசக்ரத்தில் இது அமைந்துள்ளது. அறிவின் ஸ்தானம் இங்குள்ளது என்பதைக் குறிப்பதே ஆக்ஞாசக்ரம் அதனையே அண்ணாமலை க்ஷேத்திரமாக 'வேளைக்காரன் வகுப்பில் அருணகிரிநாதர், 'ஆடக விசித்ரகன கோபுர முகப்பில் அருணாபுரியில் நிற்கும் அடையாளக்காரன்' என்று ஸூக்ஷமமாய்க் கூறி விளக்கி

இருக்கிறார். அடி முடி காணா ஜோதி நின்ற இடம் அருணை. அவ்வாறே ஆக்ஞாசக்ரத்தின் மேல் உள்ளதையும் அறிந்து சொல்ல முடியாது. அங்குச் சென்றவர்கள் 'அதுவே தானாகி விடுவதால் பார்ப்போன் பார்க்கும் பொருள் என்ற பேதம் மறைந்து விடுகிறது. பெருஞ்சுடரில் விழுந்த சிறு துரும்பாய் அதில் கலந்து மறைந்து விடுகிறார்கள். அந்நிலையே அடிமுடி காணா நிலை. அடிதேடிய திருமால் பாதாளம் வரையில் தேடிச் சென்றும் அடி காணவில்லை ; முடிதேடிய பிரமன் முடிவில்லாது ஓங்கும் சுடரை எட்ட முடியாமல் இறங்கி விட்டான். ப்ரம்மக்ரந்தி என்னும் ஆக்ஞாசக்ரத்தின் மேலிடமே ஆக்ஞாசக்ரத்தின் உற்பத்தி ஸ்தானம் எனலாம். ப்ரம்ம ஸ்ருஷ்டியும் அங்கே 'உற்பத்தி' என்று அழைக்கப்படுகிறது. அந்த ப்ரம்மக்ரந்தி என்ற படைப்பு அல்லது அறிவின் ஆற்றலால் உண்டாக்கப்படும் எண்ணங்கள் நசித்தால் தான்-அதாவது, ப்ரம்ம லிபிக்குக் கட்டுப்படாமல் அந்த முடியை அவிழ்த்து எறிந்தால் தான் எல்லாவிதமான நல்வினை தீவினைப் பயன்களையும் விட முடிந்த மேல்நிலை எய்த முடியும். அவ்வாறு இருவினையைக் கடந்த ஞானியர் இனிப் பிறவாநெறியாம் ஏழாம் நிலையில் ஈசனுடன் இரண்டறக் கலந்து இன்பமெய்துகின்றனர். அதாவது, அந்த ப்ரம்மானந்தத்தை எய்தியவர் படைப்புக்கிடமாம் ப்ரம்மபுரிக்கு திரும்ப மாட்டார்கள். ஹம்ஸஸோஹம் என்ற பரிபூர்ணமான ஆனந்தம் அந்த ஏழாவது நிலையில் உள்ளது ; அப்படிப்பட்ட உயர்ந்த நிலையை அடையக்கூடிய வாய்ப்பும்

அதற்கு உதவியாம் ஆதார நிலைகளும், மற்றும் பல அற்புதங்களும் மானிட சரீரத்திற்குள் பொருந்திய, மூலாதாரம் முதல் ஆக்ஞா சக்ரம் வரையிலுள்ள ஸுஷும்ணா மார்க்கமென்ற அதிஸூக்ஷ்மமான கருவியாய் மூலாதாரம் முதல் ஸஹஸ்ராரம் வரை அமைந்திருப்பதை உணர்த்தும் (உஷ்ணமானி நம் உடலில் கூடியும், குறையும் உஷ்ணத்தை அளந்து காட்டுவது போல்).

மூலாதாரத்திற்குக் கீழ்க் குண்டலினி சக்தி என்றது பாம்பின் வடிவாய்க் கூறப்படுகிறது. ஆதிசேஷன் வசிப்பது பாதாளம் ; அவனே பூமியைத் தாங்குகிறான். பாதாளத்திற்குக் கீழ் ஒன்றுமில்லை என்று கூறப்படுகிறது. அவ்வாறே பூலோகம் முதல் சத்யலோகம் வரை ஆறு நிலைக்கு அப்பால் உள்ளது. ஸஹஸ்ரார கமலம் எனப்படும் ப்ரம்ம ரந்த்ரம் குண்டலினி முதல் மூலாதாரம். ஆறாம் நிலையாம் ஆக்ஞாசக்ர மென்கிற ஸத்ய லோகம் அல்லது ப்ரம்ம லோகம் வரை ஏறினாலும் கீழே இறங்க முடியும். ஞானக்கனலை மூலாதாரத்திலிருந்து த்வாதசாந்தத்தில் எட்ட முயலும் யோகியர் சில சமயம் அந்த உஷ்ணம் தாங்காமல் மூலாதாரத்தில் வந்து விழுந்து விடுகிறார்கள். மறுபடியும் இதயத்தில் (த்யானத்தில்) தங்கி விடுகிறார்கள். மறுபடியும் கவனித்து முயன்றால் மேல் நிலையை எட்ட முடியும்.

எவ்வாறு தெர்மாமீட்டர் நம் உடலில் கூடியும் குறையும் உஷ்ணத்தை 94 டிகிரியிலிருந்து 110 டிகிரி வரை காட்டுவது போல் ஸுஷும்னா மார்கம் அதிஸுக்ஷ்மமான கருவியாக

மூலாதாரம் ஸஹஸ்ராரம் வரை அளந்து காட்டுகிறது.

ஆனால் சிலசமயம் அதி உஷ்ணமாம் (106 டிகிரி உஷ்ணமானி டெம்ப்ரேச்சர்) போன்றது ஆக்ஞாசக்ரத்திலிருந்து இறங்கும் ஜீவன் (ஸப்நார்மல் 95 டிகிரி) இறங்கி அதற்குமேல் வரும் போது இதயத்தில் தெளிவின்றி மறைந்து மடிந்து விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் நிலைமை மிகவும் பரிதாபமானது. ஞானக்கனல் என்ற ஆக்ஞாசக்ரத்தை கடந்து மேலேறினால் ஸுஷும்னா மார்க்கமென்ற ஸாஹஸ்ரார கமலத்தில் ஞானக்கனல் உருகிப்பெருகி மேலேறி மறுபடியும் கீழே இறங்காமல் அங்கேயே நின்று விடுகிறது. (எப்படி தெர்மா மீட்டரின் ஊடே உள்ள பாதரஸமானது அதிக உஷ்ணம் அடைந்தால் மறுபடியும் இறங்காமல் அங்கேயே நின்றுவிடுகிறது. பிறகு அதை உபயோகப்படுத்த முடியாது). சிலசமயம் அபூர்வமாய் ஸன் ஸ்ட்ரோக் போன்ற சமயம் உஷ்ணம் 110 டிகிரி ஏறினால் உஷ்ணமானி வெடித்து விடுவது உண்டு. அவ்வாறே ஞானக்கனல் ஆறு நிலை கடந்து ஏழாம் நிலையாம் ஸஹஸ்ராரத்தில் வரும்போது அந்த ஞானக்கனல் தாங்காமல் உச்சிக்கமலமென்ற ஸிரஸுவெடித்துப் போவதும் உண்டு. இம்மாதிரியான கபால மோக்ஷமென்கிற நிலை ஏற்படுவது அதிசயத்திலும் அதிசயமான நிகழ்ச்சி. ப்ரம்ம ரந்திரமென்ற ப்ரம்ம கபாலம் வெடித்து ஆத்ம சக்தியானது ஸகல கர்மக்

கட்டுக்களையும் அறுத்துக் கொண்டு சிதாகாசத்தில் சுதந்திரமாய் பறந்து செல்லுகின்றது ஆத்ம பறவை.

நம் உடல் ஓர் ஆலயம் போன்றது. உள்ளத்திலும், வெளியிலும் அதன் தோற்றத்தையும், அதில் நடக்கும் செய்கைகளையும் நன்கு கவனித்தால் இதன் ஸூக்ஷமம் விளங்கும் இந்த தேகாலயத்தில் சிகரமாகவும் கோபுரம் போலவும் உள்ளது நம் தலை. புறத்தில் எண் சாண் உடம்பிற்குச் சிரஸே ப்ரதானம்.

மனித சரீரத்தில் முக்கியமான அவயவங்கள் சிரசில் தான் அமைந்துள்ளன ; ஒளி காட்டும் கருவியாகக் கண்களும், ஜீவாதாரமான காற்றை உள்ளுக்கு செலுத்தி, கெட்ட சுவாசத்தை வெளியிட நாசியும் உள்ளன ; 'மூச்சில்லாத உடல் போச்சு' என்பது பழமொழி. உண்ணவும் பேசவும் வாய் முக்கியம். 'அன்னமயம் ப்ராணமயம்' ஆகையால் ஜீவன் பிழைத்திருக்க ஆகாரத்தை உட்செலுத்தும் வாயானது ஜீரணிக்க உமிழ் நீரையும் உற்பத்தி செய்கிறது. பல விதமான சப்தங்களைக் கேட்கக் காது என்ற கருவி உபயோகப்படுகிறது. நாக்கு முக்கியமான கருவியாக வாயில் அமைந்துள்ளது இவை எல்லாவற்றிற்கும் மேலாக சிரசில் உள்ள மூளை மிக சூக்ஷமமான அவயம் மானிட வர்க்கத்திற்கு இது மிக முக்கியமானது மூளை உடல் முழுவதும் நடக்கும் செய்தி அறிந்து அதற்கேற்ற அந்தந்த அவயவங்களை இயக்கும் சக்தியாகிறது. இது மின்சார நிலையத்திற்கும் தந்தி ஆபீசிற்கும்

ஒப்பானது. இந்த மூளை என்கிற 'பவர்ஸ்டேஷன்' சிறு சிறு நரம்பு என்கிற தந்திக் கம்பிகள் மூலம் உடலெங்கும் பரவியுள்ளது. ஒரு சிறு ஸ்பரிசத்தைக் கூட உடனே நரம்புகள் மூளைக்குத் தெரிவிக்கின்றன. அதற்கேற்றதுபோல் மூளை இயங்குகிறது. மூளையின் உதவியால்தான் கண், மூக்கு, காது, கை, கால் போன்ற அவயவங்கள் இயங்குகின்றன.

நம் சரீரத்திற்குள்ளேயே ப்ரம்மாண்டமான ஆலயம் உள்ளது. அதன் மூலஸ்தானம் ஹ்ருதயம். சிரசிலுள்ள ப்ரம்ம ரந்திரம் என்ற ஸஹஸ்ரார கமலந்தான் ஆலயத்தின் கோபுரம் அதற்கு மேல் ஒன்றுமில்லை. ஏழ் நிலைக் கோபுரமாம் நம் தேகத்துள் மூலாதாரம் முதல் ஆறாதாரம் கடந்து, ஏழாம் நிலையாம் த்வாதசாந்தம் என்றும் ஸஹஸ்ராரத்திற்கு மேல்' சிதாகாச வெளிதான் என்று கூறப்படுகிறது. சில ஆலயங்களில் 9,11 என்கிற கோபுர நிலைகள் கட்டப்பட்டுள்ளன. அவை நவகோடி சக்திகளையும் கடந்து அவற்றின் மேலான முக்தி நிலையாம் மோக்ஷ பதமென்னும் பதினொன்று என்ற எண்ணிக்கையில் உள்ளது. கர்மேந்திரியம் ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்தும், மனம் ஒன்றுமாக பதினோரு தத்துவங்களை கட்டுப்படுத்திய பின்னரே, பன்னிரண்டாவதான துவாத சாந்தமென்ற முடிந்த நிலையைக் காட்டுகிறது. மற்றும் சில கோபுரங்கள் ஐந்து நிலைகளுடனும் மூன்று நிலைகளுடனும் காணப்படும். ஐந்து என்பது பஞ்சேந்திரியங்களைக் கட்டுப்படுத்துவது. ஆகாமியம் ஸஞ்சிதம்

ப்ராரப்தம் என்ற மூன்றையும் அழித்தால் முக்திகிட்டுமென்பது மூன்று நிலைகளைக் காண்பிக்கிறது.

இவ்வாறாக ஆதார நிலைகளில் ஆத்மாவின் அநுபவங்களை யோசித்துக் காணும் ஆத்ம ஞானிக்கு அந்த ஒவ்வொரு நிலையிலும் உண்டாகும் அநுபவம் விளங்காமல் போகாது. அநுபவம் என்பது மற்றவர் சொல்லித் தெரிவித்தாலோ படிப்பதாலோ அறிய முடியாததாகும். மற்றவர் புசிப்பதாலோ, ஆகாரங்களை கண்களால் காண்பதாலோ அதைக் குறித்துப் படிப்பதாலோ, நம் பசி அடங்காதது போல, அவரவர்களே நிலைமைக்குத் தக்க படி சுய அறிவை உபயோகித்து ஆத்ம பசியைத் தணித்துக் கொள்ள வேண்டும்.

(1) மூலாதார சக்ரம் இச்சரீரத்திற்கு ஆதாரமானது. எப்படிப் பூமியானது அதன் மேலுள்ள அதன் மேலுள்ள தாவர ஜங்கமங்களுக்கெல்லாம் ஆதார நிலையாகையால் அதற்கு மூலாதாரமாகிறது. அதில் ப்ருதிவி தத்துவம் விளக்கப்படுவதால் மற்ற சக்கரங்களை தாங்கும் அஸ்திவாரம் போன்றது அது.

(2) ஸ்வாதிஷ்டானம் என்னும நிலை அடுத்து வருகிறது. இதுவே அக்னித் தத்துவமாகிறது. (3) மணிபூரகம் ஜலதத்துவம் என்றும் கூறப்படுகிறது. அவ்வாறு நோக்கி கையில் மண்மேல் வாழும் பயிர்களுக்கும் ஜீவன்களுக்கும் தண்ணீரும், உஷ்ணமும் வளர்ச்சிக்கு முக்கியமாகும். (4) பின்னர் அநாகதநிலை இதில் ஸ்பரிச ரூபமாக வாயுதத்துவம்

விளங்குகிறது. ஜீவன் வாழக் காற்று மிகவும் முக்கியம். (5) அதற்கு மேல் விசுக்தி என்ற ஆகாய தத்துவம் வருகிறது. இது சப்தத்திற்குக் காரணமாகிறது சப்தமின்றேல் நம்

மனசிலுள்ளதைப் பேச முடியாமலும், நம் இன்ப, துன்பம், இசை வசைகளை வெளியிட முடியாமலும் போகும். (6) அடுத்தது ஆக்ஞா சக்கரம் என்கிற உன்னத நிலை. ஆக்ஞா சக்கரம் என்பது சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தம் என்ற ஐந்து நிலைக்கு அப்பால் அவைகளுக்கு ஆதாரமான அறிவின் தத்துவமாகிறது.

அங்கு அறிவின் ஆட்சி நடக்கிறது. அறிவின் கட்டளையால் ஐந்து பூதங்களும் ஆட்டி வைக்கப்படுகின்றன. பஞ்ச பூதங்கள் பஞ்சேந்திரியங்கள் என்பன ஸ்துல ஸூக்ஷ்ம தத்துவங்களாகும். ஸ்தூலமாய் விளங்கும். பஞ்சபூதங்களின் செயலே ஸூக்ஷ்மமாய்ப் பஞ்சேந்திரியங்களில் வெளிப்படுகிறது. ஒவ்வோர் ஆதார சக்கரத்தின் அமைப்பும் மூன்று கண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மூலாதாரம் முதல் ஆக்ஞா சக்கரம் வரை இரண்டிரண்டாகப் பிரித்திருக்கிறது. (1) முதல் இரண்டும் அதாவது மூலாதாரம். ஸ்வாதிஷ்டானம் சேர்ந்து அக்னிகண்டம் என்றும், (2) மணிபூரகமும், அநாகதமும் சேர்ந்து சூர்யகண்டம் என்றும், (3) விசுத்தியும் ஆக்ஞையையும் சேர்ந்து சந்த்ர கண்டம் என்றும் பிரிக்கப்பட்டுள்ளன. இவை முறையே ருத்ரக்ரந்தி, விஷ்ணு க்ரந்தி, ப்ரம்ம க்ரந்தி எனப்படும். (க்ரந்தி என்பது

நாடிகளின் முடிச்சையும் அதனுள் பாயும் எண்ணங்களில் பூர்வ வாசனையால் ஏற்படும் சிக்கல்களையும் குறிக்கும்) ப்ரம்ம க்ரந்தி என்று கூறப்படும் இம்மூன்று நிலைகளிலும் காவல் நிற்கும் தேவதைகள், மூலாதாரம் ஸ்வாதிஷ்டானம் கடந்து, ஸ்வாதிஷ்டானத்திற்கும், மணிபூரகத்தி இடையில் மஷாருத்ர மூர்த்தியின் கட்டு காவலில் உள்ளன. இந்த இடத்தை ருத்ரக்ாந்தி என்றும் அக்னி மண்டலம் என்றும் வேதம் கூறுகிறது.

அவ்வாறே அநாகத்திற்கும் விசுத்திக்கும் இடையில் உள்ளது. சூர்யமண்டலம் அதுவே விஷ்ணு க்ரந்தி எனப்படும் அதற்கு அதிதேவதை பகவான் சூரியநாராயணன். விசுக்திக்கும் ஆக்ஞா சக்கரத்திற்கும் மேல் ஸஹஸ்ரார கமலத்தின் கீழ்ப் பாகத்திலுள்ள இடமே ப்ரம்ம க்ரந்தி என்னும் சந்த்ர மண்டலமாகிய மேலான இடமாம், ப்ரம்ம முடிச்சை விளக்கும் ப்ரம்மஸ்வருபிணியான தேவி விளங்கும் ஸ்தானம் ஸ்வாதிஷ்டானம்.

முதலிரண்டு க்ரந்திகளையும் அங்குள்ள அதிதேவதைகளின் அருளால் கடந்து மூன்றாவது நிலையாம். ஆக்ஞையில் வந்து நிற்கும் யோகியர்க்க ப்ரம்ம க்ரந்தியின் கட்டுப் புலப்படா வண்ணம் மேலிருந்து தண்ணொளி காட்டுவது சந்திர மண்டலம். அதன் காந்தியால் அவர்கள் கவரப்படுகிறார்கள். முக்கியமானதும் கடைசியானதுமான ப்ரம்ம க்ரந்தி என்ற முடியை அவிழ்க்க முயலாமல் முதலிரண்டு க்ரந்திகளிலும் அக்னி

மண்டலம். சூரியமண்டலம் அநுபவித்த மும்மல வாதனைகள் ஒழிந்து ஆக்ஞா சக்கரத்தில் ஒளிவீசும் சந்திரகிரணங்களால் வெம்மை, வாதனை நீங்கப் பெற்று குளிர்ந்த அந்நிலையை விட்டு அகல மனமின்றி, அதற்கு மேலுள்ள நித்யானந்த நிலையை நாடாமல் அங்கேயே தங்கி விடுகிறார்கள். கீழுள்ள சிரமங்கள் நீங்கினாலும் ஆக்ஞா சக்ரத்தில் காணும் அற்புதக் காட்சிகளால் அடையும் ஆத்மானந்தத்தால் தம்மை விடுகிறார்கள்.

பலகோடி ஜன்மங்களால் எதை அடைய முயன்று, பல துன்பங்களில் உழன்று, தளரா முயற்சியுடன் மேன்மேலும் ஏறிவந்து ப்ரம்ம ஸ்ருஷ்டி வசமாகாமல் பிறப்பு இறப்பற்ற நிலையாம் த்வாதசாந்தத்தின் முன் நிற்பதை அறியாமல், கடைசித் தடையாக உள்ள 'தான் வேறு, தான் காணும் பொருள் வேறு' என்ற மயக்கத்தில் அதாவது ஆக்ஞை என்ற கண்ணாடியில் காணும் தோற்றங்கள் தம் தோற்றமே என்பதனை மறந்து சுத்தஸ்படிகம் போல் பிரகாசிக்கும் ஆக்ஞா சக்கரம் என்ற கண்ணாடியில் ஆத்மஸ்வரூபிணியான ஆத்மாவைக் கண்டு அந்த அனுபவத்தில் திளைத்து, தாம் நாடிவந்த இடத்தை மறந்து யோகிகள் அங்கேயே தங்கிவிடுகிறார்கள். அஷ்டமாசித்திகளும் அளித்து, முடிந்த மேன்நிலையாம் த்வாதசாந்தத்தை அடையவிடாமல் மறுபடியும் ப்ரம்மக்ரந்தியால் கட்டுப்படுவது கடைசித் தடையாக உள்ளது.

எல்லாக்கட்டுகளையும், பற்றுகளையும் பந்தங்களையும், சித்திகளின் நாட்டத்தையும் விட்டு, ஏகாக்ர சித்தமாய் ஸுஷும்னா மார்க்கத்தில் ஓரடியும் நிறுத்தாமல் முன்னோக்கி, நிதானமாய்க் கவனித்து ஏறும் ஞானிகளுக்கு ப்ரம்ம க்ரந்தியானது கட்டுத் தளர்ந்து, ஸ்ருஷ்டியின் தளையினின்று ஜீவனை விடுவித்து, நிரந்தரஸ்தானமான த்வாத சாந்தத்தில் சேர்க்கிறது. ப்ரம்ம க்ரந்தி விட்டால் மூலாதாரத்தில் தொடங்கிய ஸுஷும்னா மார்க்கம் மேலாதாரமாம் ஸஹஸ்ராரத்தில் சென்று முடியும்.

த்வாத சாந்தமென்றது ராஜபாட்டை போன்றது. 3 க்ரந்திகளும் 3 கங்கை, யமுனை, ப்ரம்மபுத்ர ஆறுகளை போன்றவை. ஸுஷும்னா மார்க்கம் என்பது ஞானப்பாதை, ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம் விசுக்தி, ஆக்ஞை என்ற ஐந்து நிலைகள் நாடுகள் போன்றவை ப்ரம்ம க்ரந்திக்கு மேலுள்ள சந்த்ர மண்டலமே குளிர்ந்த பனிமலையான ஹிமாசலம் ஆகவும், த்வாதசாந்தம் அதன் மேலுள்ள கயிலயங்கிரியாகவும், ஸஹஸ்ராரமாம் த்வாவசாந்தத்தில் நாதம் பிந்து ஸ்வரூபமாகிய சக்தியும் சிவமும் ஐக்யமாகின்றன. கீழ் ஆதாரங்கள் ஆறும் பிந்துவாகவும், மேலுள்ள ஸஹஸ்ரார கமலம் நாதமாகவும், பிந்து நாதத்திற் கலப்பதே ஜீவப்ரம்ம ஐக்யம் என்றும், முடிந்த நிலை மோக்ஷ பதம் என்றும் பிறப்பு இறப்பு இல்லாத பேரின்ப வீடு என்றும் வேதங்கள் கோஷிக்கும் உன்னத பூமி மோக்ஷ பூமி என்றும் கொள்ளப்படும் 'நாத விந்து கலாதீ நமோ நம :' என்று

அருணகிரியார் குறிப்பது இந்த த்வாதசாந்த பதத்தையே ஆகும். 'வீராதாரா ஆறாதாரா' என்று அருணைத் திருப்புகழில் அவர் வாழ்த்துகிறார். அநுபூதியில் 'ஆறாறையும் நீத்து அதன் மேல் நிலையைபேரா அடியேன் பெறுமாறுளதோ ? என்று வேண்டுகிறார். அருணகிரிநாதர் வேண்டும். இடமாம் சந்திரவெளியே த்வாத சாந்தமென்கிற பேரின்ப வீடு. அது இறப்பு, பிறப்பு அற்ற நாடு. அங்குச் சென்ற ஜீவன் திரும்பி வருவதில்லை.

முதலாவதான மூன்று சக்ரங்களிலும் ஜீவன் உயர்ந்த நோக்கங்களை உறுதியாய் பற்ற முடிவதில்லை. அது நிலையற்றது காய்ந்த மணலை குவித்தால் சரிந்து விழுவது போல் சிந்தனையும் செயலும் நிலைத்து நிற்க மாட்டா. க்ஷேத்திரங்கள் தரிசித்தாலும் குருவின் உபதேசம் பெற்றாலும், எண்ணங்கள் முதிர்ச்சி அடையாத குழந்தை மனம் போன்ற ஒரு நிலை முதல் நிலையில் அநுபவம் மூலாதாரம் ப்ருதிவீ தத்வம் இவற்றைத் துய்ப்பது மனசை மண்ணாசைக்கு இழுக்கும் சக்தி உடையது இது. இதிலிருந்து மேல் ஆறினால் ஸ்வாதிஷ்டான சக்ரம் வருகிறது. ஸ்வாதிஷ்டானம் என்பது அக்னி தத்துவமாகையால் ஆத்ம அநுபவத்தில் ஒளி உண்டாகிறது. தன்னைச் சுற்றியுள்ள நிலைமையை உற்றுப்பார்க்க உள்ளே ஞானக்கனல் பரவி அந்த உஷ்ணம் கீழுள்ள மூலாதாரத்தில் உறைத்து அங்கு உறங்கும் குண்டலினி சக்தியைத் தட்டி எழுப்பி மேலே வரத் தூண்டுகிற

நிலை இது. இந்நிலையில் மனம் சற்று தெளிவடைகிறது. ஸுஷும்னா மார்க்கத்தில் மேலே செல்ல ஆவல் உண்டாகிறது. அதன் பிறகு மூன்றாம் நிலையான மணிபூரகம் வருகிறது. ஆதார நிலையில் மணிபூரகம் மூன்றாம்படி. அங்குஸ்வாதிஷ்டானத்தால் ஆத்மாவுக்கு உண்டான வெம்மை, அதாவது அருள் தாபம் சற்று குளிர்ச்சி அடைந்து அநுபவத்தில் ஒரு சாந்தி ஏற்படுகிறது. அமைதியுடன் இன்னும் மேலே ஏறிச் செல்ல ஆர்வம் உண்டாகிறது. அதன் பயனாக முதலில் மூலாதாரத்தில் ஏற்படும் மண், பெண், பொன்னாசை என்ற கீழ்இழுக்கும் சக்தி குறைந்து, இரண்டாவதான அக்னி தத்வத்தில் உண்டாகும் வெம்மையாம் காமக்ரோதமென்ற தாபத்ரயங்களையும், மூன்றாம் ஜல தத்துவத்தில் ஆத்மாநுபவம் மணிபூரகத்தில் வரும்போது ஆசை, இருள் அக்னி ஒளியில் மறைந்து அக்னியின் தாபமாம் அப்பு என்ற ஜலதத்வமாம் மணிபூரகத்தில் தணிவடைகிறது.

ஆக ஆரம்ப நிலையாம் மூன்று நிலைகளைக் கடக்கும் வரை அநுபவம் உறுதிப்படாது.

மூன்றாவதான மணிப்பூரகத்தில் வெம்மை தணிந்த ஆத்மா அதன்பிறகு மன உறுதியுடனும், இன்னும் மேலே ஏற வேண்டுமென்ற உணர்ச்சியுடனும், நான்காவது நிலையான அநாஹதமென்ற வாயு தத்துவத்தில் வருகிறது. அங்கு அநுபவம் உறுதி அடைகிறது. கீழே வர விரும்புவதில்லை. மலை பிரதேசத்தில் ரமணீயமான காட்சிகளும் பரிசுத்தமான காற்றும்

மனசுக்கு இதமளிக்கும், அவ்விடத்தை விட்டுக் கீழே வர விரும்பாமல் மேலே ஏறி உச்சியை அடைய விரும்பும். அதே போல் நிச்சயம் பொருளை அடைய மனம் ஆவல் மிகுந்து, கீழே அடைந்த துன்பங்களை மறந்து மேலே கிடைக்கும் ஆனந்த அநுபவத்தை அடைய விரும்புகிறது.

ஆதார நிலையில் அநாஹதம் வாயு தத்துவமாகையால் ஹ்ருதயம், ச்வாஸம் பை என்னும் சுவாஸமே காற்று என்றும் காற்று இயங்கும் ஹ்ருதய கோசம் ஜீவனுக்கு வெகு முக்கியமானதாகிறது. மேலும் ஹ்ருதயமே அறிவில் உதிக்கும் எண்ணங்களை உருவாக்கி வெளியிடுகிறது. ஈசன் இதயத்துள் வசிக்கிறார் என்பதால் ஜீவரக்ஷணத்திற்கு அவசியமான காற்று தான் கடவுள், அவர் வசிப்பது இதயகமலமென்றும் கூறப்படுகிறது. ஹ்ருதயம் ஒரு தாமரை மொட்டின் வடிவானதாம். அது கீழ்ப்படியாம் மணிபூரகமென்னும் ஜலதத்துவத்தை நோக்கி வளைந்து நிற்கும் நிலையில் சரிந்துள்ள வடிவமாய்க் காணும். எப்போது ஞான சூரியன் லலாட ஸ்தானத்தில் உதிக்கின்றானோ அதாவது ஆக்ஞா சக்ரத்தில் அறிவின் சுடர் ஆத்மாவுக்கு வெளியாகும் போது இந்த ஹ்ருதய கமலம் கீழ் நோக்கிக் கூம்பிய மொட்டின் உருவம் மாறி மேலே காணும் ஞான சூரியனைக் கண்டு நிமிர்ந்து 96 இதழ்களும் விரிந்து மலரும்.

(குறிப்பு) ஹ்ருதய கோசம் கீழ்நோக்கிய தாமரை மொட்டின் வடிவமென்பதற்குப் 'பத்மகோச ப்ரதீகாசம் ஹ்ருதயஞ்ச அதோமுகம் என்ற வேதவாக்யம் உதாரணமாகும். அறிவின் பிரசாரத்தால் 96 தத்துவங்களும் மலர்ந்து ஞான மணம் வீசுகின்றது. ஹ்ருதயத்தில் இடைவிடாது காற்று சஞ்சரிப்பது போல் ஆத்மானுபவமும் இடைவிடாது உண்டாகிறது. அதனால் சித்தம் வேறொன்றையும் செய்யாது. சதா காற்றையே உச்வாஸ நிச்வாஸம் செய்யும். மூச்சுக்காற்றை, ஹம்ஸ காயத்ரியாக அல்லது அஜபா மந்த்ரமாகவும்' உச்வாசத்தை ஸோ என்றும், நிச்வாசத்தை 'ஹம்' ஆகவும் 'ஹம்ஸஸ் ஸோஹ, மஹா மந்திரத்தை மூச்சுக்காற்றின் எண்ணிக்கையாகக் கொண்டு தினம் 21 ஆயிரம் முறை ஜபிக்கின்றது. இவ்வாறு ஓம், ஓம் என்று அடிக்கும் இதயநாடியுடன் இயங்கும் அநாஹதம் தீண்ட முடியாதது என்றும் அழிக்க முடியாதது என்றும் பொருள்படும்.

எப்படி, காற்றைத் தீண்ட முடியாதோ, தொட்டுப் பார்க்கவும், கண்களால் காணவும் முடியாதோ மற்றும் ஆகாசத்தில் சஞ்சரிக்கும் காற்றை அடக்க எவராலும் முடியாமற் போகிறதோ அதுபோல் அநாஹதம் அதன் மேலுள்ள ஆகாச தத்வமாம் நாதத்தைத் தேடி அலைகிறது. இப்படி இடையறாது தேடி அந்த ஆகாச தத்வத்தில் கலந்ததும் ஒலியாம் நாதம் உண்டாகிறது. அநாஹதத்திற்கு மேலுள்ள விசுத்தி ஆகாசதத்வம். அது நம்

கண்டஸ்தானத்தில் உள்ளது. நாதம் ஒலிக்கும் இடம் நம் கண்டமாகையால் விசுத்தி சக்ரம் நம் கண்டத்தில் உள்ளது.

இந்த விசுத்தி சக்ரத்தில் ஆத்மானுபவம் லயித்தவுடன் அடியில் மூலாதாரத்திலிருந்து உடன் தொடர்ந்து வரும் குண்டலி சக்தியானது. நாதநிலையாம் விசுத்தியில் மகுடியில் மயங்கும் நாகம் போல் விசுக்தியில் எழும் நாதத்தில் கட்டுண்டு பரவசமாய் ஆடி மகிழ்கின்றது. ஆத்மானுபவம் விசுத்தியில் நிற்கையில் அந்த அநுபவத்தை அடைந்தவர்கள் தாமும் இன்புற்று மற்றவர்களையும் மெய்மறக்கச் செய்கிறார்கள். நாத நிலையில் நிற்கும் ஞானிகள் பேசுவதே நாதமாய் ஒலிக்கின்றது. மகுடியில் மயங்கும் ஸர்ப்பம் போல் மனிதர்கள். ஞானிகளிடம் கட்டுப்பட்டு நிற்கிறார்கள். இந்த நாத நிலையைப் பற்றி ஸ்ரீ அருணகிரியார், சோலைமலைத் திருப்புகழில், 'வாதினை அடந்த வேல்விழி' என்ற பாட்டில் 'நாகமணி என்ற நாத நிலையைக் கண்டு நாடி அதில் நின்று தொழுகேனோ' என்று ஆறாதார நிலையை எடுத்துக் காட்டுகின்றார். அந்தத் திருப்புகழின் மூன்றாம் தொடரில் 'ஆதியொடு அந்தம் ஆகிய நலங்கள் ஆறு முகம் என்று தெரிவேனே' என ஆதியோடு அந்தமாகிய நலங்கள், மூலாதாரம் முதல் ஆக்ஞா சக்ரம் வரை குறிக்கப்படும். ஆறுசக்ரங்களையும் ஆறுமுகமாகக் காட்டி, அப்படிப்பட்ட ஆக்ஞா சக்ர தத்வமே 'ஆடக விசித்ரகன கோபுர முகப்பில் அருணாபுரியில் நிற்கும்

அடையாளக்காரன் என வேளைக்காரன் வகுப்பில் விளக்கிக் கூறுகிறார்.

ஜோதிமயமான அருணாபுரி என்பது மனஸ் தத்வமாம் ; ஆக்ஞா சக்ரம் இருபுருவங்களுக்கும் நடுவிலுள்ள அறிவின் ஸ்தானம், உடல் கோபுரத்தில் ஆறாம் நிலையாம் உயர்ந்த இடம் ஆக்ஞா சக்ரமாகும். நம் எண்ணங்கள் உதிக்கும் இடம் அறிவின் பிறப்பிடமான ஆக்ஞா சக்ரம். நாம் ஏதாவது நினைவுபடுத்திக் கொள்ள வேண்டுமானால் மறந்த விஷயங்களை ஞாபகத்துக்குக் கொண்டுவர ஆக்ஞா சக்ரமாம் நெற்றியில் தட்டிக் கொண்டு யோசிக்கிறோம். நம் உள்ளத்தில் மலரும் அற்புதக் கருத்துகள் ஆக்ஞா சக்ரமாம் அறிவின் ஸ்தானத்தால் மலர்ந்து, அந்தர்முகமாம் ஆக்ஞையிலிருந்து பஹிர் முகமாய் அநாஹதத்தின் (மனம்) மூலம் உருவாக்கப்பட்டு, அடுத்துள்ள ஆகாச தத்வமென்கிற விசுத்தியில் நாதமாய் (ஒலி) வெளிவருகிறது செயல் முறையில் இதை எல்லோரும் உணரலாம்.

அறிவு, ஆக்ஞா தத்துவம், மனம், அநாஹத தத்துவம் மனசை மயிலாக வைத்து ஆன தனி மந்த்ர ரூபநிலை கொண்டது. 'ஆடும் மயிலென்பது அறியேனே' என்று ஆக்ஞா சக்ரமாம் அறிவில் ஊறிவந்து மனம் என்கிற அநாஹதத்தில் உருக்கொண்டு (மயில் ப்ரணவ வடிவம், மனம் மயில் தத்துவம்) தனி மந்திரமாம் ஓங்காரம் ஆக்ஞையில் உதித்து அநாஹதத்தில் உருக்கொண்டு விசுத்தியாம் கண்டத்தில் நாதமாய் ஒலிக்கிறது.

ஓம் ஓம் என்று. இதையே திருப்புகழில் 'நாகமணி என்ற நாதநிலை கண்டு நாடி அதில் நின்று தொழுதேனே' என்று அருணகிரியார் குறிப்பிடுகிறார்.

பின்னும் நாதபிந்து வாழும் இந்த உடல் ; சகல தத்வங்களும் நம் உடற்கூற்றில் வெளியாகின்றன. யோகத்தால் அவ்வாறு ஆராயும் போது ஆறாதாரமும் பிந்து தத்வமாகவும், அதன் மேலுள்ள ஏழாம்நிலை நாத தத்வமாகவும் உணரப்படும் அப்படிப்பட்ட ஸூக்ஷ்மமான நாதபிந்து ஸ்வரூபத்தை அடைந்தும், அதை அறியாது பரம்பொருளைத் தேடி உலகெலாம் உள்ள புண்ணிய க்ஷேத்திரங்கள், நதிகளை நாடிச் சென்று உண்மையைக் காணாது கலங்கினேனே என்று வருந்துகிறார் அருணகிரியார்.

ஆக்ஞா சக்ரமாம் அறிவுக்கும் அப்பால் உள்ள இடமே சுத்த சைதன்ய நிலை ; நாத பிந்து கலாதீதமான இடம். ஜாக்ர ஸ்வப்ன, துரிய, துரியாதீதம் என்று கூறப்படும் த்வாதசாந்தபதம் அதீதம்-அதாவது கூறமுடியாதது. வாக்குக்கும் மனசுக்கும் எட்டாத நிலை ; அறிவுக்கும் அப்பால் உள்ள ஆனந்த நிலை நான்கு பாதமாய் விளக்கிக் கூறும் மாண்டுக்யோப நிஷதத்தின் முடிந்த கருத்தாம் மோனநிலை. ஆக்ஞா சக்ரம் வரையல் காண்பதையும் அறியும் அநுபவங்களையும் அங்குள்ள அறிவின் பரிகாசத்தால் உணர்ந்தும், உற்றுப் பார்த்தும் உரைக்க முடியும். அதன்மேல் உள்ள ஸஹஸ்ரார கமலமாம் த்வாதசாந்தத்தை அறிவு

எட்டியவுடன் அங்குள்ள பரமாத்ம ஜோதியில் கீழாதாரமாம் குண்டலினியிலிருந்து கிளம்பிய ஞானாக்னி மேலா தாரமாம் த்வாதசாந்தமென்ற உச்சிக் கமலத்தில் ஒளிரும் ப்ரம்ம ஜோதியில் ஸுஷும்னா நாடி வழியே ஏறிச் சென்று ஆக்ஞா சக்ரத்தில் வெகு தீக்ஷண்யமாகி அந்த ஞானக்கனல் அதன் மேலுள்ள ஸஹஸ்ராரத்தில் தாக்கி அப்பரஞ்சுடரில் ஐக்யமாகிறது.

அந்த ஏழாம் நிலையான த்வாதசாந்தமே முடிவான இடம். முடிந்த நிலையை அடைந்த மஹாத்மாக்கள் தான் 'அது' ஆகும் தன்மையடைந்து, அதில் கலந்துவிடுகிற படியால் 'கண்டவர் விண்டிலர்' என்றும் 'சொல்லற்ற இடம் என்னும் குறியைக் குறியாது குறித்தறியும் நெறியை அநுபவத்திற் கண்ட ஆத்மஞானிகள், தான் அதுவான தன்மையைக் கூறாது குறிப்பிடுகிறார்கள்.

அநுபூதி மூலமாகவே அனைத்தையும் கடக்க, வழிகாட்டிகளாக அமைந்த ஜீவன் முக்தர்கள் காணும் இடமாம் ஏழாவது நிலை ஆதார வழியின் முடிவான இடமாம். அதற்கு மேல் அறிந்து உரைக்கவும், அனுபவித்து உணரவும் ஒன்றுமே இல்லை. அகண்டப் பரவெளி, சிதாகாசம், கர்மக் கலப்பற்ற பரிசுத்தமான ஞானபூமி, பேச்சற்ற மோன நாடு, பேரின்ப வீடு என்றெல்லாம் வர்ணிக்கப்படும் கைவல்ய பதமே. ஆறாதாரத்திற்கும் அப்பாலுள்ள த்வாதசாந்தம். 'ஆறாரையும் நீத்து அதன் மேனிலையை பேரா அடியேன் பெறுமாறுளதோ' என்று உருகிக்

கரைந்து கண்ணீர் விட்டுக் கதறி அருணகிரியார் வேண்டுமிடம் நாதபிந்து கலாதீதமான மோக்ஷ ஸாம்ராஜ்யமே த்வாதசாந்த பதம். 'நாதபிந்து கலாதி' என்று அருணகிரியார் குறிக்கும் பிந்து தத்வமானது, மூலாதாரம் முதல் ஆஞ்ஞை வரையிலுள்ள ஆறு தத்துவங்களும் பிந்துவாக அதன் மேல் உள்ள ஏழாவது நிலை நாதமாகவும் குறிப்பிடப்பட்டு அனுபவ முதிர்ச்சியால் ஆறாதாரங்கடந்து, பிந்துவாம் ஆத்ம ஜோதியை ஏழாம் நிலையாகிய நாதமாம் எட்டாப் பதத்தில் சேர்ப்பதே 'நாத பிந்து கலாதி' யான மோக்ஷ மெய்தல் பிந்து நிலையான ஆறாதாரங் கடந்த பின்னரே நாத தத்வமான ஸஹஸ்ராரத்தில் பிரவேசிக்க முடியும்.

பிந்துவை நாதத்தில் கலப்பதே ஜீவ ப்ரம்ம ஐக்யம். எதை அடைந்தால் மறுபடியும் திரும்பி வர முடியாதோ அப்படிப்பட்ட ப்ரம்ம ஸாயுஜ்யம் என்ற பிறப்பு-இறப்பு. இன்பம்-துன்பம், இரவு பகலற்ற ஏகாந்தமான இன்ப நிலை, முடிந்த நிலையாம் த்வாதசாந்தம் ; இதற்கப்பால் எக்காலத்திலும் வேறு ஒன்றும் கிடையாது. நம் தேகத்தில் சிரஸுக்கு மேல் ஓர் அவயவமும் இல்லை. அது போல் த்வாதசாந்தத்திற்கு மேல் ஒன்றுமில்லை. அடி, முடிவு அற்ற ஆதிப்பரம் பொருள், அணு பரமாணுக்குள் நின்றும், வெளி நின்றும் அண்டசராசரமங்கும் வியாபித்துள்ளது.

இந்த மனித தேகம் பெற்றவர் யாவரும் ஜீவன் உள்ள போதே உறுதியாய் முயன்று பகுத்தறிவை உபயோகித்து ஆத்ம

விடுதலைக்கு முயற்சி செய்ய வேண்டும். இறந்த பின் எய்தும் விதேஹ முக்தியை எண்ணாது, ஜீவன் உள்ளபோதே அடையும் சாந்தி நிலையையே ஜீவன் முக்தி எனும் மோக்ஷ நிலையாக அறிந்து, இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ என்ற உண்மையை உணர்ந்து, ஜீவன் முக்தி நிலையை அடைய முயற்சி செய்ய வேணும் ; இம் முயற்சியில் முயன்று எல்லா தடைகளையும் சமாளித்து, பயப்படாமல் கருத்து தளராமல் சமாளித்து மேலே கடந்து போகும் ஞானிக்கு கைவல்ய பதநிலை காத்திருக்கிறது. குருபக்தி, தெய்வபக்தி, உறுதி, ஊக்கம் தன்னலமின்மை, தற்புகழ்ச்சியின்மை, தயை முதலிய நற்குணங்களை கைப்பிடித்து, சத்குரு சரணம் பணிந்து போற்ற வேண்டும் நாமஜபம், தியானமென்ற

பலமானதடியை ஊன்றிப் பக்தி, பணிவு என்ற பாதக்குறடு அணிந்து பகுத்தறிவின் ஒளியால் ஆறு நிலைகளைக் கடந்து (ஆறுநிலை என்பதை காமம், க்ரோதம் மதம் மாத்ஸர்யங்களாகவும் குறிப்பதுண்டு) மேலுள்ள ஏழாம் நிலையை சாந்தபதமாம் ஜீவன்முக்தி என்ற மோக்ஷபதத்தை அறிவதே ஆறறிவு அளித்த ஆண்டவனுக்கு நாம் ஆற்றும் கடமை.

இவ்வாறு இந்த உடலைச் சகல தேவாலயங்களாகவும் பிறர்க்கு நாம் செய்யும் பணிகளுக்குப் பிரதிபலன் கோராமல் தவப்பணிகளாகவும் கருதி, சகலஜீவராசிகளிடமும் தயையுடன்

நடப்பதே யோகம். ஆத்ம விடுதலைக்க, சதா ப்ரம்ம தியானத்துடன் இருப்பது ஞானம், இவைகளை எண்ணி வாழ்பவர்களே ஜீவன்முக்தி என்ற பிறப்பு இறப்பற்ற நிலையை அடையக் கூடியவர்கள் இப்படிப்பட்ட ப்ரம்ம ஸாயுஜ்ய பதமாம் த்வாத சாந்தத்தை, ஆறு ஆதாரச் சக்கரங்களையும், மூன்று க்ரந்திகளையும், மூன்று மண்டலங்களையும் ஆக இந்த பன்னிரண்டு ஸ்தானங்களையும், கடந்து இவைகளுக்கெல்லாம் முடிவானது எந்த ஸஹஸ்ரார கமலத்தில் இவை ஏற்படுகிறதோ அந்த முடிந்தநிலையே த்வாதசாந்தமாகும். சித்த சுத்தியின்றி, சித்தியை வேண்டிக் குண்டலினி சக்தியைத் தூண்டி எழுப்புவோர்க்கு, அந்தச்சக்தி பயங்கரமாய்ச் சீறி வரும் பாம்பாக மாறும்.

ஆத்ம சக்தியை வேண்டி மனதில் எந்த இச்சைக்கும் இடம் அளிக்காமல், அஷ்டமாசித்திகள் அற்பமென அறிந்து மேலுள்ள முக்தியை முக்கியமாய்க் கருதி மன உறுதியுடன் முன்னேறும் ஆத்ம ஞானிக்கு, குண்டலினி சக்தி தானே தொடர்ந்து முன் சென்று நாகமணி என்ற நாத நிலையைக் கடந்து ஜோதி உணர்கின்ற வாழ்வு அளிக்கின்றது. அதில் தங்காமல் இன்னும் மேலேறினால் மேலிருக்கும் சந்திர மண்டலத்திலிருந்து பெருகி வரும் அம்ருத தாரையில் மூழ்கி, மூலாதாரத்திலிருந்து வழிகாட்டி வந்த குண்டலினி சக்தி, மேலாதாரத்தில் பராசக்தி ஆகிய தன்னிடமுள்ள உயர்ந்த நாகரத்னமாம் பிறப்பில்லாத

பேரின்பத்தை அந்த ஆத்மஞானிக்குப் பரிசாக அளிக்கிறது ; பஷ்முடன் ஏற்றுக் கொள்கிறது. அந்நிலை தான் 'தத்வமஸி' அதாவது 'தான் அதுஆவது' என்ற மஹா வாக்யம். இவ்வாறு ஸ்தூலமாய் அண்டத்தில் உள்ள அத்தனை ஸ்ருஷ்டி தத்வமும் ஸூக்ஷமமாய் பிண்ட சரீரத்திலும் ஆறாதாரத்தில் காட்டப்படும். ஜீவன் முக்தியே முடிந்த மோக்ஷநிலை என்பதை ஸ்ரீ ஜகத்குரு சங்கர பகவத் பாதர் சௌந்தர்யலஹரியில் அற்புதமாக 99 ஆம் ச்லோகத்தில் எடுத்துக் கூறி இருக்கிறார்.

"ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா விதிஹரிசபத்நோ
விஹரதே
பாதிவ்ரத்யம் சிதிலயதி ரம்யேண வபுஷா
சிரஞ்ஜீவந்நேவ க்ஷபித பசுபாச வ்யதிகர :
பரநம்தாபிக்யம் ரஸயதி த்வத் பஜனவான்"

என தேவியை உபாஸிப்பவர்கள் ஜீவன் முக்தர்கள் ஆகிறார்கள் என்று விளக்கமாய்க் கூறி இருக்கிறார்கள். பின்னும் பஜ கோவிந்தத்தில்,

"ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா விதிஹரிசபத்நோ
விஹரதே
பாதிவ்ரத்யம் சிதிலயதி ரம்யேண வபுஷா
சிரஞ்ஜீவந்நேவ க்ஷபித பசுபாச வ்யதிகர :

பரநம்தாபிக்யும் ரஸயதி த்வத் பஜனவான்"

என் தேவியை உபாஸிப்பவர்கள் ஜீவன் முக்தர்க்ள ஆகிறார்கள் என்று விளக்கமாய்க் கூறி இருக்கிறார்கள். பின்னும் பஜ கோவிந்தத்தில்,

'ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்

நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்

நிர்மோஹத்வே நிச்சல (சித்தம்)

நிச்சல சித்தே ஜீவன் முக்தி

என்று ஸ்பஷ்டமாக ஜீவன் முக்தி தான் சிறந்தது, அதுவே முடிவான நிலை என்கிறார். நிச்சல சித்தம் என்ற எண்ணங்கள் எல்லாம் நசித்த பிறகே ஜீவன் முக்தி என்றும், அவ்வாறு உதிக்கும் இடமாம் ஆக்ஞா சக்ரத்தைத் தாண்டினால் எண்ணமற்ற நிச்சல சித்தம் அடையும். ஆக்ஞைக்கு மேலுள்ள ப்ரம்ம க்ரந்தியாம் படைப்பில் சிக்காதவர் ஜிவன் முக்தி என்ற முடிந்தநிலை எய்த முடியுமென்று தெளிவாய்க் கூறியுள்ளார்கள். சரீரம் மறைந்தபின் அநுமானித்துக் கூறும் விதேஹ முக்தி முடிந்தநிலை அல்ல. ஜிவன் முக்தி நிலை எய்திய மஹாத்மாக்கள், கர்மங்களை ப்ராரப்த கர்மங்களை அநுபவித்தும் சாதாரணமாய் உலகில் அஞ்ஞானிகள் போலவே கடமைகளைச் செய்தும் சுக துக்கங்களிலே ஈடுபட்டு இருப்பது போல் காண்பது ஏன் ? என்ற கேள்விக்கு விடை மேற்கூறிய 'பஜகோவிந்த' ச்லோகத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

சத்சங்கத்வே நிஸ்ஸங்கத்வம் என்பதற்கு நம் மனசில் எப்போதும் நல்ல எண்ணங்களே நிலைக்கச் செய்வது என்பது பொருள். அதுவே சாது சத்சங்கமாகும். அப்படிப்பட்ட சத் சங்கத்தால் மனம் வேறு ஆசா பாசமாகிய எண்ணங்களில் ஈடுபடாமல் நிஸ்ஸங்கமாய்த் தனித்து நிற்கிறது. மனம் ஆசாபாசம் மறந்து ஆத்ம சாந்தியுடன் நிஸ்ஸங்கத்தில் நின்றால் 'நிர்மோஹத்வம்' என்ற எதிலும் பற்றற்ற நிலை உண்டாகிறது. சரீரம் கடமைக்காகக் கர்மாவைச் செய்தாலும் மனம் அதன் பலனை அடைய விரும்புவதில்லை. அப்படிக் கர்ம பலனை விட்ட 'நிர்மோஹத்வம்' உண்டானவர்க்கு உடனே நிச்சல சித்தம் உண்டாகிறது. எதற்கும் சஞ்சலப்படாத தன்மை சலிக்காத நிலையே ஜிவன் முக்தி.

பல்லியின் அறுந்து விழுந்த வால் சற்று நேரம் துடிப்பதுபோல் (வால் போனாலும் பல்லி உயிர் வாழும்) கர்மத்தால் துடிப்பது போல் காணும் ஜீவன் முக்தர்கள் சரீரத் துடிப்பன்றி விளங்குவார்கள். அவர்களது சித்தம் துடிப்பதில்லை; பின்னும் அஞ்ஞானிகளைப் போல் எவ்வாறு கர்மாக்களையும், பணிகளையும் பாங்காய்ச் செய்கின்றார்களே என்றால் ஸ்ரீ ஆசார்யர்கள் அதற்கும் தகுந்த சமாதானம் கூறுகின்றார். ஜீவன் முக்தருடைய சரீரம் குயவனுடைய சக்ரத்திற்கு ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது. குயவனுடைய சூளையில் சட்டிப்பானை செய்வதற்கு வண்டிச் சக்கரம் போல்ஒரு சக்கரம் காணப்படும்.

இந்தச் சக்கரத்தை பாண்டம் உருவாக்கும் முன் கையினால் விசையாகச் சுற்றி விட்டு விட்டால் அந்த வேகத்தில் அது வெகு நேரம் சுற்றும். அதில் குயவன் தான் கருதிய உருவங்களைக் கையால் பிடித்து உருவாக்குவான். அதைப் போல் சரீரமும் அதற்குக் காரணமான அஞ்ஞானம் அழிந்த பின்பும், ப்ராரபத சேஷத்தால் அதாவது முன்செய்த வினை தீருமளவும் இயங்குகிறது. அஞ்ஞானத்தை விட்ட ஆத்ம ஞானிக்கும் கர்மத்தைத் துறந்த சந்நியாசி, அஞ்ஞானம், கர்மபந்தம் இவற்றை விட்டாலும் முன்செய்த வாசனா பலத்தால் கடமைகளைச் செய்வதாய்க் காண்கிறார்கள்.

முதல் மூன்று சக்ரங்களிலும் அநுபவம் சித்தி அளிக்கும் சக்தி உடையது. நான்காவதாம் அநாஹதத்தில் சித்தி பெற்றால் அதாவது ஆத்மாநுபவம் அநாஹதத்தில் நிற்கையில் சித்தி பெற்றால் (சரீரத்தில் ஆத்மா பிரிந்தால்)-ஸாலோக மோக்ஷம் அடைவார்கள் (பரம் பொருள் வசிக்கும் இடம்) ; விசுத்தி சக்ரத்தில் முக்தி அடைந்தால் ப்ரம்ம ஸ்வரூபத்துக்கு வேறானதாயிருந்தாலும், ப்ரம்மதேஜஸுடன் விளங்கி ப்ரம்மத்தின் சாயலே ஆகி விடும் நிலை கிடைக்கிறது.

ஸாரூப்ய முக்தியாம் ஸாலோக, ஸாமீப, ஸாரூப முக்தி முடிந்த நிலையான முக்தியாகாது. அதற்கு ஓர் எல்லை உண்டு. ஸகல துக்கங்களும் இம் மூன்று மோக்ஷ நிலையில் நசித்து விட்டாலும் பரிபூர்ணமான ஆனந்தம் இங்கு இல்லை. முடிவுற்ற

பேரின்பம் இம்மூன்றுக்கும் அப்பாற்பட்ட த்வாதாசாந்தபதமே ஸாயுஜ்யமென்று கூறப்படுகிறது ; இந்த ஸாயுஜ்ய பதவி ப்ரம்மாந்த்ரமென்ற ஸஹஸ்ராரத்தில் நாதபிந்து லயமாம் ஜீவப்ரம்ம ஐக்யமென்ற நிலையை அடைகிறது.

மாதவங்கள் செய்தாய் மாதா உன் மகன் குகன்

துரிதகாலம்

அயில் வேலேந்தி உன் அருகினில் அமர்ந்திட
ஆனைமுகனும் அன்பர்க்கருள் வழங்கிட
சைலாதிபன் திருமகளாகிய உந்தன்
சன்னிதி கண்டவர்க்கின்னலுமுண்டோ - கலியுக

ராகம்: ஆரபி தாளம்: ஆதி

பல்லவி

கற்பகமே வருவாயே நற்புகழ்
மயிலையின் நாயகி உமையே - கற்பகமே

அனுபல்லவி

பற்பல விதமுன்னைப் பாடிப் பணிந்தேன்
சொற்பிழை பொறுத்தருள் சிற்பரம் பொருளே - கற்பகமே

சரணம்

நாதலயத்துடன் நாளும் உன் துதிபாட
நாடெங்கிலும் உந்தன் அருள் நாமம் ஒலித்திட
ஆதரவுடன் உந்தன் அடியாரெல்லாம் கூடிட
ஆதிபராசக்தி அன்னை நீ மகிழ்ந்திட

துரிதம்

பாத கமலங்களில் சிலம்புகள் ஆர்த்திட
பரிவுடன் கரமலர் பக்தரை அழைத்திட
மாதவமுனிவர்கள் மறைகளை ஓதிட
மலர்மகள் கலைமகள் பணிந்துன்னை போற்றிட - கற்பகமே

ராகம்: கமாஸ் **தாளம்: ஆதி**

பல்லவி

காணக் கிடைத்திடுமோ எந்தன்
கற்பகமே உந்தன் கமல பாத சேவை - காண

அனுபல்லவி

வீணனாய் வாழ்வெல்லாம் விதியுடன் போராடி
விழலுக்கிறைத்த பேதை விடுதலைப் பெற உன்னைக் - காண

சரணம்

எத்தனை பிறவிகள் எடுத்தெடுத்திறந்து நான்
எமனிடம் அயனிடம் இடரடைந்தேன்
உத்தமமான உன் திருவருள் தேடாமல்
உலகாசையில் மயங்கி உன்னடிகள் மறந்து

துரிதம்

பித்தம் பிடித்தலையும் மர்கடம் தனக்கு
பேயும் பிடித்தது போல ஆடி அயர்ந்தேன்
சித்தமிறங்கி என்னை காத்தருள்வாய் சிவ
சக்தி உனைப் பணிந்தேன் முக்தி அடைந்திட - காண

ராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

கண்டேன் என் கற்பகத்தை கண்கள் குளிர்ந்திட
கொண்டேன் பேரானந்தம் இன்று - கண்டேன்

அனுபல்லவி

பண்டே பக்தர்களெல்லாம் பாடிப் பணிந்து போற்றி
கொண்டாடும் தேவி எங்கள் குலதெய்வம் தன்னை நான்
- கண்டேன்

சரணம்

கயிலையினும் சிறந்த மயிலாபுரம் தனில்
ஒயிலாய் கபாலியுடன் உல்லாசமாய் அமர்ந்து
அயிலேந்தும் பாலனை ஆனைமுகனுடனும்
உயிராய் உள்ளத்தில் ஒளி வீசும் பரஞ்சுடரை - கண்டேன்

ராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

கற்பகமே உந்தன் அற்புத தரிசனம்
கண்டால் கலி தீரும் என் தாயே

அனுபல்லவி

அற்பன் நின்மகிமையை அறியாமல் அவனியில்
பற்பல துன்பங்கள் பட்டயர்ந்தேன் தாயே

சரணம்

கருதிய தளிக்கும் கற்பகத் தருவே
கவலைகள் நீக்கிடும் கருணையின் உருவே
திருமகள் பணிந்திடும் பெருஞ் செந்திருவே
தீனஜனரக்ஷகி என் சத்குருவே ||

துரிதம்

மருவிலா மனதில் தோன்றிடும் மதியே
மயிலாபுரம் தனில் வளர் நவநிதியே
உருவிலா தனங்கனை அழித்தவர் சதியே
உனதிரு தாள்மலர் எனக்குயர் கதியே - கற்பக

ராகம்: காபி தாளம்: ஆதி

பல்லவி

என்றுன்னை தரிசிப்பேன் என்றேங்கினேனம்மா
இன்று கண்குளிர கண்டேன் கற்பகமே

அனுபல்லவி

அன்றொரு நாள் அர்த்த ஜாமத்தில் வந்தெனக்கு
அருள்வாக்களித்து உந்தன் அடிமலர் காட்டினாய் - என்றுன்னை

சரணம்

கற்றறிவில்லாத கசடனாகிய என்னை
பற்பல மொழிகளில் பாங்குடனே பாடவைத்தாய்
அற்புதம் என்றறிவில் சிறந்தவர் வியந்திட
நற்றவத்தோர் கேட்டு நலமென்று ஏற்கவைத்தாய் - என்றுன்னை

ராகம்: பேகடா தாளம்: ஆதி

பல்லவி

கருணையுடன் அழைத்து காக்ஷிதந்தாய் உனக்கு
கைமாறு என்ன செய்வேன் - கற்பகமே

அனுபல்லவி

வருணனைக் கடங்கா உன் வடிவழகைக் காட்டி என்
வல்வினை தீர்த்தாயே வரமருள்வாய் நீயே - கருணை

சரணம்

தருணமிது வாவென்று தயவுடன் அழைத்துந்தன்
தரிசனமும் தந்தாய் தாயே தயாநிதியே
அருணதள பாதங்களில் அபயம் அளித்தாண்ட
அருள் தனக்கிணையுண்டோ ஆதிபராசக்தி நீயே - கருணை

ராகம்: கரகரப்ரியா

தாளம்: ஆதி

பல்லவி

கருணாகரி ஸ்ரீ கற்பகாம்பிகையே
கடைக்கண்ணால் பாரம்மா தேவி

அனுபல்லவி

சரணாகதி என்றுன் சன்னதியை அடைந்தேன்
தருணமிது தாயே தயை புரிவாயே - கருணாகரி

சரணம்

அல்லும் பகலும் மனம் உன் அடிமலர்களை நாடி
ஆனந்தமாய் உந்தன் அருள் நாமங்கள் பாடி
சொல்லுருவால் உந்தன் சூக்ஷ்ம ரூபத்தில் கூடி
சோகமெல்லாம் மறந்து ஸோஹமதாகிட

சரணம்

முல்லை முறுவலுடன் முகமதி காட்டி
முருகனையும் திரு இடையினிற் காட்டி
இல்லை எனாதருள் தரும் கரம் காட்டி
இருவினைகளும் எனைத் தொடராமல் ஓட்டி - கருணா

ஸர்வ மங்கள ராஜ ராஜேஸ்வரி (நங்கைநல்லூர்)

ராகம்: அம்ருதவர்ஷிணி

தாளம்: கண்டசாபு

ஈறாறு தளம் கொண்ட ஹ்ருதய கமலம் தன்னில்
பேறாதிருந்து உயிரை காக்கின்ற காற்றும் நீயே
ஓறாயிரம் இதழ் உச்சி கமலம் தன்னில்
ஆறாய் பெருகும் அம்ருத வர்ஷிணியே (ஜனனி)

பல்லவி

ஆனந்த மென்ன சொல்லுவேன் அருட்பெரும்

ஜோதியுள் அம்பிகை தோன்றிய (ஆனந்தம்)

அனுபல்லவி

ஊனக் கண்களால் கண்டு உள்ளம் மகிழ்ந்திடவும்
தான் அதுவாகியே தத்வ மஸியான (ஆனந்தம்)

சரணம்

ஸர்வ மங்களையான ராஜ ராஜேஸ்வரி
சரணம் அடைந்தவரை காக்கும் க்ருபாகரி
சர்வமூட மென்னை காத்தருள் புரிந்திட
சர்வ ஸௌந்தர்ய வடிவுடன் தோன்றிய (ஆனந்தம்)

ஸ்ரீதேவி நவசக்ர கீர்த்தனைகள்

ராகம்: கௌளை **தாளம்: ஆதி**

பல்லவி

சர்வ மங்கள ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி
ஸந்ததம் பாதுமாம் ஸர்வஜீவேஸ்வரி (சர்வ மங்கள)

அனுபல்லவி

சர்வ வசீகர த்ரை லோக்ய மோஹன
சக்ரநிவாஸினி ஸாம்ராஜ்ய சாலினி (சர்வ மங்கள)

சரணம்

ஸ்ரீபுர நகர விஹார நிவாஸினி
ஸ்ரீ சக்ரார்ச்சித பீட பிரகாஸினி
ஸ்ரீ காமேச்வர ஹ்ருதய விலாஸினி
ஸ்ரீ வித்யா மந்த்ரஸ்வரூபிணி சின்மயி (சர்வ மங்கள)

ராகம்: காபி **தாளம்: ஆதி**

பல்லவி

சர்வ மங்கள ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி

ஸரஸி ஜாஸனி ஸேவிதே - அம்ப (சர்வ மங்கள ஸ்ரீ)

அனுபல்லவி

ஸர்வாஸாபரி பூரக சக்ர
வாஸ ப்ரியே வரதாயகி வைஷ்ணவி (சர்வ மங்கள ஸ்ரீ)

சரணம்

ஸுதா ஸாகர மத்யகதே அம்ப
சிந்தாமணி க்ருஹ வாஸினி ஹம்ஸினி
உதாரகுண பூஷணி மஞ்ஜு பாஷிணி
ஓங்கார ரூபிணி ஓ ஜகத்காரணி (சர்வ மங்கள ஸ்ரீ)

ராகம்: ஹிந்தோளம் **தாளம்: ஆதி**

பல்லவி

சர்வ மங்கள ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி
சர்வபாப சமனி ஜனனி (சர்வ மங்கள)

அனுபல்லவி

சர்வ ஸம்க்ஷோபண சக்ர ஸ்வாமினி
சர்வ வேதவேதாந்த ஸ்வரூபிணி (சர்வ மங்கள)

சரணம்

ஷோடஸாக்ஷர மந்த்ர ரூபிணி கல்யாணி
ஷோடச கலாசந்த்ர மண்டல வாஸினி
பாடலி குஸுமார்ச்சன ப்ரியே பார்வதி
தாடங்க ஸ்ரீ சக்ர தாரிணி பவஹாரிணி (சர்வ மங்கள)

ராகம்: நாட்டை குறிஞ்சி **தாளம்: ஆதி**

பல்லவி

சர்வ மங்கள ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி

சர்வலோக ஜனனி அம்ப

(சர்வ மங்கள)

அனுபல்லவி

சர்வ ஸௌபாக்ய தாயக சக்ர
வாஸினி ஸுவாஸினி வரதாயகி அம்ப (சர்வ மங்கள)

சரணம்

சதுர் புஜா லங்க்ருத பாசாங்குசதரே
அதிமதுர சாப பஞ்ச குஸமஸரே
மதுரிபு ஸோதரி மஹிஷ ஸம்ஹாரே
ரதிகுரு சங்கர பூஜிதாகாரே (சர்வ மங்கள)

ராகம்: பைரவி **தாளம்: ஆதி**

பல்லவி

சர்வ மங்கள ஸ்ரீ ராஜராஜேஸ்வரி
சரணம் ஜெகதீஸ்வரி அம்பா (சர்வ மங்கள)

அனுபல்லவி

சர்வார்த்த சாதக சக்ர நிவாஸினி
சர்வாபீஷ்ட ப்ரதாயினி பாவனி (சர்வ மங்கள)

சரணம்

நவ சக்தி நவாக்ஷரி நவபக்தி ப்ரியகரி
நவ யௌவன ஸுந்தரி நதஜன சுபகரி
நவக்ரஹ தோஷாதி பீடாபரிஹரி
நவ ஆவரண பூஜப்ரியகரி சங்கரி (சர்வ மங்கள)

ராகம்: ஹம்ஸாநந்தி **தாளம்: ஆதி**

பல்லவி

சர்வ மங்களா ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி
ஸகல புவனேச்வரி அம்ப (சர்வ மங்களா)

அனுபல்லவி

சர்வ ரக்ஷாகர சக்ராதி காரணி
சர்வ ஸம்மோஹினி ஸர்வாந்தர்யாமினி (சர்வ மங்களா)

சரணம்

ப்ரம் மானந்தமய மணித்வீப வாஸினீ
பிந்து த்ரிகோண ஸ்ரீசக்ர ஸஞ்சாரிணீ
ப்ரம்மா விஷ்ணு மஹேச்வர ரூபிணி
ப்ரம்மத்யான ஸுகம் தேஹி மனோன்மணி (சர்வ மங்களா)

ராகம்: நாத நாமக்ரியா **தாளம்: சாபு**

பல்லவி

சர்வ மங்களா ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி
சரணாகத ரக்ஷகி அம்ப (சர்வ மங்களா)

அனுபல்லவி

சர்வ ரோக ஹர சக்ர நிவாஸினி
ஸகல லோக ஜனனி பவபஞ்சனி ரஞ்சனி (சர்வ மங்களா)

சரணம்

கனகாத்ரி வாஸினி கஞ்ச தள லோசனி
தினகர கோடி ப்ரகாசினி ஹம்ஸினி
ஸனகாதி முனி பூஜித விஸ்வாஸினி
அனகாத் புதசாரித்ர விலாஸினி (சர்வ மங்களா)

ராகம்: மோஹனம் **தாளம்: ஆதி**

பல்லவி

சர்வ மங்களா ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி
சரணம் கருணாலயே சித்கலயே (சர்வ மங்கள)

அனுபல்லவி

சர்வசித்தி ப்ரத சக்ர நிவாஸினி
பர்வத நந்தினி பாஹி பவானி (சர்வ மங்கள)

சரணம்

இக்ஷு கோதண்ட பாசாங்குச ஸுமஸரே
அக்ஷய வரப்ரத அபய கமல கரே
வக்ஷஸ்தலங்க்ருத ஸ்துதி மாலாதரே
ரக்ஷது ராஜ கோபால வரப்ரதே (சர்வ மங்கள)

ராகம்: மத்யமாவதி **தாளம்: ஆதி**

பல்லவி

சர்வ மங்களா ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி
சகல புவன ஜனனி அம்பா (சர்வ மங்கள)

அனுபல்லவி

ஸர்வானந்தமய சக்ர ஸஞ்சாரிணி
ஸர்வ பூதாத்மிகே ஸ்ரீ சக்ர நாயிகே (சர்வ மங்கள)

சரணம்

நவத்வீப பத்மவனே சிந்தாமணி ஸதனே
நவயௌவன ஸௌந்தர்ய நளினகாந்தி வதனே
நவரத்னமய ஸ்ரீ சக்ரஸிம் ஹாஸனே
நவ ஆவரணஸ்துதி மாலிகாபரணே (சர்வ மங்கள)

ஸுமேரு வாஸினி ஸுவாஸினி நளினி

ரமா ஸரஸ்வதி ஸஹித உல்லாஸினி
ஹிமாசலேச்வரி குமார ஜனனி
நமாமி மேதவ பாதாம்புஜம் தேஹி (சர்வ மங்கள)

பிரார்த்தனை ஸ்லோகம்

த்ருசா த்ராகீயஸ்யா தரதலித நீலோத்பவ ருசா
த்வீயாம்ஸம் தீனம் ஸ்நபய க்ருபயா மாமபிசிவே
அநேனாயம் தன்யோபவதி நசதேஹாணி ரியதா
வனே வா ஹர்ம்யே வா ஸமகர நிபாதோ ஹிமகர:
(ஸௌந்தர்ய லஹரி 57வது ச்லோகம்)

ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா விதிஹரி ஸபத்நோ விஹரதே
ரதே: பாதிவ்ரத்யம் சிதிலயதி ரம்யேண வபுஷா
சிரம் ஜீவன்நேவ க்ஷபித பசுபாச வ்யதிகர:
பராநந்தாபிக்யம் ரஸயதி ரஸம் த்வத்பஜநவான் ||
(ஸௌந்தர்ய லஹரி 99வது ச்லோகம்)

ஷடாதாரசக்ர கீர்த்தனைகள்

சர்வாதாரசக்ர த்யான ச்லோகம்

மஹீம் மூலாதாரே கமபி மணிபூரே ஹுதவஹம்
ஸ்திதம் ஸ்வாதிஷ்டானே ஹ்ருதி மருதம் ஆகாசம் - உபரி
மனோபி ப்ரூமத்யே ஸகலமபி பித்வா குலபதம்
ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே ||
(ஸௌந்தர்ய லஹரி 9வது ச்லோகம்)

ஜலதிதி குணித ஹுதவஷ திக்ஷக்ஷாதினேஸ்வர கலாஸ்வ னேயதனை: |
நளினை மகேஷி கச்சசி ஸர்வோர்த்த கரகமலதல மமலம்.
(மூகபஞ்சசதி 96வது ச்லோகம்)

மூலாதாரசக்ர த்யான ச்லோகம்

மூலாதாரஸ்த பத்மே ச்ருதி தல லஸிதே
பஞ்சவனக்த்ராம் த்ரிநேத்ராம்
தூமாபா மஸ்தி ஸம்ஸ்தாம் ஸ்ருணி மபி

கமலம் புஸ்தகம் ஜ்ஞானமுத்ராம் |
பிப்ராணாம் பாஹுதண்டை: ஸுலலித
வரதா பூர்வசந்த்யாவ்ருதாம் தாம்
முத்கான்னாஸக்த சித்தாம் மதுமத
முதிதாம் ஸாகினீம் பாவயம: ||

ராகம்: ஆரபி **தாளம்: ஆதி**

பல்லவி

மூலா தாரத்தில் வாழும் குண்டலினி சக்தியே
மோக்ஷ கதவைத் திறவாய் ஸாகினியே (மூலாதாரத்தில்)

அனுபல்லவி

மேலாதாரமாம் மேருவை விட்டிறங்கி
நாலுதள பத்மத்தில் நாக வடிவாகியே (மூலாதாரத்தில்)

சரணம்

மண்டல மிட்டு றங்கும் குண்டலினியே - உன்னை
அண்டிவர அருள் புரிவாய் சர்வ மங்களே
கண்டறியா ஞான கனல்மூட்டும் வகை தன்னை
விண்டுறைப்பாயம்மா வினாயக ரூபியே (மூலாதாரத்தில்)

ஆதாரப்படிகளின் ஆரம்பந்தன்னில் நீ
ஆறாம் அறியாஸுக்ஷ்ம வழிதன்னைக் காக்கின்றாய்
மாதா உன்னருள் பெற்ற மாதவ பெரியோர்க்கு
நீதானே திறக்கும் நித்யானந்த வழியாம் (மூலாதாரத்தில்)

மும்மலங்கள் ஒழிந்து மும்முடிகள் அவிழ்ந்து
மும்மண்டலம் கடந்து மோக்ஷ வழி முடிந்து
அம்மா நீ வாழ்ந்திடும் ஆயிரம் இதழ் கமல
ஆலயம் தன்னில் வந்துன் அடிபணிந்து ஐக்யமாக
(மூலாதாரத்தில்)

ஐந்து முகங்களுடன் அங்கையில் புஸ்தகமும்
அபயகரத்தில் க்ஞான முத்திரை தாமரை
அங்குச மேந்திய சக்தி ஸமூகம் சூழ
ஆதார குண்டலத்தில் பூமி தத்துவமாக (மூலாதாரத்தில்)

கண்டவர் விண்டுறைக்க மாட்டாக்கைவல்யபதம்
காம க்ரோதங்களற்ற கருத்தினர் காணும் பதம்
அண்ட மெல்லாம் படைத்த ஆதி பராசக்தி பதம்
அன்னை சர்வமங்களை உன் ஆதிபீடமாகிய (மூலாதாரத்தில்)

தவாதாரே மூலே ஸஹ ஸமயயா ஷாஸ்ய பாயா
கலாத்மானம் மன்யே நவரஸ மஹாதண்டவநடம்
உபாப்யா மேதாப்யா முதயவிதி முத்திச்ய தயயா
ஸநாதர்ப்யாம் ஜஜ்ஞே ஜனகஜனனீமத் ஜகதிதம்
(ஸௌந்தர்ய லஹரி 41வது ச்லோகம்)

ஸ்வாதிஷ்டான ச்லோகம்

ஸ்வாதிஷ்டானாக்ய பத்மே ரஸதவ லஸிதே
வேத வக்த்ராம் த்ரிநேத்ராம்
ஹஸ்தாப்யாம் தாரயந்தீம் த்ரிசிக குண
கபாலா (அ) பயான்யாத்த கர்வாம்
மேதோ தாது ப்ரதிஷ்டா மலி முதிதாம்
பந்தினீ முக்ய யுக்தாம்
பீதாம் தத்யோதனேஷ்டா மபிமத
பலதாம் காகினீம் பாவயாம:

ராகம்: தோடி

தாளம்: சாபு

பல்லவி

ஆறிதழ் கமலமாம் ஸ்வாதிஷ்டானத்தில் வாழும்
ஹம்ஸ வாஹன ரூபியே தேவி காகினியே (ஆறிதழ் கமல)

அனுபல்லவி

ஏறிவரும் இரண்டாம்படி தன்னிலே
ஏறியும் அக்னிதத்வமாய் ஒளி வீசியே (ஆறிதழ் கமல)

சரணம்

அக்னி கண்டம் கடத்தி அக்ஞானத்தை எறித்து
அப்பு தத்துவமான மணிபூரகத்தைக் காட்டி
விக்ன மெல்லாம் விலக்கி விரட்டும் வினைகள் நீக்கி

விவரிக்க இயலாத அற்பதங்கள் நிறைந்த (ஆறிதழ் கமல)

மரகத மேனி பொன்னிறங்காட்டி ஒளிவீச
வலக்கரம் வரம் தரும் வலக்கரணம் வரத முத்திரைத் காட்ட
பரம பக்தர்கள் தரும் தேன்பால் தயிரன்னம்
அருந்தி மகிழும் அன்னை சர்வமங்களையே (ஆறிதழ் கமல)

தவ ஸ்வாதிஷ்டானே ஹுதஹ மதிஷ்டாய நிரதம்
தமீடே ஸம்வர்த்தம் ஜனனி மஹதீம் தாஞ்ச ஸமயாம்
யதாலோகே லோகான் தஹதி மஹஸி க்ரோதகலிதே
தீயார்த்ரா யா த்ருஷ்டி: சிசிர முபசாரம் ரசயதி
(ஸௌந்தர்ய லஹரியிலிருந்து ஸ்வாதிஷ்டான த்யான ஸ்லோகம் 39)

மணிபூரகர் சக்ர த்யான ஸ்லோகம்

திக்பத்ரே நாபி பத்மே த்ரிவதன
விலஸத் தம்ஷ்ட்ரிணீம் ரக்தவர்ணாம்
சக்திம் தம்போலி ரண்டா மபயமபி
புஜைர் தாரயந்தீம் மஹோக்ராம்
டாமர்யாத்யை: பரீதாம் பசுஜன
பயதாம் மாம்ஸ தாத்லேகரிஷ்டாம்
கௌடான்னாஸகத சித்தாம் ஸகல
ஸுகரீம் வாகினீம் பாவயாம:

ராகம்: கேதார கௌளை **தாளம்: ஆதி**

பல்லவி

பத்து தளக்கமல மணிபூரத்தில் வாழும்
பத்மனாப ஸ்வரூபி லாகின்யாம்பிகையே (பத்துதள கமல)

அனுபல்லவி

முத்து நவரத்னமணி பூஷணங்கள் ஜ்வலிக்க
சித்தம் கவர்ந்திடுமவள் சின்மய வடிவமாய் (பத்துதள கமல)

சரணம்

அணிமாதி ஸித்திகள் அளிக்கும் அபயகரம்
அசுரர்களை யடக்கும் வஜ்ரசக்தி தண்டமும்

பணியும் பக்தர்களுக்கு பரம பதமளித்து
பாவன மாக்கிடும் ஜலதத்வமாகவே (பத்துதள கமல)

காபி தேசத்தில் ஸ்ரீமன் நாராயணர் அம்சமாய்
சோபித்திடும் சர்வமங்களையே எங்கும்
வ்யாபித்திருக்கும் உன்னை இதயத்தில் காணவே
நீ ப்ரியமுடன் அனாஹதசக்ர மேற்றுவாய் (பத்துதள கமல)

தடித்வந்தம் சக்த்யா திமிர பரிபந்தி ஸ்புரணயா
ஸ்புரந் நானாரத்னாபரண பரிணத்தேந்த்ர தனுஷம்
தவ ச்யாமம் மேகம் கமபி மணிபூரைக சரணம்
நிஷேவே வர்ஷந்தம் ஹரமிஹிர தப்தம் த்ரிபுவனம்
(ஸௌந்தர்ய லஹரியிலிருந்து மணிபூரக சக்ரத்யான ஸ்லோகம் 40)

அனாஹதசக்ர த்யான ஸ்லோகம்

ஹ்ருத் பத்மே பானுபத்ரே த்விவதன லஸிதாம்
தமஷ்ட்ரிணீம் ச்யாம வர்ணாம்
அக்ஷம் சூலம் கபாலம் டமருமபி புஜைர்
தாரயந்தீம் த்ரிநேத்ராம்
ரக்தஸ்ராம் காலராத்ரி ப்ரப்ருதி பரிவ்ருதாம்
ஸ்நிக்த பக்தைக ஸக்தாம்
ஸ்ரீமத் வீரேந்த்ர வந்த்யா மபிமத பலதாம்
ராகிணீம் பாவயாம:

ராகம்: கானடா **தாளம்: ஆதி**

பல்லவி

அனாஹத சக்ர மென்னும் பன்னிறுதள
ஹ்ருத் பத்ம வாஸினியே ராகிணியே (அனாஹத சக்ர)

அனுபல்லவி

மனாதீதமாய் மாயை எல்லாம் கடந்து
தனுத்ம ரூபத்தை தரிசிக்க அருள்புரி (அனாஹத சக்ர)

= உன் ஆத்ம

சரணம்

இருமுகமுடன் மூன்று கண்கள் கரம் நான்கில்
திருஜபமாலை சூலம் டமருகபால மேந்தி
நறுமண நெய்யன்னம் பாயஸம் ஏற்பவளே
ஒருகணம் காக்ஷிதந்து ரக்ஷி ஸர்வமங்களே (அனாஹத சக்ர)

ஈறாறுதளங் கொண்ட ஹ்ருதய கமலம் தன்னில்
பேறாதிருந்துயிரைக் காக்கின்ற காற்றும் நீயே
ஓறாயிரம் இதழ் உச்சிக்கமலம் தன்னில்
ஆறாய் பெருகும் அம்ருத வர்ஷிணியே தாயே (அனாஹத சக்ர)

மஹாசக்தி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி
மஹா த்ரிபுரஸுந்தரி ச்யாமளே
மஹாவீர வரதாயகி வைஷ்ணவி
மஹாஷோட சாக்ஷரி நவாக்ஷரி (அனாஹத சக்ர)

ஸமுன் மீலத் ஸம்வித்கமல மகரந்தைக ரஸிகம்
பஜே ஹம்ஸத்வந்த்வம் கிமபி மஹதாம் மானஸசரம்
யதாலாபாத் அஷ்டாதச குணித வித்யா பரிணதி:
யதாதத்தே தோஷாத் குணமகிலம் அத்ப்ய: பய இவ
(ஸௌந்தர்ய லஹரியிலிருந்து அனாகதசக்ர த்யான ஸ்லோகம் 38)

விசுத்திசக்ர த்யான ஸ்லோகம்

க்ரீவா கூபே விசுத்தௌ ந்ருப தல
கமலே ஸ்வேத ரக்தாம் த்ரிநேத்ராம்
ஹஸ்தை: கட்வாங்க கட்கௌ
த்ரிசிகமபி மஹாசர்ம ஸந்தாரயந்தீம்
வக்த்ரேணைகேன யுக்தாம் பசுஜந
பயதாம் பாயாஸான்னைக ஸக்தாம்
த்வக்ஸ்தாம் வந்தே அம்ருதாத்யை:
பரிவ்ருத வபுஷாம் டாகினீம் வீரவந்த்யாம்

ராகம்: ஸாவேரி தாளம்: ஆதி

பல்லவி

விசுத்தியில் பதினாறு தள கமலந் தன்னில்
விளங்கும் விமலரூபி டாகினீச்வரி அம்ப (விசுத்தியில்)

அனுபல்லவி

அசுத்த மெல்லாம் போக்கி பசுபாதனை நீக்கி
ஆகாச தத்வமாய் ஐந்தாம் படியாகிய (விசுத்தியில்)

சரணம்

முக கமலத்தில் மூன்று கண்கள் ஒளிவீசிட
மிக அழகிய கரத்தில் கட்வாங்க மேந்தியே
சகிகளாய் மஹாசக்தி கணங்கள் சூழ்ந்து போந்திட
ஸுக நாதமாய் பல இன்னிசை யொலிகாட்டி (விசுத்தியில்)

கண்டத்தில் நின்றினிய நாதம் எழுப்பிடுவாய்
அண்டமெல்லாம் அதில் அடங்கி அமரச் செய்வாய்
பிண்டத்தில் உயிர்களெல்லாம் பேரின்ப மெய்திடவே
உண்டாக்கு வாய்த்கவிகள் காளமாய் சர்வமங்கள (விசுத்தியில்)

ஆடும் பாம்படங்கிடும் அழும்பிள்ளை தானடங்கும்
நாடும் பக்தர்கள் கூட்டம் நாளும் பெருகி வரும்
ஓடும் இருவினைகளும் உருகி உன்னாமத்தைப்
பாடும் வரமளிப்பாய் பரப்ரம்ம ரூபியே (விசுத்தியில்)

விசுத்தென் தே சுத்தஸ்படிக விசதம் வ்யோம ஜனகம்
சிவம் ஸேவே தேவீமபி சிஸமான வ்யவஸிதாம்
யயோ: காந்த்யா யாந்த்யா: சசிகரண ஸாருப்ய ஸரணே:
விதூதாந்தர் த்வாந்தா விலஸதி ஸகோரீவ ஜகதீ
(ஸௌந்தர்ய லஹரியிலிருந்து விசுத்திசக்ர த்யான ஸ்லோகம் 37)

ஆக்ஞாசக்ர த்யான ஸ்லோகம்

ப்ருமத்யே பிந்து பத்மே தலயுக கவிதே
சுக்லவர்ணாம் கராப்ஜைர்
பிப்ராணாம் க்ஞான முத்ராம் டமருகமமலாம்
அக்ஷமாலாம் கபாலம்
ஷட் சக்ர்தார மத்யாம் த்ரிநயன
லஸிதாம் ஹம்ஸவத்யாதி யுக்தாம்
ஹாரித்ரான்னைகஸந்தாம் ஸகல ஸுகரீம்
ஹாகினீம் பாவயாம:

ராகம்: ஸௌராஷ்டிரம் **தாளம்: ஆதி**

பல்லவி

ஆக்ஞா சக்ரமாம் இருதள பத்மத்தில்
ஆக்ஷி செய்திடும் பரதேவதையே ஹாசினி (ஆக்ஞா சக்ரமாம்)

அனுபல்லவி

ஆக்ஞானந் தன்னை அழித்தருள் புரிந்திட
ஆயிரம் இதழ் கமலத் தருகில் விளங்கிடும் (ஆக்ஞா சக்ரமாம்)

சரணம்

இருபுருவ நடுவில் இலங்கிடும் அருள்ஜோதி
இருடிகள் கண்டு கண்டின்புரும் க்ஞானஜோதி
பெரும்முடியாம் ப்ரம்ம க்ரந்தியவீழ்க்கும் ஜோதி
பெருகிவரும் அம்ருத தாரையைக் காட்டும் ஜோதி
(ஆக்ஞா சக்ரமாம்)

ஆறுமுகமாய் தோன்றி அபயமளிக்கும் ஜோதி
அன்னை சர்வமங்களையாய் அருள்வீசும் ஸ்வயம் ஜோதி
கூறும் வேதங்களெல்லாம் கொண்டாடும் பரஞ்ஜோதி
கோதில்லா மனதத்வமாகி மாயை விலக்கும்
(ஆக்ஞா சக்ரமாம்)

அழியாத பேரின்ப வழியைத் திறந்து விடும்

மொழியாத மோன மொழியால் உபதேசிக்கும்
விழியினால் காணமாட்டா வேடிக்கைகள் காட்டிடும்
தழுவிதன்னுடன் சேர்த்து தரிசனம் தந்திடும்
(ஆக்ஞா சக்ரமாம்)

தவாஜ்ஞா சக்ரஸ்தம் தபனசசி கோடி த்யுதி தாம்
பரம் சம்பும் வந்தே பரிமிலித பார்ச்வம் பரசிதா
யமாராத்யன் பக்த்யா ரவிசசி சுசீனாம் அவிஷயே
நிராலோகே (அ) லோகே நிவஸதி ஹி பாலோக புவன ||
(ஸௌந்தர்ய லஹரியிலிருந்து அக்ஞாசக்ர த்யான ஸ்லோகம் 36)

ஸஹஸ்ர தளபத்ம த்யான ஸ்லோகம்

முண்ட வயோமஸ்த பத்மே தச சத
ரலகே கர்ணிகா சந்த்ர ஸம்ஸ்தாம்
ரேதோ நிஷ்டாம் ஸமஸ்தாயுத கலிதகராம்
ஸர்வதோ வக்த்ர பத்மாம்
ஆதி க்ஷாந்தார்ண சக்திப்ரகட பரிவ்ருதாம்
ஸர்வவர்ணாம் பவானீம்
ஸர்லான்னாஸக்த சித்தாம் பரசிவ
ரஸிகாம் யாகினீம் பாவயாம:

ஷடாதார சக்ர கீர்த்தனையின் பலஸ்ருதியான ஸஹஸ்ரார த்யான கீர்த்தனை

ராகம்: ஸ்ரீராகம் **தாளம்: ஆதி**

பல்லவி

ஆயிரம் இதழ் கமலாலயந் தன்னைச்
சென்றடைவதும் சாத்தியமோ (ஆயிரம் இதழ்)

அனுபல்லவி

மாயிருள் நீக்கிடும் மார்த்தாண்டன் போலவே
மனதிருள் நீக்கியே மதியொளி வீசிடும் (ஆயிரம் இதழ்)

சரணம்

எங்கும் காணா முகங்கள் எல்லா ஆயுதக்கரங்கள்

அங்கித் கென்னாமலே எங்கும் நிறைந்த ரூபம்
தங்குதடை இல்லாமல் பெருகும் அம்ருதப்ரவாஹம்
மங்கும் இவ்வுடலுக்குள் மகிமையுடன் விளங்கும்
(ஆயிரம் இதழ்)

சர்வவ்யா பியாய் சர்வாண்டமும் படைத்து
சர்வரக்ஷகியாய் சகல உயிர்கள் காத்து
சர்வசாக்ஷியாய் நின்று சகல உலகழித்து
சர்வானந்தமாய் சர்வமங்களை வாழும் (ஆயிரம் இதழ்)

பக்தியுடன் தந்திடும் பலவித நைவேத்யம்
பரிவுடன் ஏற்றருள் புரிந்திடும் பராபரையே
முக்தி என்பது ஜீவன் முக்தி என்றறிவித்து
மும்முடிகள் அவிழ்த்து முடிந்த நிலையாகிய (ஆயிரம் இதழ்)

நாடிகள் நரம்பெல்லாம் நனைந்து குளிர்ந்திடவே
ஓடிவரும் அம்ருத தாரை தன்னில் அமிழ்ந்து
மூடி இருக்கும் மோக்ஷ கதவுகள் திறந்திட
கோடி சூர்ய ப்ரகாசமாய் ஒளிவீசும் (ஆயிரம் இதழ்)

அன்னை பராசக்தி ஹரனுடன் ஐக்யமாய்
மின்னலைப்போல் சதா ஒளிதரும் உருவுடன்
தன்னை மறந்த தவ யோகியர்க்கு காக்ஷிதந்து
பின்னை பிறப் பொழித்து பேரின்பம் தந்தருளும்
(ஆயிரம் இதழ்)

ஸுதா ஸிந்தோர் மத்யே ஸுரவிடபி வாடீ பரிவ்ருதே
மணித்வீபே நீபோபவனவதி சிந்தாமணி க்ருஹே
சிவாகாரே மஞ்சே பரமசிவ பர்யங்க நிலயாம்
பஜந்தி த்வாம் தன்யா: கதிசன சிதானந்தலஹரீம் ||
(ஸௌந்தர்ய லஹரியிலிருந்து 8வது ச்லோகம்)

தடில் லேகா தன்வீம் தபன சசி வைச்வானர மயீம்
நிஷண்ணாம் ஷண்ணாமப்யுபரி கமலானாம் தவ கலாம்
மஹாபத்மாடவ்யாம் ம்ருதித மலமாயேன மனஸா
மஹாந்த: பச்யந்தோ ததி பரமாஹ்லாத லஹரீம்.

(ஸௌந்தர்ய லஹரியிலிருந்து 21வது ச்லோகம்)

ஸ்ரீ பராசக்தி சர்வமங்களா ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியின் சரண கமலங்களில் ஆத்ம ஸமர்ப்பணம் செய்து அபராதத்தை க்ஷமித்தருள வேண்டிக் கொள்ளும் ப்ரார்த்தனை ச்லோகம்.

ஜபோ ஜல்ப: சில்பம் ஸகலமபி முத்ராவிரசனா
கதி: ப்ரதக்ஷிண்ய க்ரமணம் அசனாத்யஹு திவிதி:
ப்ரணாம: ஸம்வேச: ஸுகமகில மாத்மார்பணத்ருசா
ஸபர்யா பர்யாய ஸ்தவபவது யன்மே விலஸிதம்.

அருட்பெருஞ் ஜோதியில் அம்பிகை தரிசனமளித்து தன்னைப் பாட அருள் புரிந்து தன்னுடைய நவசக்ரத்தையே குறித்துக் கொடுத்து அனுக்ரஹித்த தரிசனத்தை வியந்து போற்றிய பாடல்கள்.

ராகம்: அம்ருதவர்ஷிணி **தாளம்: ஆதி**

பல்லவி

ஆனந்த மென்ன சொல்வேன் அருட்பெரும் ஜோதியுள்
அம்பிகை தோன்றிய (ஆனந்தம்)

அனுபல்லவி

ஊனக்கண்களாற் கண்டு உள்ளம் மலர்ந்திடவும்
தானதுவாகியே தத்வ மஸியான (ஆனந்தம்)

சரணம்

வளர்ந்து வளர்ந்து வானளாவிய பரஞ்சுடர்
வரவரக் குறைந்து வந்தென் மனத்துள் புகுந்து
உளமென்னும் கோயிலில் உருக்காட்டியே அமர்ந்து
அளவிலாக் கருணை புரிந்தாட் கொண்டருளிய (ஆனந்தம்)

உதித்தெழும் செங்கதிர் போல்திரு உருக்காட்டி
மதிமுக எழில்காட்டி மலர்விழி அருள் காட்டி
கதிதரு வேனென்று கரகமலங்கள் காட்டி
அதிம்ருது சரணங்கள் அன்புடன் காட்டிய (ஆனந்தம்)

கீதையைப் போல் பதினெட்டு பாடென்றருளி

கீர்த்தனை யாகவே பாடநல் வாக்களித்து
பேதை நவாவரண பெருமைகள் அறியவும்
பேரின்பவழி ஆதாரம் ஆறும் காட்டிய (ஆனந்தம்)

சர்வ மங்களையான ராஜ ராஜேச்வரி
சரண மடைந்தவரைக் காக்கும் க்ருபாகரி
சர்வமூட மென்னைக் காத்தருள் புரிந்திட சர்வமூடன் என்னை
சர்வ ஸௌந்தர்ய வடிவுடன் தோன்றிய (ஆனந்தம்)

தானே வந்து தரிசனமளித்து தேவி சர்வமங்களா ராஜ ராஜேஸ்வரி பாட வரமளித்து இன்னும் வேண்டும் வரங்கேளென் றருளிய போது உன் திவ்ய தரிசனம் கண்டதைவிட வேறு எது உயர்ந்தது என்று அம்பாள் சரணத்தில் ஆத்ம ஸமர்ப்பணம் செய்து போற்றிய பாடல்.

ராகம்: ஆனந்தபைரவி **தாளம்: சாபு**

பல்லவி

நீயே வந்தென்னெஞ்சில் நிலைகொண்டமர்ந்தபின்
வேறென்ன வேண்டுமம்மா பராசக்தி (நீயேவந்து)

அனுபல்லவி

சேயென்று வந்தென்னைச் சேர்த்தணைத்தாய் தாயே
சேதியெல்லாம் சொல்லிசிந்தை தெளிய வைத்தாய்
(நீயேவந்து)

சரணம்

ஞானக்கண்ணால் காணும் ஆனந்த வடிவத்தை
ஊனக் கண்களால் காண காட்டினாய் கருணையால்
வானவர்க்கும் காண அறிய உன் உருவத்தை
ஆனந்தமாய்க் காட்டி அருள் புரிந்தாய் தாயே (நீயேவந்து)

ஆதார ஸூக்ஷ்மமும் (நவ) ஆவரண ஸ்தூலமும்
மாதா உன்னருளினால் கண்டு களித்தேனம்மா
வேதா விதியழித்துன்பாதார விந்தங்களை

நீதானே வந்தென் தலைமீது வைத் தாண்டாய் (நீயேவந்து)

ஆக்ஞை யிட்டாய் மஹாராஞ்ஞி நீயே வந்து
ஆதார சக்ரத்தை பாடென்றருள் செய்தாய்
அக்ஞானம் தன்னை அழித்துப தேசித்தாய் நீ
அன்புடன் வந்துன்னை தந்தென்னை நீ கொண்டாய்
(நீயேவந்து)

தேடி வந்துன் புகழ் பாடென்று அருள்செய்தாய்
வாடிய நெஞ்சத்துள் வந்தருள் மாரி பெய்தாய்
ஈடில்லா உன் கருணைக்கென்ன கைம்மாறு தாயே
சூடிக் கொள்வாய் நீயே தொகுத்த சொல்மாலை இதை
(நீயேவந்து)

ஸ்ரீ சர்வமங்களா ஸ்ரீ ராஜராஜேஸ்வரி தரிசன விருத்தம்

ராகம்: பிலஹரி **தாளம்: ஆதி**

1. ஆதாரமாய் தலைகள் ஆயிரங்களால் அவனியைத் தாங்கிடும் ஆதி சேஷனைப் போல.
2. மாதாநீ ஆதார சக்ரம் ஆறும் தாங்கி ஆதார குண்டலினி என்று திருப்பெயர் தாங்கி.
3. வேதாவும் விஷ்ணுவும் காணாத திருஉருவை விரியும் படமெடுக்கும் பாம்பு போல் காட்டியே.
4. காதாலும் கேட்டறியா சுழிமுனை வழிதன்னை காட்டிக் கருணையுடன் க்ரந்திகளை தானவிழ்த்து.
5. ஈதாம் மோக்ஷவழி என்றுரைத்து மேலோரும் ஆதாரப் படிகளாம் ஆறையும் காட்டியே.
6. நீதானே மேலேறி நெடுநாட்களாகு மென்று பாதார விந்தங்களை பற்றிக்கொள் என்றருளி.

7. மாதாநீ ஆக்ஞைவரை உன்னுடன் அழைத்தேகி மதிமண்டலம் கடந்து மறைந்தனை நீ என் தாயே.

8. ஏதாகிலும் வினைகள் என்னை யணுகாமலே மாதா உன் பாதத்தில் மனமிருக்க அருள்புரிவாய்.

------

1. அம்மா நீ ஆனந்தமாய் அமர்ந்திருக்கும் ஸஹஸ்ராரம் அணுகலாகா தென்றோ ஆக்ஞையில் நீ மறைந்தாய்.

2. இம்மானிலந் தன்னில் இருக்கும்நாள் எத்தனையோ வெம்மாயம் மறுபடியும் பற்றாமல் அருள் புரிவாய்.

3. தம்மாணவத்தினால் தரைக்கிழுக்கும் இந்திரியங்கள் தருக் கடக்கி உன் தாளில் தாழ்ந்திருக்க வரமளிப்பாய்.

4. சும்மா இருக்கும் ஸுகம் தந்தருளி உள்ளத்தை ஊமை போலாக்கியே ஓய்ந்திருக்கச் செய்தருள்வாய்.

5. எம்மாதவங்கள் செய்தேனோ என்தாயே எமபாதை அணுகாமல் என்னை நீ ஆட் கொண்டாய்.

6. பெம்மான் சிவபெருமான் பாகம் பிரியாதிருக்கும் பெருமாட்டியே தேவி சர்வ மங்களையே சரணம்.



ராகம்: ப்ருந்தாவன சாரங்கா **தாளம்: ஆதி**

மனமே இனிமேல் என்னுடன் ஆட
மயிலாய் வந்திடுவாய் (நீ) மயிலாய் வந்திடுவாய்
வனமீதினிலே செல்வாயோ இனி
கணமே உனைப் பிரிவேனோ பணி மனமே

தாயும் சேயுமாய் சேர்ந்தது போலே
நீயும் நானுமாய் வாழ்ந்திடு வோமே
வான வெளியாலே மோன மொழியாலே
ஞான உணர்விலோ ஆழ்ந்திடுவோம்
அல்லலே இல்லையே ஓர் சொல்லிலே நில்லியே

- பணி மனமே

ஸஹஜ நிலையிலே சேர்ந்ததினாலே
அகமும் புறமுமாய் வாழ்ந்திடுவோம்
நாதவெளியிலே நாம வடிவிலே
ஜோதி உணர்விலே ஆழ்ந்திடுவோம்
என்று நீ அன்று நான் மன்றிலே ஆடுவோம் - பணி மனமே

ஆட்கொண்ட முருகன்

ராகம்: அம்ருதவர்ஷினி **தாளம்: ரூபகம்**

மாமரச் சோலையிலே தென்றல் கொஞ்சும்
மாலைப் பொழுதினிலே
தேமதுரத் தமிழில் கனிந்தொரு
தீங்குரல் கேட்டேன்
காமன் கருத்தழியும் தன் பேரெழில்
காட்டி ஒரு பாலன் வந்தான்
நாமம் முருகன் என்றான்
அன்பர் மனம் நாடிய நாதன் என்றான்.

ராகம்: மாயாமாளவ கௌளை

என்னை அழைத்து விட்டால் அவர்க்கு
என்னையும் தந்திடுவேன்
இன்னலெல்லாம் தவிர்ப்பேன் எப்போதும்
மெய் இன்பம் பொழிந்திடுவேன்
உன்னிதயத்திலெழும் தமிழ் கவி
உட்கொள்ள ஓடிவந்தேன் - நான்
அன்னியனல்லன் என்றான் அன்புடன்
என் அண்டையில் வந்து நின்றான்.

ராகம்: சாமா

எத்தனை புண்ணியமோ பெரும்தவம்
எம்மையில் செய்தது வோ
அத்தனைக் கண்டு கொண்டேன் இந்த
ஏழையை ஆட்கொள்ள வந்தானோ
சத்தம் அடங்கியது ஷடாக்ஷர
தன்மை விளங்கியது

பெத்த பிணி அகல பக்தி எனும்
பித்து பிடித்ததுவே.

ராகம்: பெஹாக்

என்னிதயம் தனையே வீணையாக்கி
இன்னிசை மீட்டிடு வேன்
உன்னருள் காதலிலே கிளர்ந்தெழும்
ஓம் ஒலி கேட்டிடுவேன்

பன்னிரு தோளழகா பொன் மாணிக்க
பைங்கதிர் வேலழகா என்தும்
கன்னிப் பருவத்தினாள் உமைக்கிரு
கண்மணி யானவனே.

ராகம்: சிவரஞ்சனி

ஆடும் இயற்கையிலே நீ நின்று
ஆடிடும் நாடகமே
சூடிடும் மென் மலரில் துலங்கிடும்
சுந்தரப் புன்னகையே

காடு மலைகளெல்லாம் நின் கீர்த்தியின்
கானம் எழுப்புவதால் பல
கோடிக் குரல்களுடன் நானும் உன்னை
கூவுகின்றேன் முருகா முருகா

ராகம்: பாகேஸ்ரீ

ஓடிச்சரண் புகுந்தேன் குகன் என்னுள்
ஒன்றிக் கலந்து விட்டான் - இனி நீ
துக்கத்தை நீக்கிடுவாய் நினைப்பவை
நிச்சய மாகுமென்றான்

போதித்த மெய் மொழியால் அருள்
பூரணமாகி நின்றேன் - வளர்
சாதுக்கள் சங்கத்தினால் ஜகம்தன்னில்
சாந்தி நிலவுகவே - ஓம் சாந்தி

விராலிமலைப் பாட்டு

ராகம்: வஸந்தா **தாளம்: ஆதி**

பல்லவி

விராலிமலை வளர் வீரா விசாகனே
பாராமுகம் ஆகுமோ பக்தர்கள்மேல் (விராலி)

அனுபல்லவி

சுரா சுரர்கள் தொழும் புராரி புதல்வனே
பராத்பரனே அருள்தாராய் குருபரனே (விராலி)

சரணம்

சராசர ஸ்வரூப முராரி முருகா
மராளி மகிழுங் குமரா சுபகரா
நிராமய ரஹித வராபயகரா
குராப்புனையும் பதம் தாராய் தயவுடனே (விராலி)

திருத்தணிகைப் பாட்டு

ராகம்: வராளி **தாளம்: ஆதி**

பல்லவி

முருகா முருகா திருமால் மருகா
வருவாய் அருள்வாய் தயாபரனே தணிகேசனே (முருகா)

அனுபல்லவி

கருணாகரனே கதிர்வேல் கரனே
சரணாகதியாய் பராத்பரனே பதம் பணிந்தேன் (முருகா)

சரணம்

சுரர்மகள் ஒருபால் குறமகள் ஒருபால்
மருவிடும் அழகனே மலைமகள் மகனே
சரவண பவனே குருபர குகனே குமார சரணம்
வரம் தருவாய் பரம் பொருளே (முருகா)

சோலைமலைப் பாட்டு

ராகம்: சுருட்டி | தாளம்: ஆதி

பல்லவி

வேலை கரத்தில் ஏந்தி விளையாடும் பாலகனைச்
சோலைமலையிற் கண்டோமே (வடி வேலை)

அனுபல்லவி

மாலைகுலவும் மார்பன் மரகதமணி வண்ணன்
மாலுக்கு மருகனை நாலுக்கும் அரியனை (வேலை)

சரணம்

மாமனும் மருகனும் மகிழ்ந்துவாழும் சோலை
காமங் கடந்தவர்கள் கண்டுகளிக்கும் சோலை
நேமமுடன் அடியார் நித்தம் உலவும் சோலை
பூமகள் போற்றிடும் பழமுதிர்ச் சோலைதனிலே (வேலை)

ஞானமலர் பூத்து அருள்மணம் வீசும் சோலை
வானவர்கள் வந்து வணங்கும் தெய்வச் சோலை
கானக்குறவர் மகள் களிக்கும் கற்பகச் சோலை
தீனதயாளன் திருமாலிருஞ் சோலை தன்னில் (வேலை)

திருவேரகப் பாட்டு

ராகம்: பேகட | தாளம்: ஆதி

பல்லவி

(ஓம்) சரவணபவா குஹனே ஸ்வாமி நாதனே
வரமருள் குருபரனே வள்ளி மணாளனே (சரவண)

அனுபல்லவி

உகர சயனன் மகிழ் மருகனே முருகோனே
சுரபதி விதிதொழும் சுந்தர குமரோனே (சரவண)

சரணம்

தந்தைக்கு குருவென சொந்தமுடன் மகிழ்ந்து
மந்திரம் ஒன்றுரைத்த மாமணியே உன்னை
வந்திக்கும் அன்பருக்கு எந்த வரமும் தரும்
கந்தனென் றறிந்திங்கு கடுகவந்தோம் ஸ்வாமி (சரவண)

பழனிப் பாட்டு

ராகம்: காபி **தாளம்: ஆதி**

பல்லவி

பழனியைக் கண்டோம் பழவினை விண்டோம்
பரமாநந்தம் கொண்டோம் தென் (பழனியை)

அனுபல்லவி

அழுது தொழுதுருகி அங்கம் சிலிர்க்க
நாவும் தழுதழுத்து விழிபுனல் பெருக்கெடுக்க (பழனியை)

சரணம்

அன்பர்கள் பலர்கூடி உன்புகழ் தனைப்பாடி
இன்பமுடனே படி ஏறிவந்தோம் தேடி
உன்பதம் பணிந்தோம் துன்பங்கள் தணிந்தோம்
தென்பழனி யாண்டவா திருவருள் புரிவாயே (பழனியை)

அன்னை தந்தை வருந்த ஆண்டிவேடம் பூண்டாய்
அங்கையில் தண்டேந்தி அருள் செய்ய மனங்கொண்டாய்
உன்னைப் பணிந்துய்ய உறுதி கொண் டோமையா
தன்னிகரில்லாத தண்டபாணி யருள்வாய் (பழனியை)

திருச்செந்தூர்ப் பாட்டு

ராகம்: பைரவி/சுருட்டி **தாளம்: சாபு**

பல்லவி

செந்திற்பதி வாழும் கந்தனே உன்பாதம்
வந்தித்தருள் பெற வந்தோமையா (திருச்செந்திற்)

அனுபல்லவி

நந்தி ஏறும் நாதன் தந்த அருள்பாலா
இந்திரன் துயர்தீர்த்து இன்ப மளித்தவேலா (திருச்செந்திற்)

சரணம்

பக்தர்கள் பலர்கூடி பாங்குட னுனைப்பாடி
இத்தினம் வந்துன் சன்னிதி யடைந்தோம்
முக்தி அளித்திடும் முதல்வனே முருகோனே
சக்திதரனே சிவஷண்முகனே -அருள்வாய் (திருச்செந்திற்)

ஆணவமாம் சூரன் அகந்தை அடங்கவே
அலைவாயில் வந்துநின் னரும் திறங்காட்டினாய்
காணக்கிடைக்கா உன் கருணைத் திருவடியைக்
கண்டு மகிழ்ந்து களிகொண்டோம் துயரம் விண்டோம் |
(திருச்செந்திற்)

முருகன் கீர்த்தனை

ராகம்: முகாரி **தாளம்: ஆதி**

பல்லவி

யாரும் அறியார்கள் ஆறுமுகன் பெருமை
அறிந்த மட்டிலும் உரைப்பேன் - யாரும்

அனுபல்லவி

காலனை உதைத்தவன் ஆலத்தை உண்டவன் (சிவ)
பாலனாய் வந்த வேலன் மகிமையை மட்டிலும் அறிந்த

சரணம்

வேதத்தை சிறையிட்டு தாதைக்கு தத்துவ
போதம் உரைத்தவன் முருகன் (நான்முக)
மாதவன் மருகன் வடிவழகன் குமரன்
பாதகம் தீர்த்திடும் பழனி புரிநாதன்.
நாததத்துவ மயில் மீது ஏறும் நாதனை - யாரும்

ராகம்: முகாரி　　　　　　　　　　　　　　　　தாளம்: மிச்ரசாபு

பல்லவி

முருகன் பெயர்தீ சொன்னால் உள்ளம் உருகி
எனக்கு உவகைதீ பெருகுதம்மா

அனுபல்லவி

வருக வருக என்று வாழ்த்தி அடியார்க்கு
பெருக பெருக அருள் என்றன்பாய் அழைத்திடும் - முருகன்

சரணம்

எண்ணிடும் போதெல்லாம் இனித்திடும் செந்தேனை
உண்ணத் தெவிட்டாத ஓங்கார மாங்கனியை
கண்கள் ஈராறினால் கருணை அமுது ஊட்டி
கன்றுக்கிரங்கிடும் தாய் போல் அருள் சுரக்கும் - முருகன்

ராகம்: ஹிந்தோளம்　　　　　　　　　　　　　　　　தாளம்: ரூபகம்

பல்லவி

வேலும் மயிலும் நினை மனமே (வடி)
அனுதினமும் கந்தன் கை - வேலும்

அனுபல்லவி

கால காலன் பாலன வேலன்
ஏறும் பரியும் ஏந்திவரும் வடி - வேலும்

சரணம்

கோலம் மிகுந்த கோழிக்கொடியும்
கோரும் வரங்கள் கோடி தந்திடும்
நாலுமுகமும் நாரதரும்
நாடித்தேடிப் பாடி பணிந்திடும் - வேலும்

வேல் நாமாவளி

ராகம்: ப்ருந்தாவன சாரங்கா **தாளம்: திஸ்ர நடை**

பல்லவி

1. வேல் முருகன் வடிவேல் முருகன்
வேல் முருகன் ஜய வேல் முருகன்
வேதவியாபக மெய்ப்பொருளாம் - கதிர்
வேல் முருகன் அருள் வேல் முருகன்
அன்பாக்கிரங்கிடும் வேல் முருகன் - அருள்
அள்ளித் தரும் தனி வேல் முருகன்
இன்பக் களஞ்சியம் வேல் முருகன் - உல
கெங்கும் இருப்பவன் வேல் முருகன்

2. செந்தமிழ் நாயகன் வேல் முருகன் - எங்கள்
சிந்தையில் வாழ்பவன் வேல் முருகன்
அந்தக பந்தம் அகற்றி எக்காலமும்
அன்புடன் ஆள்பவன் வேல் முருகன்
வந்தவர் யாரெனப் பார்த்திருப்பான்
மாமலை ஏறி வருந்தி வருவோரின்
மனத்துயர் யாவையும் தீர்த்திடுவான்

3. சித்திரப் பொன்மயில் ஏறிடுவான் - நம்
சித்தம் குளிர ச் சிரித்திடுவான்
முத்து முகத்தினை நோக்கி நின்றால் - ஜீவன்
முக்தி அளித்து மறைந்திடுவான்
பாடிப் பணிந்தவர் பக்கமிருந்து - நல்
பாக்கியம் தந்திடும் வேல் முருகன்
நாடிக்கனிந்திடில் கூடிக்குலவி - மெய்
ஞானமளிப்பவன் வேல் முருகன்



முருகன் துதிப்பாடல்கள்

திருப்பரங்குன்றம்

ராகம்: கரகரப்ரியா **தாளம்: ஏக**

அரப்புனைந்தவன் நயனமதனிலறு
பொறிச்சிறந்தெழு வடிவதை நிருமலி
அணைக்க வந்திடும் சரவணபவகுக - முருகோனே

உரத்தில் மிஞ்சிய அசுரர்கள் படைவீழ
கரத்திலங்கிடு அயிலதை விட ஒரு
கணத்தில் வென்றவர் பொடிபட சமர்புரி - திறலோனே

வரத்தில் வந்தெதிர் பொருபவன் திரைகடல்
மறைப்புள் நின்றிட அவனுடல் பிளவுற
பறக்கு நஞ்சிகி குருகென வரும்வகை - பொருதீரா

சிரத்திலங்கிய நதியினன் அயனரி
வழுத்த இந்திரன் மகன் மணமருவிய
திருப்பரங்கிரி தனிலுறை சரவண - பெருமாளே

திருச்செந்தூர்

ராகம்: கரகரப்ரியா **தாளம்: ஏக**

அந்திப் பகலற சிந்தைத்துயர் கெட
எந்துர்ப்பவமற - உனை நாளும்
வந்தித்தருள் பெற பந்தச் சிறையற
உன் பொற்றிருவடி - தருவாயே
தந்தத் தனதன தந்தெத் தெனஒலி
சந்தப் புகழுதை உரையேனோ
சிந்தைத் தெளிவினர் எஞ்சொத்தெனவரு
செந்திற் பதிவளர் - பெருமானே

பழனி

ராகம்: ராமப்ரியா **தாளம்: ஆதி**

புழுவெனப் பிறப்பினில் உழலுறும் எனக்குறு
பழவினை தொலைத்திடும் வடிவேலா
கழுவில் லுறச்சமணரை விடு கவித்துவ
கவுணிய குலத்தவ பெருவாழ்வே
மழுபிடி கரத்தவர் தருகுக குறத்தியை
மகிழ்வுடன் அணைத்தருள் முருகோனே
தொழுமடி யவர்க்கருள் புரிதர விருப்பொடு
பழனியில் உதித்திடு பெருமானே.

திருத்தணிகை

ராகம்: ஹரிகாம்போதி **தாளம்: ஆதி**

பணிவாரை நாடி விளையாடு சித்த
அருளே தழைத்த - குமரேசா
கணமேனு நாளும் மறவாத சித்தம்
அடியேன் எனக்கு - அருள்வாயே
குணமேயிலாத கொடியேன் எனக்குன்

அடிகாண வைத்த அரசே என்
தணியாத தாபம் அதையே தணித்த
தணிகாசலத்து பெருமாளே.

திருவேரகம்

ராகம்: அமீர்கல்யாணி **தாளம்: ஆதி**

திருமால் பிரமா அறியா உரையே
அரனார் செவிக்குட் பகர்வோனே
மருவே மணமே மணியே ஒளியே
மறையே உணர்த்தற் கரியோனே
கருவே புகுதா வகை நீ எனையாள்
அறுமா முகத்துப் பெருவாழ்வே
வருவாய் தருவாய் இருதாள் இணையே
திருவேரகத்துப் பெருமானே.

பழமுதிர் சோலை

ராகம்: த்விஜாவந்தி **தாளம்: மிச்ரசாபு**

காலைக்கதிர் நேர்திரு பேரொளி
சோலைக்கிளி தூமறையே மொழி
காலைக்கெழு தாமரையே முகம் - எழிலான

நீலக்கடலே வருமாமயில்
கோலக்குகனே எனவோதிரு
மாலுக்கொரு மாமருகா சிவன் -அருள்பாலா

வாலைக் கிளிநேர் குறமாமகள்
காலைத்தொழுதே கனிவாய் வெகு
மாலைப் பெறுமோர் கிழவோனென - வருவோனே

சீலத்துடன் மாமுனி வோர்பணி
வேலுக்கு உடையாய் பொழில் சூழ்திரு
சோலைக் கிரிவாழ் அழகா குக - பெருமானே

த்யான ஸ்லோகம்

அருளார் அமுதே கருணைக் கரும்பே
அன்பாம் இன்சுவை நிறைந்த கனியே
இருளாம் வினை தீர்த்திடும் பேரொளியே
இதயத் தாமரை மலர்த்திடும் கதிரே
பொருளாய் மனத்துள் புதைக்கும் பொன்னே
பொள்ளா மணியே புதுமாமலரே
மருளாம் வினை தீர்த்தெமை ஆள்பவனே
வருவாய் குருவாய் அருள்வாய் குஹனே

ராகம்: ஷண்முகப்ரியா **தாளம்: ஆதி**

செந்தில் நாதமுருகா ஐயஐய கந்தவேலா முருகா - பவ
பந்தம் தீர்க்கும் முருகா பரமசிவன் மைந்தனான முருகா
வேல் பிடித்த முருகா உனதிரு கால் பிடித்தேன் முருகா
(திரு) மால் மருகன் முருகா மகிழ்ந்துமயில் மேல் இருக்கும் முருகா

சேவற்கார முருகா அடியவர்க்கு காவற்கார முருகா - உயர்
தேவர் ஏற்றும் முருகா தமிழை மாதேவர்க்கோதும் முருகா
கஞ்ச நேத்ர முருகா குறவஞ்சி மோக முருகா - தேவ
குஞ்சரியின் முருகா அன்பர் நெஞ்சில் வாழும் முருகா

நாத ரூபமுருகா நான்கு வேத ரூபமுருகா - மலர்ப்
பாதம் தாரும் முருகா பரமசிவ நாதன் மகிழும் முருகா
எம்பிரானே முருகா இடமுகன் தம்பிரானே முருகா - உன்னை
நம்பினோர்க்கு முருகா நலமருளும் தம்பிரானே முருகா

ஆர்த்த சூர முருகா திரு தீர்த்த கோல முருகா - திரு
கார்த்திகேய முருகா அமரர்களை காத்த சேயே முருகா
வேல் பிடித்த முருகா உனதிரு கால் பிடித்தேன் முருகா - திரு
மால் மருகா முருகா மகிழ்ந்து மயில் மேல் இருக்கும் முருகா
- செந்தில் நாத முருகா

ராகம்: மோகன் **தாளம்: ஆதி**

பல்லவி

ஷடாக்ஷரா ஓம் சரவணபவ பரி
பாலயமாம் ப்ரபோ - ஷண்முகா

அனுபல்லவி

கடாக்ஷவர்ஷித கருணாமய நேத்ர
கங்கா தரபுத்ர கம்பீர வக்த்ர

சரணம்

ஷடாதரா பங்கஜாஸ நாஸ்தித ஷடாத்வாதீத
ஷட்பால ரூப ஷண்மதா போஷிதஸுத
ஷட்க்ரீட சோபித ஷட்கோண நிலய

நாமாவளி

ராகம்: யமுனா கல்யாணி **தாளம்: ஆதி**

அருள் நிறைந்த முருகனே வா வா வா
அடியார் வினை தீர்ப்பவனே வா வா வா
ஆறுமுக வேலவனே வா வா வா
ஆனைமுகன் ஸோதரனே வா வா வா
இடர் களைந்து காப்பவனே வா வா வா
இதயந் தன்னில் இருப்பவனே வா வா வா
ஈசன் தந்த ஷண்முகனே வா வா வா
ஈடில்லாத குணமுடையாய் வா வா வா
உமை அணைத்த கண்மணியே வா வா வா
உலகை வலம் வந்தவனே வா வா வா
ஊன் மறந்தேன் உனைக் காண வா வா வா
ஊமை என்னைப் பாடவைத்தாய் வா வா வா

என்றும் எழில் மிக்கவனே வா வா வா
ஏழைகளைக் காப்பவனே வா வா வா
ஒன்று பல வானவனே வா வா வா
ஒன்றி உயிர்த் காப்பவனே வா வா வா
ஓங்காரத்துட் பொருளே வா வா வா
ஓதற் கறியவனே வா வா வா
ஔவைக்கு காக்ஷி தந்தாய் வா வா வா
ஔதார்யமாய் காக்க வா வா வா

ராகம்: கல்யாணி **தாளம்: ஆதி**

சக்தி குமார முருகா வா சரவண பவனே குகனே வா
பக்தியளித்தருள் பரனே வா (திரு) பரங்கிரி வாழ் ஷண்முகனே வா
கந்தா கார்த்திகை மைந்தா வா கருணைக் கடலே முருகா வா
செந்திற்பதி ஆண்டவனே வா (என்) சிந்தையில் வீற்றருள் செய்திட வா
அழகாம் மயில் வாகனனே வா அடியார்க் கெளியாய் முருகா வா
பழனிப் பதி ஆண்டவனே வா (எம்மை) பரிவுடன் காத்தருள் செய்திட வா
மருவேதுமில்லா மதியே வா (குற) மங்கையுடன் மகிழ்ந்திங்கே வா
திருவேரகம் வாழ் தேசிகனே வா தீன தயாளனே முருகா வா
பவமலை கோயில் கொண்டவனே வா பாபவினாச விசாகா வா
உலகை வலம் வந்தவனே வா (என்) உள்ளம் குடி கொண்டிட நீ வா
காலைக் கதிர் நேர் முகத்தாய் வா கண்ணன் மருகா முருகா வா
சோலைமலை சுந்தரனே வா (எமை) சொந்தமாய் ஆண்டிட வா முருகா
ஆறு திருப்பதி அமர்ந்தாய் வா (பல) ஆயிரம் பதிகள் ஆள்பவா வா
கூறும் அன்பர் குறை தீர்ப்பவனே கூர்வடிவேலவனே குகனே வா
குஞ்சரி நாயக குமரா வா.

ராகம் : பீலு **தாளம் : ஏகம்**

1. சண்முக நாயகன் தோன்றிடுவான்
சிவசக்தி நாயகன் தோன்றிடுவான்

கண்களினால் கண்டு பார்த்திடலாம்
கொடும் காலனின் காலத்தை மாற்றிடலாம்

2. வேதாந்த தத்துவ சாரத்திலே
அலை வீசும் செந்தூர் கடல் ஓரத்திலே
ஓங்காரமாய் எங்கும் ஒளிப்பவனே
சண்முகனேசிவ குருபரனே ... சண்முக

3. சரவணத்தில் வந்து அமர்ந்தவனே
விண்ணவர் துயரத்தை தீர்ப்பவனே
வள்ளி தெய்வானையை மணந்தவனே
வடிவேலன் ஈசன் திருமகனே . . . சண்முக

4. வந்தபயன் அவன் காற்றிடுவான்
பெரும்வினைகள் எல்லாம் அவன் தீர்த்திடுவான்
ஊனமில்லா வாழ்வு அளித்திடுவான்
சண்முகனாய் குகனாய் வந்திடுவான் . . . சண்முக

ராகம் : காபி **தாளம் : ஆதி**

1. குருபரா குஹா சண்முகா வெற்றி வேலவா வா
ஆனைமுகன் சோதரனே வெற்றி வேலவா வா
அடியார்வினை தீர்ப்பவனே வெற்றி வேலவா வா
அவ்வைக்கு காட்சி தந்தாய் வெற்றி வேலவா வா

2. ஈசன் தந்த திருமகனே வெற்றி வேலவா வா
உமையளித்த கண்மணியே வெற்றி வேலவா வா
சக்தி அணிந்த வேலவனே வெற்றி வேலவா வா
நீலமயில் வாகனனே வெற்றி வேலவா வா

3. ஆவலுடன் உனைகாண வெற்றி வேலவா வா
இன்பம்பெறும் கடலேநீ வெற்றி வேலவா வா
உன்னருளை நாடிவந்த வெற்றி வேலவா வா

கருணையுடன் காத்திடவே வெற்றி வேலவா வா

4. எங்கும் நிறைந்தவனே வெற்றி வேலவா வா
அங்கம் குளிர்ந்திடவே வெற்றி வேலவா வா
பக்தியுடன் பாடுகின்றோம் வெற்றி வேலவா வா
பார்த்து மனம் மகிழ்ந்திடவே வெற்றி வேலவா வா

திருத்தணிகேசன் துதி

ராகம் : சிந்து பைரவி **தாளம் : ஆதி**

பல்லவி

திருத்தணிகை ஆண்டவனே தீன தயாபரனே
திருச்செவியில் ஏழை மக்கள் முறைக் கேட்டு அருள்வாய்
வாடி மனம் வருந்தி இந்த வையகத்தில் உள்ளோர்
நாடி வந்துன் சன்னதியில் பாடிப்பணி கின்றார்.

சரணங்கள்

1) காலமழை இன்றி எங்கும் கதிரவனும் காய
பால் அறவே வற்றி பசு மேய்ச்சலின்றி வாட
ஓலமிட ஏழைமக்கள் குடியெல்லாம் எரிய
சால்ப்பயிர் பச்சையெல்லாம் ஜலமின்றி கருக - வாடிமனம் வருந்தி

2) ஆங்காங்கு நற்பெரியோர் ஆண்டவனை வேண்டி
பாங்காக பஜனை செய்து பாடித் துதிக்கின்றார்
நீங்காமல் எங்கும் நிறைந்துள்ள பரம் பொருளே
தாங்காது இனிதுயரம் தக்ஷணமே ரக்ஷிப்பாய் - வாடிமனம்

3) பொருள் கொண்டு பூசிக்கும் வகையறியோம் முருகா
பொழிந்திடுவாய் நல்ல மழை பூமியெல்லாம் செழிக்க

மயிலேறும் மாமணியே மழைபொழிய அருள்வாய்
மாநிலமெல்லாம் குளிர மழை பொழிவாய் முருகா - வாடி

ராகம்: புன்னாகவராளி **தாளம்: ஆதி**

வா வா வா வடிவேல் முருகா வண்ண மயில் ஏறி வா வா வா
வள்ளியுடன் மகிழ்ந்து வா வா வா

நீல மயிலேறி வா வா வா
நீலகண்டன் மகனே வா வா வா
பாலமுருகனே நீ வா வா வா
பாதம் பணிந்தோம் காக்க வா வா வா (வா வா வா)

ஆனந்த வடிவனே வா வா வா
அம்பிகையாள் பாலகனே வா வா வா
கானக் குறத்திக் கன்பா வா வா வா
கார்த்திகை மைந்தனே வா வா வா (வா வா வா)

குஞ்சரி நாயகனே வா வா வா
கும்பமுனி குருவே வா வா வா
தஞ்சமடைந்தேன் உன்னை வா வா வா
தாமதமேன் ஓடி வா வா வா (வா வா வா)

தணிகாசல பதியே வா வா வா
தாயினும் தயையுடையாய் வா வா வா
(உன்னை) பணியாப் பிழை பொறுத்து வா வா வா
பவப்பிணி தீர்த்திட வா வா வா (வா வா வா)

வட பழனி ஆண்டவனே வா வா வா
வரமளித்து வாழ்வு தர வா வா வா
விடமாட்டோம் உன் பதத்தை வா வா வா
விருப்பமுடன் பாடுகின்றோம் வா வா வா (வா வா வா)

போரூர் பெருமானே வா வா வா

போற்றுகின்றோம் பொன்னடியே வா வா வா
ஏர் ஊர்ந்தான் மைந்தனே வா வா வா
ஏழை எங்களை காக்க வா வா வா (வா வா வா)

கைலாஸ வாஸ கந்தா வா வா வா
கடைக் கண்ணால் பார்த்திரங்கி வா வா வா
ஒயிலாக மயிலேறி வா வா வா
(எங்கள்) உள்ளத்தில் என்றும் வாழ வா வா வா (வா வா வா)

ராகம்: பாகேஸ்வரி தாளம்: ஆதி

1. நீலவானிலே நிறைமதி போலுந்தன்
எழில் மலர் முகம் தோணுதே (முருகா)
வேலவா உந்தன் பால் வடியும் முகம்
(என்) நெஞ்சமதில் காணுதே (முருகா) (நீல)

2. ஆறுமுகா உந்தன்அழகினைக் கண்டு உள்ளம்
ஆசைமிகக் கொள்ளுதே (முருகா)
கூறு கொண்ட மயில் வாகனம் போல் மனம்
குதித்துக் கொண்டாடி துள்ளுதே (முருகா) (நீல)

3. செந்தாம ரைப்பாதம் சிந்தையில் கண்டமனம்
கந்தா எனக் கூவுதே (முருகா)
எந்தாய் உனைக் கண்டு ஏழை எந்தன் நெஞ்சம்
உன்தாள் மலர் நாடுதே (முருகா) (நீல)

4. பார்த்துப் பார்த்து மனம் பரவசமாகியே
பாடிப் பாடி உருகுதே (முருகா)
யார் துணையுமின்றி அலைந்த என் உள்ளம்
உந்தன் அடிமலர் நாடி வருகுதே (முருகா) (நீல)

5. எங்கிலும் நிறைந்த உன் அருள் ஒளி கண்டு
என் இருள் மனம் ஒளியாகுதே (முருகா)
பொங்கி எழும் வினை (உன்) பொன்னடி காணவும்
மங்கி மறைந்து போகுதே (முருகா) (நீல)

6. எந்த நேரமும் என் மனம் உன்னடி

எண்ணி எண்ணி உருக வேண்டும் (முருகா)
கந்தனே என்னை சொந்தமாய் ஏற்று நீ
தந்த அருள் பருக வேண்டுமே (முருகா) (நீல)

ராகம்: சாரங்கா தாளம்: ஆதி

அத்திக்கு இறைவன் முக்திக்கு முதல்வன்
சித்திகள் தருவான் சிவன் மகன் மருகன்

சக்தி சிவகாம சுந்தரி பாலன்
எத்திக்கும் போற்றும் எம்மையன் முருகன்

ஆனைக் கிளையோன் ஆறுமுகத்தோன்
ஆரும் நிகரில்லா ஆண்டவன் முருகன்
மானை நிகர் விழி வள்ளியின் மேல் மையல்
ஆனவன் குஞ்சரி நாயகன் முருகன்

ஈசர்க்கும் குருவாம் எங்கள் முருகன்
பாசங்கள் தீர்ப்பான் பார்வதி பாலன்
தாசர்க்கருளும் தயாளன் முருகன்
ஆசையுடன் மயில் மீதேறி வருவான்

இன்பமுடன் பக்தர் இதயத்துள்ளிருப்பான்
தன் பதம் தருவான் தணிகை வாழ் முருகன்
வன்பவ நோய் தீர்த்து வரம் பல தருவான்
துன்பங்கள் தொடராமல் துணையாக வருவான்

உள்ளம் பிரியாமல் உடன் நின்று காப்பான்
வள்ளியம்மைக் கிடந்தந்த தயாளன்
துள்ளி வரும் தோகை மயில் மீது வருவான்
அள்ளி அருள் தந்து அனுதினம் காப்பான்

ராகம்: தேஷ் தாளம்: ஆதி

ஆறுமுக வேலவனை அடிபணிவோமே
அவன் அருள் அடைவோமே

சிங்கார ரூபனடி - சங்கரியாள் பாலனடி
தங்கவடி வேலனடி தணிகையின் நாதன்
செந்தாமரை பாதன் (ஆறுமுக)

கால காலன் பாலனடி - கங்கையின் குமாரனடி
நீல மயில் வாகனடி ஷண்முக நாதன்
ஸ்ரீ சத்குரு போதன் (ஆறுமுக)

தஞ்சமென்ற தேவர் படும் சஞ்சலங்கள் தீர்த்தருளி
குஞ்சரியை மணம் புரிந்த குமரனைப் பணிவோம் - தேவ
(ஆறுமுக)

புள்ளி மயில் ஏறிவந்து வள்ளியை சிறை எடுத்த
கள்ளனான கந்தனை நாம் கை தொழுவோமே
அடி பைங்கிளியே நாம் (ஆறுமுக)

தணிகை மலை தேவனடி - தாசர்க்குஉபகாரனடி
பணியும் அன்பர் குறை தீர்க்கும் பன்னிரு தோளன்
அவன் பரம தயாளன் (ஆறுமுக)

ராகம்: உசேனி **தாளம்: ஆதி**

1. இன்னமும் தயவில்லையா - எமக்கன்னை தந்தை நீ இல்லையா
என்ன தாமதம் சொல்லையா (எங்கள்) முன்னம் வந்து நீ நில்லையா
2. பேதை எங்களை பார்த்திடாய் துயர் தீர்த்திடாய் - எமை காத்திடாய்
(பெரும்)
வாதை செய்வினை மாற்றிடாய் இங்கு வந்திடாய் உன்னை போற்றிட
3. கங்கை தந்திட்ட பாலனே - தணிகை மலையில் நின்றிட்ட வேலனே
மங்கை பங்குடை பாகனார்க்கருள் போதனே மலர் பாதனே
4. அன்னை வள்ளியின் மோகமோ - எங்கள் முன்னைத் தீவினை வேதமோ
(இங்கு)
தன்னையே மறந்தன்பர் பாடிடும் - பாட்டினில் அருள் தாகமோ
5. பாடிப் போற்றிடும் பக்தர் எங்கள் மேல் வாதமோ இது நீதமோ (பக்கம்)

கூடி நின்றவர் போதமோ அருள் செய்திட்டால் வரும் ஏதமோ

6. பக்தர் போற்றிடும் பாதனே தணிகை நாதனே அருள் போதனே (உன்)
சித்தம் சற்று இரங்கி வந்து எம்பாட்டை கேட்டருள் செய்குவாய்

ராகம்: காபி **தாளம்: ஆதி**

1. கந்தன் என்று சொந்தமுடன் வந்தேன் அப்பா முருகா
எந்தனை நீ கைவிடாமல் ஏற்றுக்கொள்வாய் முருகா
வந்து என்னை காத்திடுவாய் வள்ளி மகிழ் முருகா
(நான்) நொந்துரைத்த பிழைகளெல்லாம் மறந்திடுவாய் முருகா
(கந்தன்)

2. ஆடு மயில் ஏறி வரும் ஆறுமுகா முருகா
தேடி வந்தேன் உன்னடியை திருத்தணிகை முருகா
பாடி வருவார்க் கருளும் பன்னிரு கை முருகா
(நீ) நாடி வருவாய் அடியேன் உள்ளமதில் முருகா (கந்தன்)

3. நம்பினவர்க் கருள்புரியும் நாயகனே முருகா
தும்பி முகன் தம்பியென துணைபுரியும் முருகா
அம்பிகையாள் பாலனே ஆண்டவனே முருகா
(நான்) வெம்பி மனம் புண்ணானேன் வினை தீர்ப்பாய் முருகா
(கந்தன்)

4. பாராதி அண்ட மெல்லாம் படைத்தவனே முருகா
மாறாத கருணை பொழி மாமுகிலே முருகா
தீராத வினைகள் எல்லாம் தீர்த்திடுவாய் முருகா
வாராயோ எந்தன் உள்ளம் வாழ்ந்திட நீ முருகா (கந்தன்)

5. முருகா முருகா என்று முறை இடுவேன் முருகா
உருகாதோ உந்தன் மனம் உத்தமனே முருகா
கருவாக்கி உருவாக்கி காத்தருளும் முருகா
தருவாயோ நின் அருளை தாமதமேன் முருகா (கந்தன்)

6. பன்னிரு கை வேலவனே என்னரசே முருகா
உன் இரு தாள் தஞ்சம் என்று ஓடி வந்தேன் முருகா
தன்னிகரில்லா குகனே தணிகையில் வாழ் முருகா
என்இடர் தீர்த்து ஆளும் ஐயா ஏழை பங்கா முருகா (கந்தன்)

7. கண்ணின் ஒளியாய் திகழும் ஷண்முகனே முருகா
மண்ணளந்தான் மாயவன்தன் மருமகனே முருகா
பெண் இருவர் கொண்டவனே பெருமானே முருகா
என் எண்ண மெல்லாம் உன்னடியில் இருக்க வைப்பாய் முருகா ||

ராகம்: காவடிசிந்து; தோடி **தாளம்: ஆதி**

ஷண்முகா சிவ ஷண்முகா சிவ
ஷண்முகா சிவ ஷண்முகா
ஷண்முகா சிவ ஷண்முகா சிவ
ஷண்முகா சிவ ஷண்முகா

வானமாய் நின்ற வள்ளலே - அருள்
மாரியாய் பொழி மேகமே
நான தற்றவர் நாடும் இன்மே
நாதனே தணி கேசனே (ஷண்முக)

எங்கிலும் நிறைந்துள்ளவா - ஏழை
பங்கில் நின்றருள் செய்பவா
மங்களம் பெற வாழ்த்தி உன்னிரு
பாத பங்கஜம் போற்றினோம் (ஷண்முக)

தணிகை வாழ் குரு நாதனே (பாதம்)
பணியும் பக்தருக்கு போதனே (நவ)
மணி யணிந்திடும் மார்பனே - வள்ளி
அணியும் தார் அணி தோளனே (ஷண்முக)

கங்கை தந்திட்ட பாலனே - மன
சங்கை தீர்த்திட்ட சீலனே
மங்கை குஞ்சரி லோலனே - இங்கு
எங்களுக் கருள் வேலேனே (ஷண்முக)

ராகம்: மாண்டு **தாளம்: ஆதி**

முருகா முருகா வேல் முருகா - திருமால் மருகா தணிகேசா
வருவாய் வருவாய் வல்லீசா - வைஷ்ணவி தாயுடன் வந்தருள்வாய்

குஞ்சரி நாயகா குமரேசா - குஞ்சரர சோதர குருநாதா
தஞ்சமடைந்தோம் தணிகேசா - அஞ்சலென்றன்புடன் வா முருகா
சரவண பவனே ஷண்முகனே - அரன் குருமணியே ஓம் குகனே
மரகத மயூர வாஹனனே - குறமங்கை மணாளா மகிழ்வுடன் வா

(முருகா)

ராகம்: மாண்டு; ஷண்முகப்ரியா **தாளம்: ஆதி**

முருகன் என்றதுமே எனக்கொரு
மோகம் பிறக்குதம்மா - அம்மம்மா
மோகம் பிறக்குதம்மா
உருகி என்தன் மனதில் அன்பு வெள்ளம்
ஓடிப் பெருகுதம்மா - அம்மம்மா
ஓடிப் பெருகுதம்மா
கந்தன் பெயர் கேட்டால் மனமும்
களித்து குதிக்குதம்மா - அம்மம்மா
எந்தன் மன நிலையை அம்மம்மா
எப்படி நான் உரைப்பேன் - அம்மம்மா
ஷண்முக னென்றவுடன் என் மனம்
உன் முகம் ஆகுதம்மா - அம்மம்மா
எண்ணி எண்ணி மனமும் நெகிழ்ந்து
ஏகாந்த மாகுதம்மா - அம்மம்மா
வேலன் பெயர் கேட்டால் எனது
வேதனை தீருதம்மா - அம்மம்மா
பாலன் வடிவழகைப் பார்த்து மனம்
பரவசமாகுதம்மா - அம்மம்மா
வள்ளிக் கணவன் பெயர் உரைத்தால்
உள்ளம் குளிருதம்மா - அம்மம்மா
எள்ளி நகைப்பார் முன் என் மனம்
ஏங்கித் தவிக்குதம்மா - அம்மம்மா
புள்ளி மயிலேறும் பிள்ளை - என்
உள்ளத்தைக் கொள்ளை கொண்டான் - அம்மம்மா

கள்ளம் கபடறியா பாலகன் அவன்
கட்டழ கென்ன சொல்வேன் - அம்மம்மா
ஆறுமுகனைக் கண்டேன் இனி நான்
வேறு முகம் பாரேன் - அம்மம்மா
ஏறும் மயில் கண்டேன் மனமும்
இன்பமாய் ஆடுதம்மா - அம்மம்மா
பாடிப் பணிந்திடுவோம் முருகனை
நாடித் தொழுதிடுவோம் - அம்மம்மா
ஓடி வந்தே அருள்வான் முருகன்
உள்ளம் பிரியானம்மா - அம்மம்மா
நம் உள்ளம் பிரியானம்மா (முருகன்)

ராகம்: சிவரஞ்சனி **தாளம்: ஆதி**

பல்லவி

ஆயிரம் கோடி நமஸ்காரம் செய்கின்றேன்
அழைத்து வருவாய் மயிலே முருகனை - நீ
அழைத்து வருவாய் மயிலே

அனுபல்லவி

மாயிருள் நீக்கிடும் ஞாயிறு போல
மனதிருள் அகற்றிடும் தினகரன் குகன்வர - ஆயிரம்

சரணம்

நீலவானில் எழும் பால சூரியன்போல்
கோலமயிலே உன்மேல் குங்கும வண்ணனாம்
வேலவனைத் தாங்கி வந்தென் வேதனை தீர்த்திட
வேண்டி பணிந்தேன் செந்தில் ஆண்டவனைக் காண

ராகம்: புன்னாகவராளி; சிவரஞ்சனி தாளம்: ஆதி

1. ஆடுமயிலே நிர்த்தம் ஆடுமயிலே - முருகன்
ஆட்கொள்ள வந்தானென்று
ஆடுமயிலே - கூத்தாடு மயிலே

2. அச்சமெல்லாம் தீர்ந்ததென்று ஆடுமயிலே - மன
இச்சையெல்லாம் போனதென்று ஆடுமயிலே
உச்சிக் கொண்டை தான் அசைய ஆடுமயிலே - உந்தன்
பச்சை வண்ணத் தோகை விரித்தாடு மயிலே

3. தணிகைமலை நாதன்வர ஆடுமயிலே -பாதம்
பணியும் எங்கள் கண் குளிர ஆடுமயிலே
செந்தில் வடிவேலன் வர ஆடுமயிலே
சிந்தை மகிழ்பொங்க நடனம் ஆடுமயிலே

4. சஞ்சலங்கள் தீர்ந்ததென்று ஆடுமயிலே - சிவ
ஷண்முகனைக் கண்டோமென்று ஆடுமயிலே
தஞ்ச மென்றால் காப்பானென்று ஆடுமயிலே - குற
வஞ்சி வள்ளி நாதன் வர ஆடுமயிலே

5. தத்திமென்று தாளமுடன் ஆடுமயிலே - சிவ
சித்திக்கும் சித்திக்குமென்ற ஆடுமயிலே
பக்தியுடன் பாடுகின்றோம் ஆடுமயிலே - உன்
சித்திர தோகை விரித்தாடு மயிலே

6. எங்கள் குல தெய்வம் வர ஆடுமயிலே - மிக
துங்க வடிவேலன் வர ஆடுமயிலே
மங்கையர் இருவருடன் மால் மருகனை
இங்கழைத்து வந்து நீ ஆடுமயிலே (ஆடுமயிலே)

அன்னை ஸ்ரீ ஆண்டவன் பிச்சை அவர்களால் 1952 ஆம் ஆண்டு ஸ்ரீ வடகதிர்காம திருச்சன்னிதியில் பாடிய அருட்கண்ணிகள்

1) உள்ளம் உருகுதடா முருகா உன்னடி காண் கையிலே
அள்ளி அனைத்திடவே எனக்குள் ஆசை பெருகுதடா
2) பாடிப்பரவசமாய் உன்னையே பார்த்திடத் தோணுதடா
ஆடும்மயிலேறி முருகா ஓடி வருவாயடா
3) பாதமலர் மணத்தால் மனதில் பக்தி பெருகுதடா
நாதன் திருவருளால் எனக்குள் நாலும் விளங்குதடா
4) ஆறு திருமுகமும் அருளை வாரி வழங்குதடா
வீறு மிகும் தோளும் கடம்பும் வெற்றி முழக்குதடா
5) பாசம் அகன்றதடா உந்தன்மேல் ஆசை வளருதடா
ஈசன் திருமகனே முருகா ஈனம் மறைந்ததடா
6) பற்றுதல் அற்றதடா உன்னடி பற்றுதல் உற்றதடா
அற்றது என் பிறவி இனிமேல் ஆள்வதுன் பாரமடா
7) உன்னடியே பணிந்தேன் முருகா என் வினை தீர்ந்ததடா
என்னகத்தே இருந்து முருகா உன்னுரு காட்டிடடா
8) பந்தம் அகன்றதடா உனக்கு சொந்தமதானேனடா
கந்தன் என்றபோதே கலங்கி அந்தகன் போனானடா
9) அன்பில் உருகுதடா மனதில் ஆர்வம் பெருகுதடா
என் பாவம் தீர்ந்ததடா இனியோர் துன்பமும் இல்லையடா
10) காதல் பெருகுதடா முருகா கண்களி கூறுதடா
சாதல் பிறத்தலெல்லாம் கடந்தேன் சாமி நீ யானேனடா
11) கண் கண்ட தெய்வமடா நீ இந்த கலியுக வரதனடா
பெண்ணென்று இகழாமல் எனக்குப் பேரின்பம் தந்தாயடா
12) வாழ்த்திப் பணிந்திடுவேன் உனையே வந்தனை செய்திடுவேன்

தாழ்த்தி உயர வைத்தாய் உந்தன் தண்ணருள் என்ன சொல்வேன்

13) கண்ணில் கருமணியே முருகா கற்கண்டின் இன்சுவையே
உண்ணத் தெவிட்டாத கனியே உம்பர் தங்கள் அமுதே

14) வெற்றி வடிவேலும் மயிலும் வேதனைத் தீர்த்ததடா
பற்றினேன் பாதமலர் அடிமை பாவங்கள் போனதடா

15) கண்ணில் அருள்ஒளியும் உனது ஷன்முகத்தில் தயையும்
எண்ணியப் போதினிலே என்மனப்புண் ஆறிப் போனதடா

16) வாரி அணைத்திடுவேன் அகத்தில் வாசமலர் அணிவேன்
யார் இணையாம் எனக்கு உனது அடியார்க்கடிமையடா

17) பன்னிரு தோட்களிலும் உனக்குப் பாமாலை சூட்டிடுவேன்
என்னிரு கண்மணியே முருகா என்னிடம் வந்திடடா

18) உள்ளக்கமலத்திலே உனக்கு ஊஞ்சலிட்டேன் முருகா
வள்ளியுடன் வருவாய் உனையே மெள்ள நானாட்டிடுவேன்.

(Verses sung by the Andavan Pichai Bhajan Mandali)

ராகம்: அடாணா **தாளம்: ஆதி**

உள்ளம் உருகுதடா முருகா உன்னடி காண்கையிலே
அள்ளி அணைத்திடவே எனக்குள் ஆசை பெருகுதடா (முருகா)

பாடிப் பரவசமாய் உன்னையே பார்த்திடத் தோன்றுதடா
ஆடும் மயிலேறி முருகா ஓடி வரு வாயாடா (முருகா)

ஆறு திருமுகமும் அருளை வாரி வழங்குதடா
வீறுமிகும் தோளும் கடம்பும் வெற்றி முழக்குதடா (முருகா)

வெற்றி வடிவேலும் மயிலும் வேதனை தீர்த்ததடா
பற்றினேன் பாதமலர் அடிமை பாவங்கள் போனதடா (முருகா)

(உன்) அன்பில் உருகுதடா மனதில் ஆர்வம் பெருகுதடா
என் பாவம் தீர்ந்ததடா இனியோர் துன்பமும் இல்லையடா (முருகா)

வாழ்த்திப் பணிந்திடுவேன் உன்னையே வந்தனை செய்திடுவேன்
தாழ்த்திப் பணிய வைத்தாய் உன் தண்ணருள் என்ன சொல்வேன் (முருகா)
(உள்ளம்)

ராகம் : ஆபேரி தாளம் : ஆதி

1. மோனப்பர வெளியில் வெண்ணிலாவே - எங்கள்
முருகனைக் கண்டதுண்டோ - வெண்ணிலாவே

2. தண்ணொளி பரப்பி வரும் வெண்ணிலாவே (சிவ)
ஷண்முகனைக் கண்டதுண்டோ வெண்ணிலாவே
பன்னிருகை கொண்டவனை வெண்ணிலாவே நீ
பார்த்து மகிழ்ந்ததுண்டோ வெண்ணிலாவே

3. ஆகாச வீதியிலே வெண்ணிலாவே - எங்கள்
ஆறுமுகன் வந்ததுண்டோ - வெண்ணிலாவே
சிதாகாசத்தில் உதிக்கும் வெண்ணிலாவே - அந்த
சின்மயனை கண்டதுண்டோ வெண்ணிலாவே

4. இதய வானத்தில் தோன்றும் வெண்ணிலாவே - முருகன்
இருக்குமிடம் கண்டதுண்டோ - வெண்ணிலாவே
உதயம் மறைவதில்லா ஞான வெண்ணிலாவே என்
உள்ள இருள் நீக்காயோ வெண்ணிலாவே

5. உள்ளப் பெருவெளியில் வெண்ணிலாவே நீ
உதிக்கும் நாள் என்னாளோ வெண்ணிலாவே நீ
எல்லையற்ற வானில் எழும் வெண்ணிலாவே என்
சொல்லை கேட்டுரைப்பாய் உண்மை - வெண்ணிலாவே

ராகம்: யதுகுலகாம்போதி **தாளம்: ஆதி**

தலையே நீ வணங்காய் தணிகாசலத் தாண்டவனை
தலையோர் ஆறுளோன் தண்டாமரைப் பாதம் (தலையே)

கண்காள் காண்மின்களோ அருள் கானக மானீன்ற
பெண் காதலித்த பெம்மான் முருகனை - கண்காள் காண்மின்களோ

மூக்கே நீ முரலாய் - மூவர் தேவர்க்கும் முன்னவனை
வாக்கால் பாடி வணங்கி குகனடி - மூக்கே நீ முரலாய்

செவிகாள் கேண்மின்களோ - சிவ ஷண்முகன் தன் பெருமை
அவியா அருட்சுடர் ஆறுமுகன் புகழ் - செவிகாள் கேண்மின்களோ

வாயே வாழ்த்து கண்டாய் - வையம் உய்ய அரனளித்த
சேயாம் கந்தனை சேவற் கொடியானை - வாயே வாழ்த்து கண்டாய்

நெஞ்சே நீ நினைப்பாய் - நீல மயிலேறி வரும்
செஞ்சேவடி மலர் சேவித்து சிந்தையில் - நெஞ்சே நீ நினைப்பாய்

கை காள் கூப்பித் தொழீர் - கந்தன் கமல மலர்ப் பாதம்
வையார்க்கும் அருள் பாலிக்கும் -அண்ணலை கை காள் கூப்பித் தொழீர்

கால்களாற் பயனென் - கந்தன் காக்ஷி தரும் கோயில்
சீலமாய்ச் சென்று சேவித்திடா - இக் கால்களாற் பயனென்

ஆக்கையால் பயனென் ஆறுமாமுகன் மாமலர்த்தாள்
பூக்கையால் இட்டு போற்றி செய்யாத - இவ்வாக்கையால் பயனென்

அஞ்சேல் ஏழை நெஞ்சே உன்னை ஆள ஆறுமுகன் தன்
செஞ்சேவற் கொடி காட்டி அழைக்கின்றான் அஞ்சேல் ஏழை நெஞ்சே

உற்றாரும் முருகன் நம்மை பெற்றாரும் முருகன் அவன்
பொற்றாமரைப் பதமே நமக்கு உற்ற துணையாமே.

ராகம்: துர்கா **தாளம்: ஆதி**

1. பாருக்குள் உந்தனைப் போல் முருகையா
பாலிக்கும் தெய்வம் உண்டோ
ஆருக்கும் மிக்கவனே முருகையா
ஆதரித் தாளு மையா.

2. வாடி மனம் உருகி முருகையா
வந்துன்னடி பணிந்தேன்
ஓடி வந்தாளுமையா முருகையா
உன்னடியே துணை காண்.

3. எண்ணாத எண்ணமெல்லாம் முருகையா
எண்ணி நான் வாடுகிறேன் - கடைக்
கண்ணால் எந்தனைப் பாரும் முருகையா - உன்
காலுக்கு கும்பிடுகிறேன்.

4. உள்ளத்தில் நின்றிலங்கும் முருகையா
கள்ளமேன் கற்றுக் கொண்டாய்
வள்ளிக்கு வாய்த்தவனே முருகையா
வந்தென்னை காருமையா

5. குஞ்சரி நாயகனே முருகையா - உன்னைத்
தஞ்ச மடைந்தேன் ஐயா
வஞ்சனை செய்யாதே முருகையா
சஞ்சலம் தீர்த்திடுவாய்

6. ஓதிய வேத மெல்லாம் முருகையா
உன்னடி காண வில்லை
ஆதி யோட யந்தமில்லா முருகையா
அன்புடன் வாருமையா

7. மாசில்லா மாணிக்கமே முருகையா
மாற்றில்லா செம் பொன்னே
தேசிகனாய் வந்த முருகையா
தேவ சேனாதிபதியே (பாருக்குள்)

நாமாவளிகள்

சக்தி வேடிவேலா பக்தர் அனுகூலா
பக்தியுடன் உன்னைப் பாடிப் பணிந்தோம்

பன்னிருகை வேலா அன்பர் அனுகூலா
அன்புடனே உன்னைப் பாடிப் பணிந்தோம்

ஆறுமுக வேலா அம்பிகையாள் பாலா
ஏறுமயில் ஏறி இங்கு வருவாயே (சக்தி)

கந்தா நின் பாதார விந்தம் துணை
எந்தாயும் தந்தையும் நீயல்லவோ
வேல் சக்தி வேல் சக்தி வேலே துணை (கந்தா)

ராகம்: பரஸ் **தாளம்: ஏக**

பல்லவி

கொண்டோடி வா மயிலே
பழனி தண்டாயுத பாணியைக் கண்டு தரிசிக்க (கொண்)

அனுபல்லவி

அண்டமெல்லாம் நிறைந்த ஆறுமுக வடிவேலன்
தொண்டர்கள் முன்னுமே துரிதமாய் கொண்டு வா (கொண்)

வண்ணத் தோகை மயிலே நின்றாடும் மயிலே
துணை வேறே கதியில்லை (கொண்)

சரணம்

பழனிப்புரி வேலன் பார்வதி பாலனை
பக்தர் ஸஹாயனை பரம தயாளனை
ஆண்டவனை பணி பூண்டவனை பழனி
குற மங்கை மணவாளனை (கொண்)

ராகம்: மோஹனம் வேல் **தாளம்: திஸ்ரநடை**

1. ஆதி பராசக்தி வேல் எங்கள்

ஆண்டவன் தாங்கிடும் வேல்
ஆதி சிவன் தந்த வேல் மயில்
மீதினில் ஆடிடும் வேல்
அணுவிற் கணுவான வேல்
பெரும் அண்டம் அளாவிடும் வேல்
அன்பர் பணிந்திடும் வேல்
எங்கள் தண்டபாணியின் கை வேல்

2. ஆறுமுகம் கண்ட வேல்
தேவர் ஆவலை தீர்த்தவை வேல்
வீறு கொண்டெழுந்த வேல்
சூரன் மார்பை துளைத்தவை வேல்
குன்றில் மணங் கொண்ட வேல்
திருச்செந்தினில் ஆடிடும் வேல்
கொஞ்சும் பழனி வை வேல்
திரு ஏரகம் காட்டிய வேல்

3. மலைகளில் ஆடிடும் வேல்
சோலைமலை தன்னில் ஆடிடும் வேல்
கலைகளில் ஆடிடும் வேல்
கர்ம வினைகளை தீர்த்திடும் வேல்
நல்லவர் பாடிடும் வேல்
வேத நான்முகன் தேடிய வேல்
தொல்லைகள் தீர்த்திடும் வேல்
அருள் எல்லையில் ஆடிடும் வேல்

4. ஞான வடிவான வேல்
தெய்வயானை தொழுதிடும் வேல்
மோன வடிவான வேல்
வள்ளி மாதவன் போற்றிடும் வேல்
நாத நிலையான வேல் எங்கள்
ஞாலம் புகழ்ந்திடும் வேல்
ஜோதி வடிவான வேல்
அருள் ஜோதியுள் ஜோதியுள் வேல் (ஆ)

ராகம்: சாருகேசி **தாளம்: திஸ்ரநடை**

நீரெடுத்து நெற்றியிலே நிறைய அணிந்து அன்பாய்

ஆறெழுத்தை அகத்தினுள்ளே ஆர்வமுடன் ஜபித்து
வேர் அழிந்த வ்ருக்ஷம் போல் வேலன் அடிபணிந்து
கூறிடுவாய் குகன் நாமம் கும்பிடுவாய் மனமே
முருகா முருகா முருகா முருகா

நாறும் உடல் வினைதீர நமஸ்கரித்து நாவால்
வீறுமிகும் தோத்திரங்கள் விருப்பமுடன் பாடி
நாரெடுத்து நன்மலர்கள் மாலைகளாய் தொடுத்து
காரவுணர் காலனுக்கு கருத்து மகிழ்ந்து அணிவாய்
முருகா முருகா முருகா முருகா

ஏறும் மயில் வாகனனை இதயத்தினுள் தொழுவாய்
அறுபகை- வரையும் சீறும் அறுவகைவரையும் சிதைத்திடுவாய் மனமே
ஆறுபடை வீடுடையோன் ஆறுமுக நாதன்
கூறும் அன்பர் குறை தீர்க்கும்குஞ்சரி நாயகனை
பணிவாய் மனமே தொழுவாய் தினமே

ராகம்: பிலஹரி **தாளம்: ஆதி**

பல்லவி

சரணுகத ரக்ஷகா ஓம்
சரவணபவகுஹ ஸ்ரீ ஸ்வாமி நாதா (சரணா)

அனுபல்லவி

கருணா பயோநிதே நமோஸ்துதே
கமலாஸ னார்ச்சித கார்த்திகேய மூர்த்தே (சரணா)

சரணம்

கங்கா ஸுபுத்ர ஷட்வக்த்ர த்விஷன் நேத்ர
காங்கேய கானப்ரிய திவ்ய காத்ர
சங்காதி பேரி சதா கோஷித - ஸுர
ஸம்ஹார வீர பராக்ரம சக்தி தர (சரணா)

சங்காதி பேரி ஸதா கோக்ஷித ஸுர
ஸம்ஹார வீர பராக்ரம சக்தி தர
(இந்த இரண்டு அடிகளையும் அனுபல்லவி போல் பாட வேண்டும்)

ராகம்: ஷண்முகப்ரியா | தாளம்: ரூபகம்

பல்லவி

ஷண்முக பரி பாலயமாம்
சரவண பவ ஸ்வாமி நாதா (ஷண்)

அனுபல்லவி

புண்ய மூர்த்தே புவன ரக்ஷக
போக மோக்ஷ ஸ்ரீதாயக குருகுஹ (ஷண்)

சரணம்

காம க்ரோதி மோஹ ரூப
காதக தாரக ஸிம்ம முக சூர
தூம கேது நிவாரண காரண
துர்குண சிக்ஷண துக்க நிவாரண (ஷண்)

ராகம்: உசேனி | தாளம்: ஆதி

பல்லவி

சதா பாலய சரவண பவ சிவ
சங்கர குமார ஷண்முக மாம் (சதா)

அனுபல்லவி

ஸுதா ஸாகர ஸுஜன மனோஹர
ஸுத்த சைதன்ய ஸ்வரூப ஸ்ருதிநுத
ஸுப்ரமண்ய ஸுரமுனி வந்தித (சதா)

சரணம்

பதித பாவன பாபவி மோசன
பார்வதி நந்தன பக்த பரிபாலன
விதி கர்வநாசன விமல மந்த்ர போதன
விக்ரம சூர பத்ம மர்த்தன விசித்ர
மயூர வாகன நர்த்தன (சதா)

ராகம்: காபி **தாளம்: ஆதி**

பல்லவி

கந்தா முருகா என்னை கார்

எந்தன் சிந்தாகுலம் தீர்க்க வந்தருள் தாராய்

அனுபல்லவி

மைந்தா குமரா வடிவேலா

பவ பந்தம் அஹில அருள் தாராய்

சரணம்

முகுந்தன் மருகா முருகா

ஏன் அஹிந்தை அஹில வழி காணேன்

நிகரிலா நின் பாதத்தை

நினைந்து மகிழ் அருள் தாராய்

ராகம்: காம்போதி **தாளம்: ஆதி**

பல்லவி

திருப்புகழ் பாடிடுவோம் - உந்தன்
திருவடிப் போற்றிடுவோம் - சந்தத் திருப்புகழ்

அனுபல்லவி

விருப்புடன் கேட்டுநின் கருத்தினில் கனிவுடன்
கருப்பையிலினி தள்ளாதருள் புரிவாய் - இன்ப

சரணம்

சன்னிதி முன்னின்று சரண பவனென்று
இன்னிசையுடன் பாடி ஏற்றினோம் போற்றினோம்
தன்னிகரில்லா தணிகாசலனே
உன்னிருதாள் தொழும் உள்ளம் அருள்வாய்

அன்பர் அருணகிரி அனுபவித்தன்றுரைத்த
இன்பத் திருப்புகழால் இசையுடன் போற்றினோம்
உன் பதம் பணிந்திடும் உயர்நிலை அருள்வாய்
வன்பவவினை ஒழித்தாண்டருள் புரிவாய்

ராகம்: கானடா   தாளம்: ஏகம்

1. வண்ண மயில் ஸ்வர்ண மயில்
வான மங்கை ஏறும் மயில்
மன்னன் வரும் அழகு மயில்
மால் மருகன் ஏறும் மயில்
தென்னவர்க்கோன் கூன் நிமிர
செய்த குகன் ஏறு மயில்
தும்பி முகன் தம்பி மயில்
தோகை விரித்தாடு மயில்

2. அம்பிகையாள் ஈன்றெடுத்த
ஆறுமுகன் ஏறும் மயில்
நம்பினவர்க்கருள் புரியும்
நாதன் வரும் பச்சை மயில்
கள்ள மில்லா புள்ளி மயில்
கந்தனுக்கு சொந்த மயில்
வள்ளல் வரும் வாகை மயில்
வள்ளி மணவாளன் மயில்

3. உள்ளமதில் ஆடும் மயில்
ஓங்காரமான மயில்
பச்சை மயில் இச்சை மயில்
பார்வதியாள் பாலன் மயில்
நச்சவரம் பூண்ட ஹரன் நச்சரவம்
இச்சையுடன் தந்த மயில்
கொச்சை மொழியாள் குறத்திக்கு
இச்சை வைத்தான் ஏறும் மயில்

ராகம்: ஹம்ஸாநந்தி   தாளம்: ஆதி

மாமயிலேறி நீ வா மஹானுபவா
1. சுந்தர ரூபா சுக்குத ஸல்லாபா
செந்தமிழ் புகழ் பிரதாபா சத்ய ஸ்வரூபா
2. தாமதமேனோ திருப்புகழ் தேனோ
சயாமளன் தன் மருமகனே எந்தன் ஸ்ரீமானே

3. கதி எனக்கேது புவி இதன் மீது
பதியே நின்னையல்லாது புகலிப்போது - பாமயி

குக்குடம்

ராகம்: நாத நாமக்ரியா **தாளம்: ஆதி**

1. ஏறுமயில் ஏறி வரும் ஆறுமுக நாதன்
பாருலகம் போற்றுகின்ற பங்கஜப் பொற்பாதன்
கூறும் அடியார்கள் வினை தீர்த்திடுவான் என்று
கொக்கரித்து அவன் பெருமை கூவிடுவாய் -குக்குடமே

2. வைய்யாபுரிக்கரசன் வள்ளி மகிழ் நேசன்
ஐயா என்றார்க்கிரங்கும் அன்பர் உளவாசன்
கையோர் ஈறா ருடையான் - கருணை வள்ளல் என்றே
வையகத்தில் வாழ்பவர்க்கு வாழ்த்துரைப்பாய் - குக்குடமே

3. அருணகிரிக்குள் புரிந்து - ஆட்கொண்ட வேல் முருகன்
கருணை முகிலாகும் கந்தன் கண்ணன் திரு மருகன்
வரமெனக்கு அருளி எந்தன் வல் வினைகள் தீர்க்க
பரிமயில் மேல் ஏறிவர பகர்ந்திடுவாய் -குக்குடமே

4. குன்று தோறும் நின்று விளையாடும் குமரேசன்
மன்றுள் ஆடும் அம்பலவன் மைந்தன் முருகேசன்
என்றும் அவன் தாள் பணிவார்க்கில்லை நமன் என்று
சென்றுலுக மாந்தருக்கு செப்பிடுவாய் -குக்குடமே

5. வாது செய்த சமணர்களை வல்லமையால் வென்றான்
சூது செய்த அசுரர்களை சூறையிட்டு கொன்றான்
போத குருவாய் அரர்க்கு உண்மை உரை செய்தான்
பாதமலர் பணியுமென்று பகர்ந்திடுவாய் -குக்குடமே

6. கோல மயில் ஏறி வரும் குஞ்சரியாள் லோலன்
பால வடிவேலனவன் பக்த பரிபாலன்
ஆலம் உண்ட அரனார்க்கு அன்புடைய பாலன்
அருமறைக்கும் நாதனென்று கூவிடுவாய் -குக்குடமே

ராகம்: ஆபோகி **தாளம்: ஆதி**

பல்லவி

ஒரு தரம் முருகனை நினைப்பவர்க் கிருவினை

அறும் என்றுணர்வாய் - மனமே - தினமும்

அனுபல்லவி

திருத்தணிகை பதியில் விருப்பமுடன் அமர்ந்த
குருபரன் திருவடி போற்றிப் பணிந்து அன்பாய் (ஒருதரம்)

சரணம்

1. பவப்பிணி நீங்கவும் பாவங்கள் தீரவும்
அவவினை ஒழியவும் ஆனந்தம் ஓங்கவும்
சிவன் மனம் மகிழ ஓர் மொழியுறை செய்தவனை
தவப்பயனாய் வந்து தணிகையில் நின்றவனை (ஒருதரம்)

2. தேவர்கள் முனிவர்கள் தேடியும் காணாத
பாத மலர் சிவக்க பக்தர் மனம் உவக்க
ஆவலுடன் வந்து ஆறுபதி அமர்ந்த
நாதனை பணிந் தன்பாய் கீதத்திருப் புகழால் (ஒரு தரம்)

ராகம்: ஹம்ஸாநந்தி **தாளம்: ஆதி**

பல்லவி

தஞ்சமென்றுன்னிரு - தாட் பணிந்தேன் இன்னும்
தாமதமேன் ஸ்வாமி முருகா

அனுபல்லவி

கொஞ்சும் கிளிமொழியாள் - குறத்தி மணாளனே
அஞ்ச லென்றருள் செய்து அபய மளிப்பாய் - முருகா

சரணம்

உருகி உருகி உள்ளம் - கரைந்து கண்ணீர் பெருகி
முருகனே உன் நாமம் பாடி பணிந்தேனைய்யா
கருணையில்லையோ கந்தா - காக்கக் கடனில்லையோ
பொறுத்திடேன் இனி கணம் திருத்தணிகேசனே

அருள் தெய்வம்

நான் வணங்கும் தெய்வம் இது நாட்டில்யர் தெய்வம்
நாரணனும் நான்முகனும் நாடித்தொழும் தெய்வம்
கான் முளையாய்ச் சரவணத்தில் அவதரித்த தெய்வம்
கார்த்திகைப் பெண் அறுவர்பால் உண்டுகந்த தெய்வம்
வான்மதியைச் சூடும் அரன் வணங்கி நிற்கும் தெய்வம்
வானவர்கள் சிறைமீட்டு வாழ்வளித்த தெய்வம்
தேன்மொழியாள் குஞ்சரியின் தோளணைந்த தெய்வம்
திருப்புகழுக் கருள்புரியும் முருகன் அருள் தெய்வம்
மான் மகளைக் காதலித்து மணம் புரிந்த தெய்வம்
மரகதப்பெண் பாலனென்று மகிழ்ந்தணைக்கும் தெய்வம்
'தான்' மறந்த அன்பருக்குத்தாள் அளிக்கும் தெய்வம்
தணிகைமலை வாழும் தெய்வம் தரணிக்குயர் தெய்வம்
கந்தனென்று பேர்புனைந்த கருணை மிகும் தெய்வம்
என்றன் உள்ளங் கொள்ளை கொண்ட எழில் மிகுந்த தெய்வம்
அந்தம் ஆதியற்ற அருள் வடிவான தெய்வம்
நந்தா மணி விளக்காய் உள்விளங்கும் தெய்வம்
பந்தமெல்லாம் தீர்த்தருளிப் பதமளிக்கும் தெய்வம்
என்தாயும் தந்தையுமாய் என் குருவாம் தெய்வம்
சொந்தமுடன் எடுப்பார்க் கைக்குழந்தையான தெய்வம்
வந்து அருள் வழங்கும் தெய்வம் வள்ளிமகிழ் தெய்வம்
குன்றில் விளையாடும் தெய்வம் குமரகுரு தெய்வம்
என்றென்றும் போற்றி செய்து இதயத்துள் வைப்பேன்.

ராகம்: பீம்பிளாஸ் **தாளம்: ஆதி**

பல்லவி

முருகன் திருவடி மலர் அணிவாய் மனமே

அனுபல்லவி

1. நறுமணம் வீசிடும் -நன்மலர் அதுவே
நாளும் அன்பர்கள் சூடிடும் மலரே
திருமகள் உறையும் தாமரை மலரும்
திருவடி மலர்க்கிணை பெறுமோ மனமே

2. அன்பர் மனத்திடை பூத்திடும் மலரே
இன்பமணமெங்கும் வீசிடும் மலரே
மன்றுள்ளாடியின் மகனடி மலரே
என்றும் வாடா புதுமலர் அதுவே

3. ஆதிபராபரன் சூடிய மலரே
அம்பிகையாள் கரம் விளங்கிடும் மலரே
மாதுகுறமகள் மார்பில் அணியும்
மாலையாய்த் திகழ் நன்மலர் அதுவே

ராகம்: கமாஸ் **தாளம்: திஸ்ர ஆதி**

பல்லவி

சரவணபவ கார்த்திகேயனே கருணாகரனே
குருபரனே அறுமுகனே நிரவதி ஸுகனே
முருகா முருகா முருகா

சரணங்கள்

1. அரன் உமை மகிழ் பாலா அடியவர் அனுகூலா
பரம குண ஸீலா பாவை வள்ளி லோலா - சரவண

2. தணிகை வாழும் நாதா தாசர்கள் தொழும் பாதா
பணியணி சிவன் போதா பரி பாலிக்கலாகாதா - சரவண

3. தானவ குல நாசா தாட் பணிந்தேன் ஈசா
வானவர்க்கென்றும் நேசா வணங்கினேன் சர்வேசா - சரவண

முருகன் ஞானத்தங்கம்

ராகம்: பிலு **தாளம்: கண்டசாபு**

1. முருகன் என்று கேட்டவுடன்
இருவிழியும் நீர் பெருகி
உருகுது எந்தன் உள்ளமடி - ஞானத்தங்கமே
உடலும் சிலிர்க்குதடி

2. அரன் விழியில் அனற் பொரியாய்
அவதாரம் செய்தவண்டி
சரவணத்தில் வளர்ந்தவன்டி -ஞானத்தங்கமே
அறுவர் பால் உண்டவன்டி - ஞானத்தங்கமே

3. அம்பிகையின் பாலனடி
ஆறுமுக நாதனடி
தும்பிக்கையான் தம்பியடி - ஞானத்தங்கமே
தோகைமயில் வாகனனடி - ஞானத்தங்கமே

4. ஈன்றாளும் அப்பனுமாய்
ஏழைகளைக் காப்பவன்டி
தோன்றாத் துணைவனடி - ஞானத்தங்கமே
துன்பமெல்லாம் தீர்ப்பவன்டி - ஞானத்தங்கமே

5. தேவாதி தேவனடி
திருத்தணிகை நாதனடி
வா வா என்றழைத்து - ஞானத்தங்கமே
வரங்கள் பல தருவானடி - ஞானத்தங்கமே

6. **பிச்சி என்று பெயர் சூட்டி**
இச்சிப்பதெல்லாம் அளித்து
நச்சி வந்தென் உட்புகுந்தான் - ஞானத்தங்கமே
உச்சியில் அமர்ந்தான்டி - ஞானத்தங்கமே

மங்களம்

தீபாராதனை பாட்டு

ராகம்: செஞ்சுருடி　　　　　　　　　　தாளம்: ஆதி

செந்தில் வேலனே முருகா செல்வா நீ வாராய்
சந்ததமும் தீப ஜோதி தன்னில் நீ வாராய் - திரு　(செந்தில்)

ஆதி அந்தமான ரஹிதா தேவா நீ வாராய்
ஜோதியான சக்தி பெற்ற மைந்தா நீ வாராய் - திரு　(செந்தில்)

தேனும் தினை மாவும் உண்ட தேவா நீ வாராய்
(அம்)மான்மகளை காதல் கொண்ட கள்வா நீ வாராய் - திரு　(செந்தில்)

ஏழை எங்கள் பாவம் தீர்க்க எழிலாய் நீ வாராய்
ஏக தந்தன் ஸோதரனே எங்கள் முன் வாராய் - திரு　(செந்தில்)





ஸ்ரீ வேங்கடாசலபதி கீர்த்தனை

ராகம்: முகாரி **தாளம்: ஆதி**

பல்லவி

சப்த கிரீச்வரம் ஸ்ரீ வேங்கடேச்வரம்
சந்ததம் ரக்ஷதுமாம் - ஸ்ரீ

அனு பல்லவி

தப்த காஞ்சன சூத்ரம் பீதாம் பரதரம்
தப்த ஸ்வரூப த்வாதஸ திவ்ய நாமம் - சப்த

சரணம்

பத்மாவதி ப்ராண நாதம் கோவிந்தம்
பக்த ஜனார்த்தி ஹரம் நாராயணம்

உத்புல்ல கமலாக்ஷம் உபய சரணயுகம்
உரக ஸயனம் பத்ம நாமம் க்ருபாகரம் - சப்த

ராகம்: திலங் **தாளம்: ஆதி**

பல்லவி

வேங்கட கிரிவாஸா ஹரே முராரே (வே)

அனுபல்லவி

பங்கஜ நேத்ரா பரம பவித்ரா
சுர ஸ்துதி பாத்ர சுந்தர காத்ர (வே)

சரணம்

1. பதித பாவன பாப விமோசன
நத ஜனாவன நந்த நந்தன
அண்ட ஜவாஹன அலமேலு மோஹன
சனகாதி வந்தித சரணார விந்த (வே)

2. வாரிதி பந்தன தச கண்டலுண்டன
கம்ச நிஷூதன கௌஸ்துப பரணா
அகில லோகாதார ஆனந்தரூப
சேஷாசல நிலய ப்ரபு வெங்கடேஸ்வரா (வே)

ராகம்: சௌராஷ்டிரம் **தாளம்: மிச்ரசாபு**

பல்லவி

ஸ்ரீ வெங்கேடச்வருனி ஸேவிம் சுடகு மனகு
வெயி கன்னுலுண்டேனு சாலதம்மா

அனுபல்லவி

பங்கஜ நேத்ருடு அங்கஜ ஜனகுடு
அலமேலு மங்கா ப்ராண நாதுடைன - ஸ்ரீ

சரணம்

1. ஸப்த கிரி வாஸுடு பக்த ஜன போஷகுடு
முக்தி ப்ரதாயகுடு மோஹன ரூபுடு

விப்ரஜன போஷித வேதஸ்வரூபுடு
வின தாஸுத வாஹன பதித பாவனடைன - ஸ்ரீ

2. சேஷகிரி வாஸுடு சேஷ ஸயனுடு
பூஷணாலங்க்ருத புவன ஸுந்தருடு
அதிப்ரேம பக்த அன்ன மாச்சார்யாராதிதுடு
ஏடு கொண்டல வாடு ஏகாந்த வாஸுடைன - ஸ்ரீ

ஸ்ரீராம நாம ஜப மகிமை

ராகம்: பூர்வி கல்யாணி **தாளம்: ஆதி**

பல்லவி

நாமபஜகன்ன ஏமிஸுகமுன்னதி
நரஜன்மமுலகு இலலோ மனஸா - ராம

அனுபல்லவி

ப்ரமேதோ ஸ்ரீராம பாதமுலுஸ்மரிம்சி
ஸ்ருதிலய ராக தாள பாவமுதோ - ராம - நாம

சரணம்

கலிலோ ஜபதபமு கஷ்டமணி தெலிஸி
கருணதோ பெத்தல வானரன பக்துலு
பலுகின ஸன்மார்க போதனலைன - சங்
கீர்த்தனமுலே வேத ஸாரமணி - ராம - நாம

நாமாவளி

ராகம்: கம்பாவதி **தாளம்: கண்டசாபு**

ஸ்ரீராம ஜயராமா ச்ருங்கார ராமா
ச்ருங்கார ராமா சீதாபி ராமா
சீதாபி ராமா ஆத்மாபி ராமா
ஆத்மாபி ராமா கல்யாண ராமா
கல்யாண ராமா காகுஸ்த ராமா
காகுஸ்த ராமா காருண்ய ராமா

காருண்ய ராமா பட்டாபி ராமா
பட்டாபி ராமா அயோத்ய ராமா
அயோத்ய ராமா ஆநந்த ராமா
ஆநந்த ராமா கோதண்ட ராமா
கோதண்ட ராமா தஸரத ராமா
தஸரத ராமா தாரக நாமா

ராகம்: மாண்ட் **தாளம்: ஆதி**

1. ராமநாமமென்னும் ரக்ஷை அணிந்தோர்க்கு
யமனிடம் பயம் ஏது - மனமே
காமம் என்னும் கள்வன் கருத்தில் புகுந்தறிவை
கவர்ந்திட வருவானோ

2. தாரக நாமத்தை த்யானிக்கும் பக்தர்க்கு
கோர நரகமுண்டோ - மனமே
ஸ்ரீரகுராமனின் சீரடி பணிந்திட்டால்
ஜன்மமும் இனி வருமோ

3. தாஸரதி நாமம் சிந்திக்கும் உள்ளத்தில்
பாசங்கள் பற்றிடுமோ மனமே
நேசமுடன் ரகு ராமனை பூஜித்தால்
ஆசைகள் பீடிக்குமோ

4. ராமராமா ரகுராமா ஸ்ரீராமா என்று
தினமும் த்யானம் செய்வாய் - மனமே
ஸாம கான ப்ரியன் ஸாம்ப சிவன் ஸதா
ஸ்மரணை செய்யும் மந்திரம்

5. அல்லும் பகலும் மனக்கல்லும் கரைந்திட
சொல்லிடும் தாரக நாமம் - மனமே
கொல்லும் வினைகள்ளை கோதண்டத்தால் அருள்
எல்லையில்லா தளிக்கும்

ராகம்: மோகனம் **தாளம்: ஆதி**

மத்ஸ்ய கூர்ம நாராயணா
வராஹ நரஸிம்ஹ நாராயணா

வாமன ப்ருக ராம நாராயணா
பலராமானுஜ நாராயணா
பௌத்த கல்கி நாராயணா
ஓம் நமோ நாராயணா

பல்லவி

ஓம் நமோ நாராயணா என்று ஓர் முறை ஓதுவார்க்குப் ஒரு
போம் வினைகளென்று வேதம் புகன்றதும் பொய்மைதானோ - ஓம்

அனுபல்லவி

திருவளர் திருமார்பா உந்தன் திருவடி அடைந்தும் எங்கள்
கருமங்கள் அகலாவிட்டால் உன் பெருமைக்கோர் பழியுறாதோ - ஓம்

சரணம்

உரமிகும் இரணியாக்ஷன் அவன் உயிரது போக்க தூணில்
நரஹரி வடிவமாய் வந்து உதித்த ஸ்ரீ நரஸிம்ஹா
கரியினை காத்த கண்ணா கார்முகில் வண்ணா கண்ணா ஹரி ஹரி
ஹரி ஹரி அபயம் அபயம் என்று அலறிடும் த்ரௌபதிக்கு
பரிவுடன் சேலை தந்த தயாளா
சரணம் சரணம் ஸ்ரீ ஹரியே (3 தரம்)

ஸ்ரீராமர்

த்யான ஸ்லோகம்

ஆதௌ ராம தபோவனாதி கமனம்
ஹத்வாம்ருக காஞ்சனம்
வைதேஹி ஹரணம் ஜடாயு மரணம்
சுக்ரீவ ஸம்பாஷணம்
வாலி நிக்ரஹணம் ஸ்முத்ர தரணம்
லங்காபுரி தஹனம்
பச்சாத் ராவண கும்பகர்ண ஹனனம்
ஏதத் ஸ்ரீராமாயணம்

வைதேஹி ஸஹிதம் ஸுரத்ருமதலே ஹைமே மஹா மண்டபே

மத்யே புஷ்பக மாஸனே மணிமயே வீராஸனே ஸுஸ்நிதம்
அக்ரோ வாசய தீம் ப்ரபஞ்சனஸுதம் தத்வம் முனிப்யப்பரம்
வ்யாக்யாந்தம் பரதாதிபி: பரிவ்ருதம் ராமம் பஜேச்யாமளம்

நாமாவளி

ராகம்: பிருந்தாவன சாரங்கா **தாளம்: ஆதி**

ராமம் பஜே ரகுராமம் பஜே ரவிகுல திலக ஸ்ரீராமம் பஜே
தசரத நந்தன ராமம் பஜே தசமுக மர்த்தன ராமம் பஜே ரகு (ராமம்)
கௌசல்யாநந்த ராமம் பஜே கௌதம பூஜித ராமம் பஜே (ராமம்)
விஸ்வாமித்ரப்ரிய ராமம் பஜே விமல கோதண்ட ஜெய ராமம் பஜே (ராமம்)
தாடக ஸம்ஹார ராமம் பஜே தாரக நாமஸ்ரீ ராமம் பஜே ரகு (ராமம்)
அஹல்யோத்தாரக ராமம் பஜே அமிதபராக்ரக ராமம் பஜே ரகு (ராமம்)
சிவ சாப கண்டித ராமம் பஜே சீதாபாணிக்ரஹண ராமம் பஜே ரகு (ராமம்)
வைதேஹி வல்லப ராமம் பஜே வைகுண்ட நாயக ராமம் பஜே ரகு (ராமம்)
பித்ருவாக்ய பாலன ராமம் பஜே சதுர்முக வந்தித ராமம் பஜே ரகு (ராமம்)

ராகம்: செஞ்சுருட்டி **தாளம்: ஆதி**

1. ராமனை நினை மனமே தினமும்
ராமனை நினை மனமே அனுதினமும் (ராமனை)
2. சோமனை தரித்தவர் சொல்லிய மந்திரம்
ராம ராம வென்னும் தாரக நாம (ராமனை)
3. பவ ஸாகரம் கடத்தும் பாவன மந்திரம்
தவ ராஜர்கள் போற்றும் தாரக மந்திரம் (ராமனை)
4. நாம பாராயணம் நரக நிவாரணம்
பூமி உத்தாரணம் செய்திடும் (ராமனை)
5. பிறவி வேர் அறுத்திடும் பேரின்பம் தந்திடும்

/ அறம் பொருள் இன்பமும் வீடும் அளித்திடும் (ராமனை)

ராகம்: ஜோன்புரி **தாளம்: ஆதி**

ராம பஜனை செய்குவோம் அன்புடன் நாம் (ராம)

காம மோஹம் அகற்றும் - கர்ம வினை அறுக்கும்
பூமியில் அருள் பெருகும் - புனிதமிகும் (ராம)

செய்வினை அகற்றிடும் - மெய்ப்பொருள் காட்டிடும்
தூய்மை தந்திடும் மந்திரம் - பாடி எல்லோரும் (ராம)

அன்பு பணிவு தயை -அழிவில்லா பக்தி நெறி
இன்பமுடன் தருவான் இறைவன் ரகு (ராம)

ஸ்ரீ கிருஷ்ணர் த்யான ஸ்லோகம்

1. ஆதௌ தேவகி கர்ப ஜனனம்
கோபி க்ருஹ வர்தனம்
மாயா பூதன ஜீவிதா பஹரணம்
கோவர்த் தனோத் தாரணம்
கம்ஸச் சேதன கௌரவாதி ஹனனம்
குந்தி ஸுதா பாலனம்
ஏதத் பாகவதம் புராண கதிதம்
ஸ்ரீ க்ருஷ்ண லீலாம்ருதம்

2. கஸ்தூரி திலகம் லலாட பலகே
வக்ஷஸ்தலே கௌஸ்துபம்
நாஸாக்ரே நவ மௌத்திகம்
கரதலே வேணும் கரே கங்கணம்
ஸர்வாங்க ஹரி சந்தனம் ஞ்சகலயன்
கண்டேச முக்தாவனீம்

கோபஸ்த்ரீ பரிவேஷ்டிதம்
விஜயதே கோபால சூடாமணி

நாமாவளி

ராகம்: மோஹனம் **தாளம்: ஆதி**

மோஹன முரளீ தரா மாம்பாஹி
மாதவ உடுப்பி க்ருஷ்ணா

1. வாஹன வினதாஸுத ஆரோஹண
வைகுண்ட வாஸ ஹே ஸ்ரீநிவாஸா (மோஹன முரளீதரா)

ராகம்: பந்துவராளி

2. வசுதேவ தவபாலா தேவகி வதன பங்கஜ பாஸ்கரா
முசுகுந்த வரதா முனிஜன ப்ருந்தாமுக்தி தாயக மேமுதம் தேஹி
ஸ்ரீக்ருஷ்ணா (மோஹன)

ராகம்: கானடா

3. நீலமேக ச்யாமளா ஸுந்தர நீரஜ ஸமவதனா
பால கோபாலா பரமதயாளா பாலிதப்ருந்தாவன ஜன லோலா
(மோஹன)

ராகம்: காம்போதி

4. பீதாம்பர சோபிதா ஸ்ரீவத்ச கௌஸ்துப மணிபூஷிதா
பாத ஸரோருஹ லக்ஷ்மிகர பரிஸேவித ஸந்தோஷித கோவிந்தா
(மோஹன)

ராகம்: சந்த்ரகோஸ்

5. சங்கு சக்ர சுதர தார வர அபய ப்ரத கரதலா
பங்கஜ லோசன பன்னக சயன பரிபூர்ண காமா ஸ்ரீ பரந்தாமா
(மோஹன)

ராகம்: சாரங்கா

6. நந்த நந்தனா யது நந்தனா பக்த வந்திதம்ருது சரணா
சந்தன சர்ச்சித சௌந்தர்ய தேஹா சாது ஜன ஸம்ரக்ஷிக
க்ருஷ்ணா (மோஹன)

ராகம்: அடானா

7. ஸன காதி முனிவந்திதா கனகதாஸ ஸதா சிந்திதா
வனமாலா தர கோவர்த்த னோத்தாரா வனஜ ஸம்பவனுத
ஸ்ரீவாஸுதேவா (மோஹன)

ராகம்: ஸாம

8. மல்பே ஸாகர ஸம்பவ மஹனீய மத்வா சார்ய ப்ரதிஷ்டிதா
சில்ப ஸ்வரூபா கல்பனா ரஹிதா ஸ்ரீராம வாஸ வக்ஷஸ்தல
சோபித (மோஹன)

ராகம்: ஹம்ஸாநந்தி

9. ஆகம ஸ்துதி வினுதா ஜகன் மோஹன மதுசூதன
பாகவ தார்ச்சித பங்கஜ சரணா பரிபூர்ணானுக்ரஹம் தேஹி
ஸ்ரீகிருஷ்ணா (மோஹன)

ராகம்: செஞ்சுருட்டி / மிச்ர கமாஸ் **தாளம்: ஆதி**

ராதா மானஸ ஸஞ்சாரி மீரா ஹ்ருதய விஹாரி
கோதா மாதவ கோவிந்த க்ருஷ்ணா கோபீரமணா ஹரே முராரே
வனமாலீதர வைகுண்டவாசா த்வாரகநாத தயாநிதே
கோவர்த்தன தர கோகுலபாலா கோபால க்ருஷ்ணா ஹரே முராரே
ச்யாமள வர்ணா சௌந்தர்ய மூர்த்தே சங்கசக்ரதர கதா தரா
கௌஸ்துப துளஸீ ஹார சுசோபித ஸ்ரீதர கேசவ ஹரே முராரே
தேவகி நந்தன நந்தகுமார யசோதா வத்சலக்ருபாநிதே
வாசுதேவாத்மஜ வாரிஜலோசன - வாஸவ பூஜித ஹரே முராரே
யமுனா தீர நிவாஸக்ருஷ்ண -மதுரா நாயக மாதவ
நந்த நந்தன நவநீதசோர ப்ருந்தாவனசர ஹரே முராரே
சகடாஸுர ஸம்ஹார க்ருஷ்ணா, கேசீஸூதன ஸம்ஹாரா
கோபால பாலாகோகுலவாஸா கோபீஜனப்ரிய ஹரே முராரே
காளிங்க நர்த்தன கம்ஸவிமர்த்தன கமலவிலோசன கன ச்யாமா
பாலித கிரிதர பாவன க்ருஷ்ணா பாபவிமோசன ஹரே முராரே
த்ரௌபதி மானஸம்ரக்ஷண க்ருஷ்ணா பாண்டவமித்ர பராத் பரா
கௌரவ நாசக கமலாநாயக கருணாஸாகர ஹரே முராரே
தாமோதர ஹரி தானவ நாசக தாபத்ரய கல்மஷ நாசா

தாஸ ஜனார்ச்சிதி பாத பங்கேருஹ த்வாதச நாமா ஹரே முராரே
நித்ய நந்தா நிர்மல ரூபா நிர்குண ரஹித நிரஞ்சனா
சத்ய ஸ்வரூபா சாது ஜனப்ரிய சகலாகமஸ்துத ஹரே முராரே
க்ருஷ்ணா கேசவ மாதவ விஷ்ணோ - கீர்வாண வந்தித பரந்தாமா
பஜனம் தவ பாதாம்புஜ ஸ்மரணம் - தேஹி ராதா வல்லப க்ருஷ்ணா
ஜே ஜே ராதா க்ருஷ்ண முராரே - ஜே ஜே கோதா மாதவ க்ருஷ்ணா
ஜே ஜே மீராப்ரபு கிரிதாரி - ஜே ஜே பக்த ஹ்ருதய விஹாரி

ராகம்: ராகமாலிகா **தாளம்: ஆதி**

மாலை வானத்தில் உந்தன் நீலநிறம் தோன்றுதடா
மயில் சிறகணிந்த குழல் காற்றில் அசையுதடா
காலை இளங்காற்றில் உந்தன் குழலோசை கேட்குதடா
கண்டவர் மயங்கும் உந்தன் கட்டழகு தோன்றுதடா
சோலைக் கிளிகள் உந்தன் சொல்லழகை பயிலுதடா
காலைக் கமலம் உந்தன் கண்ணழகைக் காட்டுதடா
பாலைத் திருடி உண்ட பாலகனே கண்ணா - உன்
நீல நிறம் கண்டு எந்தன் நெஞ்சம் களிக்குதடா - கண்ணா
முழுமதியின் சுடரொளியுன் முகத்தழகைக் காட்டுதடா
குழுமி நிற்கும் இருள்விலக எழும் கதிர் உன் விழிகளடா
பழுதில்லா பாட்டில் உந்தன் குரலோசை கேட்குதடா
தொழும் அடியார் அகத்தில் உந்தன் அருள் உருவம் தோன்றுதடா
செழுமலர்கள் காணில் நெஞ்சுன் திருவடியைத்தேடுதடா
குழந்தை விளையாட்டில் உந்தனம் குறும்புத்தனம் தோன்றுதடா
புழுதியைப் போல் அடியார்கள் அடி இருக்க வேண்டுமடா
மழைக்கு அன்று குன்றெடுத்த மாயவனே அருள் செய்வாய்.

ராகம்: ஹேமந்த் **தாளம்: ஆதி**

ஆசை மிகும் கண்மணியே கண்ணா கண்ணா
(மன) பாசமெல்லாம் நீக்கிடுவாய் கண்ணா கண்ணா
நேசமுடன் பூசித்தேன் கண்ணா கண்ணா
என் நெஞ்சில் இடம் கொண்டிடுவாய் கண்ணா கண்ணா
தண்டையுடன் கிண் கிணிகள் கல் கல் எனவே
தவழ்ந்து வருவாய் இங்கு கண்ணா கண்ணா
அண்ட மெல்லாம் நிறைந்த கண்ணா கண்ணா
இங்கு ஆடி வருவாய் மகிழ்வாய் கண்ணா கண்ணா
நெற்றியினில் கற்றை குழல் சுட்டியுமாட
உன் சிற்றடிசிவந்திடவா கண்ணா கண்ணா
வெற்றி சங்கம் ஊதும் வாயால் கண்ணா கண்ணா
உன் வேய் குழல் இசைத்து வாராய் கண்ணா கண்ணா
கங்கணங்கள் ஒலித்திட கைகள் கொட்டியே கண்ணா
எங்கள் முன்னே வந்திடுவாய் கண்ணா கண்ணா
பூங்கரத்தில் புல்லாங்குழல் ஏந்தி அழகாய் கண்ணா
(மனம்) ஏங்கும் எங்கள் முன் வருவாய் கண்ணா கண்ணா
செங்கனி வாயால் சிரிக்கும் போதெல்லாம் கண்ணா
(உன்) கன்னம் குழியுதடா கண்ணா கண்ணா
பங்கஜ மலர் விழியால் பார்க்கையில் கண்ணா
எங்கள் அங்கம் குழையுதடா கண்ணா கண்ணா
ஆடிவரும் அழகினிலே கண்ணா கண்ணா
எங்கள் ஆவி மயங்குதடா கண்ணா கண்ணா
பாடி உன்னைப் போற்றுகின்றோம் கண்ணா கண்ணா
உன் பாதம் அருள்வாய் எமக்கு கண்ணா கண்ணா

ஸ்ரீ ராமகிருஷ்ணர்

த்யான ஸ்லோகம்

ராமாய ராம பத்ராய ராம சந்த்ரா வேதஸே
ரகு நாதாய நாதாய சீதாய்பதயே நம:

க்ருஷ்ணாய வாஸு தேவாய தேவகி நந்தனாய ச
நந்த கோப குமாராய கோவிந்தாய நமோ நம:

3.9.1969 ம் வருஷம் ஸ்ரீ வைஷ்ணவி ஆலயத்தில் ஸ்ரீ கிருஷ்ணஜன்மாஷ்டமி அன்று ஸ்ரீ வைஷ்ணவி, ஸ்ரீ கிருஷ்ண அலங்காரத்தில் (இரவு - 11 மணியிலிருந்து 12 மணி வரை) ஸ்ரீ கிருஷ்ண ஜனனம் முதல் ராஸ லீலை வரையில் காட்டி அருளிய பிருந்தாவன லீலைகள் ஸ்ரீ கிருஷ்ண லீலாம்ருத பாடல்கள், ஸ்ரீ தேவி பாதக் கமலங்களுக்கு அர்ப்பணம் செய்த அருள் மலர்கள்.

ஸ்ரீ க்ருஷ்ண ஜனனமும் ப்ருந்தாவன லீலைகளும்

கோகுலாஷ்டாமியில் ஸ்ரீக்ருஷ்ணனாய் அலங்கரித்துக் கொண்ட ஸ்ரீ வைஷ்ணவி தேவி கருணையுடன் காட்டிய கோகுல ப்ருந்தாவனங்களில் ஸ்ரீகிருஷ்ண ஜனனம் முதல் ராஸ லீலை வரை பகவான் ப்ருந்தாவனத்தில் நடத்திய பால லீலைகள் (அகக்கண்ணால் கண்ட அற்புத காட்சிகள் 3-09-69 இரவு மணி 11 $^{1}/_{2}$ பக்தர்கள் எல்லாரும் இரவு 12 - மணிக்கு நடக்கும் க்ருஷ்ண ஜனனம் பூஜைக்கு முன் ஹரேராம் மஹாமந்த்ர பஜனை நாமாவளி பாடிக் கொண்டிருந்தபோது தேவியைப்

பார்த்து பாவசமாய் வாய் ஹரேராம் சொல்லிக் கொண்டிருக்க உள்ளத்திரையில் பாற்கடலில் சேஷசயத்தில் அரிதுயில் கொண்டிருக்கும் யோக நித்திரையிலிருக்கும் ஸ்ரீமன் நாராயணனை தரிசித்து தர்மம் குறைந்து அதர்மம் ஓங்கி துஷ்டர்களால் சாதுக்கள் படும் துன்பங்களைக் கூறி பூபாரம் தாங்காமல் தவிக்கும் பூமி தேவியின் துயரத்தைப் போக்கி துஷ்ட நிக்ரஹம் செய்து சிஷ்டர்களை ரக்ஷித்து உலகில் தர்மத்தை காக்க பகவான் அவதாரம் செய்து வானகமும் வையகமும் காத்து ரக்ஷிக்க, வேண்டுமென்று தேவர்கள் முனிவர்கள் பக்தியுடன் வேண்டி செய்துக் கொண்ட ப்ரார்னைக்கிணங்க சாதுக்களாகிய வஸுதேவ தேவகி செய்த தவப்பயனால் தான் அவர்களுக்கு புத்ரனாய் அவதரித்து அதர்மத்தை அழித்து தர்மத்தை ரக்ஷிப்பதாய் அனுக்ரகம் செய்து அப்படியே சிறையில் கம்சன் செய்யும் கொடுமை தாங்காமல் ஸ்ரீவைகுண்ட நாதனை வேண்டி தவமியற்றும் அந்த வஸுதேவருக்கு தேவகியின் கற்பத்தில் எட்டாவது குழந்தையாக ஆவணி மாதம் அஷ்டமி ரோகிணியில் அர்த்தராத்ரியில் மதுராபுரியில் உள்ள சிறைச்சாலையில் பிறந்து கம்ஸனை ஏமாற்றி கோகுலத்தில் நந்த கோபர் மனையில் நந்தரும் யசோதை செய்த மஹா பாக்யத்தால் அவர்கள் குழந்தையாய் வளர்ந்து கோகுல ப்ருந்தாவனத்தில் செய்த அற்புதமான பால லீலைகளும் பகவான் பக்தர்களாகிய கோபியர்களுடன் செய்த ராஸ லீலையும் காட்டியருளிய அதிசயம் பத்து வருஷங்கள் ப்ருந்தாவனத்தில் பகவான் லீலைகள் செய்த பத்து நிமிஷம் நம்

கால அளவில் நிகழ்ந்த அற்புதக் காட்சி தேவி வைஷ்ணவி ஸ்ரீ க்ருஷ்ண அலங்காரத்தில் காட்டியருளினான். கருணையால் பக்தர்கள் எல்லோருக்கும் தெரிவிக்க அந்த திவ்ய தரிசனங்களை அப்படியே கண்டபடியே பாடலாகவும் உள்ளத்தில் பதிய வைத்து 16-வண்ணமும் அருள் மணமும் வீசும் அன்பு மலர்மாலையாக ஆர்வத்துடன் அணிந்தருளினான் (ஸ்ரீ க்ருஷ்ண ஜனனமும் கண்ணன் செய்த பால லீலைகளும் ப்ருந்தாவனத்தில் பக்தர்களுக்காக காட்டிய ஜீவப்ரம்ம ஐக்யமாகிய ராஸ லீலா வைபவமும் ஸ்ரீ வைஷ்ணவி கண்ணனாய்க் காட்டி அருளுடன் அளித்த ஸ்ரீ க்ருஷ்ண லீலா ம்ருதம்)

கண்ணன் திரு அவதார மகிமைப் பதிகம்

ராகம்: மாலிகை **தாளம்: திச்ர ஏக**

பந்துவராளி

பல்லவி

பாற்கடலில் பாம்பணையைத் துறந்திங்கு
பாரில் தேவகி மைந்தனாய் கண்ணன்
பக்ஷமுடன் வந்து அவதரித்தார்
வஸுதேவர் தவப்பயனால்

அனுபல்லவி

தர்மத்தை காக்கவும் கர்மத்தை தீர்க்கவும்
தரணியில் அவதரிப்பேன் என்று
மர்மமாய் சொன்னதை மானிடர் அறிந்திட
மதுரையில் வந்துதித்தார்- எங்கள் கண்ணன்

சரணங்கள்

சங்கராபரணம்

1. துஷ்டனாம் கம்ஸனை ஸம்ஹாரம் செய்யும்
சிஷ்டரைக் காத்திடவும் -இங்கு
அஷ்டலக்ஷ்மிபதி அகிலாண்ட நாயகன்
கிருஷ்ணனாய் அவதரித்தார் - எங்கள் கண்ணன்

ஷண்முகப்ரியா

2. அம்மானுக்கஞ்சியே ஆயர் மனைதனில்
அச்சுதரும் வளர்ந்தார் - அங்கு
கும்மாளமிட்டு குதித்து கூத்தாடியே
கோபியருடன் திரிந்தார் - எங்கள் கண்ணன்

தன்யாசி

3. பூதனை கேஸி சகடாஸுரரான்
அசுரர்களை வதைத்தார் - கண்ணன்
சாதனைகள் செய்து சரணாகதி என்ற
சாதுக்களைக் காத்தார் - எங்கள் கண்ணன்

தேஷ்

4. இந்திரன் கர்வத்தை அடக்கிட கோவர்த்தன
கிரியை குடைபோல் விரலில்
அந்தமுடன் எந்தி ஆய்பாடியைக் காத்து
அடியார்க்கு அபயம் தந்தார் - எங்கள் கண்ணன்

மோகன்

5. எதிரியாம் கம்ஸனின் ஏவலினால் வந்து
எதிர்த்தவர்களை அழித்தார்- கண்ணன்
அதிப்பேரமையுடன் ப்ருந்தாவனத்தில் இருப்போர்க்கு
ஆனந்த வாழ்வளித்தார்- எங்கள் கண்ணன்

பைராகி

6. அவதாரம் செய்ததை அறிந்தழைத்த கம்ஸன்
ஆவியை அபகரித்தார் - தன்
அன்னை தந்தையைக் கண்டு அடிவணங்கி
அன்புடன் ஆதரித்தார் - எங்கள் கண்ணன்

யதுகுல காம்போதி

7. யதுகுல பூஷணன் மகிமைகள் எல்லாம்
எடுத்துரைக்கப் போமோ - அதை
முதிய முனிவர் வ்யாஸர் பாகவதம் என்று
எடுத்துரைத்தார் அருளால் - எங்கள் கண்ணன்

மத்யமாவதி

8. பரவாஸுதேவர் இப்பாரில் அவதரித்து

பாவிகளை அழித்து- பார்த்த
சாரதியாகியே பக்தர்கள் உய்ந்திட
பகவத் கீதையை அளித்தார்- எங்கள் கண்ணன்

ஸ்ரீ கிருஷ்ணாவதார வைபவ கீர்த்தனை

ராகம்: ராகமாலிகை **தாளம்:ஆதி**

பல்லவி

ஆரபி

ஆவணி மாதத்தில் அஷ்டமி ரோஹிணியில்
அச்சுதன் அவதரித்தார் - தேவகியிடம்
அச்சுதன் அவதரித்தார் - மதுராபுரியில் - ஆவணி

அனுபல்லவி

நாவணியாகவே நால் வேதங்களும் போற்றும் (ஸ்ரீமன்)
நாராயணர் நடு ராத்திரி வேளையினில் - அச்சுதன்அவதரித்தார்

சரணங்கள்

1. அண்ணனால் சிறையினில் அல்லலுறும் தாய் தந்தைக்கும்
ஆனந்தம் உண்டாக்கவும் அரும்சிறை நீங்கவும்
வண்ணமாய் சங்கு சக்ர சதுர்ப் புஜமுடன் தோன்றி
விண்ணவர் மலர் சொரிய வேத கீதங்கள் பாட. - அச்சுதன்

வராளி

2. மாமன் அறியுமுன்னே மதுரையை விட்டு தன்னை
க்ஷேமமாய் கோகுலத்தில் சேர்த்திட அருள் செய்து
தாமதிக்காமல் தன் மாயையால் யசோதை ஈன்ற
மாமாயையைக் கொண்டு போய் மாமனை ஏய்த்திடவும்
- அச்சுதன்

கௌரி மனோஹரி

3. காவலர்கள் உறங்க கதவுகளும் திறக்க
கடும் மழையில் கரை புரண்டோடும் யமுனையும்
ஆவலுடன் வணங்கி வெள்ளம் அடங்கி வழிவிட்டு
(தவ) ஆதிசேஷன் குடையாய் ஐயனைக் காத்துவிட
- அச்சுதன்

பெஹாக்

4. நள்ளிரவில் நந்தகோபர் மனையில் சென்று
உள்ளம் கசிந்து தன் செல்வனை அருகில் விட்டு
மெள்ள யசோதை பெற்ற மாயக் குழந்தையுடன்
வெள்ளம் கடந்து வந்து விலங்கினைப் பூட்டிக் கொள்ள
- அச்சுதன்

சந்த்ரகோம்ஸ்

5. சடுதியில் கதவுகள் சாற்றிக் கொள்ளவும் உடன்
திடுக்கிட்டு காவலர்கள் கண்விழித்து குழந்தையழும்
கொடும் செய்தியைக் கூறி கம்ஸனை அழைத்துவர
தடுக்கும் தங்கை கதற சேயை வீசி எறிந்தான் - அச்சுதன்

அடாணா

6. சேயென்றெண்ணி அறைந்த மாயா தேவியும் அந்த
பேயனைக் கொல்பவன் பிறந்துள்ளான் என்று கூறி
ஆயினை உன்னையுளென்று சொல்லி வானில் மறைய
வாயடங்கி கம்ஸனும் வகையறியாமல் செல்ல - அச்சுதன்

நவரஸ கன்னடா

7. சிறையினில் தேவகி வஸுதேவரும் மகிழ்ந்து
பிறை சந்திரன் போல வளரும் பிள்ளையைக் காக்க
கறை கண்டனை வேண்டி கடும் தவம் தாமிருந்தார்
மறைகளும் அறியாத மாதவனை பெற்றவர்கள் - அச்சுதன்

கோகுலத்தில் கண்ணன் வளர்ந்த அருமை

ராகம்: கமாஸ் **தாளம்: ஆதி**

பல்லவி

நந்தன் மனையில் வளர்ந்தான் - ஸ்ரீ கிருஷ்ணன்
நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் - நந்தன்

அனுபல்லவி

சொந்தமுடன் தன்னைச் சீராட்டிப் பாலூட்டி
அந்தமுடன் வளர்க்கும் அன்னை யசோதை மகிழ - நந்தன்

சரணங்கள்

1. ஆயர் குலத்துக்கதிபன் நந்தகோபனும் தன்
சேயென்று சிந்தை மகிழ்ந்தான்
மாயன் சிரித்து விளையாடும் அழகைக் கண்டு
ஆயர்பாடியில் உள்ளோர் அனைவரும் கொண்டாட - நந்தன்

2. தங்கத் தொட்டிலில் படுத்து தாய்முகம் பார்த்து
செங்கைகள் கொட்டிச் சிரிப்பான்
பொங்கும் அன்புடன் யசோதை பூரித்தமுதூட்ட
பங்கஜ மலர்க்கண்ணன் பால லீலகள் செய்து - நந்தன்

3. பூதனை பாலை குடித்தான் பாலுடன் அவள்
பொல்லா உயிரும் குடித்தான்- கண்ணன்
பாதகன் சகடாஸுரன் பாரில் மடிந்து விழ
பாத மலராலுதைத்து பார்த்தவர்கள் வியப்படைய - நந்தன்

4. தாயாம் யசோதை மகிழ தவழ்ந்து ஆடி
தளர் நடை நடந்து வருவான்- கண்ணன்
ஆயர் பாடியிலுள்ள ஆய்ச்சியர்கள் அனைவருக்கும்
அருமந்தச் செல்வனாய் அகிலாண்ட நாயகன் - நந்தன்

5. கொல்ல வந்த அசுரரைக் கொன்று

கோகுலத்தைக் காத்தான்
மெல்ல மெல்ல பிருந்தாவனம்
சென்று குடி ஏறவைத்தான்
அல்லலெல்லாம் தீர்த்து எங்கும்
ஆனந்தம் பொங்க வைத்தான்
செல்லக் குழந்தையாக சிந்தை மகிழ்வடைய - நந்தன்

தாய் யசோதை கண்ணனுக்குச் சிங்காரம் செய்து மகிழ்தல்

ராகம்: ஆனந்த பைரவி **தாளம்: ஆதி**

பல்லவி

சிங்காரம் செய்தாள் யசோதை- ஸ்ரீகிருஷ்ணனுக்கு
சிங்காரம் செய்தாள் யசோதை

அனுபல்லவி

தன் காதல் மைந்தனுக்கு தலைவாரிக் கொண்டையிட்டு
எங்கும் மணம் வீசும் இருவாக்ஷி மலர்சூட்டி - சிங்காரம்

சரணங்கள்

1. நெற்றியில் சுட்டியுடன் நீலமயில் பீலிகட்டி
சுற்றிலும் முத்துச்சரங்கள் ஸொகுசாய் அலங்கரித்து
மற்றும் இரு காதுகளில் மாணிக்கக் குண்டலங்கள்
மாதா யசோதை மனம் மகிழ்ந்து அணிந்துவிட்டாள்- சிங்காரம்

2. அரணாள் அரைச் சலங்கை அழகாகக் கட்டிவிட்டாள்
அங்கையில் மோதிரங்கள் காப்பும் கொலுஸுமிட்டாள்
சரப்பள்ளி பதக்கமுடன் புலிப்பல் பதக்கம் கோத்த
முத்து நவரத்னமாலை சித்தம் மகிழ்ந்தணிந்தாள் - சிங்காரம்

3. சின்னஞ்சிறு பாதங்களில் சதங்கை தண்டை கொலுஸும்
கன்னங்களில் திருஷ்டிப் பொட்டும் கண்மை திலகமிட்டாள்
முன்னழகும் பின்னழகும் பார்த்து மகிழ்வடைந்து

அன்னை கண்ணனைத் தூக்கி அணைத்து முத்தமிட்டு

-சிங்காரம்

தண்டை சிலம்பொலிக்க தளர்நடை நடக்கும் கண்ணன் நடையழகைக் கண்டு யசோதை மகிழ்தல்

ராகம்: பிலஹரி **தாளம்: திச்ர ஆதி**

பல்லவி

சின்னி கிருஷ்ணன் சிற்றடிவைத்து நடக்கையில்
சிந்தை மகிழ்ந்தாள் யசோதை அம்மம்மா - சின்னி

அனுபல்லவி

தன்னிரு பதம் தூக்கி தளர்நடை யாய்வந்து
தாயின் மடிமீது வந்து தாவி தாவி ஏறி அமரும் - சின்னி

சரணங்கள்

1. தாயின் முகத்தோடு தன் முகத்தையும் சேர்த்து
தன் பூங்கரங்களால் தாயை அணைத்துக்கொள்வான்
சேயின் அன்பினில் ஆழ்ந்து மகிழ்ந்து யசோதை
சேர்த்து மார்பில் அணைத்து சீராட்டி பாலூட்ட - சின்னி

2. அம்புலி காட்டியே அமுதூட்டுவாள் அன்னை
அங்கை அசைத்து வாவென்றழைப்பான் அம்புலி தன்னை
அம்புவியில் கண்ணன் செய்யும் லீலைகள் காண
உம்பர்கள் உவகையுடன் கோகுலத்திற்கோடி வந்தார் -சின்னி

கண்ணன் அண்ணன் பலராமனுடன் வீதியில் சென்று ஆயர் சிறுவர்களுடன் விளையாடி மகிழ்தல்

ராகம்: காபி **தாளம்: ஆதி**

பல்லவி

அண்ணனுடன் கண்ணன் ஆயர்ச் சிறுவருடன்
ஆனந்தமாய் விளையாடினான் வீதியில் - அண்ணனுடன்

அனுபல்லவி

வெண்ணைப்பால் தயிரெல்லாம் வேண்டி வேண்டி அளிக்க
விருப்பமுடன் உண்டு உல்லாசமாகவே - அண்ணன்

சரணங்கள்

1. கன்று காலிகள் மேய்க்க தானும் செல்வேனென்று
கையில் சிறு கோலேந்தி ஆயருடன் செல்வான்
குன்று நேர்தோள் மீது கோபாலனைத் தூக்கி வைத்து
கொஞ்சிக் குலாவியே ஆயர்களும் மகிழ்வார்- அண்ணனுடன்

2. அன்று இவ்வுலகம் அளந்த திருவடிகள்
அம்புஜ மலர்போல சிவக்க சிறு பதம் நோக
ஒன்றும் அறியாத பாலனைப் போல் கோகுலத்தில்
உலகளந்த பெருமாள் ஓடி விளையாடினார்- அண்ணனுடன்

கோப கன்னிகைகள் தங்களுடன் விளையாட வரும்படி அன்புடன் குழந்தைக் கண்ணனை வேண்டி அழைப்பு

ராகம்: ஹம்ஸத்வனி **தாளம்: ஆதி**

பல்லவி

ஓடி வருவாய் கண்ணா குழல்
ஊதி வருவாய் கண்ணா

அனுபல்லவி

தேடியுன்னை நாடி வந்தோம்
கூடி விளையாடுவோம்- ஓடி

சரணங்கள்

1. யமுனைக் கரையினிலே- இன்ப
நிலவின் ஒளியினிலே- உன்
அமுதக் குழலிசையில் - நாங்கள்
மயங்கியே ஓடிவந்தோம் - தேடி உன்னை

2. தண்டைச் சிலம்புகளும் - உந்தன்
தாண் மலரில் ஒலிக்க - எங்கள்
அண்டையில் வந்திடுவாய் - எங்கள்
ஆவலைத் தீர்த்திடவே - தேடி உன்னை

3. பாலும் பழங்களுடன் - இனிய
பல வித பக்ஷணங்கள்
நீல வண்ண கண்ணா உனக்கு
எடுத்து வந்தோம் வருவாய்-தேடி உன்னை

ராகம்: ஜோன்புரி **தாளம்: கண்டசாபு**

பல்லவி

மாடு மேய்த்திடத் தானும் செல்வேனென்றன்னையிடம்
மாயவன்அடம் செய்தான்

அனுபல்லவி

வாடும் சிறுமேனியெல்லாம் வெப்பம் தாங்காதென்று
ஓடும் கண்ணனைப் பிடித்து உரலுடன் கட்டினாள் -மாடு

சரணங்கள்

1. கட்டிப் போட்ட கண்ணன் தாயறியாமலே
கனத்த உரலுடன் களிப்புடன் சென்றங்கு
முட்டி நிற்கும் இரு மரங்களிடையில் சென்றான்
முறிந்தது மரங்களும் முக்தி பெற்றார் யக்ஷர் -மாடு

2. மரங்கள் விழுந்த ஓசை மாதா யசோதை கேட்டாள்
மனம் பதறி கண்ணனைத் தேடியே ஓடிவந்தாள்
உரலோடுகண்ணனும் உல்லாச மாயிருக்க
உத்தமர்கள் இருவரும் உயரத்தில் போகக் கண்டாள் - மாடு

ராகம்: சுத்த தன்யாசி | **தாளம்: ஆதி**

பல்லவி

ஆடினான் கண்ணன் காளியன் தலைமேல்
ஆயர்கள் வியந்திடவே ஆனந்தக் கூத்து - ஆடி

அனுபல்லவி

ஓடி ஒளிந்தனர் அரக்கர் அரக்கியர்
கூடினர் விண்ணவர் கின்னரர் பாடிட - ஆடி

சரணங்கள்

1. கற்றைக் கருங்குழல் காற்றினில் அசைத்திட
பற்றற்ற முனிவர்கள் பரவச மடைந்திட
முற்றும் தம்மை மறந்து கோபிர்கள் பார்த்திட
சுற்றி நிற்கும் சிறுவர்கள் சூழ்ந்து கொண்டாடிட

2. குடி நீர் மடுவில் கடுவிடம் கக்கிய
கொடிய காளியன் கொட்ட மடக்கிட
குதித்தான் மடுவின் வாலைப் பிடித்தான்
காளிங்கன் சிரம் மிதித்தான் மிதித்தபயம் அளித்தான்
திமிதிமித திமிதி மித

ராகம்: துர்கா | **தாளம்: ஆதி**

பல்லவி

கண்ணன் செய்ததைக் கேளம்மா தேவி யசோதா
கண்ணன் செய்ததைக் கேளம்மா

அனுபல்லவி

வெண்ணெ எல்லாம் எடுத்து கண்டபடி அழிப்பான்
அண்டையில் வந்து கேட்டால் அழகு காட்டுரானம்மா
- கண்ணன்

சரணங்கள்

1. பதுங்கிப் பதுங்கி வந்து பால் தயிர்ப் பானைகளை
பந்துபோல் உருட்டுகிறான்- கண்ணன்
பார்த்தால் பயந்தவன்போல் பாசாங்கு செய்தழுது
பக்கத்தில் வந்து நின்று பக்ஷமுடன் அணைக்கிறான்
இது உனக்கடுக்குமோ இவனை அடக்காவிட்டால்
இனி பிருந்தாவனம் தன்னில் இருப்பதும் சாத்யமாமோ
- கண்ணன்

2. கன்றுகளை அவிழ்த்துவிட்டு கறவை பசுக்களெல்லாம்
கறக்க விடாமல் செய்கிறான் கணத்தில் வந்து
உரலின் மேல் ஏறி நின்று உரியில் இருக்கும் நெய்யை
உருட்டி விட்டோடுகிறான் கேளம்மா தாயே
நன்று இன்றுன் பிள்ளை செய்யும் அநியாய மெல்லாம் இந்த
நாட்டினில் கேட்டாலுன்னை நாலுவிதம் சொல்லுவாரம்மா

ராகம்: மாண்ட் **தாளம்: ஆதி**

பல்லவி

வாடா என் கண்ணா நீ இந்த கோபியர் வீட்டின்
வெண்ணை எடுத்தது ஏனடா- வாடா

அனுபல்லவி

ஏடோடு பால் தயிர் வெண்ணை யிங்கில்லையோடா
சூடான வார்த்தைகளை சொல்லுகிறார் கோபிமார்கள்- வாடா

சரணங்கள்

1. தங்கக் கிண்ணியில் வெண்ணை தானே
கொண்டு வந்துனக்குன்
தந்தை நந்தகோபரும் தரக் காத்திருக்கின்றார்
சங்கடமாகவே சற்றும் கூசிடாதுன்மேல்
சாகசக் காரியர்கள் சண்டைக்கு வருகின்றார்-வாடா

2. வீட்டில் பால் தயிர் வெண்ணை
வேணபடி இல்லையோ

கேட்டால் உனக்குத் தர நானில்லையோடா கண்ணா
நாட்டில் இவர்களுன்னை நாலுவிதமாய்ச் சொல்லி
ஆட்டக்காரிகள் இவர்கள் அவதூறு செய்கிறார்-வாடா

ராகம்: யமுனா கல்யாணி **தாளம்: ஆதி**

பல்லவி

ஏதுமறியேன் நான் இவர்கள் சொல்லுவதெல்லாம்
அத்தனையும் பொய் அம்மா நான் - ஏதுமறியேன்

அனுபல்லவி

சூதும் வாதுமாய் இவர்கள் சொல்லுகிறாரம்மா
போதும் இவர்கள் செய்த பொல்லாங்கை கேளம்மா

சரணங்கள்

1. விளையாட வாவென்று இவர்கள் பிள்ளைகளை நான்
விருப்பமாய் அழைத்திவர்கள் வீட்டினுள் சென்றேனேம்மா
இளையவள் ஒருத்தி என்னை இழுத்து கட்டியணைத்தாள்
இதைச் சொல்ல ஓடிவந்தேன் இவர்கள் தொடர்ந்து வந்தார்

2. கண்ணா வா வென்றழைத்து கன்னத்தில் முத்தமிட்டாள்
கலங்கியே ஓடிவந்தால் கையைப்பற்றி இழுத்தார்
எண்ணாமல் ஏளனம் செய்து பரிகசித்தார்
யசோதையிடம் சொல்வோம் என்றென்பின் ஓடிவந்தார் - ஏதும்

ராகம்: வசந்தா **தாளம்: ஆதி**

பல்லவி

கோவிந்தன் குழலூதினான் பிருந்தாவனத்தில்
கூடி இருந்தவர்கள் கேட்டு மகிழ்வடைய

அனுபல்லவி

ஆவி மயங்கிடவே ஆனந்தம் பொங்கிடவே

ஆதாரமாய் அகில லோகங்களை ரக்ஷிக்க - கோவிந்தன்

சரணங்கள்

1. நெற்றியினில் சுட்டியுடன் கற்றைக் கருங்குழலாட
வெற்றிச் சங்கம் ஊதும் வாயால் வேய்ங்குழல்
இசைக்கும் போது
முற்றிலும் தம்மை மறந்து முரளீ கானத்திலாழ்ந்து
மூச்சடங்கி பதுமைபோல் ஆவினங்கள் மயங்கி நிற்க
-கோவிந்தன்

2. பாம்பும் எதிரில் நின்று பரவசமாய் ஆட
பறவைகளும் இனிய குரலில் உடன் பாட
கூம்பும் முகை விரிந்து மரங்களும் மலர் சொரிய
குதித்து தோகை விரித்து மயில்கள் நடம் புரிய

திமிதிமி தோம் தோம் தக தக தோம் தோம்
திமிதோம் தகதோம் திமி தக தோம்
திமிததிமித தளாங்கு தோமென்று
குதித்து தோகை விரித்து மயில்கள் நடம்புரிய
(திச்ரம்) திருவிழி மலர்களும் சொக்கிட ஸ்ருதி லய
ஸ்வரங்களும் சேர்ந்திட - கோவிந்தன்

ராகம்: பாகேஸ்வரி **தாளம்: ஆதி**

பல்லவி

யமுனைக் கரையில் முழு நில வெளியில்
யாதவச் சிறுவருடன் கண்ணன்
அமுதினும் இனிய குழலெடுத்து ஊதினான்

அனைவரும் மயங்கிடவே- கண்ணன்- யமுனை

அனுபல்லவி

திமி திமி என்று தாள கதிக் கிசைந்திடவே
திருவதனம் சாய்ந்திட மயிற்பீலி அசைந்திட

சரணங்கள்

1. இடைச் சிறுவர்கள் சூழ இன்பமாய் அண்ணனுடன்
கடம்ப மரத்தின் கீழ் களிப்புடன் வந்து நின்று
இடையினை வளைத்து இரு பாதம் மாறி வைத்து
மடியினில் வைத்திருக்கும் குழலெடுத்தூ தினான் - யமுனை

2. தங்கக் குழலெடுத்து தளிர் விரல்களினால்
தடவித்தன் சிவந்த அதரத்தின் மீது வைத்து
பங்கஜ கரங்களால் பற்றிப் பரவசமாய்
பண்ணிசைக்கும் பாலனைப் பார்த்துவிண்ணோர் வியக்க
- யமுனை

3. குழலினில் நின்று எழும் நாத வெள்ளத்தில் மூழ்கி
கூட இருந்தவர்கள் பதுமை போல் நின்றிட
நிழல் அளிக்கும் மரங்கள் தாழ்ந்து மலர் சொரிய
நீல வண்ணன் மேனி எல்லாம் மலர் மயமாக நின்று - யமுனை

ராகம்: சாருகேஸி **தாளம்: ஆதி**

பல்லவி

கோகுல பாலன் குழலூதி என்னுள்ளம்
கொள்ளை கொண்டான் சகியே - என்னுள்ளம்

அனுபல்லவி

மோகம் மிகுந்தவன் ராதையைப் போல் மனம்
சோகம் மிகவடைந்து சேர்ந்தேனடி சகியே -கோகுல

சரணம்

1. யமுனைக் கரையில் என்னைத் தொடர்ந்து வந்தான் கண்ணன்
எவரும் காணாமலென்னை அருகில் அழைத்தணைத்தான்
அமுதினுமினிய கானாமுதமளித்தான்
என்ன சொல்வேன் அவன் செய்த மாயத்தை - சகி -கோகுல

2. பிருந்தாவனத்தில் மலர் பறித்திடவே சென்றேன்
பின்புறம் வந்து கண்ணன் கண்களைப் பொத்திவிட்டான்
ம்ருது கரம் தொட்டறிந்து மேனி எல்லாம் சிலிர்த்து
மதுவுண்ட வண்டு போல் மயங்கி நின்றேனடி -கோகுல

3. மதுரையில் பால் தயிர் வெண்ணெயும் விற்கச் சென்றேன்
மாயமாய் வந்து கண்ணன் மடக்கி வழி மறித்தான்
பொது இடம் என்பதையும் மறந்து மயங்கி நின்றேன்
போ போ என்று நகைத்து ஓடிவிட்டான் கண்ணன்

4. மீரா ஹ்ருதயம் கண்ணில் மாறாத காதல் கொண்ட
நாராயணன் நந்தகோலன் குமாரன்
சீராகவே வந்தென் சிந்தையில் குடி கொண்டான்
தீராத வல்வினைகள் தீர்த்தருள் செய்திடுவான் -கோகுல

ராகம்: ஹிந்தோளம் **தாளம்: கண்டசாபு**

பல்லவி

குழல் ஓசை கேட்டாயோடி வடிவழகன் - நம்மை
வாவென்று அழைத்திடும் - குழல்

அனுபல்லவி

மழைக்கன்று குடையாக மலை தூக்கி நின்றவன்
விழியாலே மொழி பேசும் வேணு கோபாலன் ஊதும் - குழல்

சரணங்கள்

1. வெண்ணை திருட வருவான் (கண்ணன்)
பெண்கள் உள்ளம் கவர்ந்தோடுவான்
மண்ணைத் தின்றானென்று அண்ணன் அன்னையிடம் சொல்ல
வண்ண வாய் திறந்தகில லோகங்கள் காட்டிய கண்ணன்
- குழல்

2. குளித்திடவே யமுனை சென்றால் கண்ணன்
கூடத் தொடர்ந்து வருவான்
ஒளித்து வைத்து ஆடைகளை உள்ளங் கலங்க வைப்பான் (பின்)
களிப்புடனே கையில் தந்து கட்டிக் கொள்ளென்றுரைப்பான்
- குழல்

ராகம்: ஹம்ஸநாதம் தாளம்: ஆதி

பல்லவி

கோபாலன் குழல் ஓசை கேட்டு மயங்கியே
கோபியர் ஓடி வந்தார் பிருந்தாவனத்தில் -கோபாலன்

அனுபல்லவி

தாபாதிகள் மூன்றும் தாமே விலகிட
ஆபாத மஸ்தகமும் அழகு வடிவான -கோபாலன்

சரணங்கள்

1. ஆடையணிகள் கலைய வீடு வாசல் மறந்திங்கோடி வந்தார் (கண்ணன்)
குழல் அமுதம் பருகி கோடை வெய்யிலில் குளிர்ந்த
நிழல் கண்டவர்கள் போல கூடி ஆடி மகிழ்ந்தார் -கோபாலன்

2. மக்கள் மனைமாடு கன்று மத்ததெல்லாம் மறந்து
மாதவன் குழல் நாதம் மனதை கவர்ந்திழுக்க
அக்கணமே கோபியர்கள் ஆவலாய் அருகில் வந்து
ஆ என்று வாய்திறந்து ஆசையால் நின்று கேட்க -கோபாலன்

3. நாத வெள்ளத்தில் மூழ்கி நான் என்பதை மறந்து
நால்வர் பரிகசிக்க நாணத்தையும் துறந்து
ஆதரவுடன் கண்ணன் அழைக்கும் குழலோசை கேட்டு
ஆசா பாசங்களெல்லாம் அகற்றி அன்பு மயமாய் -கோபாலன்

ராகம்: கல்யாண வசந்தம் **தாளம்: ஆதி**

பல்லவி

ராஸ லீலைகள் செய்தான் ராஜ கோபாலன்
ராஜீவ லோசனி ராதையுடன் கூடி - ராஸ

அனுபல்லவி

வாசம் வீசும் தென்றல் காற்றில் நிலவொளியில்
ஆசையுடன் பிருந்தாவனத்தில் கோபியருடன் - ராஸ

சரணம்

1. ஆடை அணி மணிகள் அலங்காரமாய் அணிந்து
ஆரங்களை தரித்து அழகாக மலர் சூடி
வாடை வீசும் ஸுகந்த களபங்களைப் பூசி
வாரிஜ நேத்ரத்தில் மைதீட்டித் திலகமிட்டு
பேடை அன்னம்போல் பெண்கள் எல்லோரும் கூடி நின்று
பெருமையுடன் கண்ணன் பேரழகைக் கண்டுகந்து
மாடப் புறாக்களைப் போல் மாதவனைச் சூழ்ந்து வர
மாயக் கண்ணன் ராதையுடன் ஊதும் குழல் நாதமொடு - ராஸ

2. ராஸ மண்டல நடுவில் ராதையுடன் நின்று
ராமாவதாரத்தில் சொல்லியபடி செய்ய
மாஸத்துவமுனிவர் மங்கையர் கோபியராக

மாதா சீதையும் ராதையாகி அருகில் நிற்க
தாஸ ஜனப்ரியன் கிருஷ்ணன் தானேபல கண்ணனாகி
தாபத்துடன் துடிக்கும் கோபியர்கள் உள்ளங்களில்
வாஸம் செய்து அவருள்ள தாபங்களெல்லாம் தணித்து
வானவர்க்கும் அரிதான வைகுண்ட வாழ்வளிக்க - ராஸ

3. கண்ணன் செய்த ராஸ லீலைகளைக் கண்டு வானோர்
கற்பக மலர் சொரிந்து கைகூப்பி வணங்கி நிற்க
அண்ணன் நந்தகோபரும் அண்ணன் பலராமரும்
அன்னை யசோதையுடன் ஆயர்கள் கண்டு மகிழ
விண்ணில் சங்கரர் உமையும் விரிஞ்சியும் வாணியுடன்
பண்ணிசைத்துப் பக்தியுடன்பார்த்துப் பரவசமானார்
எண்ணமெல்லாம் கண்ணனிடம் வைத்திருக்கும் பக்தருக்கு
ஏகாந்தமாக என்று இதய பிருந்தாவனத்தில் -ராஸ

ராகம்: பிருந்தாவன சாரங்கா **தாளம்: ஆதி**

பல்லவி

பிருந்தாவன சந்தரனுக்கு ஜெயமங்களம் (ஆதி)
ஸுந்தர ஸ்வரூபனுக்கு சுபமங்களம் - பிருந்தாவன

அனுபல்லவி

நந்த குமாரனுக்கு நவநீத சோரனுக்கு
கந்தர்ப ஜனகனுக்கு கமலா ரமணனுக்கு
தேவகி வஸுதேவர் திருமைந்தனானவர்க்கு
தேவாதி தேவனுக்கு தீன ஜன பாலனுக்கு - பிருந்தாவன

சரணங்கள்

1. தந்தை நந்த கோபருக்கும் தாயாம் யசோதைக்கும்
அந்தமிகும் அண்ணன் பலராமனுக்கு மங்களம்
ப்ரேமை மிகும் கோபியர்க்கும் பிருந்தாவன வாஸிகட்கும்
கோமளமாம் கோக்களுக்கும் கோவர்த்தன கிரிக்கும்
- பிருந்தாவன

2. அன்பு வெள்ளமாய்ப் பெருகும் அன்னையாம் யமுனைக்கும்
ஆயர் குலம் செழித்து வாழும் பிருந்தா வனந்தனக்கும்
அருள் மிகுந்த கண்ணனுக்கும் ஆருயிராம் ராதைக்கும்
அடி போற்றும் பக்தர்களைக் காக்கும் காருண்யனுக்கும்
ஜெய மங்களம் நித்ய சுபமங்களம்

ராகம்: யமுனா கல்யாணி **தாளம்: ரூபகம்**

தின நாயக குல பூஷண மனு ஜாதிப ராம
ஸனகாதி முனி வந்தித ஸுரஸேவித ராமா
வர கௌசிக மகரக்ஷகஸுர பூஜித ராமா
குரு கௌதம முனி நாக்ருத ஸதகோடி ப்ரணாமா
கருணாகர தருணாகுண வதனாம் புஜ ராமா
சரணாகத பரிபாலக சரணம் மமராமா
பவ சன்னுத குஹ ஸம்ஸ்துத சிவ மாஸு விதேஹி

ராகம்: கேதாரம் **தாளம்: திஸ்ரம்**

ராமா ராமா என்று சொன்னாலே அனுதினம்
தாமாகவே செல்வம் வந்தடைந்திடும்
கோமகன் சுந்தரன் தசரத நந்தனன்
கோதண்ட பாணியை பாடிப் பணிவோம்
ராமா ராமா ராமா ராமா

ராகம்: ஸிம்மேந்திர மத்யமம்

பாமரர் உய்யவும் அரக்கர் அழியவும்
பாரினில் ராகவன் வந்துதித்தான்
நேர்மையுடன் வாழ்ந்து நீதி நிலைநாட்டி
கார்மேனி வண்ணன் கடைப்பிடித்தான்
ராமா ராமா ராமா ராமா

ராகம்: ஸஹானா

முனிவர் குறை நீக்க கானகம் சென்றங்கு
துணிவுடன் அரக்கரை அழித்திட்டான்
பெண்மணி அகலிகை சாபமும் தீர்த்து
கண்மணி சீதையின் கைத்தலம் பற்றினான்
ராமா ராமா ராமா ராமா

ராகம்: சுபபந்துவராளி

தந்தை சொல் தட்டாது மனைவி தம்பியுடன்
சிந்தை உவந்தே கானகம் சென்றான்
சொந்தம் குஹனையும் பாசமுடன் ஏற்று
பக்தை சபரிக்குமோக்ஷம் அளித்தான்
ராமா ராமா ராமா ராமா

ராகம்: கமாஸ்

உற்ற நண்பனாம் சுக்ரீவனை காத்து
உற்ற தாசனாம் ஹனுமனை ஏற்றான்
பற்றற்ற துறவிகள் நெஞ்சில் நிலைத்திடும்
ஏற்றமுடையோன் ஸ்ரீராமனைப் பாடுவோம்
ராமா ராமா ராமா ராமா

ராகம்: மோகனம்

பத்தினி சீதையை கவர்ந்த அசுரர்களும்
பத்து தலையோன் ராவணன் சிரங்களை
பந்து போல் உருட்டியே வெற்றி கொடி நாட்டி
உத்தமன் விபீஷணன் நேசத்தை பெற்றான்
ராமா ராமா ராமா ராமா

ராகம்: அடானா

வீரமுமிகுந்த ராமனைப் பாடினால்
தீரும் துயரமும் வாழ்வும் இனிக்குமே
பாரோர் உயர்ந்திட பரமனே வந்தான்
வேறோர் தெய்வமும் இவனுக்கிணை உண்டோ
ராமா ராமா ராமா ராமா

ராகம்: சுருட்டி

ராமனைக் கண்டவர் வேறொன்றும் காண்பாரோ
நாமங்கள் கேட்டவர் வேறொன்றும் சொல்வாரோ
ராமனின் நாமமே புவியில் அனைவர்க்கும்
தேமதுரம் போல் தீம்சுவை தந்திடும்
ராமா ராமா ராமா ராமா

ராகம்: ஸாரமதி **தாளம்: ஆதி**

ராகவம் கருணாகரம் பவநாசனம் துரிதாபகம்
மாதவம் கஜகாமினிம் ஜலரூபிணம் பரமேஸ்வரம்
பாலகம் ஜன தாரகம் பவஹாரகம் த்ரிபுமாரகம்

த்வாம் பஜே ஜகதீஸ்வரம்
நர ரூபிணம் ரகு நந்தனம்
சித் கனம் சிரஞ்சீவிதம் மணி மாலினம்
வரதோன் முகம்

ஸ்ரீதரம் த்ருதி தாயகம்
பல வர்தனம் கதி தாயகம்
சாந்திதம் ஜன தாரகம்
ஸுர தாரிணம் கஜ காமினம்
தவாம்பஜே ஜகதீஸ்வரம் நர ரூபினம்
ரகு நந்தனம்

ராகம்: கல்யாணி **தாளம்: ஆதி**

பல்லவி

நாராயணம் பஜரே முரஹர
நாரத கான விலோல வினோதம் (நாராயணம்)

அனுபல்லவி

சங்க சக்ரதர ஸ்ரீ கோவிந்தம்
பங்கஜ நாபம் பரமானந்தம்

சரணம்

ஆதி மத்ய லய ரஹிதனு நீனே
ஆதி அந்த்ய வெல்ல நின்னெயலீவே
அகணித மஹிமனு நீனே தேவா
ஜோதி ஸ்வரூபா மாதவா நாராயணா
லக்ஷ்மி நாராயணா, ஸத்ய நாராயணா பத்ரி நாராயணா

ஸ்ரீமன் நாராயணன் ஸ்துதி

ராகம்: ராகமாலிகா **தாளம்: ஆதி**

பாகேஸ்வரி

நாராயணனை நாடு அவன் நாம பஜனையைப் பாடு
ஆரா அமுதன் அன்பர்க்கு அன்பன்
பேரானந்தமும் பேறும் அளிப்பான்

அமீர் கல்யாணி

மறவாதிரு மனமே கோவிந்தன்
மலரடி பணிதினமே
கறவைகள் மேய்த்தவன் மயில் சிறகணிந்தவன்
அறம் பொருள் இன்பமும்
வீடும் தருபவனை - மறவாதிரு மனமே

தர்பாரி கானடா

கண்ணன் அடிபணிவாய் நீ எண்ணியதும் அடைவாய்
வெண்ணையுண்டவன் வேய்ங்குழல் இசைத்தவன்
மண்ணை அளந்தவன் மங்கையர்க்கினியவன்

சிவரஞ்ஜனி

மூவடி வைத்து மூவுலகம் அளந்த
சேவடி காட்டியே கார்த்திடுவாய் (ஹரியே)

ஓதற்கரிய கீதை பார்த்தனுக்குரைத்தாய்
தேவகி மைந்தனே தேவாதி தேவனே
ஹரியே (3 தரம்)

வஸந்தா

மாதவன் பாதம் காணவே என்ன
மாதவம் செய்தேனோ - அம்மா
பாதகன் கம்ஸனை அழித்திட பிறந்தான்
யாதவ குலத்தோன் யசோதை மைந்தனை
மாதவா கேசவா மதுசூதனா (ஹே)
ஹரி நாராயண தாமோதர த்ரிவிக்ரமா
வாமனா ஸ்ரீதரா கோவிந்தா (3 தரம்)

ராகம்: ராகமாலிகா **தாளம்: ஆதி**

பீம்பிளாஸ்

பக்தர்கள் பஜனையில்
சிற்பிகள் சிலைதனிலே அற்புத கலைகளிலே
சித்தரித்த உன் திருவுருவே எனக்கு
காண கண் கோடி வேண்டும்
காண கண் ஆயிரம் வேண்டும் (உன்னை)

திருப்பதி மலைமேல் அமர்ந்தவனே
திருமகள் லக்ஷ்மியை மணந்தவனே
ஆதவன் ஒளியோடு ஜ்வலிப்பவனே
(உன்) பாத மலர் பூத்த ஸன்னிதியை எனக்கு
காண கண் கோடி வேண்டும்
காண கண்ணாயிரம் வேண்டும் (உன்னை)

ஹிந்தோளம்

ஆயிரம் பொன் நகைகள் அர்ச்சனை நாமங்கள்

ஆயிரம் கைகளால் அற்பணம் செய்திட
ஆயிரம் தீபங்கள் ஆராதனையுடன்
நீ இருக்கும் அந்த ஆலயத்தின் அழகை (காண கண்)

ஹம்ஸாநந்தி

கனவிலும் உன்னை காணவில்லை எந்த
நினைவிலும் உன்னை நாடவில்லை
தான் என்ற எண்ணத்தை மறக்கவில்லை உன்னை
நாராயணா என்று அழைக்கவில்லை
நாராயணா நாராயணா
பாவி என் கண்களில் பதியவில்லை அந்த
தேவியை சேர்ந்த உன் மங்கள ரூபத்தை (காண கண்)

ஸிந்துபைரவி

அனுதினம் உன் பக்தி வேண்டுகிறேன் உன்
அலங்காரம் பார்த்திட ஆசை கொண்டேன்
அனந்த கோடி நமஸ்காரம் செய்கிறேன்
அனந்த ஸயனா ஸ்ரீனிவாசா உன்னை
(காண கண் கோடி வேண்டும்)

ஹனுமார் துதி பாடல்கள்

ராகம்: செஞ்சுருட்டி **தாளம்: திஸ்ரரகம்**

1. முன்னை இலங்கையில் மோதிரம் காட்டிய
அன்னை சீதையின் அருந்துயர் தீர்த்தவன்
இன்ன லெல்லாம் தீர்த்து ஆதரிக்கும் அனுமான்
பொன்னடி போற்றுவார் எண்ணிய தெய்துவார்.
2. ராமனைத் தொழுபவர் மாமனை தோறும்
நேமமாய் வந்து நிலைத்திருப்பவன்
வாமத்தில் மைதிலியோடு விளங்கிடும்

தாமரைக் கண்ணனின் தாளினை மறவான்

3. அதிபலம் கொண்டு இலங்கையை எரித்தவன்
துதிப்பவர் துன்பங்கள் தீர்த்தருள் செய்பவன்
பதியுடன் ஜானகி வாழ்ந்திடச் செய்தவன்
கதியென நினைப்பவர் கருதிய தெய்துவார்.

5. ஜெய ஜெய மாருதி ஜெய ஜெய ஹனுமான்
ஜெய ஜெய வாயுஸுதா ஹனுமந்தா
ஜெய ஜெய ராமா பதாம்புஜ வாஸ
ஜெய சஞ்சீவி ஜெயமே அருள்வாய் (முன்னை)

வீர ஆஞ்சநேயர் வணக்கம்

ராகம்: சௌராஷ்டிரம்

அஞ்சனையின் அரும்புதல்வன்
அதிபராக்ரம வீரன்
வஞ்சக அரக்கர் குலம்வதைத்த
ஹனுமானைப் பணிந்தால்
சஞ்சலங்கள் தீரும்
சர்வசித்தி உண்டாகும்
தஞ்சமளித் தனுமார்
தக்ஷணமே ரக்ஷிப்பார்.

Andavan Pichai

Part III

This portion of the book consists of songs written and composed by Smt. Kamakshi Kuppuswamy, daughter of Sri Andavan Pichai. It connects with the rest of the book because all the songs start with a one-liner, or a stray phrase or prose penned by Andavan Pichai. For example, the varnam, 'Nee Manam Irangi vantharulvai, neela mayil vahanane' is the main phrase by Andavan Pichai. To this, Smt. Kamakshi Kuppuswamy added the rest of the Pallavi, Anupallavi and Charnam. In a similar manner, 'Maname inimel yen udan ada mayilai vandiduvai' was only in prose form. Kamakshi split the lyrics into singable portions and composed the music for it.

Smt. Kamakshi Kuppuswamy is the youngest daughter of Maragathavalli, AKA Andavan Pichai. Before her marriage, she studied classical Carnatic music in the City Girl Music School under guru Ramani Venkatraman for four years. She also learnt violin during this period. After her marriage, she moved to Delhi, where she was further inculcated in Carnatic Music under the tutelage of Prof. V.V. Shadagopan at Delhi University, Music Department. She got the diploma of 'Sangeetha Shironmani' from that university with distinction.

She also furthered her knowledge from T.K. Jayarama Iyer, Ramnad Krishnan and others. Thereafter, she gave a lot of performances accompanied by Sri Ramnad Easwaran on the mridangam. She also started teaching and taught music to scores of students.

Her daughter was leanring dance from Pakrisami Pillai. At this stage in life, she started singing for Bharatnatyam dancers also. She had the privilege of singing for Sonal Mansingh for several years. She also sang for Lalitha Sastri

and Bharati Shivaji. It is with this background that she was able to compose many varnams for her Sambandhi, Smt. Kalanidhi Narayanan. 'Nee Manam Irangi' is part of those compositions. She also put music for the entire set of Ashtapathis for her as also for Panchali Sabadam.

With this rich experience, she came to Madras in 1980 after her husband retired, when she started the 'Andavan Pichai Bhajan Mandali due to the earnest suggestions of many eager to learn Andavan Pichai's songs. She embarked on this with the blessings of her mother, who made her a repository of all her lyrical compostions mainly to propagate her divine mother's songs.

It is befitting to mention the Mandali members who have been with her for nearly three decades. But for their love, care, support and dedication, it would not have been possible to bring Andavan Pichai's songs to many. The names of these members is mentioned here, for their devotion to their leader Kamakshi Kuppuswamy and Andavan Pichai is remarkable:

1. Sashikala Shankar
2. Raji Yamunan
3. Bharati Kumara Krishnan
4. Selvam Subramaniam
5. Meena Lakshmi Narayanan
6. Sumathi
7. Manorama Rao
8. Jayanthi Krishnan
9. Uma Shridhar
10. NirmalaVaidyanathan
11. Indra Thirumalai

12. Lalitha Sambamurthy
13. Janakai Rajagopalan and Mrs. Vaidehi – Harmonium
14. Y.G. Sundar - Tabla

Kamakshi Kuppuswamy's children owe a debt of gratitude to their mother and grandmother for being made part of this rich collection of devotional songs. May the ardent devotion and sincerity, and the unlimited power of Andavan Pichai's songs flow for eternity.



ராகம்: கல்யாணி **தாளம்: திச்ர**

வாரணமுகா ஸுர்ப்ப கர்ணா
வாமனரூபா விக்ன விநாயக
ஸுமுக விகட வக்ர துண்ட ஸ்ரீகணநாயகா

1. ஏகதந்தம் ஸோக நாசம்
ஆகமாதி பூஜிதம் பதம்
யோகீஸ்வரம் யோகானந்தம்
யோகி ஹ்ருத் கமல வாஸினம்
நாக யக்ஞோப வீததரம்
மோஹாந்த கார நாஸனம்
லோக பாவன காரணய
விக்னேஸாய நமோநம: - ஸுமுக

2. மூலாதார நிலயாய முக்தி
ஸாம்ராஜ்ய தாயக:
காலாதீத ஸ்வரூபாய
காமிதார்த்த பலப்ரத:
லீலாகல்பித தேஹாய
சீலாத்புத குண ஸோபித
மாலா புஷ்ப விபூஷிதாய
மஹா கணபதே நம - ஸுமுக

ஓம் ஸ்ரீ - மஹா கணபதே நம:

ராகம்: குந்தலவராளி **தாளம்: ஆதி**

பல்லவி

ஜய ஜய கணநாதா ஜயம் தா
ஜய ஜய கணநாதா ஜயம் தா

அனுபல்லவி

ஜய ஜய ஸுகதா ஜய வினுத பதா
ஜய பார்வதி ஸுதா பயங்களைந்தருள்தா

சிட்டஸ்வரம்

ஸமாபாத நிதஸா, ஸநிதபம ஸா;;; ஸம ஸநித
ஸஸமம ஸஸபப நிதம பதஸா மாமமா ஸ்ாஸ்ஸ்ா
மாமஸா ஸாநிதா ஸநிதபா, நிதபமா ஜய ஜய கணநாதா

சரணம்

எழில்பெரும் சீலா ஏழைபங்காளா
வழிக்கனு தூலா வழங்கும் தயாளா வழிக்கு அனுகூலா

ராகம்: கரகரப்ரியா **தாளம்: ரூபகம்**

பல்லவி

ஸ்ரீ கணபதியே துணை செய்தருள்வாய் நீயே
மதவா ரணவா துதி செய்திடுவோம் வருவாய் (ஸ்ரீ)

அனுபல்லவி

மோஹம் கடந்தோங்கும் பரனே
முக்கண்ணன் ஈன்ற முதற் குமாரனே
மிக்க கருணை நிறைந்த கடலே
சுந்தரனே ஐங்கரனே சுபகரனே (ஸ்ரீ)

சரணம்

மாயமில்லாத மறைவடிவே
மஹா கருணை திருவடிவே
நீ இங்கு வந்து உதவி செய்யவே
நினைப்பாய் எங்கள் குரு வடிவே
துய்ய நின்பாதம் துதிகள் செய்திட
தூமலர் தூவி நாங்கள் தொழுதிட

தொடர்ந்திடும் இடர்களை களைந்திடுவாய்

சுந்தரனே ஐங்கரனே சுபகரனே

ராகம்: பாகேஸ்வரி **தாளம்:ஏக தாளம்**

பல்லவி

விக்னங்களை நீக்கும் விநாயகா
விக்னேஸ்வரா லம்போதரா

அனுபல்லவி

முக்கனியின் சுவைபோல முத்தமிழில் கனிபாடி
பக்தியுடன் பணிந்தோம் சக்தியின் திருமகனே
